# தமிழ்மொழி கற்பித்தல்

## முதலாம் ஆண்டு

### வளநூல்

### (ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி)


தமிழ் நாட்டுப்
பாடநூல் கழகம்

# பகுதி - அ

## 1. தமிழ் மொழித்திறன் வளர்த்தல்

### அறிமுகம்

மொழிப்பாடம் ஒரு திறன்பாடம்; பாடப்பொருள் பாடமன்று. வரலாறு, புவியியல், அறிவியல் முதலிய பாடங்கள் பாடப்பொருள் பாடங்களாம். அப் பாடங்களிலும் படம் வரைதல், சோதனைகள் செய்தல் போன்ற திறன்கள் இருப்பினும் பாடப்பொருளே அவற்றுள் முதலிடம் பெறுகின்றது. ஆனால், மொழிப்பாடத்தில் பாடப்பொருளைவிட மொழித்திறன்களே சிறப்பிடம் பெறுகின்றன. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், சுவையுணர் திறன் ஆகிய திறன்களை வளர்க்கப் பாடப்பொருள் தேவை. அப் பாடப்பொருளை அடிப்படையாகக் கொண்டே மொழித் திறன்கள் வளர்க்கப் பெறுகின்றன.

இத் திறன்களை மாணவரிடம் வளர்க்க உரைநடை, செய்யுள், இலக்கணம் ஆகிய பாடங்கள் பாடநூலில் இடம்பெறுகின்றன. அப்பாடங்களின்மூலம் மொழித்திறன்களை மாணவரிடம் வளர்க்க, ஆசிரியர் சிறந்த மொழித்திறன் பெற்றவராதல்வேண்டும். செய்யுள், உரைநடைப் பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர் எவ்வகைத் திறன்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனையும், அவர்கள் இலக்கண அறிவு பெற்றுப் பிழையின்றி எழுதுவதுடன் படைப்பாற்றல் திறன் பெற்றிருக்கவேண்டும் என்பதனையும் குறித்து இவ்வியலில் அறிந்து கொள்வோம்.

**படிநிலைகள்**

1. செய்யுள்
   - சொற்களைப் பிரித்தல்
   - அருஞ்சொற்பொருள் அறிதல்
   - உரைநடைப்படுத்திக் கூறுதல்
   - திரண்ட கருத்துக் கூறுதல்
2. உரைநடை
   - தமிழ்த்தென்றல் திரு.வி.க.
   - சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளை
3. இலக்கணம்
   - இனவெழுத்துகள்
   - பெயர்ச்சொல்
   - தொழிற் பெயர்
   - பெயரின் பண்புகள்
   - ஆகுபெயர்
   - அன்மொழித்தொகை
   - வேற்றுமை உருபும் பொருளும்
   - உருபு மயக்கம்
   - இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்
   - வழுவமைதி
   - வல்லெழுத்து மிகுமிடங்களும் மிகாவிடங்களும்
4. படைப்பாற்றல்
   - உரையாடலைச் செய்தியாக்குதல்
   - கட்டுரையை உரையாடலாக்குதல்
   - கட்டுரை எழுதுதல்
5. தொகுப்புரை

## 1. செய்யுள்

சொற்செறிவும் பொருட்செறிவும் ஓசையொழுங்கும் அமைய இயற்றுவது செய்யுளாகும். உவமை, உருவகம், இறைச்சி நயங்களும், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கணங்களும், எதுகை, மோனை, இயைபு, முரண் முதலிய தொடைநயங்களும் அமையத் தொடுப்பது செய்யுட் கழகாகும்.

**சொற்களைப் பிரித்தல்:** செய்யுளில் பாவுக்கு ஏற்பச் சீர்கள் அமையச் சொற்களைச் சேர்த்துப் பாடுவர். அச் சொற்களைப் பிரித்துக் கூறும் திறனை ஆசிரியர் பெற்றிருத்தல்வேண்டும். அ) தாமின் புறுவது உலகின்புறக் கண்டு - என்னும் குறளடியில் தாம்+இன்புறுவது என்னும் இரு சொற்கள் சேர்ந்துள்ளன. தாம் - நிலைமொழி, இன்புறுவது - வருமொழி. நிலைமொழி இறுதியில் 'ம்' என்னும் மெய்யெழுத்து உள்ளது. வருமொழி முதலில் 'இ' என்னும் உயிரெழுத்து உள்ளது. இரண்டும் சேர்ந்து 'மி' என்னும் உயிர்மெய்யெழுத்தாயிற்று. இதனை,

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ( நன். 204)

என்று நன்னூல் நூற்பா கூறும்.

ஆ) விண்ணதிர்ந்தது என்பதில் விண் + அதிர்ந்தது என்னும் இரு சொற்கள் சேர்ந்துள்ளன. விண்-நிலைமொழி, அதிர்ந்தது- வருமொழி.

நிலைமொழி இறுதியில் 'ண்' என்பது தனிக் குற்றெழுத்தை அடுத்து 'விண்' என உள்ளது. வருமொழி முதலில் 'அ' என்னும் உயிரெழுத்து உள்ளது.இரண்டும் சேரும்பொழுது விண் என்னும் சொல்லிலுள்ள மெய்யெழுத்தான 'ண்' இரட்டி 'விண்ண்' என நின்றது. வருமொழி உயிரெழுத்து 'அ', நிலைமொழி மெய்யெழுத்து 'ண்' உடன் சேர்ந்து விண்ணதிர்ந்தது என ஆயிற்று.

இதனை,

தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் - (நன்.205)

என்று நன்னூல் நூற்பா கூறும்.

1. கண் + எழில் = கண்ணெழில்,
2. என் + உயிர் = என்னுயிர்,
3. மண் + அரிப்பு = மண்ணரிப்பு

மண்ணடுப்பு, கல்லெறிந்தான், பல்லுடைந்தது, கடலோரம், நீரின்றி, மரமேறினான் ஆகிய சொற்களை நிலைமொழி வருமொழி எனப் பிரிக்க

மெய்யெழுத்து (ஒற்று) தனிக்குறிலைச் சார்ந்து வராமல், நெடிலுடனோ பிற எழுத்துகளுடனோ இறுதியில் வருமாயின், ஒற்று இரட்டிக்காது மெய்யும் உயிரும் சேரும் என்பதனை அறிக. கால் + ஒடிந்தது = காலொடிந்தது எனவும், கடல் + அலை = கடலலை எனவும் வரும்.

இ) உலகெலாம் என்பதில் உலகு, எலாம் என இரு சொற்கள் சேர்ந்துள்ளன. உலகு-நிலைமொழி, எலாம் - வருமொழி. நிலைமொழி இறுதியில் 'கு' என்னும் குற்றியலுகரம் உள்ளது. வருமொழி முதலில் 'எ' என்னும் உயிரெழுத்து உள்ளது. இரண்டும் சேரும் பொழுது உலகு என்னும் சொல்லின் இறுதியில் உள்ள குற்றியலுகரத்தின் 'உகரம்' மெய்யெழுத்தைவிட்டு நீங்கி 'உலக்' என நின்றது. வருமொழி முதலிலுள்ள 'எ' என்னும் உயிரெழுத்து சேர்ந்து 'கெ' என ஆயிற்று. உலகெலாம் என அமைந்தது. வருமொழி முதலில் 'ய' வரின் 'உகரம்' இகரமாகும். மிளகு + யாது = மிளகியாது என வரும். நிலைமொழி இறுதியில் முற்றியலுகரம் இருப்பினும் இதேபோன்று உகரம் நீங்க மெய் யெழுத் தோடு உயிர்சேரும். கதவு + யாது = கதவ் + உ + யாது உகரம் இகரமாகிக் கதவியாது என வரும்.

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற்று ஒரோவழி - ( நன். 164)

ஈ) நன்றியறிதல், தீயணைத்தல், படையெடுத்தல் என்னும் சொற்களில் நன்றி அறிதல், தீ அணைத்தல், படை எடுத்தல் என இரண்டிரண்டு சொற்கள் சேர்ந்துள்ளன. நிலைமொழிகளின் இறுதியில் இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துகள் உள்ளன. (ற் + இ ) (த்+ஈ ) (ட் + ஐ) வருமொழி முதலில் அ, அ, எ என உயிரெழுத்துகள் உள்ளன. இவ்வாறு நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துகள் வந்து, வருமொழி முதலில் உயிரெழுத்துகள் வருமாயின் உயிரும் உயிரும் சேர்வதற்கு உடம்படுத்தும் மெய்யாக 'ய்' வரும். வருமொழி முதலில் உள்ள உயிரோடு சேரும். இதனை உடம்படுத்தும் மெய்யென்பர்.

கற்றறிந்தார், பட்டாடை, அழகிது ஆகிய சொற்களை நிலைமொழி வருமொழியெனப் பிரித்து விதி கூறுக.

நன்றியறிதல், அணியழகு, பனையோலை, இவனேயவன் ஆகிய சொற்களை வருமொழி நிலைமொழியெனப் பிரித்து இடையில் ய், வ் எழுதிக் காட்டுக.

இவ்வாறு நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ அல்லாத பிற உயிர்கள் வருமாயின், உடம்படுத்தும் மெய்யாக 'வ்' வரும்.

பல + அணி (பல + வ் + அணி) = பலவணி
மா + இலை (மா + வ் + இலை) = மாவிலை

என வரும். ஏகார உயிரீற்றின்முன் உயிர்வர இடையில் யகரமும் வகரமும் தோன்றும்.

சே + அடி (சே + வ் + அடி) = சேவடி
(சே + ய் + அடி) = சேயடி

தே + ஆரம் = தேவாரம்

என வரும். இதனை,

"இ ஈ ஐவ்வழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் யென்றாகும்" - ( நன். 162) என நன்னூல் நூற்பா கூறும்.

உ) பண்புப் பெயர்கள் பெரும்பாலும் 'மை' விகுதி பெற்று வரும். 'மை' விகுதி பெற்று வரும் பல்வேறு பண்புப் பெயர்களையும் வருமொழிகளையும் அறிந்துகொண்டால் அச்சொற்களை எளிதாகப் பிரிக்கலாம்.

1. வெண்மை + மலர் = வெண்மலர் எனவும், செம்மை + பொன் = செம்பொன் எனவும் ஈறு கெட்டது.
2. பெருமை + அன் = பெரியன் எனவும், சிறுமை + இலை = சிறியிலை எனவும் ஈறுகெட்டு, இடைஉகரம் இகரமாயிற்று.
3. பசுமை + இலை = பாசிலை (ஈறுகெட்டு, ஆதிநீண்டு, உக்குறள் நீங்கி, உடல்மேல் உயிர்வந்து ஒன்றியது) எனப் புணர்ந்தது.
4. பசுமை + தார் = பைந்தார் எனவும், பசுமை + தமிழ் = பைந்தமிழ் எனவும் ஈறும் இடையும் கெட்டு, முதலில் நின்ற அகரம் ஐகாரமாகி, வருமொழிக்கு இனமான ஒற்று மிகுந்தது.
5. சிறுமை + ஊர் = சிற்றூர் என ஈறுகெட்டு இடைநின்ற உகரமும் கெட்டு, மெய் இரட்டியது.

6. செம்மை + தாமரை = செந்தாமரை என ஈறுகெட்டு முன்னின்ற மெய் திரிந்தது.

7. கருமை + குதிரை = கருங்குதிரை என ஈறுகெட்டு வருமொழிக்கு இனமான ஒற்று மிகுந்தது.

முதுமகள், இளந்தமிழ், பைங்கிளி, செங்கோல் என்னுஞ் சொற்கள் நிலைமொழி, வருமொழியெனப் பிரித்து எவ்வாறு புணர்ந்ததென எழுதுக.

இதனை,

"ஈறுபோதல் இடைஉகரம் இய்யாதல்
ஆதிநீடல், அடிஅகரம் ஐயாதல்
தன்னொற்றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிகல் இனையவும் பண்பிற் கியல்பே." - (நன். 136) என நன்னூல் கூறும்.

செய்யுளில் உள்ள சொற்களைப் பிரித்தறிய இவ்வைந்து புணர்ச்சி விதி நூற்பாக்கள் பெரிதும் உதவும்.

**அருஞ்சொற்பொருள் அறிதல்:** சொற்களைப் பிரித்தறிந்த பிறகு அச்சொற்களுக்கான பொருளை யறிதல் வேண்டும். மாணவ ஆசிரியர் அறியாத சொல்லாக இருப்பின், அகராதி பார்த்து அச் சொல்லுக்குச் செய்யுளில் என்ன பொருளென அறிதல்வேண்டும். எடுத்துக்காட்டாக, **'மதி'** என்னும் சொல்லுக்கு அறிவு, மாதம், சந்திரன் எனப் பொருள்கள் இருப்பினும் செய்யுளில் என்ன பொருளில் அச் சொல் ஆளப்பட்டிருக்கிறது என அறிந்து பொருள் கூறவேண்டும். **"**மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்**"** - மதி என்பதற்கு இவ்விடத்தில் அறிவு எனப் பொருள் கொள்ளவேண்டும்.

"ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித்தொழுவோம் யாமே" என்னும் பாடலில் 'அமர்ந்த' என்பதற்கு வீற்றிருக்கும் என்று பொருள் கொள்ளாது 'விரும்பிய' எனப் பொருள் கொள்ளவேண்டும். அப்படிப் பொருள் கொண்டால்தான் இவ்வடிகள் விநாயகக் கடவுள் வணக்கமாக அமையும். (அமர்தல் என்னுஞ் சொல்லுக்கு அடங்குதல், இருத்தல், வாய்த்தல், விரும்பல் எனப் பல பொருள் உண்டு. இவ்விடத்தில் விரும்பல் எனும் பொருளே பொருத்தமானது.)

**உரைநடைப்படுத்திக் கூறுதல்:** செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்து, அச் சொற்களுக்குப் பொருளும் அறிந்த பின்னர், செய்யுளில் உள்ள தொடர்களைப் பொருள் விளங்கும்வகையில் முறைமைப்படுத்திக் கூறுதல் வேண்டும். இதனை, உரைநடைப்படுத்துதல் அல்லது அந்வயப்படுத்துதல் என்பர். எடுத்துக்காட்டாக,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." - குறள். 391

என்னும் குறளில் கசடு அற என்னும் சொற்களுக்குப் பொருள் கூறியபின், "கற்பவை கசடுஅறக் கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க" என உரைநடைப் படுத்திக் கூறுதல்வேண்டும்.

இவ்வாறு செய்யுளின் பொருளறிந்து உரைநடைப்படுத்திக் கூறுவதற்கு ஆசிரியர் மொழித்திறன் பெற்றவராதல்வேண்டும்.

செய்யுள் பகுதியில் புணர்ந்துவந்துள்ள சொற்களைப் பிரித்தறிக.
புணர்ச்சி விதிகளை அறிய நன்னூலைப் பயன்படுத்துக.
அருஞ்சொற் பொருளறிய அகராதியைப் பயன்படுத்துக.

**திரண்ட கருத்தைக் கூறுதல்:** சொற் களைப் பிரித்துப் பொருள்கூறி உரைநடைப் படுத்தியபின் மாணவ ஆசிரியர் செய்யுளின் திரண்ட கருத்தை எளிதில் எடுத்துக்கூறும் திறன்பெறுதல் வேண்டும். செய்யுட் பாடத்தில் அறவுரைப் பகுதியில் பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க் கணக்கு நூல்களிலிருந்து எளிய பாடல்கள் பாட நூலுக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றன. பாட நூலில் இடம்பெறும் பாடல்களை நன்கு விளக்கும் திறன்பெறுதல் வேண்டும்.

இதேபோன்று உயர்நிலை வகுப்புகளில் தொடர்நிலைச் செய்யுட் பகுதியில் இராமாயணம், நளவெண்பா, பெரியபுராணம் முதலியவற்றிலிருந்து சில பகுதிகள் பாட நூலில் இடம்பெறுகின்றன. மறுமலர்ச்சிப் பாடல்கள் பகுதியில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் வெ, இராமலிங்கனார் ஆகியோர் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

> ஆ, ஈ, ஏ, ஐ, கை, தா, தீ, கோ, பை, தை, மை, வை, பா, போ, தூ, தே போன்ற அனைத்து ஓரெழுத்துச் சொற்களையும் தொகுத்து அவற்றிற்குரிய பொருளை அகராதியிலிருந்து கண்டெழுதுக.

இவ்வகைப் பாடல்களைப் படித்துச் சொற்களுக்குப் பொருள் கூறவும், உரைநடைப் படுத்தவும் திரண்ட கருத்தைக் கூறவும் மாணவ ஆசிரியர் திறன்பெறுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சில பாடல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கோடிட்ட சொற்களைப் பிரித்தும் சொற்பொருள் கூறியும் உரைநடைப்படுத்தியும் திரண்ட கருத்தைக் கூறியும் பயிற்சி பெறுக.

> பாரதியார், கவிமணி, வாணிதாசன், கண்ணதாசன், முடியரசன், அழ. வள்ளியப்பா போன்ற கவிஞர்களின் கவிதைகளைப் படித்து, அதன் நயத்தை அறிக. அவற்றை உரை நடைப்படுத்துக. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, மூதுரை, வெற்றிவேற்கை,உலகநீதி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திருக்குறள் போன்ற அற நூல்களைப் படித்து அவற்றிலுள்ள ஒழுக்கநெறிகளை அறிக.

**திருக்குறள்**

1. **யாகாவா ராயினும்** நாகாக்க காவாக்கால்
   சோகாப்பர் **சொல்லிழுக்குப்** பட்டு.
2. **பொருளற்றார்** பூப்பர் ஒருகால் அருளற்றார்
   அற்றார்**மற் றாதல்** அரிது.

1. தடித்த சொற்களைப் பிரித்தெழுதுக.
2. சோகாப்பர், பூப்பர் - இவற்றின் பொருளை எழுதுக.

**திரிகடுகம்**

வைததனை **இன்சொல்லாக்** கொள்வானும் நெய்பெய்த
**சோறென்று** கூழை மதிப்பானும் - ஊறிய
**கைப்பதனைக்** கட்டிஎன்று உண்பானும்இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

1. தடித்த சொற்களைப் பிரித்தெழுதுக.
2. மெய்ப்பொருள் கண்டு வாழும் மூவர் யாவர்?

**இராமாயணம்**

வந்து**முனி யெய்துதலும்** மார்**பினணி யாரம்**
அந்தர **நிலத்திரவி அஞ்சவொளி** விஞ்ச
கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும்
**இந்திரனெனக்** கடிதெழுந்தடி பணிந்தான்

1. தடித்த சொற்களைப் பிரித்தெழுதுக.
2. இறைவி, கந்தம், கடிது - இச்சொற்களுக்கான பொருளை எழுதுக.

**நளவெண்பா**

**வாவி** யுறையும் மடவனமே எந்தன்
ஆவி யுவந்தளித்தா யாதியால் - **கா**வினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
**பார்**வேந்தன் பாவை பதைத்து.

1. வாவி, கா, பார் - இச்சொற்களின் பொருளை எழுதுக.
2. இப் பாடலடிகளை உரைநடைப்படுத்தி எழுதுக.
3. வாவியுறையும், காவினிடை, என்றுரைத்தாள் - இச் சொற்களைப் பிரித்து இலக்கண நூற்பா கூறுக.

**மறுமலர்ச்சிப் பாடல்கள்**

"**எங்கும் பாரடா இப்புவி மக்களை**
**பாரடா உனது மானிடப் பரப்பை!**
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவு செய்; அகண்ட மாக்கு!
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை**
அணைந்து கொள்! உன்னைச் சங்கமம் ஆக்கு!
**மானிடச் சமுத்திரம் நானென்று கூவு!**
பிரிவிலை எங்கும் பேதம் இல்லை" - **பாரதிதாசன்**

தடித்த அடிகளை உரைநடைப்படுத்திக் கூறுக.

"சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?
**காரிருள்** வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவை என்ன?
**பேரிடி** மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
**ஆரிதற் கெல்லாம்** அதிகாரி
அதைநாம் எண்ணிட வேண்டாமோ!"

- **நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை**

1. காரிருள், பேரிடி, ஆரிதற்கெல்லாம் - என்னும் தொகைநிலைத் தொடர்களைப் பிரித்துப் பொருள் கூறிப் பிரித்ததற்கான இலக்கண நூற்பா கூறுக.

## 2. உரைநடை

பாடநூல்களில் ஏழாம் வகுப்புவரை உள்ள உரைநடைப் பாடங்கள் ஆசிரியர் குழுவால் எழுதப் பெறுபவை. எட்டாம் வகுப்புமுதல் பன்னிரண்டாம் வகுப்புவரை உள்ள உரைநடைப் பாடங்கள் சிறந்த உரைநடை ஆசிரியர்களால் எழுதப்பெற்றவை. இவை ஆசிரியர் குழுவினரால் தொகுக்கப் பெற்றவை. இப் பாடங்களைக் கற்பிக்கும் மாணவ ஆசிரியர் பத்தியமைப்பு,பத்தியின் மையக் கருத்து, கையாளப்படும் சொற்களஞ்சியச் சிறப்பு ஆகியவற்றை எடுத்துக்கூறும் திறன் பெற்றவராதல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் உரைநடையில் கட்டுரைகள் எழுதிச் சிறப்புப் பெற்றவர் பலர். அவர்களுள் இருவரை எடுத்துக்காட்டாகத் தேர்ந்தெடுத்து அவர்களைப்பற்றியும் அவர்களின் உரைநடைச் சிறப்புப் பற்றியும் அறிந்துகொள்வதும் எடுத்து உரைப்பதும் மாணவ ஆசிரியருக்குப் பெரும்பயன் நல்குவதோடு உரைநடை எழுதும் திறனை வளர்த்துக்கொள்ளவும் உதவும்.

## 1. தமிழ்த்தென்றல் திரு.வி.க.

கலியாணசுந்தரனார் காஞ்சிபுரம் மாவட்டத்துத் துள்ளம் என்னும் சிற்றூரில் 1883 ஆம் ஆண்டு (26.8.1883) பிறந்தார். இவர் தந்தையார் திருவாரூரைச் சார்ந்தவர். அவர் பெயர் விருத்தாசலம். இதனால் இவர் திரு.வி.க. என அழைக்கப் பெற்றார்.

இவர் அரசியல், தொழிலாளர் இயக்கங்கள், சமய நிலையங்கள், இலக்கியக் கழகங்கள், இளைஞர் முன்னேற்ற அமைப்புகள், சீர்திருத்தத் துறைகள், சீவகாருணியச் சங்கங்கள் முதலிய பலவற்றிலும் தொடர்புகொண்டு வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றினார். என்கடன் பணி செய்து கிடப்பதே என்பது இவர் வாழ்வின் குறிக்கோளாயிற்று. எளிய வாழ்வு வாழ்ந்த கலியாணசுந்தரனார் 1953 ஆம் ஆண்டு (17.9.1953) இயற்கையெய்தினார்.

மக்களுக்குத் தமிழார்வத்தை ஊட்டுவதற்காக உரைநடை நூல்கள் பலவற்றை எழுதினார். இவரது உரைநடை இனியது; ஆற்றல் நிறைந்தது; உணர்ச்சி வாய்ந்தது; சிறுசிறு தொடர்களாக அமைந்து படிக்கப் படிக்க இன்பம் பயப்பது. இது திரு.வி.க. நடை என்று மக்கள் போற்றுமளவுக்குத் தனித்தன்மை வாய்ந்தது. இருபதாம் நூற்றாண்டின் உரைநடையின் தந்தை எனவும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. எனவும் இவரை மக்கள் பாராட்டுவர்.

இவர் சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, கடவுள் காட்சியும் தாயுமானாரும், இந்தியாவும் விடுதலையும், காந்தியடிகளும் மனித வாழ்க்கையும், பெண்ணின் பெருமை, முருகன் அல்லது அழகு, உள்ளொளி, இமயமலையும் தியானமும், சைவத்திறவு முதலான பல நூல்களை எழுதியுள்ளார்.

'தமிழ்த்தென்றல்' இவரது தலைமைச் சொற்பொழிவுகளின் தொகுப்பு. 'தமிழ்ச்சோலை' இவரது கட்டுரைகளின் தொகுப்பு. முருகன் அருள்வேட்டல், கிறித்து அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல், புதுமைவேட்டல் என்பன திரு.வி.க. இயற்றிய செய்யுள் நூல்களாம்.

**திரு.வி.க. உரைநடை நூல்களிலிருந்து சில பகுதிகள்:**

**பகுதி**-1

அழியாத அழகு என்பதைப் பற்றி **முருகன் அல்லது அழகு** என்னும் நூலில்,

"கைபுனைந்தியற்றா ஓரழகே அழியா அழகெனப்படும். கைபுனைந்தியற்றும் அழகு அழியுந்தன்மையது. 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்றார் நக்கீரனாரும்.கையால் செய்யப்படுவது செயற்கை. கையால் செய்யப் படாதது இயற்கை. மலையும் ஆறும் காடும் கடலும் எவர் கையால் ஆக்கப்பட்டன? அவை எக்கருவிகளால் செய்யப்பட்டன? ஞாயிறும் திங்களும் விண்மீன்களும் எவரால் செய்யப்பட்டன? புனலுக்குத் தண்மை ஈந்தவர் எவர்? நெருப்புக்கு வெம்மையூட்டினவர் யாவர்? இயல்பாக அரும்பிய இவற்றின் அழகே கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பாகும். மற்றையது போலி"

1. இப்பத்தியின் மையக் கருத்து 'அழியா அழகு' என்பதாகும்.
2. அழகு, கவின், வனப்பு - ஒரு பொருள் குறித்த பல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3. ஞாயிறு, திங்கள், புனல், தண்மை - என அருஞ்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
4. வினா வாக்கியங்கள் இடம்பெற்றுள்ளன.
5. 'கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு' என்னும் அழகிய தொடர் உள்ளது.

பகுதி - 2

'இயற்கைக் காட்சி வருணனையின்போது:

"வாழ்வுக்கியைந்த காடுகளும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கின்றன. மலைகளோடு மிடைந்தும் தனியே சிறந்தும் செறியுங் காடுகள், வெயில் தகைந்து அளிக்கும் காரிருள் நீழலும், வண்டு துவைப்பத் தேன் பூங்கா வனங்களினின்றும் கமழும் நறுநாற்றமும், வான்பரந்த பொழில் களின் நிரையும், கான்பரந்த தூறுகளின் ஈட்டமும், கொழுங்கொடிகளின் பின்னலும் உள்ளத்தைக் குளிர்விப்பன வல்லவோ?"

1. இப் பத்தியின் மையக் கருத்து: இயற்கைக் காட்சி வருணனை.
2. மிடைந்தும், செறியும், தகைந்து, துவைப்ப, கமழும் பொழில்கள், தூறுகள், ஈட்டம் ஆகிய அருஞ்சொற்கள் அமைந்துள்ளன.
3. காடுகள், நிழல், பொழில்கள், தூறுகள், கொடிகள் ஆகியவை சிறந்தமுறையில் வருணிக்கப்பட்டுள்ளன.
4. முதலில் ஒரு தொடரும் இரண்டாவது ஒரு நீண்ட தொடருமாக அமைந்து, வினாவாக முடித்திருப்பது இவருக்கே உரிய சிறப்பான நடையாகும்.

**2. சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை**

ரா.பி.சேதுப் பிள்ளை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராசவல்லிபுரத்தில் 1896 ஆம் ஆண்டு பிறந்தார் (2.3.1896). இவர் சட்டக் கல்வி முடித்துத் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

தமிழ்ப் பயிற்சியும், தமிழ்ப் பேராசிரியர் தொடர்பும் இவரைத் தமிழின்பால் ஈர்த்தன. அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் விரிவுரையாளர் பதவியை ஏற்றார். பின்னர்த் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவரானார். இறக்கும்வரை அப் பொறுப்பினைச் சிறப்பாக நிறைவேற்றினார்.

இவர், ஊரும் பேரும், திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல் நயம், தமிழ் இன்பம், வேலும் வில்லும், வீரமாநகர், தமிழ் விருந்து, தமிழ் வீரம், கடற்கரையிலே, தமிழ் நாட்டு நவமணிகள்முதலான பல நூல்கள் எழுதியுள்ளார்.இவர், கல்லாரும் கற்றாரும் கேட்டுக் களிப்படையும் வண்ணம் எதுகை மோனை நயங்களுடன் இனிமையாகப் பேசும் ஆற்றல் பெற்றவர். இவரது பேச்சு, எழுத்துத் தமிழ்போன்றே கொச்சை மொழிகள் இன்றியும் தூய தமிழிலும் அமைந்ததால், **சொல்லின் செல்வர்** எனப் பாராட்டப் பெற்றார். இவர் செய்யுளடிகளை அப்படியே உரைநடையில் அமைத்து எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். 'சேதுப் பிள்ளை நடை' என மக்கள் போற்றும் வண்ணம் இவரது நடை தனித்தன்மை வாய்ந்தது.

இலக்கியங்களை எடுத்து விளக்குவதிலும் செய்யுட்களின் இன்பத்தை எடுத்துக் கூறுவதிலும் இவர் தனித்திறன் பெற்றிருந்தார். சொல்லின் செல்வரான இவரதுநடையைப் பின்பற்றிப் பலர் பேசவும் எழுதவும் தொடங்கினர். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இனிமை வாய்ந்த தமிழ் நூல்கள் பலவற்றை இவர் இயற்றியுள்ளார்.

**ரா.பி. சேதுப் பிள்ளை உரைநடை நூல்களிலிருந்து சில பகுதிகள்:**

**பகுதி - 1**

**திருக்குற்றாலம் பற்றிய வருணனை:**

'தென்றல் அசைந்து வரும் தென்தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம் மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம் மலையிலே கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங் கமழும். கோலமாமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச் செடி கொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும். சலித்த உள்ளத்தைத் திருத்தும் சஞ்சீவியாகும்.'

1. பத்தியின் மையக் கருத்து: குற்றால வருணனை.
2. தென்தமிழ் நாடு, பழம்பதி, பூங்காற்று ஆகியவற்றை வருணிக்கும் தொடர்கள் தென்றல் அசைந்து வரும் தென்தமிழ்நாடு, மலைவளம் படைத்த பழம்பதி, மெல்லிய பூங்காற்று - என அமைந்துள்ளன.
3. நறுமணங் கமழும், கோலமாமயில், வெள்ளருவி, நீர்த்திவலைகள் - இத்தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
4. இப்பகுதியில் சிறுசிறு சொற்றொடர்கள் அமைந்து படிப்பதற்கு ஓர் ஒலிநயம் தருகின்றது.

**பகுதி - 2**

**தமிழ் இலக்கியத்திற் கண்ட பக்தி என்னுங் கட்டுரையில் திருஞானசம்பந்தரைப் பற்றியது:**

'தமிழ்நாட்டு மலையும் நதியும் இன்றைய இயற்கைப் பொருள்களும் அவர் தேவாரப் பாட்டிலே படமெடுத்துக் காட்டப்படுகின்றன. மந்த மாருதம் வந்துலாவும் திருக்குற்றால மலையில் வாழும் மந்தியினை அவர் பாடலில் காணலாம். காமர் மாலை அருகசைய நடந்து செல்லும் காவேரியாற்றின் அழகினை அவர் பாட்டில் காணலாம். இன்னும் கண்ணுக்கினிய நிறமும், காதுக்கினிய மொழியும் வாய்ந்த கிளிகளைக் காணலாம். சோலையிலே பறந்து திரியும் கிளியை நோக்கி அவர் பேசும் முறையினைக் காண்போம்: 'இளங்கிளியே! இங்கே வா; பாலும் தேனும் கலந்து உனக்குப் பருகத் தருவேன். நீ உனது இனிய மொழியால் எனது ஈசன் திரு நாமத்தை ஒருமுறை பேசாயோ?' என்று திருஞானசம்பந்தர் வேண்டுகின்றார்.

1. பத்தியின் மையக் கருத்து: திருஞானசம்பந்தர் பாடல் நயம்.
2. மந்த மாருதம், காமர் மாலை, இளங்கிளி, பருகத் தருவேன் - என்பன நயமிக்க தொடர்கள்.
3. முதற் சொற்றொடர் தேவாரப் பாட்டின் பொதுக் கருத்தைக் கூற, அடுத்துவரும் சொற்றொடர்கள் அதனை விளக்குகின்றன.

## 3. இலக்கணம்

மாணவ ஆசிரியர் தாம் கற்பிக்கவிருக்கும் வகுப்புகளுக்கான இலக்கணப் பகுதிகள் பற்றித் தெளிவான அறிவு பெற்றிருத்தல் இன்றியமையாதது. பாடங்களைக் கற்பிக்கும்பொழுது இவ்விலக்கண அறிவை உரிய முறையில் பயன்படுத்தும் திறன் பெறுதல்வேண்டும்.


### இனவெழுத்துகள்

எழுத்துகள் பிறக்குமிடம், ஒலிக்கும் முயற்சி, ஒலிக்குங் கால அளவு, வடிவம் ஆகியவற்றுள் ஒன்று மற்றொன்றை ஏதேனும் ஒருவகையால் ஒத்திருக்கும். இவ்வாறு வரும் எழுத்துகள் இனவெழுத்துகள் எனப் பெறும்.

உயிர் எழுத்துகளுள் குறில் எழுத்துகளுக்கு நெடில் எழுத்துகள் இனமாக அமையும்.அ-ஆ; இ-ஈ; உ-ஊ; எ-ஏ; ஒ-ஓ; இவை தவிர, ஐ எழுத்துக்கு இ-யும், ஔ எழுத்துக்கு உ-வும் இனமாகும். மெய்யெழுத்துகளுள், வல்லின எழுத்துகளுக்கு மெல்லின எழுத்துகள் இனமாம்.(க்-ங்; ச்-ஞ்; ட்-ண்; த்-ந்; ப்-ம்; ற்-ன் ) மெல்லின மெய்களை அடுத்து அவற்றின் வல்லின எழுத்துகள் அமையும். தங்கம், பங்கு எனவும், மஞ்சள், இஞ்சி எனவும், பண்டம், வண்டி எனவும், தந்தம், பந்து எனவும், கம்பம், தம்பி எனவும், மன்றம், நன்றி எனவும் மெல்லின எழுத்துகளை அடுத்து அவற்றிற்கு இனமான வல்லின எழுத்துகள் வந்துள்ளமை காண்க.

### பெயர்ச்சொல்

பொருள்களின் பெயர்களைக் குறிக்குஞ்சொல் பெயர்ச்சொல் எனப்படும். பெயர்ச்சொல் ஆறு வகைப்படும். அவை: பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.




**பொருட்பெயர்** : உயிருள்ள, உயிரற்ற பொருள்களைக் குறிக்கும் பெயர் பொருட்பெயராகும்.
எடுத்துக் காட்டு: வள்ளி, மரம்; வண்டி, பொன்.

**இடப்பெயர்** : இடங்களின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயராகும்.
எடுத்துக்காட்டு: வகுப்பு, தஞ்சை, குளம், வீடு

**காலப்பெயர்** : காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயராகும்.
எடுத்துக்காட்டு: நொடி, காலை, நாள், ஆண்டு.

**சினைப்பெயர்** : ஒரு பொருளின் உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயராகும்.
எடுத்துக்காட்டு: கை, சிறகு, இலை, கால்.

**குணப்பெயர்** : ஒரு பொருளின் பண்பை/குணத்தைக் குறிப்பது குணப்பெயராகும்.
எடுத்துக்காட்டு: நன்மை, இனிப்பு, வட்டம், பசுமை

**தொழிற்பெயர்** : ஒரு செயலைக் குறித்துவரும் பெயர் தொழிற்பெயராகும்.
எடுத்துக்காட்டு: கேட்டல், செய்கை, ஆட்டம், பாடுதல்

கை, கந்தன், குரங்கு, தாவுதல், சித்திரை, அழுகை, வகுப்பு, தலை, நாற்காலி, விளையாட்டு, உண்ணல், இலை, குமரன், வீடு, கிளை, ஆட்டம், காய், குளித்தல், தோட்டம், இன்பம், மார்கழி, திருப்பதி, தொலைபேசி இப்பெயர்ச் சொற்களை வகைப்படுத்துக.

**தொழிற் பெயர்**

தொழிற் பெயர் விகுதிபெற்ற தொழிற்பெயர், முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர் என மூவகைப்படும். தொழிற் பெயரின் ஈற்றில் தல், அல், அம், ஐ, கை முதலியவற்றுள் ஒன்று விகுதியாக அமைவது விகுதிபெற்ற தொழிற் பெயர். (எ-டு) நடத்தல், பெறல், கொண்டாட்டம், செய்கை

விகுதி இல்லாமல் பகுதியாகிய முதனிலை மட்டும் நின்று தொழிற்பெயர்ப் பொருளைத் தருவது முதனிலைத் தொழிற் பெயர். (எ-டு) ஓர் அடி அடித்தான். (அடி என்பது முதனிலைத் தொழிற் பெயர்) தொழிற் பெயர்களில் முதனிலை திரிந்து தொழிற் பெயரின் பொருளை உணர்த்துவது முதனிலை திரிந்ததொழிற் பெயர். கேடு - கெடுதல் - தொழிற் பெயர்.

| **வினைப்பகுதி** | | **தொழிற்பெயர்** | | |
|---|---|---|---|---|
| பாடு | - | பாடுதல் | = | விகுதிபெற்ற தொழிற்பெயர் |
| அடி | - | ஓர் அடிஅடித்தான் | = | முதனிலைத் தொழிற்பெயர் |
| கெடு | - | கேடு | = | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |

**பெயரின் பண்புகள்**

**1. வேற்றுமை ஏற்றல்:** முருகன், முருகனை, முருகனால், முருகனுக்கு, முருகனின், முருகனது, முருகனிடத்து, முருகா எனப் பெயர்ச்சொல் எட்டு வேற்றுமைகளையும் ஏற்று நிற்கும்.

**2. திணை, பால், இடம் காட்டும்:**

1) மனிதன் - உயர்திணை, ஆண்பால், படர்க்கையிடம்.
2) மக்கள் - உயர்திணை, பலர்பால், படர்க்கையிடம்.
3) பறவை-அஃறிணை, ஒன்றன்பால், படர்க்கையிடம்.
4) நான் - இருதிணைப்பொது, ஒருமை தன்மையிடம். எனவே, பெயர்கள் இருதிணை, ஐம்பால், மூவிடத்துள் ஒன்றையும் பலவற்றையும் காட்டும்.

**எல்லாம், தாம், தான் இன்னன பொதுப்பெயர்:**

எல்லாம் என்னும் பன்மைப் பொதுப்பெயர் இருதிணை, இருபால் (பலர்பால், பலவின்பால்), மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். (எ-டு) நாம் எல்லாம், நீர் எல்லாம், அவர் எல்லாம், அவை எல்லாம் என வரும்.

தான் என்னும் ஒருமைப் பொதுப்பெயர் இருதிணை, முப்பால் (ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்),மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். (எ-டு) அவன்தான், அவள்தான், அதுதான், நீதான், நான்தான் என வரும்.

தாம் என்னும் பன்மைப் பொதுப்பெயர் இருதிணை, இருபால் (பலர்பால், பலவின்பால்)மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். (எ-டு) அவர்தாம், அவைதாம், நீர்தாம், நாம்தாம் என வரும்.

## ஆகுபெயர்

வெள்ளைச் சட்டை அணிந்தான்.
வீட்டிற்கு வெள்ளை அடித்தனர்.

முதல் தொடரிலுள்ள ‘வெள்ளை’ என்னுஞ் சொல் நிறத்தைக் குறித்த பண்புப் பெயராகும்.அடுத்த தொடரிலுள்ள ‘வெள்ளை’ என்னுஞ் சொல், வெள்ளை நிறத்தில் அமைந்த சுண்ணாம்பு நீரைக் குறிக்கிறது.

இவ்வாறு தொன்றுதொட்டு ஒன்றிற்கு வழங்கிவந்த இடுகுறிப்பெயர் அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகிவருமாயின், அது ‘ஆகுபெயர்’ எனப்படும்.

### ஆகுபெயரின் வகை

### அ. பொருளாகு பெயர்

பூசனிச் சாம்பார் சுவையாக இருந்தது. ‘பூசனி’ என்னுஞ் சொல் வேர், கொடி, இலை, பூ, பிஞ்சு, காய் ஆகியவற்றுடன் அமைந்த பூசனிச் செடியாகிய முழுப் பொருளைக் குறிப்பதாகும். ஆனால், இத்தொடரில் ‘சாம்பார் சுவையாக இருந்தது’ என்னுங் குறிப்பால் ‘பூசனி’ என்னுஞ்சொல் முழுப் பொருளைக் குறிக்காது. அதன் ஓர் உறுப்பாகிய பூசனிக்காயை உணர்த்துகிறது.

இவ்வாறு ஒரு முழுப் பொருளின் பெயர், அதனைச் சுட்டாது, அதன் உறுப்புக்கு ஆகி வருவது ‘பொருளாகு பெயர்’ எனப்படும். இதனை ‘முதலாகு பெயர்’ எனவும் கூறுவர்.

### ஆ. இடவாகு பெயர்

**காஞ்சிபுரம்** என்ன விலை? ‘காஞ்சிபுரம்’ என்பது இடப்பெயராகும். ஆனால், இத்தொடரிலுள்ள குறிப்புச் சொற்களால், ‘காஞ்சிபுரம்’ என்னும் இடப்பெயர், அந்த இடத்தைக் குறிக்காமல் அவ்விடத்தில் நெய்தெடுக்கப்படும் பட்டாடையைக் குறிக்கிறது. இவ்வாறு ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகிவருவது ‘இடவாகு பெயர்’ எனப்படும்.

### இ. காலவாகு பெயர்

கோடை நன்றாக விளைந்துள்ளது. ‘கோடை’ என்பது காலப் பெயராகும். ஆனால், இத்தொடரிலுள்ள ‘விளைந்துள்ளது’ என்னுங் குறிப்பால், கோடைக்காலத்தில் விளையும் நெல்லைக் (கோடை நெல்) குறிக்கின்றது.

இவ்வாறு காலப்பெயர் அக்காலத்தோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்காகி வருவது ‘காலவாகு பெயர்’ எனப்படும்.

### ஈ. சினையாகு பெயர்

தலைக்கு ஒரு பழங் கொடு.

‘தலை’ என்பது மனிதனின் ஓர் உறுப்பாகும். ஆனால், இத்தொடரில் ‘தலை’ என்பதை அடுத்துள்ள குறிப்புச் சொற்களால் ஒரு மனிதனைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு சினையின் (உறுப்பின்) பெயர் அதைப் பெற்றுள்ள முதற் பொருளைக் குறிப்பது ‘சினையாகு பெயர்’ எனப்படும்.

சினையின் பெயர் முதற்பொருளுக்கு ஆகிவருவது சினையாகு பெயர். முதற் பொருளின் பெயர் அதன் சினைக்கு (உறுப்புக்கு) ஆகி வருவது பொருளாகு பெயர் என்னும் வேறுபாட்டை அறிக.

### உ. பண்பாகு பெயர்

செவலையை வண்டியில் பூட்டு. 'செவலை' என்பது சிவப்பு நிறத்தைக் குறிக்கும் பண்புப் பெயராகும். 'வண்டியில் பூட்டு' என்னுங் குறிப்புச் சொற்களால், 'செவலை' என்பது நிறத்தைக் குறிக்காமல், அந்நிறத்தில் அமைந்த எருதினைக் குறிக்கிறது.

இவ்வாறு ஒரு பண்புப் பெயர், அப்பண்பைக் கொண்ட பொருளுக்கு ஆகிவருவது, 'பண்பாகு பெயர்' எனப்படும்.

### ஊ. தொழிலாகு பெயர்

பொரியல் சுவையாக இருந்தது. 'பொரியல்' என்பது தொழிலைக் குறிப்பதால் தொழிற்பெயராகும். ஆனால், இத்தொடரில் 'சுவையாக இருந்தது' என்னுங் குறிப்பால் பொரித்தெடுக்கும் செயலால் உண்டான உணவுப் பொருளைக் குறிக்கிறது.

இவ்வாறு ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலால் பெறப்படும் பொருளுக்கு ஆகி வருவது 'தொழிலாகு பெயர்' எனப்படும்.

### அன்மொழித் தொகை

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்து தொகைநிலைத் தொடர்களுக்கும் புறத்தில் அவற்றிற்கு உரியன அல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் தொக்கு வருபவை அன்மொழித்தொகை எனப்படும்.

(எ-டு) பொற்றொடி வந்தாள். (பொன்னால் ஆகிய தொடியை உடைய பெண்) - இது மூன்றாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

எத்தொகையின் புறத்தே அன்மொழித்தொகை பிறக்கிறதோ அதை முன்னிட்டு அத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனப்படும்.

"ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி" - (நன்.369)

தாமரை முகம், கார் அறுத்தான், பொங்கலுண்டான், வெற்றிலை நட்டான், ஊர் திரண்டது, வெள்ளையடித்தான் - இச்சொற்களை ஆகுபெயர்களாக வகைப்படுத்துக.

## வேற்றுமை உருபும் பொருளும்

முருகன் வந்தான் - இதில் முருகன் என்னும் பெயர்ச்சொல் எழுவாயாக உள்ளது. முருகனைப் பார்த்தேன். இதில் முருகன் என்னும் பெயர்ச்சொல் ஈற்றில் ஐ என்னும் உருபுடன் சேர்ந்து செயப்படுபொருளாய் வேறுபட்டுள்ளது.

இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளில் வேறுபாடு தோன்றச் செய்வது வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தத் துணை செய்வன வேற்றுமை உருபுகள் ஆகும்.

வேற்றுமைகள் எட்டு ஆகும். முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபு இல்லை. இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரை உருபுகள் உண்டு.

### முதல் வேற்றுமை

வேலன் படித்தான். இதில் வேலன் என்னும் பெயர் எழுவாயாகிப் படித்தான் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. எழுவாயே முதல் வேற்றுமையாகும். இது எழுவாய் வேற்றுமை எனவும் கூறப்படும். இதன் உருபு திரிபு இல்லாத பெயரேயாகும்.

வேலன் நல்ல சிறுவன். இதில் வேலன் என்னும் எழுவாய், சிறுவன் என்னும் பெயர்ச் சொல்லைப் பயனிலையாகக் கொண்டு முடிந்தது.

வேலன் யாவன்? இதில் வேலன் என்னும் எழுவாய் யாவன் என்னும் வினாப் பெயரைக் கொண்டு முடிந்தது.

முதல் வேற்றுமையாவது எழுவாயாகும். அது வினைமுற்றையோ பெயரையோ வினாவையோ கொண்டு முடியும். முதல் வேற்றுமையின் பொருள் கருத்தாப் பொருளாகும். (கருத்தா, வினைமுதல் செய்பவன், எழுவாய் என்பன ஒரு பொருளுடைய சொற்கள்.)

**இரண்டாம் வேற்றுமை**

இதன் உருபு 'ஐ' ஆகும். இஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒப்பு, உடைமை முதலிய பொருள்களில் வரும்.

வீட்டைக் கட்டினாள்.
வீடு ஆக்கப்படு பொருளாயிற்று. - ஆக்கல்
வீட்டை இடித்தான்.
வீடு அழிக்கப்படு பொருளாயிற்று. -அழித்தல்
ஊரை அடைந்தாள்.
ஊர் அடையப்படு பொருளாயிற்று. - அடைதல்
உலகை வெறுத்தான்.
உலகு நீக்கப்படு பொருளாயிற்று. - நீத்தல் (பற்று நீங்குதல்)
தேனை யொத்தது.
தேன் ஒப்புப் பொருளாயிற்று. - ஒப்பு
செல்வத்தை உடையவள்.
செல்வம் உடைமைப் பொருளாயிற்று.- உடைமை

**மூன்றாம் வேற்றுமை**

இதன் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன. ஆல், ஆன் என்பன கருவி, கருத்தாப் பொருள்களில் வரும். ஒடு, ஓடு என்பன உடன்நிகழ்ச்சிப் பொருளில் வரும்.

வாளால் வெட்டினான்
வாளான் வெட்டினான். - கருவி

அரசனால் கட்டப்பட்ட கோயில்.
தச்சனால் செய்யப்பட்ட பெட்டி. - கருத்தா

தாயொடு மகள் வந்தாள்.
ஆசிரியரோடு மாணாக்கன் வந்தான்.-உடனிகழ்ச்சி

ஆல், ஆன் என்னும் உருபுகளுக்கு ஈடாகக் 'கொண்டு' என்னும் சொல்லுருபும், ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்கு ஈடாக, உடன் என்னும் சொல்லுருபும் பயன்படுதலுண்டு.

(எ-டு) வாள்கொண்டு அறுத்தான். தாயுடன் மகள் வந்தாள்.

**நான்காம் வேற்றுமை**

இதன் உருபு 'கு' என்பது. இவ்வுருபு கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை என்னும் பொருள்களில் வரும்.

| | | |
|---|---|---|
| ஏழைக்குக் கொடுத்தான் | - | கொடை |
| பாம்புக்குப் பகை மயில் | - | பகை |
| இராமனுக்கு நண்பன் குகன் | - | நேர்ச்சி (நட்பு) |
| வீரனுக்கு உரியது வாள் | - | தகுதி |
| நகைக்குத் தங்கம் கொடு | - | அதுவாதல் |
| கூலிக்கு வேலை செய்தான். | - | பொருட்டு |
| தருமனுக்குத் தம்பி பீமன் | - | முறை |

பொருட்டு, நிமித்தம், ஆக என்பன சொல்லுருபுகளாக வரும்.

கூலியின்பொருட்டு வேலை செய்தான்.
கூலியின்நிமித்தம் வேலை செய்தான்.
கூலிக்காக வேலை செய்தான்

**ஐந்தாம் வேற்றுமை**

இதன் உருபுகள் இல், இன் என்பன. இவ்வுருபுகள் நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளில் வரும்.

| | | |
|---|---|---|
| மலையின் வீழருவி | - | நீங்கல் |
| தேளின் கொடியது பாம்பு | - | ஒப்பு |
| இந்தியாவின் வடக்கே இமயமலை | - | எல்லை |
| கொடையிற் சிறந்தவர் பாரி | - | ஏது |

இல், இன் உருபுகளின்மேல் நின்று, இருந்து என்பன சில இடத்துச் சொல்லுருபுகளாக வரும்.

ஊரினின்று நீங்கினான்.
ஊரிலிருந்து போனான்.

**ஆறாம் வேற்றுமை**

அது, ஆது, அ என்பன ஆறாம் வேற்றுமையின் உருபுகளாகும். இவற்றுள் அது, ஆது என்னும் இரண்டும் ஒருமைக்கும் பன்மைக்கும் வரும்.

| | | |
|---|---|---|
| கண்ணனது பை | - | அது |
| தனாது சுவடி | - | ஆது |
| என நூல்கள் | - | அ |

ஆறாம் வேற்றுமை உருபு தற்கிழமைப் பொருளிலும், பிறிதின் கிழமைப் பொருளிலும் வரும்.தற்கிழமையாவது, தன்னோடு ஒற்றுமையுடைய பொருளின் தொடர்பை உணர்த்துவதாகும். இது பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம் (ஒரு பொருட் கூட்டம்) பலவின் ஈட்டம் (பல பொருட் கூட்டம்) திரிபின் ஆக்கம் ( ஒன்று திரிந்து ஒன்றாதல்) என ஐந்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| முருகனது பெருமை | - | பண்புத் தற்கிழமை |
| கண்ணனது கை | - | உறுப்புத் தற்கிழமை |
| நெல்லினது குவியல் | -‘ | ஒன்றன் கூட்டத் தற்கிழமை |
| பறவைகளது கூட்டம் | - | பலவின்கூட்டத் தற்கிழமை |
| மஞ்சளது பொடி | - | திரிபின் ஆக்கத் தற்கிழமை |

பிறிதின் கிழமையாவது, தன்னின் வேறாய பொருளின் தொடர்பை உணர்த்துவது. இது பொருள், இடம், காலம் என மூவகைப்படும்.

| | | |
|---|---|---|
| குமரனது ஆடை | - | பொருள் பிறிதின் கிழமை |
| கந்தனது வீடு | - | இடப்பிறிதின் கிழமை |
| வள்ளுவரது நாள் | - | காலப் பிறிதின் கிழமை |

உடைய என்பது ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக வரும்.

கந்தனுடைய பந்து.

**ஏழாம் வேற்றுமை**

இதன் உருபு 'கண்' என்பது. இதனை இடவேற்றுமை எனவும் கூறுவர். இவ் வேற்றுமைக்குக் 'கண்' உருபேயன்றிக் கால், கடை, வழி, இடத்து, வாய், தலை, வலம், இடம், மேல், கீழ், பின், முன், உள், அகம், புறம் முதலிய உருபுகளும் உள்ளன.

இவ்விடப் பொருள், தற்கிழமைப் பொருளிலும் பிறிதின் கிழமைப் பொருளிலும் வரும். பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் இவ்விரு பொருளுக்கும் இடமாய் அமையும்.

**தற்கிழமை**

| | | |
|---|---|---|
| மணியின்கண் உள்ள ஒலி | - | பொருள் |
| கடலின்கண் உள்ள அலை | - | இடம் |
| நாளின்கண் உள்ள நாழிகை | - | காலம் |
| விரலின்கண் உள்ள நகம் | - | சினை |
| கறுப்பின்கண் உள்ள அழகு | - | பண்பு |
| ஆடலின்கண் உள்ள அழகு | - | தொழில் |

**பிறிதின்கிழமை**

| | | |
|---|---|---|
| தினையின்கண் உள்ள கிளி | - | பொருள் |
| விண்ணின்கண்பறக்கும் பருந்து | - | இடம் |
| பகலின்கண் மலரும் தாமரை | - | காலம் |
| கையின்கண் உள்ள வளையல் | - | சினை |
| இளமையின்கண் செல்வம் | - | பண்பு |
| ஆடற்கண் பாடிய பாட்டு | - | தொழில் |

**எட்டாம் வேற்றுமை**

இதற்குத் தனியுருபு இல்லை. பெயர் இயல்பாய் நிற்றலும், பெயரின் ஈறு திரிதலும், ஈறு குன்றுதலும், ஈறு மிகுதலும், ஈற்றயல் திரிதலும் இதன் உருபாகும். இதன் பொருள் விளிப்பொருள். இவ்வேற்றுமை விளிவேற்றுமை எனவும் பெயர் பெறும்.

| | | | |
|---|---|---|---|
| தந்தை - தந்தாய்! | தோழி - தோழீ! | - | ஈறு திரிதல் |
| நண்பன் - நண்ப! | முருகன் - முருக! | - | ஈறு குன்றல் |
| கண்ணன் - கண்ணனே! | தலைவன் - தலைவனே! | - | ஈறு மிகுதல் |
| தம்பி - தம்பி! | முருகன் - முருகன்! | - | இயல்பாதல் |
| மக்கள் - மக்காள்! | புலவர் - புலவீர்! | - | ஈற்றயல் திரிதல் |

**உருபு மயக்கம்**

ஒரு வேற்றுமை உருபு நிற்கவேண்டிய இடத்தில் பிறிதொரு வேற்றுமை உருபு நின்று அதே வேற்றுமைப் பொருளைத் தருவது உருபு மயக்கமாகும். இவ்வாறு வேற்றுமை உருபு மயங்கி வந்தால் வேற்றுமைப் பொருளுக்கேற்ப அவ் வேற்றுமை உருபைத் திரித்துக் கொள்ளல் வேண்டும்.

‘பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து’ எனுந் தொடரில் அரையில் அசைத்து என்னும் ஐந்தாம் வேற்றுமை ‘அரைக்கு அசைத்து’ என நான்காம் வேற்றுமையாக உருபு மயங்கிப் பொன்னால் ஆகிய மேனிகொண்டவன் புலித்தோலினை இடையில் அணிந்து எனப் பொருள் வேறுபாடின்றி அமைந்துள்ளது.

(எ-டு) காலத்தினாற் செய்த நன்றி - காலத்தின்கண் செய்த நன்றி. மூன்றாம் வேற்றுமை உருபு ஆல் என்பதை ஏழாம் வேற்றுமை உருபு ‘கண்’ ஆகக் கொள்க.

ஒரு வேற்றுமைப் பொருள் மற்றொரு வேற்றுமை உருபாற் சொல்லப்பட்டதாயினும் அப் பொருளுக்கியைய அவ்வுருபு சேரும்.

ஏழைக்குக் கொடுத்தான், தச்சனால் கட்டப்பட்ட வீடு, கொடையில் பாரி, பறவைகளது கூட்டம், குமரா வா, விரலின்கண்ணுள்ள நகம், வேலன் படித்தான், பாடத்தை எழுதினான் - இவ்வேற்றுமைத் தொடர்களை வகைப் படுத்துக.

கலீர் கலீர், ஒதுங்கு ஒதுங்கு, கலகல, திரும்பத் திரும்ப, சலசல, தடதட, நன்றி நன்றி, மளமள, வாழிவாழிவாழி - இச்சொற்களை இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடராக வகைப்படுத்துக.

**இரட்டைக்கிளவி:** அவன் கலகலவெனச் சிரித்தான் - என்னும் தொடரில் கலகல என்பதை இரண்டாகப் பிரித்தால் பொருள் தராது. பிரித்துச் சொல்லவும் முடியாது. ஆதலால், இரட்டைக் கிளவி (கிளவி-சொல்) எனப்படும். இவை ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு, வியப்புக் குறிப்பு, சினக் குறிப்பு என்பன போலப் பலவகைக் குறிப்புகளை உணர்த்தும்.

**அடுக்குத்தொடர்:** பாம்பு பாம்பு, விடுவிடு என்பன போல ஒரு சொல்லே இரண்டு அல்லது மூன்று முறை அடுக்கி வரும். அடுக்குத்தொடர் அசைநிலை, விரைவு, வெகுளி, அச்சம், உவகை, அவலம், இசைநிறை முதலிய பொருள்களில் வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| அன்றே யன்றே - அசைநிலை | | பாம்பு பாம்பு | - | அச்சம் |
| போ போ போ - | விரைவு | வருக வருக | - | உவகை |
| எறி எறி - | வெகுளி | தீ தீ | - | அவலம் |

பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ- இசை நிறை

தொடக்க வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களிலிருந்து அடுக்குத்தொடர்களைத் தொகுக்க.அடுக்குமொழியில் சிறப்பாகப் பேசவும் எழுதவும் பயிற்சி பெறுக. அண்ணாவின் நூல்களில் இடம்பெற்றுள்ள அடுக்குமொழிச் சொற்களைத் தொகுத்துக் கட்டுரைகளிலும் பேச்சிலும் பயன்படுத்துக.

| இரட்டைக்கிளவி | அடுக்குத்தொடர் |
|---|---|
| 1. இரட்டைச் சொல்லாக வரும்<br>2. வினைகளை அடுத்து அவற்றிற்கு அடைமொழியாக வரும்.<br>3. தனித்தனியே பிரித்தால் பொருள் தராது.<br>4. இரண்டுக்குமேல் அடுக்காது. | ஒருசொல் இரண்டு, மூன்றுமுறை அடுக்கி வரும்.<br>வினைகளைச் சிறப்பித்து வராமல் விரைவு, அச்சம் முதலிய பல பொருள்களை உணர்த்தவரும்.<br>தனித்தனியே பிரித்தால் பொருள்தரும் சொல்லாக அமையும்.<br>பொருள்நிலை மூன்றுமுறை வரையும் இசைநிறை நான்குமுறையும் அடுக்கி வரும். |

**வழுவமைதி**

ஒன்றற்கொன்று பொருத்தமில்லாத மாறுபட்ட சொற்களைக் கொண்டு முடிந்த சொற்களும் ஏதேனும் ஒரு காரணத்தால் சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமாயின், அது வழுவமைதியாம் (வழுவாயினும் அமைதியுடையது.).

**1. திணை வழுவமைதி**

ஒரு பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பது பசுவை அன்புகருதி உயர் திணையாக ஒருவர் கூறுவதால் வழுவமைதியாம். இதுபோல் உயர்திணையை அஃறிணையாகவும், அஃறிணையை உயர்திணையாகவும் வழங்குவது திணை வழுவமைதியாம்.

**2. பால் வழுவமைதி**

ஒரு தாய், தன் புதல்வனை 'என் அம்மா வா' என்றழைப்பது ஆசையாற் கூறுவதாதலின் வழு வமைதியாயிற்று. ஆண்பாலைப் பெண்பாலாகவும், பெண்பாலை ஆண்பாலாகவும், ஒன்றன் பாலைப் பலவின்பாலாகவும், பலவின் பாலை ஒன்றன்பாலாகவும் உயர்வு, உவப்பு முதலிய காரணங் களால் வழங்குவது பால் வழுவமைதியாம்.

**3. இடவழுவமைதி**

'முதல்வர் கருத்து யாதோ?' என வினாவும் இடத்து, உயர்வு கருதி முன்னேயுள்ள முதல்வரைப் படர்க்கையாகக் கூறுவது வழுவமைதியாம். உயர்வு கருதியும் இழிவு கருதியும் இவ்வாறு கூறுவது வழக்கம். தன்மையாகக் கூறுவதைப் படர்க்கையாவும் முன்னிலையாகக் கூறுவதைப் படர்க்கையாகவும் இடத்தை மாற்றிக் கூறுவது இடவழு வமைதியாகும்.

**4. கால வழுவமைதி**

உணவு உண்ணும் ஒருவனை நோக்கி விரைந்து வெளியே செல்லவேண்டிய நண்பன் ஒருவன் 'உண்டனையா?' என்றவிடத்து, 'உண்டேன் இதோ வந்தேன்' என்பது கால வழுவமைதி யாம். விரைவு கருதி இறந்த காலத்தாற் கூறினான். இதுபோன்று ஒரு காலத்திற் கூறவேண்டிய வினைச்சொல்லை மற்றொரு காலத்தில் சொல்வன எல்லாம் கால வழுவமைதியாம். இது விரைவு, தெளிவு, மிகுதி முதலிய காரணங்கள்பற்றி வரும்.

### 5. மரபு வழுவமைதி

இம்மாடு யான் வாங்கியது - எனக் கூறுவது மரபு வழுவமைதியாம். மாடு வாங்கப்பட்ட பொருள். வாங்கப்படுவதுதான் மாட்டின் விலை, வாங்குவது மனிதனுடைய தொழில். இம்மாடு என்னால் வாங்கப்பட்டது எனக் கூறுவது வழாநிலை. இம் மாடு யான் வாங்கியது எனக் கூறுதல் வழுவாயினும் சான்றோரால் வழங்கப்பட்டு வருதலால் வழுவமைதியாயிற்று. (இது செயப்படு பொருளைச் செய்தது போலச் சொல்வது.)

### வல்லெழுத்து மிகுமிடங்களும் மிகாவிடங்களும்

ஒரு நிலைமொழியோடு வருமொழி க, ச, த, ப வருக்க எழுத்துகளில் தொடங்குஞ் சொல்லாக அமையும்பொழுது அவ்வல்லொற்று சிலவிடங்களில் மிகுந்தும் சிலவிடங்களில் மிகாமலும் வரும். இவற்றையறிந்து பயன்படுத்தாமையைச் சந்திப்பிழை யெனக் கூறுவர்.

சில வேளைகளில் இப்பிழையால் பொருள் வேறுபாடு ஏற்படும். இது மாமா தந்த பொம்மை எனும்பொழுது பெயரெச்சத்தில் மிகாமலும், இது தந்தத்தால் ஆன பொம்மை எனக் கூறும்பொழுது தந்தப் பொம்மையென மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையில் மிகுந்தும் அமையும். இதனால் பொருள் வேறுபடுகிறதன்றோ?

தமிழ்ச் சான்றோர், எங்கெங்கு வல்லினம் மிகும், எங்கெங்கு மிகாதென அறிந்து கூறியுள்ளனர். அவற்றையறிந்து கொள்வோம்.

முத்துகுமார் மருந்துகடைக்கு சென்றான். வழியில் நாய்குட்டியை பார்த்தான். அதற்கு ரொட்டி துண்டை கொடுத்தான். அது மகிழ்ச்சியாக நின்றது. பின்னர் கடையை நோக்கி சென்றான். கடைகாரரிடம் மருந்துகளின் விலைக்கேட்டான். தன்னிட மிருந்தப் பணத்திற்கேற்ப தேவையான மருந்துப்பொருளை வாங்கினான். வீட்டிற்கு திரும்பும் வழியில் தன் நண்பனை கண்டான்.

- இப்பத்தியில் வல்லொற்று மிகுமிடங்கள், மிகாவிடங்களை அறிந்து பயன் படுத்துக.

### வல்லெழுத்து மிகுமிடங்கள்

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளின் பின்னும் ‘ எ’ என்னும் வினாவெழுத்தின் பின்னும் மிகும்.
   அப்பையன், எச்சிறுவன்?
2. அந்த, இந்த, எந்த என்னும் சுட்டு, வினாத் திரிபுகளின் பின் மிகும்.
   அந்தப் பையன், எந்தக் குதிரை?
3. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் மிகும்.
   இப்படிச் சொன்னான்.
4. அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களின் பின் மிகும்.
   எங்குச் சென்றனை?
5. இனி, தனி என்னும் சொற்களின் பின் மிகும்.
   இனிச் செய்யலாம். தனிக் கட்டடம்.

### வேற்றுமைப் புணர்ச்சியில்

6. இரண்டாம் வேற்றுமை விரியில் மிகும்.
   வீட்டைக் கண்டேன், நாட்டைக் காப்பாற்று.

7. நான்காம் வேற்றுமை விரியில் மிகும்.
    கடைக்குப் போனான், அவனுக்குக் கொடுத்தான்.
8. ஆறாம் வேற்றுமைத்தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் மிகும்.
    புலித்தலை. நாய்க்குட்டி.
9. ஏழாம் வேற்றுமைத் தொகையில் மிகும்.
    மனைப் பிறந்தார், சென்னைப் பல்கலைக்கழகம்.

**அல்வழிப் புணர்ச்சியில்**

10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் மிகும்.
    ஓடாக்குதிரை, பாடாப் பாட்டு,
11. பண்புத்தொகையில் மிகும்.
    இனிப்புப் பண்டம், வட்டப்பலகை,
12. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் மிகும்.
    ஆவணித் திங்கள், சாரைப்பாம்பு.
13. அரை, பாதி, எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்ச்சொற்களின் பின் மிகும்.
    அரைப் பங்கு, எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,
14. உவமைத்தொகையில் மிகும்.
    மலர்க்கை,
15. ஆய், போய் என்னும் வினையெச்சச் சொற்களின்பின் மிகும்.
    போய்க் கண்டேன். நன்றாய்ச் சொன்னாய்.
16. இகர, அகர ஈற்று வினையெச்சங்களின் பின் மிகும்.
    தேடிப் பார்த்தேன். தேடப் போனேன்.

**வல்லெழுத்து மிகா இடங்கள்**

1. அது, இது என்னும் சுட்டுச் சொற்களின் பின் அல்வழி, வேற்றுமை என்னும் இரண்டிடங்களிலும் மிகாது.
    அது பெரிது. இது கொடுத்தான்.
2. அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்களின் பின் மிகாது.
    இவ்வளவு கொடு. எவ்வளவு தொகை.
3. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களின் பின் மிகாது.
    எத்தனை சிறுவர்? இத்தனை காளைகளா!
4. படி என்னும் இடைச்சொல் வினைச்சொல்லுடன் சேர்ந்து வருகையில் மிகாது.
    போகும்படி சொன்னான். வருந்தும்படி பேசினான்.
5. சில, பல என்னும் சொற்களின்பின் அல்வழி, வேற்றுமை ஆகிய இருவழிகளிலும் மிகாது.
    சில கற்றார், பல பொருள்.
6. ஏகாரம் தேற்றேகார இடைச்சொல்லாய் வந்தால், அதன்பின் வரும் வல்லெழுத்து மிகாது.
    அவனே சொன்னான். யானே கள்வன்.

**வேற்றுமைப் புணர்ச்சியில்**

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் மிகாது.
8. மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் மிகாது.
    கந்தனோடு போனான்.
9. ஆறாம் வேற்றுமை உருபுகளின் பின் மிகாது.
    கந்தனது புத்தகம்.

**அல்வழிப் புணர்ச்சியில்**

10.. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிர மற்றெல்லாப் பெயரெச்சங்களின் பின் மிகாது.
ஓடின குதிரை. ஓடாத குதிரை

11. எழுவாய்த்தொடர், விளித்தொடர், வினைத்தொகை, உம்மைத்தொகைஆகியவற்றின்பின்மிகாது.
நாடி துடிக்குது, கந்தா! போ, சுடுசோறு, பூரிகிழங்கு.

## 4. படைப்பாற்றல்

மக்கள் உள்ளம் எந்த ஒன்றில் ஆர்வமாகவும் ஆழமாகவும் ஈடுபடுகிறதோ அந்த ஒன்றினைப் படைத்துப் பார்க்கவும் விரும்பும். சான்றாகச் சொற்பொழிவினைக் கேட்கும்பொழுது, பேச்சாளராக வேண்டும் எனும் எண்ணமும் சிறந்த கட்டுரைகளையும் கதைகளையும் படிக்கும்பொழுது எழுத்தாளராக வேண்டும் எனும் எண்ணமும், சிறந்த கவிதைகளைப் படித்துச் சுவைக்கும்பொழுது கவிஞராக வேண்டும் எனும் எண்ணமும் எழும். ஏன்? நல்ல உணவு வகை களை உண்டு மகிழும்பொழுது, அதைப்போன்று சமைத்துப் பார்க்கவேண்டும் எனும் எண்ணமும் எழுவது இயற்கைதானே! இவற்றையே "படைப்பூக்கம்" எனக் குறிப்பர் உளவியலாளர்.

இயல்பான இத்தகைய உணர்வுகளைத் தூண்டித் துலங்கச் செய்வது மொழி கற்பிக்கும் ஆசிரியர்களின் கடமையாகும். அத்தகைய தூண்டல் முயற்சிக்குத் துணை செய்யும் வகையில், தமிழ்ப் பாடநூலில் உள்ள செய்யுள், உரைநடைப் பகுதிகள் அமைக்கப்பெற்றுள்ளன. மொழிப்பாடம் கற்கும் மாணாக்கர் 'பேசுதல்' திறன் பெற்றுப் 'பேச்சாளர்' ஆக விரும்புவதும் 'எழுதுதல்' திறன்பெற்று எழுத்தாளராக விரும்புவதும் மொழியைக் கற்றுக்கொள்வதன் நோக்கங்களுள் ஒன்றாகவே அமையும்.

மாணவர்கட்கு எழுதுதல் திறனில் பயிற்சி அளிக்கவிருக்கும் மாணவ ஆசிரியர் தாமும் அத்திறனில் வல்லவராக விளங்குதல் இன்றியமையாதது. அவர்கள் கீழுள்ள மூன்று திறன்களில் வல்லமை பெறுதல் இங்குக் குறிக்கப்படுகிறது.

1. உரையாடலைச் செய்தியாக்குதல்
2. கட்டுரையை உரையாடலாக்குதல்
3. கட்டுரை எழுதுதல்

### 1. உரையாடலைச் செய்தியாக்குதல்

ஒரு பொருளைப்பற்றி ஒன்றுக்கு மேற்பட்டோர் கூடிக் கலந்து உரையாடுவது உரையாடல் எனப்படும். உரையாடலில் மொழிநடை எளிமையானதாகவும் இயல்பானதாகவும் இருக்கும். உரையாடலில் கலந்துகொள்வோருள் ஒருவர் மற்றவர் கருத்தை ஆதரித்து மேற்கோள் கூறி வலியுறுத்துவதும் உண்டு. அல்லது மற்றவர் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கூறித் தம் கருத்தை வலியுறுத்துவதும் உண்டு. இவ்விதமான உரையாடலில் பேசப்படும் கருத்தைக் கேட்டு அதனை மற்றவருக்குச் செய்தியாகக் கூறுவது ஒரு தனித் திறனாகும்.

**உரையாடலைச் செய்தியாக்குவதற்கான வழிமுறைகள்:**

1. உரையாடலின் மையக் கருத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.
2. கருத்தையொட்டி உரையாடலில் பங்கெடுப்போர் கூறும் செய்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும்.
3. உரையாடல் நேர்க்கூற்றாக அமைந்திருக்குமாகையால், அவற்றை அயற்கூற்றாக மாற்றிச் செய்திகளைக் கூறவேண்டும்.
4. உரையாடலின் கருத்து விட்டுப்போகாமல் செய்தியை முழுமையாகக் கூறவேண்டும்.
5. உரையாடலில் கலந்துகொள்வோர் கூறும் மேற்கோள்கள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றையும் விடாது செய்தியமைத்தல் வேண்டும்.

**கீழுள்ள உரையாடலைச் செய்தியாகக் கூறுக.**

கபிலன்: அம்மா! அம்மா! அங்கே பாருங்கள்! ஒரு நாய்க்குட்டி கத்திக் கொண்டிருக்கிறது.

அம்மா: கபிலா! பாவம், இந்த நாய்க்குட்டிக்குக் காலில் அடிபட்டு இரத்தம் கொட்டுகிறது,

கபிலன்: அம்மா! இதை யாரோ கல்லால் அடித்திருப்பார்கள் போலிருக்கிறதே!

அம்மா : அடிபட்ட இதனுடைய வலியும் வேதனையும் அடித்தவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது? இரக்கமற்ற இத்தகைய கொடுஞ்செயல்களைச் செய்வது பாவமல்லவா?

கபிலன்: ஆம், அம்மா! ஒருமுறை என் நண்பன் சின்னப்பன் விளையாட்டாக ஒரு நாயைக் கல்லால் அடிக்கப் போனான். நான் அவனைத் தடுத்து, 'இது தவறான செயல். நாயும் நம்மைப்போல ஓர் உயிர்தான்', என்று கூறித் திருத்தினேன்.

அம்மா : நல்லது செய்தாய்! இப்பொழுது நாம் இந்த நாய்க்குட்டிக்கு நம்மாலான உதவியைச் செய்வோம்!

கபிலன்: அம்மா! எங்கள் பள்ளிக்கு அருகில்தான் 'அரசு கால்நடை மருத்துவமனை' உள்ளது. நான் இதை அங்குக் கொண்டுசென்று சிகிச்சை செய்து வரட்டுமா?

அம்மா: நல்லது கபிலா! அவ்வாறே செய். நீ பாதுகாப்பாகச் சென்று விரைவில் வீட்டிற்குத் திரும்பிவிடு.

கபிலன்: நன்றி அம்மா!

(கபிலன் நாய்க்குட்டியை எடுத்துக்கொண்டு கால்நடை மருத்துவமனைக்குச் செல்கிறான்.)

கபிலன், அவன் வீட்டினருகே ஒரு நாய்க்குட்டியைக் கண்டான். அதனைத் தனது தாயாரிடம் காண்பித்தான். அதன் காலை எவரோ அடித்துக் காயப் படுத்தியிருந்தனர். இரக்கமற்ற இந்தக் கொடுஞ்செயலினால் காயத்தின் வலியும் வேதனையும் தாளாமல் அந்நாய்க்குட்டி கத்திக் கொண்டிருந்தது. இதனைக் கண்டு கபிலனும் அவன் தாயாரும் வருந்தினர். கபிலன், தாயாரிடம் ஒருமுறை தனது நண்பன் சின்னப்பன் விளையாட்டாக ஒரு நாயைக் கல்லால் அடிக்க முற்பட்டதையும் தான் தடுத்து, 'இது தவறான செயல்; நாயும் நம்மைப்போல ஓர் உயிர்தான்' எனச் சுட்டிக் காட்டியதையும் கூறினான். பின்பு, அடிபட்ட நாய்க்குட்டியை அரசுக் கால்நடை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு சென்றான்.

## 2. கட்டுரையை உரையாடலாக்குதல்

கட்டுரையை உரையாடலாக்குதல் ஒரு தனித்திறன். உரையாடல் அமைப்பவருக்கு நாடகச் சுவையுணர்வும் கற்பனை யாற்றலும் பெரிதும் தேவை.

### வழிமுறைகள்

1. கட்டுரையில் அமைந்த பொருளைப்பற்றி நன்கு சிந்தித்து அதிலமைந்த கருத்துகளை நன்கு முறைப்படுத்திக் கொள்ளல்வேண்டும்.
2. அவற்றை மனத்துள், சிறுசிறு வினாவிடையாக மாற்றிக்கொள்ளல் வேண்டும்.
3. வினாவுக்கு ஏற்ற விடையாக மட்டும் அமையாமல் விளக்கங்களோடு தொடரவேண்டும்.
4. ஒருவர் விட்டதை அடுத்தவர் தொட்டுத் தொடரும் பாங்கில் உரையாடலை அமைத்தால் உரையாடல் தொய்வின்றியும் கருத்தோட்டமாகவும் திகழும்.
5. எண்ணிச் சேகரித்த கருத்துகளை, முறைப்படுத்தி மாறிமாறி வழங்கி இருவரும் இயல்பாக உரையாடுவதுபோல் அமைக்கவேண்டும்.
6. உரையாடுவோர் இருவருடைய (ஆசிரியர் - மாணவர்; அப்பா - பிள்ளை; நண்பர்கள் இருவர்)இயல்புகளையும் முதலிலேயே கற்பனை செய்துகொண்டு அவர்கள் பேசும் பாங்கில் ஏற்ற கருத்துகளை உரையாடலில் அமைக்கவேண்டும்.
7. கட்டுரையில் அமைந்த பொருளுக்கேற்ப அதிலமைந்த மரபுத்தொடர்கள், பழமொழிகள், மேற்கோள்கள் ஆகியவற்றைக் கையாண்டு உரையாடலை அமைப்பது சிறப்பாம்.

8. உரையாடலை நிகழ்த்துவோர் அல்லாமல், பிறர் அதனைக் கேட்டாலும் உரையாடலின் மையக் கருத்தைஉணரும் வகையில் உரிய சொற்களைக் கையாளுதல்வேண்டும்.
9. உரையாடலைப் படித்துப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே இருவேறு கருத்துடைய இருவர், உரையாடுவது போன்றதொரு உணர்வு ஏற்படுமாறு உரையாடலை அமைக்க வேண்டும்.
10. வழக்காடும் திறமையை வளர்க்க வல்லது உரையாடல். ஆகையால், அதற்கேற்ற செறிவுடனும் நுட்பத்துடனும் உரையாடலை அமைத்தல்வேண்டும்.
11. ஒருவர் கட்டுரையைப் படித்துக் கருத்தை உணர்வதைவிட உரையாடலைப் படித்து உணருவது எளிமையும் இனிமையும் உடையதாகும். அதற்கேற்ப மொழிநடை, வாக்கிய வகைகள் அமையவேண்டும்.
12. விளையாட்டு - செய்தித்தாள் - உணவு - நாட்டு நலப்பணிகள் - உள்ளூர் விழா - பண்டிகைகள் - தேசிய விழாக்கள் பற்றி உரையாடல் அமைக்கலாம்.

**கீழுள்ள கட்டுரையை உரையாடலாக எழுதுக.**

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

### முன்னுரை

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. மருந்துக் கடைகளைப் பார்க்கும்போது எவ்வளவு மருந்துகள் எனும் வியப்பு ஏற்படுவதற்குப் பதிலாக எவ்வளவு நோய்கள் என்னும் அச்சமே ஏற்படுகிறது. அதனால்தான், இராமலிங்க அடிகளார் இறைவனிடம், 'நோயற்ற வாழ்வில் நான் வாழவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். இந்த நோயற்ற வாழ்வைப்பற்றி இக்கட்டுரையிற் காண்போம்.

### குறைவற்ற செல்வம்

செல்வம் என்பது யாது? பணம், காசு, நகைநட்டு, வீடுவாசல், தோட்டந்துரவு, மாடு மக்கள், கல்வி கேள்வி ஆகியன செல்வங்களாகக் கருதப்படுகின்றன. நடமாட முடியாத அளவுக்கு நோயில் விழுந்து கிடப்பவர்க்கு இவற்றால் என்ன பயன்? அவருக்கு எந்த உணவும் ஒத்து வராது. பசி எடுக்கிறது; உணவு இருக்கிறது. ஆனால், உண்ண முடியாது. உண்டாலும் ஒத்துக் கொள்ளாது என்றால், அவர் கோடிகோடியாய்ச் சொத்துக் குவித்து என்ன பயன்? பயன்படாத செல்வம் இருந்தால் என்ன? போனால் என்ன? நோயற்ற வாழ்வுதான் செல்வம்; அதுவே குறைவற்ற செல்வம் ஆகும்.

### முதற் செல்வம்

"ஆரோக்கியமே முதற் செல்வம்" என்றார் அறிஞர் எமர்ஸன். (Wealth is Health) அனைத்துச் செல்வங்களையும் பெற்றிருந்த போதிலும், உடல்நலமில்லை என்றால் அச் செல்வங்களால் பயனில்லை. வீட்டிலிருக்கும் வேலைக்காரர், சமையற்காரர் எல்லாம் நன்றாகச் சுவைத்துச் சாப்பிடும்போது, நோய்வாய்ப்பட்ட வீட்டுக்காரர் பத்தியமாகவும் பட்டினியாகவும் இருப்பார். தன்னால், அவர்களைப்போல் உண்ணமுடியவில்லையே என ஏங்குவார். " இவ்வளவு செல்வம் இருந்தும், சுவையாக உண்ண முடியவில்லை, திருப்தியாக உண்ண முடியவில்லை. இந் நிலையில் செல்வமிருந்தும் இல்லாததுபோல்தானே என எண்ணுவார். ஆதலால், மற்றச் செல்வங் களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு, உடல்நலம் முதற் செல்வமாகக் கருதப்படுகிறது.

**கவனியாமை**

நோய் வரும்வரையில் உடல்நலத்தைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. உடல் நலத்தின் மதிப்புத் தெரிவதில்லை. நலமான உடம்பில்தான் நலமான மனம் இருக்கும் என்பது உண்மை.

**முடிவுரை**

உடல்நலமும் இன்பமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உடல் நலமாக இருந்தால் இன்பமாக வாழலாம். சத்துள்ள தூய உணவு, தூய காற்று, தூய நீர் ஆகியவற்றைப் பயன் படுத்தினால், எமன் நம் எதிரே வர அஞ்சுவான். பாரதி பாடியதுபோல்,

"காலா! என் காலருகே வாடா - உனைச்
சற்றே மிதிக்கிறேன்"

எனத் தைரியமாகக் கூறலாம். இவற்றால், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை அறியலாம்.

## கட்டுரைக்குரிய உரையாடல்
## (மருத்துவரும் நோயாளியும்)

நோயாளி : மருத்துவர் ஐயா! இரவிலிருந்து வயிற்றுவலி பாடாய்ப் படுத்துகிறது. வயிற்று வலியைப் போக்க மருந்து தாருங்கள்.

மருத்துவர் : இரவு என்ன உணவு சாப்பிட்டீர்கள்?

நோயாளி : நேற்று மதியம் கொஞ்சம் சோறு சாப்பிட்டேன். இரவு சாப்பிடவே இல்லை.

மருத்துவர் : ம்... வயிற்றுப் பசிதான் உமக்கு நோய்! நன்றாகச் சாப்பிடுங்கள், எல்லாம் சரியாகிவிடும்.

நோயாளி : உணவு மட்டும் போதுமா?

மருத்துவர் : பசித்த வயிற்றுக்கு உணவே மருந்து; பசியாத வயிற்றுக்கு அவ்வுணவே நோய்.

நோயாளி : என்ன சொல்கிறீர்கள்? உணவே மருந்தாகவும் நோயாகவும் இருக்குமா?

மருத்துவர் : நிச்சயமாக! உணவை அளவுக்கு அதிகமாக உட்கொண்டால் அது வயிற்றிலே சிக்கலை ஏற்படுத்தும். அளவாக உண்டால் நலமாக வாழலாம். இன்னும் சொல்லப்போனால் உடல்நலமும் சிறப்பாக இருக்கும்.

நோயாளி : ஆமாம் ஐயா! மருந்துக் கடைகளை நோக்கும்போது எத்தனை வகையான ன்பதற்குப் பதிலாக எத்தனை வகையான நோய்கள்! எனும் அச்சமே ஏற்படுகிறது.

மருத்துவர் : உடல்நலமே உயர்ந்த செல்வம். பணம், நகை, வீடு, வாசல், தோட்டம், மாடு, கல்வி, கேள்வி, மக்கள் எல்லாம் இருந்து என்ன பயன்? நோயுற்றால் எல்லாம் உடன் வருமா? அதனால் தான் அன்றே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனக் கூறிச் சென்றார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும்போது வியப்பாய் இருக்கிறது. உடல்நலனும் இன்பமும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. உடல் நலமாக இருந்தால்தான் இன்பமாக வாழலாம். சத்துள்ள தூய உணவு, தூய காற்று, தூய குடிநீர் நலமான வாழ்வுக்கும் நெடுநாள் வாழ்வுக்கும் இன்றியமையாதன.

நோயாளி : ஆம்! உங்கள் பேச்சைக் கேட்டவுடன் "காலா! என் காலருகே வாடா - உனைச் சற்றே மிதிக்கிறேன்" என்ற பாரதியார் பாடல்தான்நினைவுக்கு வருகின்றது. உடல் நலமே முதற்செல்வமெனை அறிந்துகொண்டேன்.

## 3. கட்டுரை எழுதுதல்

ஒருவர், தம் உள்ளத்தில் தோன்றும் கருத்துகளை வெளியிட வாயில்களாக அமைவன, அவர்தம் பேச்சும் எழுத்தும் ஆகும். இவற்றுள், 'எழுதுதல்' என்பது ஒரு தனித்திறன். எல்லா ராலும் எளிதில் கைவரப் பெறாத திறன். ஆயினும், மாணாக்கர் பெற்றுச் சிறக்க வேண்டிய திறன். ஆதலின், எழுதுதல் திறனை வளர்க்கும் 'கட்டுரைப் பயிற்சி' என்பது மொழிப்பாடத்தில் ஓர் இன்றி யமையாத இடத்தைப் பெறுகின்றது. 'கட்டுரை' என்பதன் பொருள் விளக்கம், கட்டுரை எழுது வோர் மேற்கொள்ள வேண்டிய விதிமுறைகள், கட்டுரையின் வகைப்பாடு ஆகியவை பற்றியும், "உரையாடலைக் கட்டுரையாக்குதல்"; குறிப்பிட்ட "தலைப்பில் கட்டுரை எழுதுதல்" ஆகியன பற்றியும் இங்குக் காண்போம்.

### கட்டுரை என்பதன் பொருள் விளக்கம்

"ஒரு பொருளைப்பற்றி இலக்கணமுறையில் கட்டுரைப்பது கட்டுரை", "கட்டுரையாவது வகைப்படுத்திக் கூறல்", "உள்ளத்தில் தோன்றுவதைக் கட்டுரைப்பது கட்டுரை", "அழகு நிரம்பிய தன்மையைக் கட்டழகு" எனச் சொல்லுவதுபோல, அமைப்பழகு நிரம்பிய உரையைக் கட்டுரை என்கிறோம்.

இவ்வாறு அறிஞர் பலர், கட்டுரை என்பதை விளக்குகின்றனர். சுருங்கக் கூறின், குறிப்பிட்ட ஒரு பொருள்பற்றி, ஒரு கட்டுக்கோப்புடன் கற்போர் யாவரையும் கவரும்முறையில் அமைக்கப்படுவதைக் 'கட்டுரை' எனலாம்.

கட்டுரையானது சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நன்மொழி புணர்த்தல் முதலான அழகுகளைப் பெற்றிருக்கவேண்டும். கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மற்றொன்று விரித்தல் முதலான குற்றங்கள் இல்லாமல் எழுதப்படவேண்டும். மேலும், படைப்பாளரின் அறிவாற்றலை வெளிப்படுத்துவதோடு படிப்பவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாகவும் கட்டுரை அமைதல்வேண்டும்.

### கட்டுரையின் அமைப்பு

எந்தப் பொருளைப்பற்றிக் கட்டுரை எழுதினாலும் அது முன்னுரை, பொருளுரை, முடிவுரை ஆகியவற்றைக்கொண்டு விளங்கவேண்டும். முன்னுரையும் முடிவுரையும் ஒவ்வொரு பத்திக்குள் அமையவேண்டும். "முன்னுரை' என்பது எழுதப்புகும் கருத்தை வகுத்துக் காட்டு வதாகவும் 'முடிவுரை' என்பது சொல்லப்பெற்ற கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாகவும் அமையவேண்டும். முன்னுரை, முடிவுரைகளைக் கொண்டே கட்டுரையின் முழுமையையும் செறிவினையும் கற்போர் உணரும்வண்ணம் அவற்றை அமைத்தல்வேண்டும்.

பொருளுரையானது, எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் விளக்கிக் கூறும் பகுதியாகும். ஆதலின், அதனைப் பல பத்திகளாகப் பிரித்து எழுதுதல்வேண்டும். எடுத்துக் கொள்ளும் பொருளுக்கு ஏற்ப, உள்தலைப்புகள் பலவற்றைக் கொண்டதாகவும் இருப்பது சிறப்பாம்.

### கட்டுரை எழுதுவோர் மேற்கொள்ளவேண்டிய பொது விதிகள்

கட்டுரை எழுதுவோர், 1. செய்திகளைத் திரட்டுதல், 2. முறைப்படுத்துதல், 3. தலைப்புக் கொடுத்துப் பத்தியமைத்தல், 4. மேற்கோள்களையும் பழமொழிகளையும் திரட்டுதல், 5. வாக்கிய மாற்றங்கள், 6. நடையழகு, 7. எடுத்தாளும் திறன், 8. நிறுத்தற் குறிகளை இடுதல், 9. மீள்பார்வையிடுதல், 10. கையெழுத்து ஆகிய மேற்காணும் விதிமுறைகளைப் பின்பற்றிக் கட்டுரை எழுதினால், கட்டுரை எழுதுந்திறன் செம்மையுறும்.

**கட்டுரையின் வகைப்பாடு**

தமிழ்மொழிச் சான்றோர் கீழ்க்காணும் முறையில் கட்டுரையை வகைப்படுத்திக் கூறுவர். 1. சமுதாயவியல் கட்டுரை, 2. கல்வியியல் கட்டுரை, 3. வரலாற்றுக் கட்டுரை, 4. கதை இயல்பு கட்டுரை, 5. வருணனைக் கட்டுரை, 6. தலைப்பு விளக்கக் கட்டுரை, 7. தருக்கக் கட்டுரை, 8. ஆராய்ச்சிக் கட்டுரை, 9. தன் வரலாற்றுக் கட்டுரை, 10. பயணக் கட்டுரை, 11. நடுநிலைக் கட்டுரை, 12. புகழ்ந்து கூறும் கட்டுரை, 13. கற்பனைக் கட்டுரை, 14. பத்திரிகைக் கட்டுரை.

இப் பாகுபாடும் முடிந்த முடிபன்று. நோக்குவோருடைய நோக்கத்திற்கேற்ப இவை கூடவோ குறையவோ செய்யலாம்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., திருப்பூர் குமரன், தந்தை பெரியார், கல்விக்கண் திறந்த காமராசர் முதலியோரின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்; கல்வியின் சிறப்பு, நலவாழ்வுக் கல்வி, தொழிற் கல்வி முதலிய கல்வியியல் கட்டுரைகள்; சிறுசேமிப்பும் அதன் பயன்களும், தீண்டாமை யொழிப்பு முதலிய சமுதாயவியல் கட்டுரைகள் முதலானவற்றை மாணாக்கர்களுக்கு வழங்கி, அவைபற்றி ஆசிரியர் வாய்மொழிக் கட்டுரைப் பயிற்சி அளித்துப் பின்னர் மாணாக்கரையே எழுதி வருமாறு செய்யலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கட்டுரையைக் காண்போம்.

## சிறுசேமிப்பும் அதன் பயன்களும்

**முன்னுரை**

“பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை” என்பது திருவள்ளுவரின் அமுதமொழி. மக்கள் வாழ்க்கைக்குப் பொருள் எத்துணை இன்றியமையாதது என்பதை இதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அத்தகைய பொருளை நேர்மையான முறையில், நம் உழைப்பின்மூலம் ஈட்டுதலே மிகச் சிறந்தது. அதுவே இன்பந் தரும். அவ்வாறு ஈட்டிய பொருளைச் செலவு செய்து விட்டால் பிற்கால வாழ்விற்கு என்ன செய்வது? வாழ்நாள் முழுவதும் ஒருவன் சம்பாதித்துக் கொண்டே இருக்க வியலுமா? இயலாது. எனவே, தேடிய பொருளைச் சிக்கனமாகச் செலவு செய்து, ஒரு பகுதியைச் சேமித்து வைக்கும் பழக்கம் இருக்கவேண்டும். சேமிப்பின் இன்றி யமையாமை பற்றியும் பயன்களைப் பற்றியும் இக் கட்டுரையில் காண்போம்.

**பொருளின் சிறப்பு**

“பணம் பத்தும் செய்யும்”; “ஈட்டி எட்டின மட்டும் பாயும்; பணம் பாதாளம் வரை பாயும்”; “பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும்” என்பன பணத்தின் தேவையை உணர்த்தும் பழமொழிகள். “பொருள் இல்லாதவரை மனைவியும் விரும்ப மாட்டாள்; பெற்றெடுத்த தாயும் விரும்ப மாட்டாள்” என்பது ஔவையின் கருத்து. பொருள் உள்ளவரையே உலகம் போற்றும்; உயர்வு செய்யும். இத்துணைச் சிறப்புடைய பொருளைச் சேமித்துச் சிறப்பாக வாழ்தல் நம் கடமையன்றோ?

**செலவும் சிக்கனமும்**

நம் செலவை மூன்று வகைப்படுத்தலாம். அவை அன்றாடச் செலவுகள், எதிர்பாராச் செலவுகள், எதிர்காலச் செலவுகள். உணவு, உடை, தொழில் முதலியவற்றுக்காக நாள்தோறும் நாம் செய்வன அன்றாடச் செலவுகள். நோய், விபத்து முதலியவற்றால் ஏற்படும் செலவு எதிர் பாராத செலவாகும். முதுமைக்கால அமைதியான வாழ்வுக்காகச் சேமித்தல் எதிர்காலச் செலவாகும்.

சேமிப்புக்கு முதற்படி சிக்கனம். வீண் செலவுகளையும் ஆடம்பரச் செலவுகளையும் தவிர்த்து, இன்றியமையாத தேவைகளுக்கு மட்டும் அளவறிந்து செலவு செய்தலே சிக்கனமாகும்.

**சேமிப்புக்கு உரிய வழிகள்**

சிற்றறிவுடைய உயிர்களாகிய எறும்புகளும் தேனீக்களும் சேமிக்கும் பழக்கத்தை நமக்கு உணர்த்துகின்றன. அஞ்சலகங்களிலும் நம் சேமிப்புக்கு அதிக வட்டியும் பணத்திற்குப் பாதுகாப்பும் தருகிற வங்கிகளிலும் சேமிக்கலாம். பள்ளி மாணாக்கர், பள்ளியில்செயல்படும் 'சஞ்சயிகா' திட்டத்தில் சேர்ந்து சிறுகச் சிறுகச் சேமிக்கலாம். மாதத் தவணைத் திட்டத்தில் சேர்ந்து 10 ரூபாய் மற்றும் அதன் மடங்குகளில் சேமிக்கலாம். நிரந்தர வைப்பு, கால வைப்பு முறைகளில் சேமிக்கலாம். ஆயுட்காப்பீட்டுக் கழகத்திலும் சேமிப்பதற்கான பல வழிகளுள்ளன. அவற்றையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆனால், நாம் உழைத்துச் சம்பாதித்த பொருளை அதிக வட்டிக்கு ஆசைப்பட்டுத் தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து ஏமாந்து போகக்கூடாது. அது, "ஊதியங் கருதி முதலை இழக்கச் செய்யும் செய்கையாகிவிடும். 'பேராசை பேரிழப்பு' என்னும் நம் முன்னோர் மொழியை மறந்துவிடக் கூடாது.

**சேமிப்பின் பயன்கள்**

நம் சேமிப்பு, "சிறுதுளி பெருவெள்ளம்" என்பதுபோலப் பெருகிப் பெருந்தொகையாக நமக்குக் கிடைக்கும். அவசரத்தேவைகளுக்குப் பிறரிடம் கைநீட்டிக் கடன் கேட்காமல் நம் பணமே நமக்கு உதவும். நம் சேமிப்புக்கு வட்டியும் கிடைக்கும். நாம் சேமிக்கும் பணம், அரசின் திட்டங்கள் பலவற்றிற்கும் உதவுகின்றது. ஏழைகளுக்குக் கடன்வசதி செய்து தரவும், நாட்டுநலத் திட்டங்களுக்கு உதவி செய்யவும் பயன்படுகிறது. சேமிப்பு வீட்டுக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது. இத்தகைய சிறந்த சேமிக்கும் பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

**முடிவுரை**

"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை" - குறள்: 478

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கிணங்க, நாம் சம்பாதிக்கும் பொருள் மிகக் குறைவாக இருப்பினும், செலவு அதிகமாகாமல் அடக்கி, ஒரு சிறுபகுதியேனும் சேமித்து வாழத் தலைப்பட்டால் யாவரும் சிறப்பான வாழ்வு வாழலாம்.

சேமிப்போம்; வளமான வாழ்வு பெறுவோம்.

எங்கள் ஊர்.
தொலைக்காட்சி.
நான் விரும்பும் தலைவர்.
நான் முதலமைச்சரானால்...
மரத்தின் பயன்கள்.

இத்தகைய சிறுசிறு தலைப்புகளில் கட்டுரை எழுதிப் பழகுக.

## 5.தொகுப்புரை

இவ்வியலில், செய்யுளில் உள்ள சொற்களைப் பிரித்துக் கூறும் முறை, அச்சொற்கள் சேர்ந்தமைக்கான விதிகள், உரைநடைப்படுத்தும் முறை ஆகியன விளக்கப்பட்டுள்ளன; உரைநடைப் பகுதியின் மையக் கருத்துக் கூறுதல், அருஞ்சொற்களை எடுத்துக் கூறுதல் கூறப்பட்டுள்ளன; குறிப்பிட்ட இலக்கணப் பகுதிகளைக் கற்பிக்கும் முறையும் அதற்கான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டுள்ளன; படைப்பாற்றலில் உரையாடலைச் செய்தியாக்குதல், கட்டுரையை உரைநடையாக்குதல், கட்டுரை எழுதுதல் ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

# பகுதி - ஆ

## 1. மொழியின் இயல்பும் கற்பித்தலும்

### அறிமுகம்

மொழி கற்பித்தல் எனச் சொல்லும்பொழுது மொழித்திறன்களை வளர்த்தல் என்றே நாம் பொருள் கொள்கின்றோம். மொழித்திறன்களை வளர்த்தலைப் பொருத்தவரை மொழியாசிரியர் மூன்று செய்திகளை மனத்திற் கொள்ளவேண்டும். ஒன்று, கற்பிக்கின்ற மொழியின் தன்மைகள். இரண்டு, அந்த மொழியை எவ்வாறு கற்பிப்பது? மூன்று, மொழி கற்க வரும் மாணவர்க்கு அம்மொழியில் ஏற்கெனவே உள்ள திறன்கள் ஆகியனவாகும். மொழியின் தன்மைகள் எனும்பொழுது, மொழியின் இலக்கணத்தை அறிந்து வைத்திருப்பது மட்டும் போதாது. மொழியின் அமைப்பு, இலக்கியம், சமூகத்தின் தாக்கம், பண்பாட்டின் வெளிப்பாடு, உளவியல், கலை உணர்வியல் கூறுகள் அனைத்தையும் எண்ணிப் பார்த்தல்வேண்டும். எனவே மொழியின் ஒலிகள், எழுத்துகள், தொடரமைப்புகள் என்பன பொதுவானவையாயினும், மொழியின் இயல்புகள் பலதரப்பட்டவை என்பதனை நாம் அறிதல் வேண்டும். அம் மொழியில் வழக்கு வேறுபாடுகள் உள்ளனவா? அவ் வேறுபாடுகள் எவற்றின் அடிப்படையில் அமைந்தன? ஆசிரியர், கற்பிக்க வேண்டிய வழக்கு அல்லது வழக்குகள் எவை என்பனவற்றை அறிந்திருக்கவேண்டும். எவ்வாறு கற்பிக்கவேண்டும் என்பதில் மொழிப்பாடத்தைப் பிற பாடப்பொருள் பாடங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுத்திக் கற்பிக்கவேண்டும் என்னும் திறன் பெற்றிருக்கவேண்டும். இவற்றை இவ்வியலில் அறிந்துகொள்வோம்.

### படிநிலைகள்

1. மொழியின் இயல்புகள்

   பேச்சுமொழியும் எழுத்துமொழியும்<br>
   மரபு சார்ந்தது<br>
   விதிகளின் தொகுப்பு<br>
   மொழி, இலக்கியம், அழகுணர்ச்சி

2. மொழியும் சமுதாயமும்

   மொழிபற்றிய மனப்பான்மையும் ஊக்கம் பெறுதலும்<br>
   மொழியும் அடையாளமும்<br>
   மொழியும் அதிகாரமும் (அல்லது) செல்வாக்கும்<br>
   மொழியும் பால்வேறுபாடும்<br>
   மொழியும் பண்பாடும்<br>
   மொழி கற்பித்தல்வழி பொறுப்புள்ள குடிமகனாக்குதல்

3. மொழிப்பாடம் ஒரு திறன்பாடம்

   மொழி கற்பித்தலும் மொழிவழிக் கற்பித்தலும்<br>
   மொழி பழகுதலும் மொழி கற்றலும்<br>
   தாய்மொழி-முதன்மொழி<br>
   பள்ளிக்குவரும் மாணவனின் தமிழ்மொழித் திறன்

4. தமிழ் இரட்டை வழக்குமொழி

   பேச்சுத் தமிழிலிருந்து எழுத்துத் தமிழ்

எழுத்துத் தமிழை மாணவர்க்கு அறிமுகப்படுத்துதல்
வட்டாரக் கிளைமொழி அறிவு
5. தொகுப்புரை

## 1. மொழியின் இயல்புகள்

### பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

மொழியென்பது அடிப்படையில் பேச்சுமொழியே. இன்றுங்கூட எழுத்து வடிவம் பெறாமல் பேச்சு வழக்கில் மட்டுமே உள்ள மொழிகள் எண்ணற்றவை. மனிதன் பேசத் தொடங்கி வெகுகாலங் கடந்த பின்புதான், எழுத்து வடிவம் தரப்பட்டு எழுத்துமொழி உருவானது. பேச்சுமொழியை எழுத்துமொழியுடன் ஒப்பிடும்போது வேகமாக மாறிக் கொண்டிருந்ததால், எழுத்துமொழியிலிருந்து பேச்சுமொழி வந்ததுபோல் தோன்றும். இதனைப் 'படித்தேன், கொடுத்தேன்' என்பன பேச்சு வழக்கில் 'படிச்சேன், குடுத்தேன்' என அமைதலால் உணரலாம். இதனால்தான் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே தெளிவான வேறுபாடு காணப்படுகிறது.

### மரபு சார்ந்தது

முன்னோர் எச்சொல்லை எப்பொருளில் எப்படிப் பயன்படுத்தினார்களோ அப்படியே நாமும் பயன்படுத்துவது மரபு ஆகும். எடுத்துக்காட்டாக நாய், குதிரை முதலானவற்றின் இளமைப் பெயர்களாக நாய்க்குட்டி, குதிரைக்குட்டி என்பன வரும். ஆனால் பசு, மான் முதலானவற்றின் இளமைப்பெயர் கன்று என்பதாகும். (பசுவின் கன்று, மான் கன்று). நம் முன்னோர் அவ்வாறுதான் பயன்படுத்தினார்கள். சொற்களின் பயன்பாட்டில் மட்டுமல்லாமல், மொழியின் எல்லாக் கூறுகளிலும் மரபே பின்பற்றப்படுகிறது. எனவே, மொழி மரபு சார்ந்ததென அறிதல்வேண்டும். மொழியில் சில நேரங்களில் மரபு மீறப்படுவதும் உண்டு. இலக்கியப் படைப்புகளில், வழக்குகளில், நகைச்சுவைக்காகக் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் மரபு மீறப்படுவது ஏற்றுக் கொள்ளப்படும்.

மேய்ச்சலிலிருந்து வீட்டுக்கு வந்த பசுவை, 'என் அம்மை வந்தாள்' என அன்பு மிகுதியால் அஃறிணையை உயர்திணையாக்கிக் கூறுவது திணை வழுவாம். இது மரபு மீறியதாயினும், அதனைச் சான்றோர் ஏற்று வழுவமைதியெனக் கொள்வர். ஆயினும், பொதுநிலையில் மரபை மீறுவது பிழையாகக் கருதப்படுவதுடன், கருத்துப் பரிமாற்றத்தில் சிக்கலை ஏற்படுத்தும்.

### விதிகளின் தொகுப்பு

தமிழில் சொல்லின் முதல் எழுத்தாகத் தனி மெய்யெழுத்து வராது என்பது ஒரு விதி. இது போன்ற பல விதிகளின் தொகுப்பே மொழி. இதனால், மொழியைக் கற்றுக்கொள்வது எளிதாகிறது. ஒரு பெயர்ச்சொல் தெரிந்தால், அதனோடு 'கள்' விகுதி சேர்த்துப் பன்மையாக்கி விடலாம். ஒவ்வொரு சொல்லையும் எப்படிப் பன்மையாக்கவேண்டுமெனத் தெரிந்துகொள்ள வேண்டிய தில்லை. ஆனால், மரம் குடம் பழம் முதலிய சொற்கள் வரும்பொழுது வேறொரு விதியையும் பயன்படுத்தவேண்டும். 'ம்' என்பது 'க'வுக்கு முன்னால், அதன் இன எழுத்தான 'ங்' ஆக மாறும் என்பது அவ்விதி. எனவே மரங்கள், குடங்கள், பழங்கள் என மாறும். சில நேரங்களில் விதிகளுக்கு ஓரிரு விதிவிலக்குகள் இருக்கும். அழு, உழு, தொழு போன்ற 'ழு' வில் முடியுஞ் சொற்களுக்கு 'த்' இறந்தகால இடைநிலையாக இருக்கும். ஆனால், எழு – எழுந்தேன் என 'ந்த்' சேர்ந்து வரும். இதுபோன்ற விதிவிலக்குகளை மரபாகக் கொள்ளவேண்டும். மொழி விதிகளைப் பொருத்தவரை மரபைக் கேள்வி கேட்க முடியாது. சிலவிடங்களில் ஒழுங்கற்று இருப்பினும், காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால், அவ்வாறே தொடர்ந்து பயன்படுத்துவதே இயல்பானது.

முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றுவதே மரபு.

**மொழி, இலக்கியம், அழகுணர்ச்சி**

மனிதன் கருத்துப் பரிமாற்றஞ் செய்வதோடு சிந்திப்பதும் (கருத்து உருவாக்குவது) மொழி வழியாகத்தான். மேலும், மொழி காலங்காலமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, மனிதனுக்கு இயற்கையாக உள்ள அழகுணர்ச்சி, அவன் வடிக்கும் ஓவியம், சிற்பம், கட்டடங்கள் முதலிய கலைகளின்வழி வெளிப்படுவதைப்போல், அவன் பேசும் மொழியிலும் வெளிப்படுகிறது; ஒலிக்குறிப்புச் சொற்களாக, உவமைகளாக, உருவகங்களாகச் சொல்கிறான். ஒரே கருத்தை வெவ்வேறுவிதமாகச் சொல்வதன்மூலம் நேரடிப்பொருள் ஒன்றிருக்க, மறைபொருளாக வேறொன்றை உணர்த்தக்கூடிய வகையில் பேசுகிறான். பாராட்டுவது போன்று இகழ்வதாக, தன்னையே தாழ்வாகப் பேசுவதுபோன்று உயர்த்திக் கொள்வதாக மொழியைக் கையாளுந்திறன் அன்றாடப் பேச்சில் வெளிப்படுகிறது.

இலக்கியம் இல்லாத மொழியில்லை. எழுத்துள்ள மொழியாகட்டும், எழுத்தில்லாத மொழியாகட்டும் எல்லா மொழிகளுக்கும் இலக்கியம் உண்டு. பாடல்களாக, கதைகளாக, பழமொழிகளாக, விடுகதைகளாக இவை வெளிப்படுகின்றன. எழுத்தில்லாத மொழிகளில் இவை வாய்மொழி இலக்கியங்களாகக் காலங்காலமாகத் தொடர்ந்து பழக்கத்தில் உள்ளன. அதேசமயம் மாற்றங்கள், சேர்ப்புகள், விடுபாடுகளென அவை புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. எழுத்துமொழிகளில் இலக்கியங்கள் வகையிலும் எண்ணிக்கையிலும் அதிகமிருப்பது இயற்கையே. இந்த இலக்கியங்களின் அடித்தளமாக இருப்பது அழகுணர்ச்சி. எனவே மொழி, இலக்கியம், அழகுணர்ச்சி ஆகிய மூன்றும் பிரிக்க முடியாதவை.

## 2. மொழியும் சமுதாயமும்

கருத்துப் பரிமாற்றம் நிகழவில்லையெனில் சமுதாயம் எனும் அமைப்பே நிலைத்து நிற்க முடியாது. எனவே, மொழியையும் சமுதாயத்தையும் பிரிக்க முடியாது. மொழி, சமுதாயத்தில் உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ளவும், ஒருவரைக் குறிப்பிட்ட சமுதாயத்தின் உறுப்பினராக அடையாளப்படுத்தவும் உதவுகிறது. மேலும், பிறக்கும் குழந்தைக்கு மொழி கற்குந்திறன் இயல்பாக இருப்பினும், அந்தக் குழந்தை குறிப்பிட்ட ஒரு மொழியைச் சமுதாயத்திலிருந்தே பெற்றுக்கொள்கிறது. இதனால்தான் எதை, யாரிடம் எப்போது சொல்லவேண்டும் எனப் புரிந்து செயல்பட முடிகிறது.

சமுதாயம் இல்லாமல் மொழியில்லை. எனவே, ஒரு மொழி வளரவேண்டுமானால், அம் மொழி பேசும் சமுதாயம் வளரவேண்டும். எனவேதான், அறிஞர்கள் மொழிகளுக்குள் உயர்வு தாழ்வு கற்பிப்பதில்லை. மொழி, அதனளவில் எந்த அளவுக்கும் வளரக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது. ஆனால், அம்மொழி பேசும் சமுதாயம் எத்துறையில் எல்லாம் முன்னேறு கிறதோ அத்துறைகளிலெல்லாம் அம்மொழியும் வளரும்; இல்லாவிட்டால் வளராது.

சமுதாயம் எப்படி மாறி வருகிறதோ அதுபோன்றே மொழியும் மாறி வருகிறது. ஒரே மொழிக்குள் இருக்கும் வேறுபாடுகளும் அம்மொழி பேசும் சமுதாயத்தில் இருக்கும் வேறுபாடுகளைப் பொருத்தே அமையும். இதனடிப்படையிலேயே மொழியில் வயது, பால், சமூகப் பிரிவு, செய்யுந்தொழில் முதலியவற்றையொட்டி வழக்கு வேறுபாடுகள் தோன்றுகின்றன. சமுதாயத்தில் இவ்வேறுபாடுகளில் ம்ாற்றம் வரும்போது பேச்சு வழக்குகளிலும் மாற்றம் வரும்.

### மொழிபற்றிய மனப்பான்மையும் ஊக்கம் பெறுதலும்

கற்போரது மனப்பான்மை மொழி கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதாவது, கற்போர் எந்த மொழியைக் கற்கிறார்களோ அந்த மொழியைப் பற்றிய அவர்களது மனப்பான்மை, அவர்கள் அந்த மொழியைக் கற்கும்போது உதவியாகவோ எதிர்மறையாகவோ இருக்கும். கற்போர் அந்த மொழிமீது பற்றும் விருப்பமும் கொண்டிருந்தால், அவர்கள் மொழி கற்க ஊக்கம் பெறுவர். அல்லாமல், அந்த மொழிமீது வெறுப்புக்கொண்டிருந்தால், அது எதிர்மறையாக வேலை செய்யும். எனவே, தமிழாசிரியர்கள் தமிழ் கற்கும் குழந்தைகளிடம் தமிழ்மீது பற்றையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும்வண்ணம் அவ்வப்பொழுது பேசவேண்டும். ஆனால், இத்தகைய நேரங்களில் மற்ற மொழிகள்மீது வெறுப்பு ஏற்படும்படியாகவோ தமிழ்பற்றிக் கற்பனையாகவோ பேசுவது கூடாது. மாணவர்களின் மனப்பான்மை போன்றே கற்பிக்கும் ஆசிரியர்களின் மனப்பான்மையும் பெற்றோரின் மனப்பான்மையும் மாணவர்களின் கற்பித்தலைக் குறிப்பாக, மொழி கற்பித்தலைப் பாதிக்கிறது. தமிழ் கற்பிக்கின்ற ஆசிரியருக்கு உலகில் தோன்றிய செம்மொழிகள் சிலவற்றுள் ஒன்றாகவும் அதே நேரத்தில் தற்காலத்தில் உலகின் பல நாடுகளில் பேசப்படும் மொழியாகவும் உள்ள தமிழ்மொழியை நான் கற்பிக்கிறேன் என்னும் பெருமிதமும் மகிழ்ச்சியும் இருந்தால், அவருடைய கற்பித்தல் சிறப்பாக அமையும். பெற்றோர், ‘தமிழ் படித்துப் பயனில்லை; மற்றப் பாடங்களில் அதிகம் கவனஞ் செலுத்து’ எனவும், அம்மா அப்பாவெனச் சொல்லாதே எனவும் ‘மம்மி, டாடி’ யெனச் சொல்லெனவும் சொன்னால், மாணவர்கள் தமிழ் கற்க ஊக்கம்பெற வியலாது.

### மொழியும் அடையாளமும்

மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி யென்பது உண்மைதான். ஆனால், அதற்கு வேறுபல பணிகளும் உள்ளன. அவற்றுள் ஒன்று, குறிப்பிட்ட சமுதாயத்தினரின் அடையாளமாக விளங்குவது. நாடு, ஊர் முதலிய அடையாளங்கள் மாறக் கூடியவை. ஆனால், மொழி அடையாளம் ஒருவர் எங்குச் சென்றாலும் தொடர்வது. யாரெல்லாம் மொழியை இழக்கிறார்களோ அவரெல்லாம் அடையாளம் அற்றவர்களாக ஆகிவிடுவர். அதாவது, அவர்களுடைய மொழியைப் பயன்படுத்தாமல் விட்டுவிடும்போது தங்களுடன் இணைத்துக்கொள்ள மக்கள்குழுவின்றித் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். எனவே, தங்கள் அடையாளத்தைக் காத்துக்கொள்ள, மொழியைத் தக்க வைத்துக்கொள்ள, அது அவர்களின் அடையாளமாக இருப்பதை உணர்த்தவேண்டும்.

மொழியே மனிதனுக்கு முகமும் முகவரியும்.

### மொழியும் அதிகாரமும் (அல்லது) செல்வாக்கும்

அனைத்து மொழிகளும் சமமான நிலையிலிருப்பினும் வரலாறு, பொருளாதாரம், சமூகவியல், அரசியல் காரணங்கள் குறுக்கிடுவதால், சில மொழிகள் அதிகாரம் வாய்ந்தனவாக, செல்வாக்குடையனவாக ஆட்சி செலுத்துகின்றன. சிறுபான்மையினரே பேசும் மொழியாயினும் அம்மொழி ஆட்சிமொழியாகிவிடின், அது அதிகாரமிக்க மொழியாகிவிடுகின்றது. ஒரு சமுதாயத்தில் செல்வத்தால், பதவியால் சிறந்தவர் பேசும்மொழியும் பயன்படுத்துஞ் சொற்களும் செல்வாக்குடையவையாக, அதிகாரத் தன்மை வாய்ந்தனவாக விளங்குகின்றன. ‘ஏழைசொல் அம்பலம் ஏறுமா?’ என்னும் பழமொழி, இக்கருத்தை உணர்த்துகிறதன்றோ? உண்மையில், ஒரு மொழியின் எல்லா வழக்குகளும் அதைப் பேசுபவரின் மொழித் தேவையை நிறைவு செய்வதில் ஒரே மாதிரியாகத்தான் உள்ளன.

### மொழியும் பால்வேறுபாடும்

மொழியில் பால்வேறுபாடு வெளிப்படுகிறது. சில மொழிகளில், ஆண்கள் பயன் படுத்துஞ் சில சொற்களைப் பெண்கள் பயன்படுத்துவதில்லை. மேலும், பெண்களின் பேச்சில் மாறுதல்கள் அவ்வளவு எளிதாக இடம்பெறுவதில்லை. அதுமட்டுமன்றி, ஆண்கள் பலவிடங் களுக்குச் சென்று வேலை செய்வதால், பல பிரிவினரது பேச்சையும் கேட்க நேரிடுகிறது. அதன் தாக்கம், அவர்கள் மொழியில் வெளிப்படுகிறது. அக்காலத்தில் பெண்கள் பெரிதும் வீட்டிலேயே இருந்ததால், புறப் பேச்சுகளின் செல்வாக்கு அவர்கள் பேச்சில் இடம்பெறவில்லை. ஆனால் இக்காலத்தில் பெண்கள் அனைத்துப் பணிகளிலும் பணியாற்றுவதால் அவர்தம் பேச்சிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. பெண்களின் நிலையையும் மொழி எடுத்துக்காட்ட வல்லது. ‘இல்லாள்’ என்பதற்கு நிகரான ஆண்பால் வடிவம் இல்லையென்பது, உண்மையில் பெண் வீட்டுக்குள் இருந்ததனால் தோன்றியிருக்கலாம். ‘அமைச்சன்’ என்பதற்கு நிகரான பெண்பால் வடிவம் இல்லாதது, பெண்கள் அந்த உயர்நிலையை எட்டாததே காரணமெனலாம். கல்வியினால் இந்நிலை மாறிவிட்டாலும் பெண்பாலுக்குரிய சொல் இன்னும் உருவாகவில்லை என்பது நினைக்கத்தக்கது.

‘விதவை’ என்பதற்கு எதிரான ஆண்பால் வடிவம் இல்லை. ஆண்கள், மனைவி இறந்தபின் மறுமணஞ் செய்து வாழ்ந்தனர். அதனால், மனைவி இல்லாதவன் என்பதைக் குறிக்கச் சொல் ஏற்படவில்லை. இந்நாளில் மனைவி இறந்தும் மறுமணம் புரியாதோரும் சமுதாயத்தில் உள்ளனர். இருப்பினும், மனைவியை இழந்தவன் என்பதைக் குறிப்பதற்கான சொல் தமிழ் வழக்கில் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு பாலுக்கே உரித்தான மறுபாலுக்கு இணைச்சொல் இல்லாத தமிழ் மொழியிலுள்ள சொற்களைத் தொகுக்க.

### மொழியும் பண்பாடும்

மொழியே பண்பாட்டின் ஒரு கூறுதான். அதேசமயம், ஓரின மக்களின் பண்பாட்டை அம் மக்கள் பேசும்மொழி அறிவிக்கின்றது. இதனால்தான், ‘மக்களின் பண்பாட்டையறிய அவர்கள் பேசும்மொழி திறவுகோல்’ என்னும் உரையும் எழுந்தது. இலக்கண அமைதியும் சொற்களும் பேச்சு வழக்கும் மக்களின் பண்பாட்டைப் பெருமளவு நமக்கு உணர்த்துவனவாம். எடுத்துக் காட்டாக, முன்னிலை ஒருமையைக் குறிக்க ‘நீ’ என்னுஞ் சொல்லும், பன்மையைக் குறிக்க ‘நீர், நீங்கள்’ என்னுஞ் சொற்களும் உள்ளன. பேச்சு வழக்கில் ‘நீ’ என்பதை நம்மைவிடச் சிறியோரையும் அன்பால் நெருங்கியோரையும் குறிக்கப் பயன்படுத்துகிறோம். ‘நீர்’ என்பதனை நம்மைவிடத் தகுதியில் குறைந்த ஆனால், வயதில் மூத்தோரையும் குறிக்கப் பயன்படுத்து கிறோம். தன்னைவிட மூத்த வேலையாளை நோக்கி வீட்டுத் தலைவன், “நீர் இன்று வயலுக்குப் போனீரா?” எனக் கேட்பது நெல்லை மாவட்ட வழக்கு. நீங்கள் என்பதை, நம்மைவிட மூத்தோரையும் பெரியோரையும் குறிக்கப் பயன்படுத்துகிறோம்.

சொற்களின் வழியாகவும் பண்பாட்டைப் புரிந்துகொள்ள முடியும். தமிழில் ‘பனி’ என்னும் ஒற்றைச் சொல்லாலேயே ‘குளிர்’ சார்ந்த பலவற்றையும் குறிக்கிறோம். ஆனால், எஸ்கிமோ மக்கள் பேசும் மொழியில் பனி தொடர்பாக இருபதுக்கும் மேற்பட்ட சொற்கள் இருக்கின்றன. இந்த எண்ணிக்கையைக் கொண்டே எஸ்கிமோ மக்கள் பண்பாடு குளிர்ப்பகுதி

சார்ந்த பண்பாடெனவும் தமிழ்ப் பண்பாடு வெப்பமண்டலப் பாண்பாடெனவும் புரிந்து கொள்ளலாம். இதேபோன்று, தமிழில் உள்ள பல சொற்கள் கருத்தைப் பிற மொழிகளில் ஒரே சொல்லால் குறிப்பதும் உண்டு. கிழி, பிய், உடை எனவும், வறு, வதக்கு, பொரி, துவட்டு எனவும் செயல்முறைக்கேற்ப வேறுபடுத்திப் பயன் படுத்துவதை ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் ஒரே சொல்லாலேயே குறிக்கிறார்கள். உறவு முறைச் சொற்கள் ஒரு சமூகத்தின் பண்பாட்டை உணர்த்துவதை எளிதில் புரிந்துகொள்ளலாம். ஆகவே, மொழி யென்பது கருத்துப் பரிமாற்றக் கருவியாக மட்டுமல்லாமல், பண்பாட்டின் கூறாகவும் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் இருப்பதைப் புரிந்து கொண்டால், மொழியாசிரியர் மொழியோடு பண்பாட்டையும் கற்பிக்க உதவும்.

### மொழி கற்பித்தல்வழி பொறுப்புள்ள குடிமகனாக்குதல்

"கல்வியின் நோக்கத்தை எவ்வாறு சமூகம் வரையறுக்கிறது என்பதைப் பொறுத்தே மக்கள் தரம் அமையும்" என யுனெஸ்கோ அறிக்கை கூறுகிறது. கல்வியின் நோக்கம் என்னவாயிருக்க வேண்டும்? பொறுப்புள்ள குடிமகன்/குடிமகளாவதற்குரிய அறிவு, திறன்கள், மதிப்புணர்வுகளைக் கல்வி வழங்கியிருக்க வேண்டும். மேலும், கற்போரின் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையமைப்பதாகவும் யாருக்கும் எதிரான வேறுபாட்டுணர்ச்சியை ஏற்படுத்தாததாகவும் அது அமையவேண்டும். இப் பண்புகளை வளர்ப்பதற்கு மொழிப்பாடம் பொருத்தமான கருவி. ஏனென்றால், மொழியே பலரையும் ஒன்றுபடுத்துங் கருவியாகும். மேலும், மொழிக்கல்வி இலக்கியங்களின் வாயிலாக வழங்கப்படுவதால், பொறுப்புள்ள குடிமகன்/குடிமகளாக்கத் தேவையான கருத்துகளைப் பொருத்தமான இலக்கியம் வாயிலாக மாணவர்களுக்குத் தரலாம். மொழிக்கல்வியே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை என்பதால், செம்மையான மொழிக்கல்வி வாயிலாக நல்ல குடிமக்களை உருவாக்கலாம்.

மக்களாட்சி நடைபெறுகின்ற நம் நாட்டில் மக்களாட்சித் தத்துவத்தை அறிந்து கொள்ளவும், அதன் நன்மைகளையும் சிறப்புகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறவும், மாணவர் ஆற்றல் பெற்றவராதல்வேண்டும். அதற்கு மொழிப்பாடமே அடிப்படையாக அமைகின்றது.

## 3. மொழிப்பாடம் ஒரு திறன்பாடம்

கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை மொழிப்பாடம் வளர்த்தலால் மொழிப்பாடம் ஒரு திறன்பாடமாகும். தொடக்கநிலையில் இத்திறன்களை வளர்க்கப் பாடப் பொருள் (Content) தேவையாயினும் அது சிறப்பிடம் பெறுவதில்லை. எடுத்துக்காட்டாக, திரு.வி.க.வின் சொற்களஞ்சியம், அவரது உரைநடைச் சிறப்பு ஆகியவற்றின்மூலம் மாணவரின் மொழித்திறனை வளர்ப்பது சிறப்பு நோக்கம். திரு.வி.க. கட்டுரைகளான இலங்கைச்செலவில் என்னென்ன நிகழ்ந்தனவென்றோ, உயிரோம்பல், இமயமலை அல்லது தியானம், பெண்ணின் பெருமை ஆகியனபற்றி அவரது கருத்து என்னவென்றோ அறிந்துகொள்வது தலையாய நோக்கமன்று. ஆனால், பாடப்பொருள் பாடங்களில் பாடக் கருத்துச் சிறப்பிடம் பெறுகின்றது. புத்தர் வரலாறு. சிவாஜி, சோழ மன்னராட்சி முதலிய தலைப்புள்ள பாடங்களில் அவ்வப் பாடச் செய்திகள் சிறப்பிடம் பெறுகின்றன. எனவே, அவை ஆண்டுதோறும் பாடநூல்களில் இடம்பெறுகின்றன.

வருணனைக் கட்டுரை எழுதும் திறனை வளர்க்க மதுரை, திருக்குற்றாலம், காஞ்சிபுரம் என ஏதேனும் ஓரிடம் பாடப்பொருளாக இடம்பெறும். வரலாற்றுக் கட்டுரை எழுதுந்திறனை வளர்க்க வ.உ.சி., பாரதியார், திரு.வி.க. என யாரேனும் ஒருவரைப்பற்றிய கட்டுரை பாடப் பொருளாக இடம் பெறும். இவற்றிலிருந்து மொழித்திறன்களை வளர்க்கப் பாடப்பொருள் இன்றியமையாதது எனவும் மொழிப்பாடத்தில் இவை சிறப்பிடம் பெறுவது மொழித்திறன் வளர்ச்சிக்காகவே எனவும் நாம் அறியலாம்.

## மொழி கற்பித்தலும் மொழிவழிக் கற்பித்தலும்

கல்வியோடு மொழி மூன்றுவகையில் தொடர்புடையது. அவை: 1)மொழிபற்றிய கல்வி, 2) மொழிக் கல்வி, 3) மொழிவழிக் கல்வி என்பன. மொழிக்கல்வி யென்பது மொழித் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை வளர்த்தலாகும். மொழிவழிக் கல்வி யென்பது வரலாறு, புவியியல், அறிவியல் முதலிய பாடப்பொருள் பாடங்களை எந்த மொழிவழி யாகக் கற்பிக்கிறோம் என்பது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மொழியாசிரியராகவும் மொழிவழி யாகப் பாடப்பொருள் பாடங் களைக் கற்பிக்கும் ஆசிரியராகவும் உள்ளனர். மொழிப்பாடம் கற்பிக்காது புவியியல், வரலாறு போன்ற பாடப்பொருள் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒருசில நேரங்களில் மொழி யாசிரியராகவும் பணியாற்றுகின்றனர். மேற்கு என்பதை 'மேற்க்கு' என மாணவர் எழுத அதனை மேற்கு எனத் திருத்தும் புவியியல் ஆசிரியரும்,புத்தமதத்தைப் பரப்பிய அசோகர் என்பதை அசேகர் என மாணவன் எழுத, அதனை 'அசோகர்' எனத் திருத்தும் வரலாற்று ஆசிரியரும் அவ்வவ் வேளைகளில் மொழிப்பிழைகளைத் திருத்தும் மொழியாசிரியராகின்றனர். இவ்வாறு செய்வது தமிழ் வகுப்பில் கற்பித்ததை வலுவூட்டுவதாக அமைகிறது.

> மொழிபற்றிய கல்வி என்பது மொழி யியல்.அது மொழியின் அமைப்புப் பற்றியும் பயன்பாடு பற்றியும் ஆராய்வது.

## மொழி பழகுதலும் மொழி கற்றலும்

பள்ளியில் முதன்முதலாகச் சேர வருகின்ற மாணவர்களுக்கு ஏற்கெனவே ஒரு மொழியாவது தெரிந்திருக்கும். இது எவ்வாறு ஏற்படுகிறது? அவர்கள் பள்ளியில் சேர்ந்து மொழி கற்கவே தொடங்கவில்லை; வேறெந்த நிறுவனத்திலும் சேர்ந்து மொழி கற்கவில்லை; ஆனாலும் அவர்களுக்கு மொழி தெரியும். ஒருவன் பிறந்ததுமுதல் பெற்றோரும் உற்றாரும் அண்டையில் உள்ளோரும் பேசுவதைக் கேட்கிறான். தானும் அவ்வாறே பேச முயற்சி செய்கிறான். ஒலியைக் nf£L m njnghš xÈ ¤J¥ nghy¢b rŒjš (Imitation) முறையில் பேசுகிறான். இவ்வாறு மொழியைத் தெரிந்துகொண்டு பேசுவதை மொழி பழகுதல் (Language acquisition) என்கிறோம். அதாவது, குழந்தை நடக்கப் பழகுவதைப்போல், சாப்பிடப் பழகுவதைப்போல், வேறு பலவற்றையும் செய்யப் பழகுவதைப்போல் மொழியையும் பழகுகிறது. யாரும் திட்டமிட்டுச் சொல்லித் தராமல் நடப்பது மொழி பழகுதல். ஆனால், வகுப்பறையில் சொல்லித் தரப்படுவதன்மூலம் மொழியைத் தெரிந்துகொள்வது மொழி கற்றல்(Language learning) என்கிறோம். இது பள்ளியில் நிகழலாம், கல்லூரியில் நிகழலாம் அல்லது மொழிகளைக் கற்பிப்பதற்கென்றே அமைந்த நிறுவனங்களில் நிகழலாம்.

## தாய்மொழி-முதன்மொழி

ஒரு குழந்தை பிறந்து எந்த மொழியில் பெற்றோரோடும் அண்டையில் உள்ளோரோடும் பேசிப் பழகி வளருகின்றதோ அந்த மொழியே அதற்குத் தாய்மொழி. அந்த மொழி, தாயின் மொழியாக இல்லாமலிருக்கலாம்; தந்தையின் மொழியாக இல்லாமலும் இருக்கலாம்; இரண்டுபேரின் மொழி யாகவும் இல்லாமலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாகத் தந்தையின் மொழி தெலுங்கு, தாயின் மொழி தமிழ். அமெரிக்காவில் வாழ்கின்ற அந்த இணையரின் குழந்தை தாயுடனும் தந்தையுடனும் ஆங்கிலத்திலேயே பேசி, சூழலிலும் ஆங்கிலத்திலேயே பேசி வளர்கின்றது. அதனுடைய தாய்மொழி ஆங்கிலமாகவே கொள்ளவேண்டும். பின்பு, தாய்நாடு வந்தபின்பு தெலுங்குச் சூழ்நிலையில் தெலுங்கையோ, தமிழ்ச் சூழலில் தமிழையோ பேசத் தொடங்குமாயின் அம்மொழி அதற்கு இரண்டாம் மொழியாகவே அமையும் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

முதன்மொழி என்பது பள்ளிக்கூடத்தில் மொழிக்கு அளிக்கப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டது. கல்விக்கூடத்தில் முதன்மைநிலையில் கற்பிப்பது முதன்மொழி, இரண்டாவது நிலையில் கற்பிப்பது இரண்டாம் மொழி. ஆயினும், முதன்மொழி யென்பது கல்விக் கூடத்துக்கு வெளியே பெரும்பாலோரால் பயன்படுத்தப்படும் மொழியாக இருக்கும். மேலும், கற்கின்ற பெரும்பாலோருக்குத் தாய்மொழியாக இருக்கும். இரண்டாம் மொழி யென்பது கற்போரின் தாய்மொழியாக இராது. ஆனால், அதை வகுப்புக்கு வெளியே பயன்படுத்த வாய்ப்பு இருக்கும்.

மூன்றாம் மொழி யென்பது, இரண்டாம் மொழியைப் போலவே கற்போரின் தாய்மொழி யாக இராது. அத்துடன் வகுப்புக்கு வெளியே பயன்படுத்த வாய்ப்பு இல்லாமலோ மிகக் குறைந்த thŒ¥ò¡ bfh© ljhfnthïU¡F«. _‹ wh« bkhÊia mašbkhÊ என்றும் குறிப்பிடுவது உண்டு.

தமிழகத்தில் தமிழ் முதன்மொழி; ஆங்கிலம் இரண்டாவது மொழி.

**பள்ளிக்கு வரும் மாணவனின் தமிழ்மொழித்திறன்**

தொடக்கப் பள்ளியில் சேர வரும் மாணவர்கள் குறைந்தது ஒரு மொழியைப் பயன்படுத்தும் அனுபவம் பெற்றே வருகிறார்கள் என்பதைத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மனத்திற் கொள்ளவேண்டும். முதலில் தமிழ்மொழி கற்கத் தம்முன் அமர்ந்திருக்கும் மாணவர் அனைவரும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரா எனவும், வீட்டில் பிறமொழி பேசுபவரா எனவும் அறிதல்வேண்டும். சொற்களைச் சிதைத்துக் கொச்சைச் சொற்களாகப் பேசுகிறார்களா? வட்டார வழக்குச் சொற்களை மிகுதியும் பயன்படுத்துகிறார்களா? இடப்பெயர் களையும் வினைமுற்று விகுதிகளையும் பிழையின்றிப் பயன்படுத்துகிறார்களா?இவ்வாறு பல நிலைகளிலும் அவர்களது மொழித்திறன் எவ்வாறு உள்ளது என அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான், மொழி கற்பித்தலைச் சரியாகத் திட்டமிட்டு நிறைவேற்ற முடியும்.

## 4. தமிழ் இரட்டை வழக்குமொழி

எழுத்து வடிவம் பெற்றுள்ள எல்லா மொழிகளுக்கும் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரண்டு வழக்குகள் உள்ளன. அதாவது, அம்மொழியை மக்கள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடையே சிறிது வேறுபாடு காணப்படும். ஆனால், எழுத்து வடிவம் பெற்றுள்ள எல்லா மொழிகளையும் இரட்டை வழக்கு மொழிகள் எனச் சொல்வதற்கில்லை. சில மொழிகளை மட்டுமே அவ்வாறு அழைக்கிறோம். இம் மொழிகளில் பேச்சு வழக்கு. எழுத்து வழக்கு ஆகிய இரண்டு வழக்குகளுக்கும் இடையே அதிக இடைவெளி காணப்படும். மேலும் சில வழக்குகளும் பயன்படுத்தும் சூழ்நிலைகளும் வெவ்வேறாக இருக்கும். இவ்வாறு பயன்பாட்டிலும் மொழியமைப்பிலும் தெளிவான வேறுபாடுகொண்ட இரு வழக்குகளைக் கொண்டிருப்பது இரட்டை வழக்கு (Diglossia) எனப்படும். தமிழ்மொழி தெளிவான இரட்டை வழக்குத் தன்மைகொண்ட மொழியாகும்.

தமிழ்ச் சூழலில் இரட்டை வழக்கைப் புரிந்துகொள்வது தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்றியமையாதது. பேச்சு வழக்கிற்கும் எழுத்து வழக்கிற்கும் உள்ள வேறுபாட்டை நாம் அனைவரும் அறிவோம். போகிறேன் என எழுதுவோம். ஆனால், போறேன் எனப் பேசுவோம். இதுபோன்று ஒலிப்பு நிலையில், சொல் நிலையில், இலக்கண நிலையில் என மொழியின் எல்லா

நிலைகளிலும் வேறுபாடு உள்ளது. பயன்பாட்டைப் பொருத்தவரை இப்பொழுது சற்று நெகிழ்வுத்தன்மை காணப்படுகிறது. எனினும், எந்தெந்தச் சூழ்நிலையில் எழுத்து வழக்கைப் பயன்படுத்தவேண்டும்; எந்தெந்தச் சூழ்நிலையில் பேச்சு வழக்கைப் பயன்படுத்தவேண்டும் என்பது தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. எழுதுவதற்கும் மேடைப் பேச்சுக்கும் வகுப்பறை உரையாடல்களுக்கும் எழுத்துத் தமிழைப் பயன்படுத்துகிறோம். குடும்பம், நண்பர்கள், கடைத்தெரு முதலிய இயல்பான சூழ்நிலைகளில் (Informal situations) பேச்சுத் தமிழைப் பயன்படுத்துகின்றோம். மனைவியிடம் எழுத்துத் தமிழில் பேசினால் நகைப்புக்கு இடமாகும். அதுபோல், வகுப்பில் உரையாற்றும்பொழுது பேச்சுத் தமிழைப் பயன்படுத்தினால் அது வேடிக்கையாகத் தோன்றும். தற்பொழுது இந்த இரட்டை வழக்குப் பயன்பாட்டில் நெகிழ்வுத் தன்மை தோன்றியுள்ளது. மேடையில் சிலர் பேச்சுத் தமிழில் பேசுகின்றனர். சிலர் புதினங்களைப் பேச்சுத்தமிழில் எழுதுகின்றனர். இவ்வாறு இருப்பினும், பள்ளிச் சூழலில் எழுத்து வழக்கைப் பயன்படுத்துவதே பொருத்தமானதாகும்.

**பேச்சுத் தமிழிலிருந்து எழுத்துத் தமிழ்**

முதன்மொழியைப் பொருத்தவரை பள்ளிக்கு வரும் பெரும்பாலான மாணவர்கள் தமிழை நன்கு பேசுவர். ஆனால், நாம் கற்பிக்கப்போவது எழுத்துத் தமிழே. எழுத்துத் தமிழை வாசிக்கவும் எழுதவும் மட்டுமல்லாது பேசவும் கற்றுத்தர வேண்டும். மேலும், எழுத்துத் தமிழைக் கற்கும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும். அதாவது, மாணவர்கள் எழுத்துத் தமிழைக் கேட்கவும் பேசவும் படிக்கவும் எழுதவும் போதுமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். இதற்கு ஆசிரியர் எழுத்துத் தமிழில் பேசுவது இன்றியமையாதது. ஆசிரியர்கள் முன்பு எழுத்துத் தமிழையே பெரிதும் பயன்படுத்தி வந்தனர். பிறகு, மாணவர்களுக்குப் புரிய வைக்கும் ஒருவழியெனப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தத் தொடங்கிப் பலர் இப்பொழுது பேச்சுத் தமிழை வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர். இது தவிர்க்கப்படவேண்டும்.

**எழுத்துத் தமிழை மாணவர்க்கு அறிமுகப்படுத்துதல்**

முதல் வகுப்பில் வந்து சேர்கின்ற மாணவர்கள் பெரும்பாலாருக்குப் பேச்சுத்தமிழ் நன்றாகத் தெரியும். மாணவர்களுக்குத் தெரிந்த பேச்சுத்தமிழ் அவர்களுடைய வட்டார வழக்கே. நாம் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டியதோ எழுத்துத் தமிழ். இதனால், ஆசிரியர் எழுத்துத் தமிழில் பேசத் தொடங்கிப் பள்ளிச் சூழலுக்குப் புதியவர்களான குழந்தைகள் அச்சப்பட்டுப் பள்ளியின்மீதும் கற்றலின்மீதும் வெறுப்புக் கொள்ளும்படி செய்துவிடலாகாது. முதலில், அவர்களுடைய தமிழில் பேசவேண்டும். அதாவது, பள்ளி அமைந்துள்ள வட்டாரத்தின் வழக்கில் பேச வேண்டும். இதற்கு முதல் வகுப்பு ஆசிரியர் குறிப்பிட்ட வட்டாரத்தைச் சேர்ந்தவராகவோ அவ் வட்டார வழக்கை நன்கு பேசக் கூடியவராகவோ இருப்பது நல்லது. ஓரிரு மாதங்களுக்குப் பின்னர்க் கொஞ்சம் கொஞ்சமாக வட்டார வழக்கை மாற்றிப் பொதுப் பேச்சுத் தமிழுக்கு வர வேண்டும். முதலில் வட்டார வழக்குச் சொற்களைத் தவிர்ப்பது, பிறகு பொதுப் பேச்சுத் தமிழுக்குரிய இலக்கணத்தைப் பயன்படுத்துவது என மெதுவாக மாறவேண்டும். மற்றொரு பக்கம் எழுத்துகள் அறிமுகம், எழுத்துகளைக்கொண்டு சொற்கள், சொற்களைக்கொண்டு சிறுசிறு தொடர்கள் எனப் படிக்கவும் எழுதவும் எழுத்துத் தமிழைக் கற்பிக்கவேண்டும். இரண்டாம் வகுப்புத் தொடங்கிச் சில மாதங்களில் இரண்டையும் இணைத்து ஒருசேரக் கொண்டுசெல்ல வேண்டும். அதாவது, கேட்டலும் பேசுதலும் முதலில் வட்டார வழக்கில் தொடங்கி, முதல் வகுப்பு இறுதியில் முற்றிலும் பொதுப் பேச்சுத் தமிழுக்கு மாறிப், பிறகு இரண்டாம் வகுப்பில் முற்றிலும் எழுத்துத் தமிழில் கற்பிக்கவேண்டும்.

இப்பொழுது பேச்சுத் தமிழ் நன்றாகத் தெரியாத மாணவர்கள் வகுப்பில் இருந்தால் என்ன செய்வது எனப் பார்ப்போம். தமிழகத்தின் எல்லையோரப் பகுதிகளிலும் உட்பகுதியின் சில இடங்களிலும் வேறுமொழி பேசுபவர்கள் நெருக்கமாக வாழ்கின்றனர்.

இப்பகுதிக் குழந்தைகளுக்குப் பிறந்ததிலிருந்து தமிழ் பேசிப் பழக வாய்பில்லாமல் இருக்கலாம். இதேபோன்று நீலகிரிப் பகுதிப் பழங்குடியினர் மாணவர்களுக்கும் குறைந்த அளவே தமிழில் திறன் இருக்கும். ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லாருமோ பெரும்பான்மையானவர் களோ இப்படிப்பட்டவர்களாக இருந்தால், கற்பித்தல் முறையை முற்றிலும் மாற்றிக்கொள்ள வேண்டும். முதலில், அவர்களுக்குப் பேச்சுத் தமிழைக் கற்பிக்கவேண்டும். பிறகு, எழுத்துத் தமிழுக்கு அவர்களை இட்டுச் செல்லவேண்டும். ஆசிரியருக்கு அம் மாணவர்களின் மொழி தெரிந்தால் மிகவும் உதவியாக இருக்கும். தெரியாவிட்டால் முடிந்த அளவு தெரிந்துகொள்ள முயல வேண்டும். குறிப்பாக, வட்டார வழக்குச் சொற்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். இதனால், ஆசிரியருடைய தமிழை அவர்கள் தவறாகப் புரிந்துகொள்வதையும் அவர்கள் பேச்சை ஆசிரியர் தவறாகப் புரிந்துகொள்வதையும் தவிர்க்கலாம். மாணவர்கள் சிலர் மட்டுமே தமிழைச் சரியாகத் தெரியாதவர்களாக இருந்தால், அவர்கள்மீது கூடுதல் கவனஞ் செலுத்தவேண்டும். அவர்களுக்குத் தனி வகுப்புகளையும் நடத்தலாம். அவர்கள் தமிழ் மாணவர்களோடு நன்கு கலந்து பழகுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

**வட்டாரக் கிளைமொழி அறிவு**

பேச்சு வழக்கை எடுத்துக்கொண்டால் தமிழ் பேசுவோர் எல்லாரும் ஒரே மாதிரியான பேச்சு வழக்கைப் பயன்படுத்துவதில்லை. கன்னியாகுமரியில் வாழ்பவர் பேசுவதுபோல் கிருஷ்ணகிரியில் வாழ்பவர் பேசுவதில்லை. சென்னையில் உள்ளவர் பேசுவதுபோல் சேலத்தில் உள்ளவர் பேசுவ தில்லை. இவ்வாறு வட்டாரத்துக்கு வட்டாரம் பேச்சு வழக்கு வேறுபடுகிறது. இவற்றை வட்டார வழக்குகள் எனவும் வட்டாரக் கிளைமொழிகள் எனவும் சொல்கிறோம். இந்தக் கிளைமொழிகள் ஒலிப்பில், சொற்களில், இலக்கணத்தில் என மொழியின் எல்லாக் கூறுகளிலும் வேறுபாட்டைக் கொண்டிருக்கின்றன.

> வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு
> இணையான எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.

நெல்லை மாவட்டத்தினர் வாழைப்பழத்தை என்பதை ‘வாளைப்பளம்’ என்பது ஒலிப்பில் வேறுபாடு; நெருப்புத்துண்டைக் ‘கங்கு’ என்பது சொல்லில் வேறுபாடு; உணவு பரிமாறுதல் என்பதை உணவு விளம்புதல் என்பது கன்னியாகுமரி மாவட்ட வழக்கு; இடக்கை என்பதை ஒரத்தாங்கை என்பது கோவை மாவட்ட வழக்கு. விடியற்காலையில் எழுந்தாள் என்பதை ‘வெள்ளென எழுந்தாள் என்பதும், விவசாயி வீடு என்பதை ‘சம்சாரி வீடு’ என்பதும் மதுரை மாவட்ட வழக்கு. இதேபோன்று ஒரே பொருளை வெவ்வேறு வட்டாரத்தில் வேவ்வேறு சொற்களால் மக்கள் குறிப்பிடுகின்றனர். துடைப்பத்தை விளக்குமாறு, பெருக்குமாறு, வாரியல், சீமாறு எனப் பல சொற்களால் வட்டாரங்களில் வழங்கப்படுகின்றன. துடைப்பம் என்பது அனைத்து வட்டாரங்களுக்கும் விளங்கும் பொதுத் தமிழாக அமையும். நிலக்கடலை, மல்லாட்டை, கடலைக்காய், வேர்க்கடலை எனப் பல சொற்களால் வட்டாரங்களில் வழங்கப் படினும் ‘வேர்க்கடலை’ என்பது பொதுத் தமிழ்ச் சொல்லாக அமையும். எனவே, மொழிப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர், வட்டார வழக்குகளையும் அவற்றிற்கு ஏற்ற பொதுத் தமிழ்ச் சொற்களையும் அறிதல் வேண்டும். பாடநூல்களில் பொதுத் தமிழ்ச் சொற்களே இடம் பெற்றிருக்கும். மேலும், தேவையான கருத்துகளைப் பொருத்தமான இலக்கியங்களின் வாயிலாக மாணவர்களுக்குத் தரலாம். மொழிக்கல்வியே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை என்பதால், செம்மையான மொழிக்கல்வி வாயிலாக நல்ல குடிமக்களை உருவாக்கலாம்.

மக்களாட்சி நடைபெறுகின்ற நம் நாட்டில் மக்களாட்சித் தத்துவத்தை அறிந்து கொள்ளவும், அதன் நன்மைகளையும் சிறப்புகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறவும் மாணவர் ஆற்றல் பெற்றவராதல் வேண்டும். அதற்கு மொழிப்பாடமே அடிப்படையாக அமைகின்றது.

## 5. தொகுப்புரை

ஆசிரியர்களுக்குத் தாங்கள் கற்பிக்கும் பாடங் குறித்துத் தெளிவான புரிதல் இருக்க வேண்டும். இந்த வகையில், மொழியாசிரியர் மொழியின் இயல்புகள் குறித்து நன்கு புரிந்து கொள்ளும் வகையில், இந்த இயலில் மொழியின் இயல்புகள் விளக்கப்பட்டுள்ளன. மொழி கற்பித்தல் தொடக்கப் பள்ளியில் முதன்மை நிகழ்வாக இருக்கிறது. அதனால், மொழி கற்பித்தலில் ஏற்படுங் குறைகள் மாணவர் களின் மொழித்திறனை மட்டும் பாதிக்காமல், அவர்களுடைய மொத்த ஆளுமையையும் பாதிக்கிறது. எனவே, முதல் மொழியாம் தமிழைப் பிற பாடப்பொருள் பாடங்களிலிருந்தும் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளிலிருந்தும் வேறுபடுத்திக் கற்பிக்க வேண்டிய தேவையையும், தமிழ் வழியாகப் பிற பாடங்களைக் கற்பிக்கும்போதும் தமிழ் மொழியின்மீது கவனஞ் செலுத்தவேண்டும் என்பதையும் இவ்வியல் எடுத்துக் கூறுகிறது. எழுத்து வழக்கு இலக்கண அமைப்பிலும் பயன்பாட்டிலும் தெளிவான வேறுபாடு கொண்டிருப்பதால், எந்த வழக்கை எப்பொழுது எத்திறன்களைப் பெறும் வகையில் கற்பிக்கவேண்டும் எனத் தெளிவுறுத்துகிறது. மேலும், பள்ளிக்குத் தமிழ் கற்க வருகின்ற மாணவர்களின் வீட்டுமொழி தமிழாக இல்லாவிடில், அவர்கள் எந்த அளவு தமிழில் திறன் பெற்றிருக்கிறார்கள் எனவும், மாணவர்கள் எல்லாரும் ஒரே வட்டார வழக்கைப் பேசுகிறார்களா அல்லது வெவ்வேறு வட்டார வழக்கைப் பேசுகிறவர்களா எனவும் அறிந்துகொண்டு, அதற்கேற்பக் கற்பிக்க வேண்டுமெனவும் இவ்வியல் விளக்குகிறது.

குழந்தைப் பிறக்கும்போதே மொழியுள்ளுணர்வுடன் பிறக்கிறது. இயல்பாகவே தன் வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் சமூகத்திலும் பேசப்படும்மொழியைக் கற்றுக் கொள்கிறது. குழந்தைகள் பலர் பள்ளிக்கு வரும்பொழுதே மொழித் திறனுடன் தகவல் பரிமாற்ற ஆற்றலுடன் வருகிறார்கள். நூற்றுக்கணக்கான சொற்களை அறிந்து வைத்திருப்பது மட்டுமல்லாமல், அதனைப் பயன்படுத்தவும் உரிய ஏற்ற இறக்கத் துடன் பேசவும் அறிந்துள்ளார்கள். குழந்தைகளிடம் இயற்கை யாகக் காணப்படும் இத்தகைய திறமைகளை ஒருங்கிணைத்து வளர்ப்பதே பள்ளியில் தாய்மொழிக் கல்வியின் நோக்கமாகும்.

பள்ளிகளில் குழந்தைகளுக்கு மொழியைக் கற்றுத் தருவதற்கான திட்டம் செம்மையாக அமையவேண்டுமானால், நாம் குழந்தைகளிடமுள்ள பேச்சுமொழி யறிவைக் கவனத்திற்கொள்ளவேண்டும். மொழி அன்றாட வாழ்க்கையின் உரையாடல்மூலமாக வளர்கிறது என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும். தொடக்கப்பள்ளி நிலையில் குழந்தைகள் பேசும் மொழியை அப்படியே அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். உடனே தவறுகளைத் திருத்த முயலக் கூடாது. நாள் செல்லச் செல்ல, வகுப்பு மாறமாறப் படிப்படியாகத் தவறுகளைத் திருத்தவேண்டும். பேச்சுமொழித் தவறுகளை நீக்க வகுப்பறைச் சுவரில் பேச்சுமொழிக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களை எழுதிக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

# 2. அடிப்படைத் திறன்கள்

## அறிமுகம்

மொழிக்கல்வி இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று, மொழி கற்பது; மற்றொன்று, மொழியிலுள்ள இலக்கியங்களைக் கற்பது. மொழியைக் கற்றபின்தான் மொழியிலுள்ள இலக்கியங்களைக் கற்க இயலும். மொழியைக் கற்பதன் முதற்படி அடிப்படைத் திறன்களைப் பெறுதலாகும். மொழியின் பயன் ஒருவருக்குக் குறைவின்றிக் கிடைக்க அடிப்படைத் திறன்களைத் தொடக்க நிலையிலேயே பெறுதல்வேண்டும்.

ஒவ்வொருவரும் முதலில் அவரவர் தாய்மொழியைத் திருத்தமாக உச்சரித்துப் பேசவும் தெளிவாக எழுதவும் அறிந்திருக்கவேண்டும். தான் உணர்ந்ததைப் பிறருக்குப் பிழையின்றி உணர்த்த மொழியைத் திறம்படப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கையாளுகின்ற ஆற்றலே மொழித்திறன் எனப்படுகிறது.

இவ்வியல், தொடக்கக் கல்வி மாணவர்களிடம் அடிப்படைத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றின் நோக்கங்கள், அவற்றை மாணவர்களிடம் வளர்க்கும் முறைகள் ஆகியன இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

## படிநிலைகள்

1. திறன் வகை
2. கேட்டல் திறன்
   - கேட்டல் திறனை வளர்க்கும் வழிவகைகள்
   - கேட்டல் திறனை வளர்க்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியவை
3. பேசுதல் திறன்
   - பேசுதல் திறன் பயிற்சியின் நோக்கங்கள்
   - பேசுதல் திறனை வளர்க்கும் வழிவகைகள்
   - நா பயிற்சிகள்
   - நாநெகிழ் பயிற்சி
   - நா பிறழ் பயிற்சி
   - திருந்திய பேச்சின் நல்லியல்புகள்
   - பேச்சுப் பயிற்சி வழங்கும்போது ஆசிரியர் வகுப்பில் பின்பற்ற வேண்டியவை
4. ஒலிவடிவங் கற்பித்தல்
   - ஒலிவடிவ வரிவடிவத் தொடர்பு
   - எழுத்தொலிகள் பிறக்கும் முறை
   - முதலெழுத்துகள் பிறக்கும் முறை
   - உயிரொலிகள்
   - பிறப்பு அடிப்படையில் உயிரொலிகள்
   - பிறப்பு அடிப்படையில் மெய்யொலிகள்
5. படித்தல் திறன்
   - படித்தல் திறனின் குறிக்கோள்
   - படித்தல் திறனின் வகைகள்
   - வாய்விட்டுப் படித்தல்
   - வாய்க்குட் படித்தல்

படித்தலின் முக்கியக் கூறுகள்
படிக்கக் கற்பிக்கும் முறைகள்
ஆழ்ந்த படிப்பு
அகன்ற படிப்பு
படித்தல் திறனை வளர்க்கும் பயிற்சிகள்

6. எழுதுதல் திறன்
எழுதுதலின் நோக்கங்கள்
எழுதுவதற்குமுன் பயிற்சி அளித்தல்
நல்ல கையெழுத்தின் இயல்புகள்
எழுதுதல் திறன் வளர்க்கும் வழிவகைகள்

7. தொகுப்புரை

## 1. திறன் வகை

மொழித்திறன்கள் மொழியைத் தெளிவாகவும் திறமையாகவும் கையாள வாய்ப்பளிக்கின்றன. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் நான்கும் மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவற்றுள் கேட்டல், பேசுதல் ஆகிய இரண்டும் ஒலியை அடிப்படையாகக் கொண்டவை; படித்தலும் எழுதுதலும் வரி வடிவத்தை அடிப்படையாகக் கொண்டவை. மொழியின் அடிப்படைத் திறன்களை அவை பெறப்படுகின்ற நிலையில் கொள்திறன், வெளியிடுதிறன் என இரு வகைப்படுத்தலாம்.

கேட்டல், படித்தல் ஆகிய இரு திறன்களும் செய்திகளை அல்லது கருத்துகளை நாம் உட்கொள்ள உதவுபவை. கேட்டல் மூலமாகவும் படித்தல் மூலமாகவும் கருத்துகளும் செய்திகளும் நம்மிடம் வந்து சேர்கின்றன. இதனால் கேட்டல், படித்தல் ஆகிய இரண்டும் c £ b fhŸ S ª â w‹ fŸ (Receptive skills) எனப்படும்.

பேசுதல், எழுதுதல் ஆகிய இரு திறன்களும் கருத்தை அல்லது செய்தியை வெளியிட உதவுபவை. பிறருக்குத் தெரிவிக்கவேண்டிய கருத்துகளைப் பேச்சின் மூலமும் எழுத்தின்மூலமும் வெளிப்படுத்துவதால் பேசுதல், எழுதுதல் ஆகிய இரண்டும் வெளியிடுந் திறன்கள் (Expressive skills) எனப்படும்.

> வாழ்வில் ஒரு செயலைத் திறம்படச் செய்வதற்கும் ஒழுங்குறச் செய்து முடிப்பதற்கும் ஒருவரிடத்தில் தனித்திறன்கள் இருக்கவேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும்.

## 2. கேட்டல் திறன்

ஐம்புலன்களே அறிவின் வாயில்கள். ஐம்புலன்களுள் ஒன்றான செவி கேட்டலுக்குரியது. ஒலியைக் காது ஏற்கும் செயல் கேட்டல் எனப்படும். நான்கு அடிப்படைத் திறன்களில் முதன்மையானது கேட்டல் திறனே. ஒலிகளைச் சரியாகக் கேட்டுச் சரியாக ஒலித்தால்தானே மொழியை நாம் நன்கு பேச முடியும். எனவே, பேசுதலுக்கு இது அடிப்படையானது. கேட்டல்மூலம் கருத்துகள், செய்திகளை அறிந்துகொள்கிறோம். எனவே, நாம் பொருள் அறிவில் வல்லவராதலுக்குக் கேட்டல் திறனே உதவும். ‘கற்றிலன் ஆயினுங் கேட்க’ என்னுந் தொடர், கேட்டு அறிவுபெறுதலின் சிறப்பினையே குறிக்கிறது.

நடைமுறை வாழ்க்கையிலும் கற்றல் காலத்திலும் கேட்டலுக்கே அதிக வாய்ப்புகள் கிடைக்கின்றன. கேட்டலின்வழிதான் கற்றலின் பெரும்பகுதி நிகழ்கிறது. எனவே, கற்றலின் அளவை மேம்படுத்தக் கேட்டல் திறனை வளர்த்தல் இன்றியமையாததாகிறது.

நாம் வீட்டில் பிறர் பேசுவதைக் கேட்கிறோம். வெளியே சிலவேளைகளில் சொற்பொழிவு களைக் கேட்கிறோம். வானொலியில் அறிவிப்புகள், செய்திகளைக் கேட்கிறோம். தொலைபேசியில் பேசுவதைக் கேட்கிறோம். தொலைக்காட்சியில் உரையாடல் நடப்பதைக் காண்பதோடு கேட்கிறோம். இவ்வாறு பல சூழ்நிலைகளில் நாம் பெரும்பாலும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். எனவே, தற்காலத்தை ஒரு 'கேட்டல் யுகம்' எனச் சிலர் கூறுகின்றனர். ஆதலின், கேட்டல் திறனில் அனைவரும் வல்லவராதல் வேண்டும். கேட்டல் என்பது ஒலிகளைக் கேட்டல் மட்டுமன்று; கேட்பதன் பொருளையும் உணரவேண்டும். எனவே, வெளிப்படுஞ் செய்திகளைச் செவியில் ஏற்று அவற்றிற்குரிய பொருளை உணருவதே கேட்டல் ஆகும். திருவள்ளுவர்,

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" - குறள்: 411

என்னுங் குறட்பாவின்மூலம் கேட்டலின் சிறப்பைக் கூறுவார்.

**கேட்டல் திறனை வளர்க்கும் வழிவகைகள்**

கேட்டல் திறன் நிகழ்வதற்குப் பிறரது பேச்சு இன்றியமையாததாகும். வகுப்பறையில் ஆசிரியரது பேச்சு நடைமுறை வாழ்க்கையோடு இணைந்து இருக்குமாயின் மாணவர்களின் கேட்டல் திறன் சிறப்பாக வளரும். கேட்டலின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு ஆசிரியர் பல்வேறு பயிற்சிகளை உருவாக்கிக் கொடுப்பதன்மூலம் கேட்டல் திறன் நன்கு வளரும்.

**பேசுதலைக் கேட்டறிதல்**

தொடக்கநிலை வகுப்புகளில் மாணவரது குடும்பம், ஊர், ஊர்த்திருவிழா முதலியனகுறித்து அவர்கள் அறிந்த தலைப்புகளைப்பற்றிப் பேசி, அவர்களைக் கேட்கச் செய்தல் வேண்டும். பின்னர்ச் சிறுசிறு வினாக்கள்மூலம் அவர்கள் கேட்டதைத் தேர்ந்தறிதல்வேண்டும். நடுநிலை வகுப்புகளில் பொதுத் தலைப்புகளைப் பற்றிப் பேசலாம்; கதைகளைக் கூறலாம். தலைப்புகளின் கருத்துகள் பற்றியும் கதை நிகழ்ச்சிகள் பற்றியும் வினாக்கள்மூலம் தேர்ந்தறியலாம்.

**படித்தலைக் கேட்டறிதல்**

பள்ளியில் ஒவ்வொரு வகுப்புக்கும் தமிழ்ப்பாட நூல் அமைக்கப்பட்டுள்ளது. உரைநடைப் பாடத்தைப் படித்து மாணவரைக் கேட்கச் செய்தல்வேண்டும். பிறகு, சிறுசிறு வினாக்கள் கேட்கலாம். நடுநிலைப் பள்ளிகளில் பாடநூல்களைப் பயன்படுத்துவதோடு நூல் நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட பொது நூல்களிலிருந்தும் ஒரு பகுதியைப் படித்து, அவர்களைக் கேட்கச் செய்யலாம். பின்னர்ச் சிறுசிறு வினாக்கள் வாயிலாக அவர்கள் கேட்டதைத் தேர்ந்தறியலாம்.

**கதையும் பாட்டும்**

ஆசிரியர் கதை சொல்லுதல், குழுவாகக் குழந்தைகளை அவர்களுக்குள்ளேயே பேசச் செய்தல், பாடச் செய்தல், நடிக்கச் செய்தல் போன்றன பயன்விளைவுமிகு கேட்டற் பயிற்சியாகும்.

குழந்தைகளுக்குக் கதையும் பாட்டும் மிகவும் பிடித்தமானவை. மாணவ ஆசிரியர்கள் தங்கள் பயிற்சிக்காலத்தில் இயன்றவரை கதைகள், பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், பொன்மொழிகளைத் தொகுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

கதை கூறும்போது மாணவர்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான கதைகளையும் அறிமுக மாகாத கதைகளையும் கூறலாம்; மாணவரோடு ஒருவராகத் தம்மை ஆக்கிக் கொண்டு கூறவேண்டும்; குரலில் ஏற்றத்தாழ்வு, மெய்ப்பாடு, நடிப்புப் போன்றவை வெளிப்படுமாறு பார்த்துக் கொள்ளல்வேண்டும். இதனால், மாணவர்களின் கேட்குந் திறன் அதிகரிக்கும்.

பாடல்கள்மூலமும் கேட்டல் திறனை வளர்க்கலாம். இதற்கு எளிய ஓசை நயமுள்ள சந்தப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடிக் காட்டவேண்டும். மாணவர்களைப் பாட வைத்தும் கேட்டல் திறனை வளர்க்கவேண்டும். பாடல்கள், மாணவர்களுக்கு அறிமுகமானவையாகவும் அறிமுகமில்லாத பாடல்களாகவும் இருக்கலாம். அவை கதை நிகழ்ச்சிப் பாடல்களாக இருந்தால் நல்லது. நீண்ட தொடர்களாக இல்லாமல், குழந்தைகளுக்குப் பழக்கமான எளிய சொற்கள் கொண்டதாகப் பாடல் அமைந்திருக்கவேண்டும். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மகாகவி பாரதியார் முதலியோரின் பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடச் செய்யவேண்டும்.

> செயல்வழிக் கற்றல்முறையில் இடம்பெறும் வாய், காது, பொம்மலாட்டம், முயல் முதலிய குறியீட்டு அட்டைகளில் இடம்பெறும் பாடப்பகுதிகள் கேட்டல் திறனை வளர்க்கப் பெரிதும் உதவும்.

**கட்டளைகளைக் கேட்டுச் செயல்படல்**

இம்முறையில் கேட்டல் நிகழும்போது கேட்பவர் உடனுக்குடன் துலங்கலை வெளிப் படுத்துபவராக இருப்பார். ஆசிரியர் ஒவ்வொரு கட்டளையிடும்போதும் மாணவர்கள் அதற் கேற்பச் செயல்படவேண்டும். இச் செயல்பாடுகளை மேற்கொள்ள மாணவர்கள் சிறுசிறு குழுக் களாகப் பிரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு குழுவிலுமுள்ள ஒரு மாணவர் கட்டளைகளையிட, அவற்றைப் பிற மாணவர்கள் ஏற்றுச் செயல்படவேண்டும். இப் பயிற்சியினை விளையாட்டு முறையில் வழங்கவேண்டும்.

தமிழ்ப்பாட நூலைத் திற, பாட நூலை மூடு, கண்ணைச் சிமிட்டு, விரலால் வெற்றிடத்தில் வட்டமிடு, முயல் அட்டையை எடுத்து வா முதலிய தொடர்களைக் கூறி, அவற்றின் பொருளுணர்ந்து செயல்படச் செய்யவேண்டும். எழுந்திரு, உட்கார், சிரி, நட, கையைத் தட்டு,ஓடு முதலிய செயல்களைக் கூறிச் செயல்படச் செய்யவேண்டும். இவைபோன்று சிறுசிறு அறிவுரைகள், வேண்டுகோள்களைக் கூறிச் செயல்பாட்டை வடிவமைக்க வேண்டும்.

> செயல்வழிக் கற்றல்முறையில் இடம்பெறும் குதிரை, அணில் முதலிய குறியீடுகளில் உள்ள பாடப்பகுதிகளைப் பயன்படுத்தலாம்.

**பொருள்களைக் குறித்துக் காட்டுதல்**

பொருள்களைக் குறித்துக் காட்டும் இச் செயல்பாட்டில் ஆசிரியர் கேட்கக் கேட்க மாணவர்கள் விடை கூறுவர். ஆசிரியர் பல்வேறு செயல்களை அல்லது வினாக்களைக் கேட்பதற்கு ஏதுவாகப் பல்வேறு செயல்கள் அடங்கிய படத்தை மாணவர்களுக்குத் தரவேண்டும். ஆசிரியர், படத்தில் உள்ள செயல்களைக் கூறும்போது, மாணவர்கள் அவற்றைக் கேட்டுப் படத்தில் குறித்துக் காட்டவேண்டும்.

**தவறுகளைச் சுட்டல்**

இச் செயல்பாட்டில் ஆசிரியர், மாணவர்களுக்குத் தெரிந்த ஒரு கதை அல்லது நிகழ்ச்சியைக் கூறவேண்டும். கதை கூறும்போது வேண்டுமென்றே சில இடங்களில் தவறாகக் கூறவேண்டும். மாணவர்கள், ஆசிரியர் கூறுவதில் வெளிப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

**கேட்ட பகுதியின் மையக் கருத்தை அறிதல்**

மழைநாள், கல்விச் சுற்றுலா, தீ விபத்து முதலிய செய்தித் துணுக்குகளைக் கூறி மையக் கருத்தைக் கூறச் செய்யவேண்டும். சிறுசிறு கதைகளைக் கூறி, அக் கதைகளுக்குப் பொருத்தமான தலைப்புகளைக் கூறச் செய்யலாம். ஒலிப்பதிவு நாடாவைப் பயன்படுத்தியும் இச் செயல்பாட்டை மேற்கொள்ளலாம்.

**யார், எது எனச் சிந்தித்துக் கூறல்**

இச் செயலில் விடுகதைகள் அல்லது யார், எது என்பதை அறியத்தக்கக் குறிப்புகளைக் கூறிப் பின்னர், அதற்கான விடையைப் பெறுதலாகும். தொடக்க வகுப்புகளில் மிக எளிய விடுகதைகள், புதிர்களைக் கூறவேண்டும். மாணவர்களுக்கு விளங்கவில்லையாயின், மேலும் விளக்கக் குறிப்புகளைக் கூறி, அவர்களிடம் கேட்டல் திறனை வளர்க்கலாம்.

எடுத்துக்காட்டு:

1. கடிக்கத் தெரியாதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள் - அவன் யார்?
2. என்னை நாட்டின் தந்தை என்று கூறுவர். - நான் யார்?

(விடை: 1. சீப்பு, 2. காந்தியடிகள்)

**ஒலி வேறுபாடுகளை உணரச் செய்தல்**

மாணவர்களிடம் சில விலங்குகள் பறவைகளின் பெயர்களைக் கூறி, அவை எப்படி ஒலி எழுப்பும் எனச் செய்து காட்டச் செய்வதன்மூலம் கேட்டலில் ஒலி வேறுபாடுகளை உணரச் செய்யலாம். இதேபோல், வாகனங்களின் பெயர்களைக் கூறி, அவைபோன்று ஒலி எழுப்பச் செய்யலாம்.

மாணவர்களைத் திரைமறைவில் பேசச் செய்து கேட்கச் செய்வதன்மூலம் மாணவர்களின் குரல் வேறுபாடுகளை அடையாளங் காணச் செய்யவேண்டும்.

**விளையாட்டு விதிமுறைகளைக் கூறுதல்**

இச் செயல்பாட்டில் மாணவர்கள் விளையாடுவதற்குரிய சிறுசிறு விளையாட்டுகளின் விதிமுறைகளைக் கூறவேண்டும். மாணவர்கள் விதிமுறைகளை அறிந்துகொண்டதை அறிய எளிய வினாக்கள் கேட்டு அல்லது மாணவர்களை விளையாடச் செய்து, கேட்ட விதிமுறைகளுக் கேற்ப விளையாடுகிறார்களா என்பதைக் கண்டறியவேண்டும்.

**குழுச் செயல்கள் வழங்குதல்**

இச் செயல்பாட்டில் மாணவர்கள் குழுவாகச் செயல்படுவதற்குரிய செயல்பாடுகள் அல்லது செயல் திட்டங்களைக் கூறிச் செயல்படச் செய்யவேண்டும்

எடுத்துக்காட்டாக:

1. பள்ளித் தோட்டம் அமைத்தல்
2. வண்ணங்கள் தயாரித்தல்
3. பள்ளிமலர் தயாரித்தல்

**உரையாடல்களைக் கேட்கச் செய்தல்**

வகுப்பறையில் இரு மாணவர்கள் தொலைபேசியில் பேசுவதுபோல் பேசச் செய்து, பிற மாணவர்களைக் கேட்கச் செய்யவேண்டும். ஒரு மாணவனை முதல்நாள் தொலைக்காட்சியில் பார்த்தவற்றைக் கூறப் பிற மாணவர்களை அதனைக் கேட்கச் செய்யவேண்டும்.

சிறுசிறு நாடகங்களை நடிக்கச் செய்து நாடகங்களில் வரும் உறுப்பினர்களின் பெயர்களையும் கூற்றுகளையும் கேட்கச் செய்யவேண்டும்.இவ்வாறு முறையாகத் திட்டமிட்டுப் பயிற்சிகள் வழங்கி மாணாக்கரது கேட்டல் திறனை வளர்ப்பது சிறப்பு.

> கேட்டல் திறனை வளர்ப்பதற்கு ஒலிப்பதிவு நாடாவைவிட, ஒலி-ஒளிப் பதிவுநாடா சிறந்தது. ஏனெனில், ஒலி-ஒளிப் பதிவுநாடாவில் கேட்பவர் பார்வையில் பேசுபவர் படுகிறார். ஆசிரியர் வகுப்பறையில் பேசும்போது மாணவர்கள் அனைவரது பார்வையில் படும்படி இருத்தல்வேண்டும்.

**கேட்டல் திறனை வளர்க்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டியவை:**

கேட்டல் திறனை வளர்க்க வழங்கப்படும் பயிற்சிகளில் சில இடர்ப்பாடுகள் மாணவர்களால் எதிர்கொள்ளப்படலாம். எனவே, ஆசிரியர் கீழுள்ளவற்றை நினைவிற் கொள்ளவேண்டும்.

**1. ஒலிகளைக் கேட்டல்**

பேசுபவருடைய மொழி, வகுப்பு நிலைக்கேற்றதாய் அமைதல்வேண்டும். இல்லையேல், மாணவர் சொற்களின் ஒலியை மட்டும் கேட்பர்; பொருளுணரார். இரண்டாம் வகுப்புக்குச் சென்று'இளஞ்சிறார்களே! யான் சில கடாக்களை விடுப்பேன், விடையளிப்பீராக' வெனக் கூறினால், அவர்கட்கு என்ன விளங்கும்? சிறார் என்றதும் விழிப்பர், கடா என்றதும் வெளியில் ஏதும் 'கடா' வருகிறதா எனப் பார்ப்பர். கடா என்றால் கேள்வி, வினா என்பதை அவர் அறியார். இம்மாதிரி உயர் நிலையில் பேசினால் ஒலிகளைக் கேட்டல் நிகழுமேயன்றிக் கேட்டுப் பொருளுணர்தல் நிகழாது. எனவே ஆசிரியர், மாணவர் விளங்கிக் கொள்ளும் முறையில் எளிய மொழியில் பேசுதல் வேண்டும்.

**2. விட்டுவிட்டுக் கேட்டல்**

பேசும்பொழுது மாணவர் தொடர்ந்து கேட்டு வருகின்றனரா என அறிந்து பேசுதல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஆசிரியர், 'வெங்கடாசலபதி' என்னுஞ் சிறுவன் எனத் தொடங்க, மாணவர் சிலர் வகுப்பறையில் எதிரே இருப்பினும், தாம் குடும்பத்துடன் திருப்பதி வெங்கடாசலபதியைப் பார்க்கச் சென்ற நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து மனத்தளவில் திருப்பதிக்குப் போய்விடுவர். 'விருந்து' என்னுஞ் சொல்லை ஆசிரியர் விளக்கத் தொடங்கும்பொழுது, தம் வீட்டில் நிகழ்ந்த விருந்தைப் பற்றி எண்ணி, மனத்தளவில் வீட்டுக்குப் போய்விடுவர். சிறிது நேரம் கழித்தே அவர்கள் மீண்டும் வகுப்பறைக்கு வந்து கேட்கத் தொடங்குவர். இதனை, 'விட்டுவிட்டுக் கேட்டல்' என்போம். இக்குறை நிகழாதவாறு ஆசிரியர் இடையிடையே வினாக்கள் கேட்கவேண்டும். அவர்கள் விடை யளிப்பதன்மூலம் அவர்கள் கேட்டு வந்ததை நாம் அறியலாம்.

**3. அரைகுறையாகக் கேட்டல்**

ஆசிரியர் கூறுவதை முழுமையாகக் கேட்காமல் மாணவர் சிலர் இடையிடையே வினாக்கள் கேட்பர். எடுத்துக்காட்டாக, ஆசிரியர் சுற்றுலா செல்வதுபற்றி அறிவிப்பு செய்கிறபோது, இது நிகழ்தல் கூடும். 'அடுத்தவாரம் திங்களன்று நாம் சுற்றுலா செல்கிறோம்' என்றதும், எங்கே போகிறோம்? எத்தனை மணிக்கு? எனச் சிலர் கேட்கத் தொடங்குவர். மகாபலிபுரம் போகிறோம்

என்றதும் பேருந்து வருமா, சாப்பாடு கொண்டு வரவேண்டுமா எனக் கேட்பர். இதனையே அரை குறையாகக் கேட்டல் என்போம். இதனைத் தவிர்க்க, ஆசிரியர் முன்னதாகவே, நான் கூறும் செய்தி முழுமையும் கேட்டு, அதன் பின்னர் ஐயங்களைக் கேளுங்கள் எனக் கூறுதல்வேண்டும்.

### 4. ஒருசார் மனப்பான்மையுடன் கேட்டல்

ஆசிரியர், மாணவர் உறவுநிலை சரியானதாக அமைந்திருத்தல் வேண்டும். மாணவர் வெறுப்பு மனப்பான்மையுடன் இருந்தால், ஆசிரியர் எத்துணைச் சுவையாகக் கூறினாலும் கேட்க மாட்டார்கள். எனவே, சிறந்த கேட்டல் நிகழ வேண்டுமாயின், ஆசிரியர்-மாணவர் உறவு சுமுகமானதாக இருத்தல்வேண்டும். ஆசிரியர் மாணவரிடம் தனித்தனியாகப் பேசியும், குழுவாகப் பேசியும், வகுப்பில் பொதுவாகப் பேசியும் சரியான சூழ்நிலை அமைத்துக்கொள்ளல் வேண்டும். பள்ளிக்கு வெளியிலிருந்து பேச்சாளரை அழைத்து வருவதாயின், அவருடைய சிறப்பியல்புகளை முன்னதாகக் கூறி, மாணவர் அவரது விரும்பிக் கேட்கும் சூழ்நிலை அமைத்தல் வேண்டும்.

> எழில், ஆக்கம், மாசு, பிணி - இச்சொற்களை வாய்மொழியாகக் கற்பிக்கும் உத்திகளைத் திட்டமிடுக.

### 5. மையக் கருத்துகளைக் கேட்டல்

மாணவர்கள் பாடப்பொருளின் மையக் கருத்தையும் அதன் படிப்படியான வளர்ச்சியையும் அறிந்துகொள்வதற்கு உதவும்வண்ணம் பாடத்திட்டத்தை நன்கு தயாரித்து, முறையாக ஆசிரியர் கற்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் பாடப்பொருளின் மையக் கருத்தையும், அதனை விளக்கக் கூறும் எடுத்துக்காட்டுகளையும் மாணவர் நன்கு அறிவர்.

இவ்வாறு திட்டமிட்டு மாணவரது கேட்டல் திறனை ஆசிரியர் வளர்த்தல் வேண்டும். மாணவர்கள் இத்தகைய இடர்ப்பாடுகளை எதிர்கொள்ளாவண்ணம் செயல்பாடுகளை முறையாகத் திட்டமிட்டுச் சரியான முறையில் வழங்கி, மாணவர்களிடம் கேட்டல் திறனை வளர்க்கவேண்டும். சொற்களுக்குப் பொருள் கூறுதல், அதே பொருள்தரும் வேறு சொல் கூறுதல், ஒரு சொல்லுக்குரிய எதிர்ச்சொல் கூறுதல், நிகழ்ச்சியைக் கூறிச் சொல்லமைத்துக் காட்டுதல் முதலான முறைகளைப் பின்பற்றிச் சொற்களை விளக்கவேண்டும்.

> விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின் - குறள்: 648

## 3. பேசுதல் திறன்

பேசுதல் திறன் கேட்டலைத் தொடர்ந்தும் கேட்டலின் விளைவாலும் உருவாவது. இத் திறனில் பேசுதல், பேச்சுத்திறன் ஆகிய இரு சொல்லாட்சிகள் உள்ளன. பேசுதல் என்பது, ஒருவருக்கு ஒருவர் செய்திகளை வெளிப்படுத்துதல் என்ற அளவிலேயே நிறைவுபெறும். பேச்சுத் திறன் என்பது, ஒருவரை ஈர்க்குமாறு கருத்துகளை வெளிப்படுத்துதல் ஆகும். பேச்சுத்திறன் வளரப் பேசுதல்திறன் அடிப்படை யாகும்.

'நாவசைத்தால் நாடசையும்', 'உதடசைத்தால் ஊரசையும்', 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்னும் பழமொழிகளை நோக்கப் பேச்சாற்றல் மிக்கவர்களே உலகாள்வர் என்பது பெறப்படும்.

குழந்தைகள் வீட்டினர், அக்கம்பக்கத்தினர், உற்றார் உறவினர் முதலியோருடன் பழகும் சூழல்களில் பேசுதல் திறனைப் பெறுகின்றனர். எனினும், அவர்கள் பேச்சில் பல குறைபாடுகள் காணப்படலாம். அவற்றைப் போக்குதலும் பேசுதல் திறனை வளர்த்தலும் இப் பகுதியின் நோக்கமாகும்.

**பேசுதல் திறன் பயிற்சியின் நோக்கங்கள்**

1. திருத்தமாகப் பேசுதல்
2. தெளிவுடன் பேசுதல்
3. அச்சம் கூச்சமின்றிப் பேசுதல்
4. உணர்வு வெளிப்படுமாறு பேசுதல்
5. பிழையின்றிப் பேசுதல்
6. கொச்சைச் சொற்களை நீக்கிப் பேசுதல்
7. வட்டார வழக்கை நீக்கிப் பேசுதல்

இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பேசுதல் திறன் வளர்க்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

**பேசுதல் திறனை வளர்க்கும் வழிவகைகள்**

பள்ளிக்குப் புதிதாக வந்த நிலையில் குழந்தைகள் தயக்கமில்லாமல் பேசவும் ஆர்வத்துடன் ஈடுபடவும் அனைவரும் பங்கேற்கவும் ஆசிரியர் ஊக்குவித்தல்வேண்டும். மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்க்க,

1. உரையாடல் நிகழ்த்துதல்
2. படம்பார்த்து விளக்கல்
3. பாடல்களைப் பாடுதல்
4. கதைகள் கூறுதல்
5. விளையாட்டுகள்
6. விவரித்துக் கூறுதல்
7. தலைப்புகளில் பேசுதல்
8. காலை வழிபாட்டுக் கூட்டத்தில் பங்கேற்றல்
9. நா பிறழ் பயிற்சி
10. நாநெகிழ் பயிற்சி

இவ்வாறு பல்வேறு பயிற்சிகள் வழங்குதல் வேண்டும்.

**உரையாடல் நிகழ்த்துல்**

உரையாடல் என்பது, "அயல்மொழிச் சொற்கள் குறுக்கிடாமல் ஒருவர் பேசுவதை மற்றொருவர் கேட்பதும் அதற்கு விடையிறுப்பதுமாகும்." என்று பேராசிரியர் பாமர் குறிப்பிடுவார்.

இச் செயல்பாட்டிற்கு ஆசிரியர் நாள்தோறும் சிறிதுநேரம் மாணவர்களுடன் ஏதாவது ஒரு தலைப்பில் உரையாடவேண்டும். ஆசிரியர் தலைமை ஏற்று உரையாடலை நிகழ்த்துவதோடு மாணவர்கள் தங்களுக்குள்ளேயே உரையாடும் பயிற்சியையும் அளிக்கவேண்டும். தொடக்க நிலையில் பேச்சுத் தமிழில் உரையாடும்படி செய்யவேண்டும். இதில் நன்கு திறன்பெற்ற பிறகு எழுத்துத் தமிழில் உரையாடும்படி செய்யவேண்டும். உரையாடல் சிறப்பாக நிகழப் பள்ளிச் சூழல்நிலை அன்பு நிறைந்த சுதந்தரச் சூழ்நிலையாக அமைதல்வேண்டும்.

**உரையாடலுக்குரிய தலைப்புகள்**

உரையாடலுக்குரிய தலைப்புகள் குழந்தைகளின் வயது, அறிவு, அனுபவம் ஆகியவற்றை ஒட்டி அமைதல்வேண்டும்.

1. தொடக்க நிலையில் முதலிரண்டு வகுப்புகளில் வீடு, குடும்பம், பள்ளி, உறவினர், நண்பர், உணவு, உடை, விளையாட்டு, திருவிழாக்கள், விலங்குகள், பறவைகள் முதலியனபற்றிப் பேசச் செய்யலாம்.
2. மூன்று, நான்கு, ஐந்து வகுப்பு மாணவர்கள் தொழில்கள், நிகழ்ச்சிகள், போக்குவரத்து வசதிகள், கல்விப்பயணம், நாடகக் காட்சிகள் முதலியன பற்றிப் பேசச் செய்யலாம்.

**உரையாடலால் விளையும் நன்மைகள்**

1. குழந்தைகளிடம் காணப்படும் அச்சமும் கூச்சமும் விலகும்.
2. ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் இடையே அன்பு ஏற்படும். இதனால் பாடத்தின்மீது விருப்பம் உண்டாகும்.
3. நல்ல உச்சரிப்பு, திருத்தமான பேச்சு அமையும்.
4. சிந்தனையாற்றல் வளரும்.
5. சொற்களஞ்சியம் பெருகும்.
6. குழந்தைகளுக்குள் தோழமை உணர்வு அதிகரிக்கும்.
7. சொற்போர், சொற்பொழிவு, நடிப்பு ஆகியவற்றிற்கு அடித்தளமாக அமையும்.

**உரையாடல் மேம்பட ஆசிரியரின் ஊக்குவிப்பு**

குழந்தைகளின் உரையாடல்திறன் மேம்பட, ஆசிரியர் செய்யவேண்டிய ஊக்குவிப்புச் செயல்கள்:

- இன்முகத்துடன் கூடிய கனிவான பேச்சு.
- ஆர்வமூட்டுதல்
- குறைகளைத் திருத்தி நெறிப்படுத்துதல்
- குழந்தைகள் கேள்வி கேட்பதை வரவேற்றல்
- பரிவுணர்வுடன் நடத்துதல்
- பாராட்டுதல்

தொலைக்காட்சி காண்பதால் ஏற்படும் நன்மை தீமைகளைப் பற்றி உடன்பயில்வாரோடு உரையாடுக.

**படம்பார்த்து விளக்குதல்**

குழந்தைகள் படங்களைப் பார்ப்பதற்குப் பெரிதும் விருப்பங் கொள்வர். அதிலும் கண்கவரும் வண்ணப் படங்களை ஆர்வத்துடன் பார்த்துத் தங்களது கற்பனைக்கு ஏற்பக் கதை கூறுவர். குழந்தைகளின் பேச்சுத்திறனை வளர்க்க அவர்களின் வயது, வகுப்பிற்கேற்ற படங்களைத் தேர்ந்தெடுத்து, அவை பற்றிப் பேசச் செய்யவேண்டும்.

தொடக்கநிலையில் தனிப்படங்களையும் பின்னர்க் கதைப் படங்களையும் பயன்படுத்திப் பேசச் செய்யவேண்டும். எடுத்துக்காட்டாக, 'மாம்பழம்' படத்தைப் பயன்படுத்தி அதன் நிறம், சுவை, வடிவம், பயன் பற்றிப் பேசச் செய்யவேண்டும்.

கதைப் படங்களென்றால், அந்தப் படத்தில் இருப்பவை எவை, அவை என்ன செய்து கொண்டிருக்கின்றன. அவற்றின் நிறம், இயல்பு என விரிவாகப் பேசச் செய்யவேண்டும்.

**பாடல் பாடுதல்**

பாடல்களைக் குழந்தைகள் பலமுறை பாடுவதால் சொற்றொடர்களைத் தொடர்ச்சியாகக் கூறுந்திறன் பெறுகின்றனர். சில பாடல்களில் வந்த சொற்களே மீண்டும் மீண்டும் வருவதால்,

ஒலிப்பதில் நல்ல பயிற்சியும் கிடைக்கிறது. எனவே, வகுப்பு நிலைக்கேற்றவாறு பாடல்களைத் தேர்ந் தெடுத்துத் திரும்பத் திரும்பப் பாடச் செய்வது வாய்மொழிப் பயிற்சிக்குப் பெரிதும் உதவும்.

இப் பயிற்சியினால் மாணவர்கள் தமிழ் ஒலிகளைச் சரியாக ஒலித்தல், வாக்கிய அமைப்புகளை மனத்திலிருத்தல் ஆகிய திறன்களைப் பெறுவதோடு, இலக்கியத்தைச் சுவைக்கவும் பாடலைப் படைக்கவும் ஆற்றல் பெறுவர். ஆசிரியர் முதலில் பாட நூலில் உள்ள பாடல்களையும் பின்னர்ப் பாட நூலில் இடம்பெறாத பாடல்களையும் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும்.

தொடக்கத்தில்,

“தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பது - மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி”

– **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை**

போன்ற எளிமையான பாடலைப் பாடச் செய்யலாம்.

சில குழந்தைகள் ‘க’, ‘ங’ எழுத்துகளை உச்சரிப்பதற்குச் சிரமப்படுவர். இதற்கு,

“சங்குச் சக்கரசாமி வந்து
சிங்கு சிங்கென ஆடிற்றாம்
சிங்கு சிங்கென ஆடிற்றாம் - அது
சிங்கு சிங்கென ஆடிற்றாம்”

இது போன்ற பாடல்களை மெய்ப்பாட்டோடு பாடக் கற்றுக் கொடுக்கலாம்.

**கதை சொல்லுதல்**

குழந்தைகளுக்குக் கதையிலிருக்கும் விருப்பம் அளவிட முடியாதது. கதை கேட்பதிலும் கதை கூறுவதிலும் எல்லா நிலை மாணாக்கரும் பெரிதும் ஆர்வங் காட்டுவர். கதை கூறுந்திறனைக் குழந்தைகளிடம் வளர்க்கும்போது அவர்களது பேச்சுத்திறன் இயல்பாகவே வளரும்.

மாணவர்களிடம் கதை கூறுந்திறனை வளர்க்க,

1. ஆசிரியர் கூறுங் கதையை மாணவர்கள் கேட்டுத் திரும்பச் சொல்லுதல்.
2. மாணவர்களுக்குத் தெரிந்த கதைகளைக் கூறச் செய்தல்.
3. படக் கதையைப் பார்த்து, அதன் நிகழ்வுகளை விவரித்துக் கதையாகக் கூறச் செய்தல்.
4. மாணவர்கள் கதை கூறும்போது, கதா பாத்திரமாகவே மாறிப் பாவனையோடு கூறச் செய்தல்.
5. ஆசிரியர் கதையைத் தொடங்கிச் சிறிது கூறித் தொடர்ச்சியை ஒவ்வொரு மாணவனாகக் கூறச் செய்தல்.

இத்தகைய முறைகளைப் பின்பற்றலாம்.

குழந்தைகளுக்குக் கூறப்படும் கதைகள் சொந்த அனுபவத்தை ஒட்டிய கதைகள், இயற்கைக் கதைகள், புராணக் கதைகள், நகைச்சுவைக் கதைகள், தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள் முதலியனவாக இருக்கலாம்.

**கதை கூறுவதன் நோக்கம்**

1. குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.
2. அறிவினை வளர்க்கும்.
3. ஒழுக்கத்தைச் சீர் செய்யும்.
4. கற்பனையாற்றல், நினைவாற்றல் அதிகரிக்கும்.
5. ஆசிரியர் மாணாக்கர் கூட்டுறவை வளர்க்கும்.
6. முருகுணர்ச்சி ஏற்படும்.
7. கேட்டல், பேசுதல் திறன் வளரும்.
8. சொற்களஞ்சியம் பெருகும்.

**விளையாட்டுகள்**

வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் விளையாடும் விளையாட்டுகள்மூலம் பேசுதல் திறனை வளர்க்கலாம். வகுப்பறைக்குள் எதிர்மறையாகப் பேசுதல், வாக்கியத்தை நீட்டுதல், கதையைத் தொடர்ந்து கூறுதல், தொலைபேசிப் பேச்சு போன்ற முறைகளில் விளையாடச் சொல்லலாம்.

**எடுத்துக்காட்டு: எதிர்மறைப் பேச்சு**

ஒருவர் : நேற்று நான் விளையாடினேன்.
மற்றொருவர் : நேற்று நான் விளையாடவில்லை.

**வாக்கியத்தை நீட்டுதல்**

ஒருவர் : எங்கள் பள்ளி.
மற்றொருவர் : எங்கள் பள்ளி நல்ல பள்ளி.
அடுத்தவர் : எங்கள் பள்ளி மிகவும் நல்ல பள்ளி.

**தொலைபேசிப் பேச்சு**

செல்வி : வணக்கம். செல்வி பேசுகிறேன்.
தங்கம் : வணக்கம் செல்வி, நலமா?
செல்வி : இன்று மாலை உன் வீட்டுக்கு வரவிருக்கிறேன். வீட்டிலிருப்பாயா?
தங்கம் : மாலை 5 மணிக்கு வீட்டுக்கு வந்துவிடுவேன். கட்டாயம் வா.

வகுப்பிற்கு வெளியே விளையாடும் விளையாட்டுகளும் வாய்மொழிப் பயிற்சிக்கு உதவும்.

1. 'குலை குலையாய் முந்திரிக்காய்
   நரியே நரியே சுற்றி வா' - என்னும் விளையாட்டு.
2. கபடி விளையாடும்போது மூச்சுவிடாமல் இருப்பதற்காகப் பாடல்களைப் பாடிக் கொண்டே ஆடுவதுண்டு.

   'தென்னை மரத்தில் ஏறாதே
   தேங்காயைப் பறிக்காதே
   பனை மரத்தில் ஏறாதே
   பனங்காயைப் பறிக்காதே
   மாமரத்தில் ஏறாதே
   மாங்காயைப் பறிக்காதே...பறிக்காதே... பறிக்காதே'

இவ்வாறு பாடிக்கொண்டே எதிரணியினரைத் தொட முயல்வர். இவ்வகையான விளையாட்டு களும் வாய்மொழிப் பயிற்சிக்கு உதவுகின்றன.

**விவரித்துக் கூறுதல்**

மாணவர்கள் தாங்கள் வாழும் சூழ்நிலையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் கண்ட காட்சிகளையும் விவரித்துக் கூறச் செய்யவேண்டும். மேலும், தாங்கள் கண்டுகளித்த இடங்கள், பொருட்காட்சி, பேருந்து நிலையம் முதலியன பற்றியும் விவரிக்கச் செய்யவேண்டும்.மாமரம், வாழை மரம் முதலியன தங்கள் பயனைத் தாங்களே கூறுவதுபோல் கூறச் செய்யலாம்.

**தலைப்புகளில் பேசுதல்**

இச் செயல்பாட்டில் மாணவர்களுக்கு எளிய தலைப்புகள் கொடுத்து, அத் தலைப்புகள் குறித்து இயல்பாகவும் சரளமாகவும் பேசச் செய்யலாம். மாணவர்களைக் குழுவாகப் பிரித்து, இரு தலைப்புகள் கொடுத்துச் சொற்போர் நிகழ்த்தச் செய்யவேண்டும். நாடகங்கள் தயாரித்துக் கொடுத்து அவற்றில் பங்கேற்று நடிக்கச் செய்யவேண்டும்.

பள்ளிகளில் தமிழ் இலக்கிய மன்றங்களை அமைத்து, அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்வதன்மூலம் பேச்சுத்திறனை நன்கு வளர்க்க முடியும்.

**காலை வழிபாட்டுக் கூட்டத்தில் பேசுதல்**

நாள்தோறும் பள்ளிகளில் நடைபெறும் காலை வழிபாட்டுக் கூட்டம் பேச்சுத் திறனை வளர்க்கப் பெரிதும் உதவும். செய்தித்தாள்களில் உள்ள செய்திகளைக் கூறச் செய்தல், உள்ளூரில், வீட்டில் நடந்த நிகழ்வுகள்பற்றி ஓரிரு நிமிடங்கள் கூறச் செய்தல், திருக்குறள், பழமொழிகள், சிந்தனைக்கு, அறிவியல் துணுக்குகள் முதலியவற்றைக் கூறச் செய்தல் பேச்சுப் பயிற்சியை வளர்க்கும்.

**நா பயிற்சிகள்**

‘செந்தமிழும் நாப்பழக்கம்’ சிறந்த பேச்சிற்குத் தெளிவான ஒலிப்பு இன்றியமையாதது. தெளிவான ஒலிப்பிற்குத் தொடக்க வகுப்புகளிலேயே நாநெகிழ் பயிற்சிகள், நா பிறழ் பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும்.

**நாநெகிழ் பயிற்சி**

ஒரே வகையான சொற்கள் அல்லது ஒலிகளைப் பலமுறை கூறுமாறு செய்தல் நாநெகிழ் பயிற்சியாகும். இதனால், நாவின்நுனி மேலுங்கீழுமாக அசைந்து அவ்வொலிக்குரிய இடத்தில் அமையும் பயிற்சி பெறும். இதனால், ஒலியெழுப்பும் முறை திருத்தமடையும்.

ல ல ல ல ல ல ல
ள ள ள ள ள ள ள – என அகர ஒலியுடனும்,

ளி ளி ளி ளி ளி ளி ளி
ழி ழி ழி ழி ழி ழி – என இகர ஒலியுடனும்


என வெவ்வேறு உயிரெழுத்துகளுடன் கூறப் பயிற்சி அளித்தல்வேண்டும்.

‘ள’ ஒலி – தள்ளும் உள்ளம்; தள்ளாடித் தள்ளாடிச் சென்றான்.


‘ழ’ ஒலி – கீழே விழுந்து அழுதான்; கொழு கொழுத்த வாழை.

இத்தகைய பயிற்சிகளை மாணவர்களுக்குக் கொடுத்து, அவர்களிடம் பேசுந்திறன் வளர்த்தல்வேண்டும்.


**மயங்கொலி எழுத்துகளை ஒலிப்பதற்கான படங்கள்**




**ர, ற எழுத்துகள்**




**ல,ள,ழ எழுத்துகள்**




**ந, ன, ண எழுத்துகள்**

நாவின் முயற்சிகளை உற்றுநோக்கி முறையாக ஒலிக்கக் கற்பிக்கலாம்.

**நா பிறழ் பயிற்சி**

ஒத்த ஒலியுடைய சொற்கள் அடுத்தடுத்து அமைந்து வரும் தொடர்களை விரைவாகவும் பிழையின்றியும் கூறுமாறு பயிற்சியளிப்பது நா பிறழ் பயிற்சியாகும்.

எடுத்துக்காட்டு:

- தொழிலாளி வாழ்வு உயரட்டும்.
- பலாப்பழம் பழுத்துப் பள்ளத்தில் வீழ்ந்தது.
- அவனும் அவளும் அவலும் தெள்ளுமாவும் தின்றார்கள்.

ஒலி வேறுபாட்டால் பொருள் வேறுபடும் என்பதனை உணரும் வண்ணம் தொடர்கள் அமைத்துக் கூறவேண்டும்.

எடுத்துக்காட்டு:

வாளை என்பது மீனின் பெயர்.
வாழை என்பது மரத்தின் பெயர்.

இவைபோன்று வலை-வளை; வலி-வளி-வழி; ஒலி-ஒளி-ஒழி; கூரை-கூறை, இரங்கு-இறங்கு போன்றவற்றைச் சொற்றொடரில் அமைத்துக் கூறச் செய்தால், ஒலிப்புமுறை அறிவதுடன் பொருள் வேறுபாடும் அறிந்துகொள்வர்.

**திருந்திய பேச்சின் நல்லியல்புகள்**

- திருந்திய பேச்சு கீழ்க்குறிப்பிட்ட நல்லியல்புகளைப் பெற்றிருத்தல்வேண்டும்.
- தெளிவான ஒலிப்பும், திருத்தமான உச்சரிப்பும் பெற்றிருத்தல்.
- உணர்வு நிலைகளுக்கேற்றவாறு குரல் ஏற்றத்தாழ்வு அமைந்திருத்தல்.
- கருத்துகளுக்கு ஏற்ற உணர்ச்சி வேகம் உடையதாயிருத்தல்.
- பேச்சின் இடையே பயன்படுத்தும் வேண்டாத சொற்களை நீக்குதல்.
- கருத்துகளைக் கோவையாக முன்பின் மாறாமல் தங்கு தடையின்றிஅமைத்திருத்தல்.
- நல்ல சொற்களைக் கொண்டு எளிய நடையுடையதாயிருத்தல்.

**பேச்சுப் பயிற்சி வழங்கும்போது ஆசிரியர் வகுப்பில் பின்பற்ற வேண்டியவை:**

1. குழந்தைகள் தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் வகுப்பறையில் பேச முற்படுவர். அப்போது குழந்தைகளை அடக்கி உட்கார வைக்காமல், அவர்களின் பேச்சுக்குச் செவி மடுத்து ஊக்கமூட்டவேண்டும்.
2. குழந்தைகள் சிலர் பேசுவதற்கு அச்சப்படுவர், தயங்குவர். அத்தகைய குழந்தைகளை இனங்கண்டு அவர்களது அச்சத்தைப் போக்கி, மெல்ல மெல்லப் பேச வைத்தல்வேண்டும்.
3. குழந்தைகள் எந்த இடச்சூழலிலிருந்து வருகிறார்களோ அதையொட்டிக் கூறச் செய்தல் வேண்டும்.
4. குழந்தைகள் மனத்தில் முடங்கிக் கிடக்கின்ற உணர்ச்சிகளைத் தூண்டியும்பேசுந்திறனை வளர்க்கலாம்.
5. பள்ளியில் குழந்தைகளை நான்கைந்து பேராகச் சேர்ந்து அவர்களுக்குத் தெரிந்த பாடல் களையும் கதைகளையும் விடுகதைகளையும் வீட்டு நிகழ்ச்சிகளையும் கூறச்செய்ய வேண்டும்.
6. பேச்சுத்திறன் வளர்க்கும்போது ஒவ்வோர் எழுத்தையும் எம்முறையில் உச்சரிக்க வேண்டும் என்பதை நன்கு உணரச் செய்தல் இன்றியமையாததாகும். முதலில் எழுத்துகளைத் தனித்தனியாக ஒலித்துக்காட்டிப் பின்னர்க் கூட்டெழுத்துகளை ஒலித்துக் காட்டவேண்டும். குறில், நெடில் வேறுபாடு, ஒலி வேறுபாடுகளை அறியச் செய்தல் வேண்டும்.
7. குழந்தைகள் சிலருக்குத் தெற்றுவாய்க் குறைபாடு இருக்கும். இக் குழந்தைகளை ஒதுக்கிவிடாமல் அவர்களுக்கு நாநெகிழ், நாபிறழ் பயிற்சிகளை முறையாக வழங்கவேண்டும்.
8. முதலில் எழுத்துகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் கொடுத்துப் பேசப் பழக்க வேண்டும்.
9. குழந்தைகள் ஒரே நிலையில் பேசாது குரல் ஏற்றத்தாழ்வோடு வினா, வியப்புக்கேற்றவாறு பேசச் செய்தல்வேண்டும்.
10. இரண்டாம் மூன்றாம் வகுப்புக் குழந்தைகளை எழுத்து மொழியிலேயே பேசச்செய்தல் வேண்டும்.
11. தொடக்க நிலைகளில் பிறமொழிச் சொற்கள் கலவாது பேசச் செய்தல்வேண்டும்.
12. மாணவர்களின் வயது, வகுப்புக்கேற்றவாறு பேச்சுப் பயிற்சிகள் அமைத்து வழங்குதல் வேண்டும்.

## 4. ஒலி வடிவங் கற்பித்தல்

மொழியின் அடிப்படை ஒலி. ஒலிகளைக் குறிகளாக அமைத்துக்கொண்டு, கருத்துகளை உணர்த்துவது மொழி. மொழி என்னுஞ் சொல்லுக்குப் பொருள், மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தன்னுடைய கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது.

மொழி ஒலிகளால் ஆனது. ஒலிகளைக் கொண்டு சொற்களும் சொற்களைக் கொண்டு தொடர்களும் அமைக்கப்படுகின்றன. ஒரு மொழிக்கு இன்றியமையாத அடிப்படை ஒலிகள் முதலெழுத்துகள் எனப்படும். இவ்வெழுத்துகளின் ஒலி வடிவத்திற்கும் வரிவடிவத்திற்கும் உள்ள தொடர்பையும் அவை பிறக்கும் முறையையும் இப்பகுதியில் காணலாம்.

**ஒலி வடிவ வரிவடிவத் தொடர்பு**

தமிழ்மொழியில் ஒலி பிறப்பதற்கும் எழுத்துகளுக்கும் மாறுபாடில்லை. எடுத்துக் காட்டாக, அ, ம், மா என்னும் மூன்றெழுத்துகளின் ஒலிப்படியே அவற்றாலான அம்மா என்னுஞ் சொல்லின் ஒலியும் உள்ளது. சொல்லின் ஒலிப்படியே எழுத்துகளும் உள்ளன.


தமிழில் எழுத்துகளைக் கற்றுக்கொடுத்தால் போதும். ஆங்கிலமொழிபோல் எழுத்துகளின் உச்சரிப்புகளைக் கற்றுக்கொடுக்க வேண்டிய தேவையில்லை. இந்த அடிப்படையான உண்மையைப் புரிந்துகொண்டு தமிழ்ச்சொற்களைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**எழுத்தொலிகள் பிறக்கும் முறை**

எழுத்தொலிகள் பிறப்பதற்குக் காரணமான பேச்சுறுப்புகள் பற்றிக் காண்போம்.

நுரையீரல் சுருங்கி விரிவதால் ஏற்படும் காற்றோட்டங்களைப் பயன்படுத்திப் பேச்சுச் செயற்பாடு நிகழ்கிறது. நுரையீரல்கள் (Lungs), மூச்சுக்குழல் (Trachea), தொண்டை (Larynx), மேற்றொண்டை(Pharynx), வாயறை (Oral cavity), மூக்கறை (Nasal cavity) ஆகிய பகுதிகள் பேச்சுச் செயல்பாடுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன.

நா, இதழ் ஆகியன ஒலிகளை உருவாக்க உதவும் இயங்கு உறுப்புகள் (Active articulators) ஆகும். அண்ணம், பல் ஆகியன நிலை உறுப்புகள் (Passive articulators) எனப்படுகின்றன.




| | |
|---|---|
| 1. முன் அண்ணம் | 2. இடையண்ணம், |
| 3. கடையண்ணம் | 4. உள்நாக்கு |
| 5. மூக்கறை வாயில் | 6. நுனிநா |
| 7. நா விளிம்பு | 8. இடைநா |
| 9. கடை நா | 10. அடிநா |
| 11. முன்தொண்டை | 12. காற்றுக்குழல் மூடி |
| 13. ஒலித்தசை | 14. குரல் வளை |
| 15. காற்றுக் குழாய் | |

**முதலெழுத்துகள் பிறக்கும் முறை**

தமிழுக்கு அடிப்படையாக உள்ள முதலெழுத்துகளை உயிர், மெய் எனப் பிரிப்பர். நுரையீரலிலிருந்து வெளியேறும் காற்று எவ்விதத் தடையும் இல்லாமல் வெளியேறும் நிலையில் பிறப்பிக்கப்படும் ஒலிகள் உயிரொலிகள் ஆகும். நுரையீரலிலிருந்து வெளியேறும் காற்று முற்றிலுமாகவோ பகுதியாகவோ தடைப்பட்டு வெளியேறும் நிலையில் பிறப்பிக்கப்படும் ஒலிகள் மெய்யொலிகள் ஆகும்.

**உயிரொலிகள்**

உயிரெழுத்துகள் பன்னிரண்டு. அவற்றுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் குறிலெழுத்துகள். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழும் நெடிலெழுத்துகள். இவற்றுள் ஐ, ஔ ஆகிய இரண்டும் கூட்டொலிகள் எனக் கருதப்படுகின்றன. ஐகார ஔகாரங்களை அ+ இ = ஐ, அ + உ = ஔ எனத் தொல்காப்பியம் விளக்குகிறது. அ + ய் = ஐ, அ + வ் = ஔ என நன்னூல் கூறுகிறது.

**பிறப்பு அடிப்படையில் உயிரொலிகள்**

நாவின் எழுச்சி, நாவின் நீட்சி, இதழ்களின் நிலை ஆகிய காரணிகளின் அடிப்படையில் உயிரொலிகள் பகுத்து விளக்கப்படுகின்றன. நாவின் எழுச்சியை மேல், இடை, கீழ் எனப் பகுக்கலாம்.

நாவின் நீட்சியை முன், நடு, பின் எனப் பகுக்கலாம். இதழ்களின் நிலையை இதழ்குவி, இதழ்விரி எனப் பகுக்கலாம். இம்முறையில் உயிரொலிகளின் பண்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| அ | - | இதழ்விரி கீழ் நடு உயிர் |
| இ | - | இதழ்விரி மேல் முன் உயிர் |
| உ | - | இதழ்குவி மேல் பின் உயிர் |
| எ | - | இதழ்விரி இடைமுன் உயிர் |
| ஒ | - | இதழ்குவி இடைபின் உயிர் |

நெடிலெழுத்துகள் தத்தமக்கு ஒத்த குறில் எழுத்துகளின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவை.

‘முயற்சியுள் அ, ஆ அங்காப்புடைய’ - நன். 76

‘இ, ஈ, எ, ஏ, ஐ அங்காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே’ - நன். 77

‘உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே’ - நன். 78

**பிறப்பு அடிப்படையில் மெய்யொலிகள்**

குரல்வளையிலிருந்து வெளிப்படும் ஒலிப்பு ஒலியும் (Voiced sound), ஒலிப்பில் ஒலியும் (Voiceless sounds) மேல் வாயில் தடை ஏற்பட்டால் மெய்யொலியாகவும் தடையின்றி வெளிவந்தால் உயிரொலியாகவும் மாறுகின்றன எனக் கண்டோம்.

மெய்யொலிகள் பதினெட்டும் வல்லினம் (க், ச், ட், த், ப், ற் ), மெல்லினம் ( ங், ஞ், ண், ந், ம், ன்), இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்) என வகைப்படுத்தப்படும். வாயில் பிறக்கும் தடையொலிகளை

வல்லினம் என்றும், மூக்கு வழியாகச் செல்லும் நெகிழ்வொலிகளை மெல்லினம் என்றும், பிறவற்றை இடைப்பட்ட ஒலிகள் என்னும் முறையில் இடையினம் என்றும் பிரித்துக் கூறுவர்.

மெய்யொலிகளைப் பிறப்பிடம் (Place of articulation), பிறக்கும் முறை (Manner of articulation) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தலாம்.

**அடைப்பொலிகள் அல்லது தடையொலிகள் (Stop sounds)**

thai wÆ‹ VjhtJ XÇl¤âš _¢R¡fh‰iw K‰¿Y khf¤ jL¤J ÃW¤â¥ ãw¥ã¥gj‹ _y« mil¥bghÈ fŸ ãw¡»‹ wd. ït‰iw bto¥bghÈ fŸ v‹W« ÃW¤bjhÈ fŸ v‹W« TWtJ© L. ïit fh‰W jil¥gL« ïlŠ rh®ªJ bgaÇl¥ gL»‹ wd.

tšÈd vG¤JfŸ ¡,¢,£,¤,¥,‰M W« mil¥bghÈ fshF«.

- ¡ - ehÉ‹ ã‰gF â (fil eh) ã‹d© z ¥gFâia¥ bghUªJtjhš 'f'fu« ãw¡F«.ïJ ã‹d© z xÈ (Velar Sounds) எனப்படும்.
- ச் - நாவின் இடைப்பகுதி இடையண்ணத்தைப் பொருந்துவதால் 'ச' கரம் பிறக்கும். இது இடையண்ண ஒலி (Palatals) எனப்படும்.
- ட் - நா மடிந்து கடை அண்ணத்தைப் பொருந்துவதால் 'ட' கரம் பிறக்கும். இது நாமடி ஒலி (retroflex) எனப்படும்.
- த் - மேற்பல்லில் நா நுனி பரந்து ஒற்றுவதால் 'த'கரம் பிறக்கும். இது பல்லின ஒலி (Dental) எனப்படும்.
- ப் - ஈரிதழ்களும் இயைந்து பொருந்துவதால் 'ப'கரம் பிறக்கும். இது இதழொலி (Bilabial) எனப்படும்.
- ற் - நாவின் நுனி முன்னண்ணத்தை நன்கு பொருந்துவதால் 'ற'கரம் பிறக்கும். இது உரப்பொலி (Trill) எனப்படும்.

**மூக்கொலி**

வாயறையிலிருந்து வெளிப்படும் காற்றின் ஒரு பகுதி, மூக்கு வழியே வெளிப்படும்போது, மூக்கொலி உண்டாகிறது. தடையொலி போன்ற வெடிப்புத்தன்மை இதிலில்லை. மெய் யெழுத்துகள் ஆறும் மூக்கொலிகளாகும்.

- ங் - நாவின் பிற்பகுதி இடையண்ணத்தைப் பொருந்துவதால் 'ங'கரம் பிறக்கும். இது பின்னண்ண ஒலியாகும்.
- ஞ் - நாவின் இடைப்பகுதி இடையண்ணத்தைப் பொருந்துவதால் 'ஞ'கரம் பிறக்கும்.இது இடையண்ண ஒலியாகும்.
- ண் - நா மடிந்து இடை அண்ணத்தைப் பொருந்துவதால் 'ண'கரம் பிறக்கும். இது நாமடி ஒலியாகும்.
- ந் - மேற்பல்லில் (அண்பல்) நா நுனி பரந்து ஒற்ற 'ந'கரம் பிறக்கும். இது பல்லின ஒலியாகும்.
- ம் - இரண்டு இதழ்களும் இயைந்து பொருந்துவதால் 'ம'கரம் பிறக்கும். இது இதழொலியாகும்.
- ன் - அண்பல்லை (மேற்பல்) நாவின் நுனி பொருந்துவதால் 'ன'கரம் பிறக்கும். இது அண்பல் ஒலியாகும்.

**மருங்கொலிகள் (Laterals)**

மூச்சுக் காற்றை நாவால் தடுத்துக்கொண்டு நாவின் ஒரு பக்கத்திலோ இரண்டு பக்கங்களிலோ காற்றைக் கசியச் செய்து வெளியேற்றுவதால் பிறக்கும் ஒலிகள் மருங்கொலிகளாகும். இது பிரிவளி ஒலி எனவும் கூறப்படும்.

ல் - நாவின் நுனி அண்பல்லைத் தொடக் காற்று இரு மருங்கிலும் வெளியேறுவதால், 'ல'கரம் பிறக்கும். இது அண்பல் ஒலியாகும்.

ள் - நாவின் நுனி இடை அண்ணத்தைத் தொடக் காற்று நாவின் இரு மருங்கிலும் வெளியேறுவதால் 'ள'கரம் பிறக்கும். இது அண்ண ஒலியாகும்.

ழ் - நா நுனி வளைந்து நடு அண்ணத்தை உரசிச் செல்வதால் 'ழ'கரம் பிறக்கும். இது நாமடி ஒலி எனவும் நா வளை மருங்குத் தொடரொலி எனவும் கூறப்படும்.

**வருடொலி (Flap)**

நாவின் நுனி மேலெழுந்து வளைந்து அண்ணத்தை வருடுவதால் பிறக்கும் ஒலி வருடொலி எனப்படும். நா அண்ணத்தில் மோதுவதால் இதனை அடியொலி எனவும் வழங்குவர். 'ர'கரம் வருடொலியாகும்.

ர் - நாவின் நுனி அண்பல்லைத் தடவிச் (வருடி) செல்லும்போது 'ர'கரம் பிறக்கும். இது வருடொலியாகும்.

**அரையுயிர்கள் (Semi-vowels)**

உயிரெழுத்துகள் பிறக்கும் தன்மைகள் சிலவற்றைக்கொண்டு பிறக்கும் ஒலிகள் அரையுயிர்கள் எனப்படும். ய, வ இரண்டும் அரையுயிர்கள் ஆகும்.

ய் - அடிநா இடையண்ணத்தைப் பொருந்துவதால் 'ய'கரம் பிறக்கும். இது இடையண்ண அரையுயிர் எனப்படும்.

வ் - மேல் வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்துவதால் 'வ'கரம் பிறக்கும். இது பல்லிதழ் அரையுயிர் எனப்படும்.

| | | |
|---|---|---|
| "கஙவும் சஞவும் டணவும் முதலிடை<br>நுனிநா அண்ணம் உறமுறை வருமே" | - | நன். 79 |
| "அண்பல் லடிநா முடியுறத் தநவரும்" | - | நன். 80 |
| "மீகீழ் இதழுறப் பம்மப் பிறக்கும்" | - | நன். 81 |
| "அடிநா அடியணம் உறயத் தோன்றும்" | - | நன். 82 |
| "அண்ண நுனிநா வருட ரழ வரும்" | - | நன். 83 |
| "அண்பல் முதலும் அண்ணமும் முறையின்<br>நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்<br>லகர ளகரமா யிரண்டும் பிறக்கும்" | - | நன். 84 |
| "மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே" | - | நன். 85 |
| "அண்ண நுனிநா நனியுறின் றன வரும்" | - | நன். 86 |

## 5. படித்தல் திறன்

வரிவடிவ எழுத்துகளையும் சொற்களையும் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து, மனத்தால் பொருள் உணரும் திறன் **படிப்பு** எனப்படும். படித்தலின்போது சொற்களை அடையாளங் காணல், முறையாக ஒலித்தல், பொருளுணர்தல் ஆகிய மூன்று செயல்கள் ஒருசேர நடைபெறுகின்றன.

**படித்தல் திறனின் குறிக்கோள்கள்**

அழுத்தம், திருத்தம், உயிர்ப்பு, விரைவு, தெளிவு ஆகியவற்றைக்கொண்ட நல்ல படிப்பை உருவாக்கல்.

- குரல் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கிப் பொருளுணர்ச்சியை வெளிப்படுத்துதல்.
- படித்தல் பொருளைத் தானும் உணர்ந்து பிறரையும் உணரச் செய்தல்.
- சொல்லின் பொருளைச் சிந்தித்தறிந்து உணரச் செய்தல்.
- சொற்களஞ்சியத்தைப் பெருக்க உதவுதல்.
- பிறமொழிச் சொற்களை அறியச் செய்தல்.
- நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தும் முறையை அறியச் செய்தல்.
- பண்பாடுள்ள சமுதாய வாழ்க்கைக்கு வித்திடுதல்.

**படித்தல் திறனின் வகைகள்**

படித்தல் திறன் திறன் வளர்க்கும் படிப்பு, பொழுதுபோக்கும் படிப்பு, பயன் கருதிய படிப்பு என மூவகைப்படுத்தலாம்.

**திறன் வளர்க்கும் படிப்பு**

குறிப்பிட்ட துறையைத் தேர்ந்தெடுத்து அதை மிக விரிவாகவும் ஆழமாகவும் படிக்கும் படிப்பு, திறன் வளர்க்கும் படிப்பாகும். சங்க இலக்கியங்கள், இலக்கண நூல்கள், காப்பியங்கள், அற நூல்கள், புதினங்கள், சிறுகதைகள் முதலியனவற்றைப் படிப்பது படித்தல் திறன் வளர்க்கும் படிப்பாகும்.

**பொழுதுபோக்குப் படிப்பு**

செய்திகளைத் தெரிந்துகொள்ளும் நோக்கிலும் பொழுதுபோக்குவதற்காகவும் படிக்கும் படிப்பு பொழுதுபோக்குப் படிப்பாகும். நாள், வார, மாத, இதழ்களைப் படித்தல் பொழுதுபோக்கும் படிப்பாகும்.

**பயன்கருதிய படிப்பு**

இது மொழியின் தொடக்கநிலைப் படிப்பாகும். மொழித்திறன்களை அறியவும் வளர்த்துக் கொள்ளவும் உதவும் பள்ளிப்படிப்பு முதலியன பயன்கருதிய படிப்பாகும். மேலும், வாழ்க்கையில் அன்றாட நிகழ்வில் பயன்படும் அங்காடி விலைப்பட்டியல், பேருந்துக் கால அட்டவணை, தொடர்வண்டிக் கால அட்டவணை, உணவுவிடுதி உணவுப்பொருள் விலைப்பட்டியல், நாட்காட்டி முதலியவற்றைப் படித்தல் பயன்கருதிய படிப்பினைச் சாரும்.

**நிறுத்திப் படித்தல்**

**பொருள் விளங்கும்படி சேர்த்தும் இடைவெளிவிட்டும் படித்தல்**

வாய்விட்டுப் படிக்கும்பொழுது பொருள் புரிந்துகொள்ளும்வண்ணம் சில சொற்களைச் சேர்த்தும், சில சொற்களினிடையே நிறுத்தியும் படித்தல்வேண்டும். சேர்த்துப் படிப்பதால் அல்லது இடைவெளிவிட்டுப் படிப்பதால் பொருள் மாற்றம் ஏற்படவும் கூடும்.

கீழுள்ள எடுத்துக்காட்டுகளைக் காண்க.

மாலா/ அத்தை வீட்டுக்குப் போனாள்.

மாலா அத்தை / வீட்டுக்குப் போனாள்.

மாலா சொல்லுக்குப்பின் நிறுத்தும்பொழுது மாலாவும், மாலா அத்தை - சொற்களுக்குப்பின் நிறுத்தும்பொழுது மாலா அத்தையும் வீட்டுக்குப் போவதாகப் பொருள்படும்.

எனவே, எங்கெங்குச் சேர்த்துப் படிக்கவேண்டும், எங்கெங்கு நிறுத்திப் படிக்கவேண்டுமென இன்றியமையாச் சிலவிடங்களை அறிந்துகொள்வோம்.

**பொருள் விளங்கும்படி சேர்த்துப் படிக்க வேண்டிய இடங்கள்**

1. பெயரடை, வினையடைகளைச் சேர்த்துப் படிக்க.
   உயரமான வீடு/ வேகமாகச் சென்றான்.
2. நேர்இணை, எதிர்இணை,செறிவிணைச் சொற்களைச் சேர்த்துப் படிக்க.
   ஈடுஇணையற்ற, உயர்வுதாழ்வின்றி, கன்னங்கரேலென்று.
3. சொற்கள் வேற்றுமை உருபு, சொல்லுருபு ஏற்று வரும்பொழுது சேர்த்துப் படிக்க.
   கண்ணனைக்/கண்டேன். அவனுக்குக்/ கொடுத்தேன். வாளால்/ அறுத்தேன்.
   வேலனுடன்/ சென்றேன். பெட்டியிலிருந்து/ எடுத்தேன். மரத்தின்கண்/ குரங்கு.
   கண்ணனது/ புத்தகம்.
4. வினைமுற்றைத் தனியாக, வினையடை இருக்குமாயின் வினையடையோடு படிக்க.
   வந்தான். வேகமாக வந்தான்.
5. எண்கள் வரும்பொழுது சேர்த்துப் படிக்க.

ஓர் ஊரில், இரண்டு நண்பர்கள், நான்கு மாணவர்கள்

ஆனால் எண்ணுக்குப்பின் பெயர்ச்சொல் அடையோடு வருமாயின் பிரித்துப் படிக்க.

இரண்டு/சிறந்த தலைவர்கள், மூன்று/ பெரிய படங்கள்.

**இடைவெளிவிட்டுப் படிக்கவேண்டிய இடங்கள் சில:**

1. விளிவேற்றுமை ஏற்ற சொல்லைத் தனியே படிக்க.
   கண்ணா/ வா. வேலா/ அங்கே போ.
2. எழுவாயைத் தனியாகவும் அடுத்துவரும் தொடர்களைத் தனியாகவும் படிக்க.
   மன்னன்/ தன் மக்களைப் பார்த்து
3. சொற்களுடன் ‘உம்’ சேர்ந்து வரும்பொழுது ஒவ்வொரு ‘உம்’ சொல்லின்பின்னும் நிறுத்திப் படிக்க.
   அவர்/ தேசநலனுக்காகவும்/ முன்னேற்றத்துக்காகவும்/ மிகவும் பாடுபட்டார்.
4. மேற்கோள் குறியுடன் தொடர்கள் அமையுமாயின் நிறுத்தி, உணர்ச்சிக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்து, மேற்கோள் முடிந்தவுடன் நிறுத்திக் குரல் மாற்றத்துடன் படிக்க.
   மணியன் வந்து /ஐயா/ நண்பர்/ வீட்டில் இல்லை/ எனக் கூறினான்.
5. பல பொருள்களை அடுக்கிக் கூறும்பொழுது ஒவ்வொரு பொருளின் பின்னும் நிறுத்திப் படிக்க.
   தங்கம்/ கொய்யா/ மாம்பழம்/ அன்னாசி/ வாழைப்பழம்/ அனைத்தும் வாங்கினாள்.
6. வினையெச்சங்கள் தொடர்ந்து வரும்பொழுது ஒவ்வொரு வினையெச்சத்தின் பின்னும் நிறுத்திப் படிக்க. இறுதி வினையெச்சத்தை வினைமுற்றோடு சேர்த்துப் படிக்க.
   முருகன்/ ஊருக்குச் சென்று/ தந்தையைப் பார்த்து/ விவரங்களைக் கூறிவிட்டுத் திரும்பினான்.
7. பெயரடைகள் அடுக்கி வருமாயின் ஒவ்வொன்றின் பின்னும் நிறுத்தி, இறுதி அடைமொழியைச் சேர்த்துப் படிக்க.
   மிகுந்த பரப்பளவுள்ள/ உயரமான/ மலைமீதுள்ள வீடு.

கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் நிறுத்திப் படிக்கவேண்டிய இடங்களைச் சாய்வுக் கோடிட்டுக் காட்டுக.

“ஆம் அரசே! வறுமையால் வாடும் என் குடும்பத்தின் அவலத்தை எவ்வாறு உரைப்பேன். பசியால் ஊன்வற்றி உடல் மெலிந்து உருக்குலைந்து போனாள் என் மனைவி.

**படித்தலின் வகைகள்**

படித்தல் வாய்விட்டுப் படித்தல், வாய்க்குட் படித்தல் என இரண்டு வகையாகக் கூறப்படும். மேலும் படிக்கும் தன்மையில் ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு எனவும் வகைப்படுத்தப்படும். இத்தகைய படிப்புகளின் நிறை குறைகள் படித்தல் திறனை வளர்க்கும் பயிற்சிகள் முதலியன வகுப்பறையில் ஆசிரியர் பின்பற்ற வேண்டியவை யாகும்.

**வாய்விட்டுப் படித்தல்**

புத்தகத்திலிருக்கும் எழுத்துகளைக் கண்ணால் பார்த்து, வாயால் ஒலி வெளிப்படுமாறு உச்சரித்துப் பொருளுணர்வதே வாய்விட்டுப் படித்தலாகும். தொடக்கநிலையில் வாய்விட்டுப் படித்தலே சிறந்தமுறையாகும். இம்முறைதான் ஒலிப்பைச் செம்மைப்படுத்தத் துணை செய்யும். வாய்விட்டுப் படிக்கும்போது பொருளுணர் ஆற்றல் மிகுதியாகிறது.

**வாய்விட்டுப் படித்தலின் இயல்புகள்**

- சரியான உச்சரிப்புடன் திருத்தமாகப் படித்தல்.
- தெளிவாக விரைந்து படித்தல்.
- பொருளுணர்ந்து படித்தல்.
- உள்ளதை உள்ளவாறு படித்தல்.
- உணர்வுகளை உணர்ந்து படித்தல்.
- நிறுத்தற் குறிகளுக்கேற்பப் படித்தல்.
- சரியான குரல் ஏற்றத்தாழ்வுடன் படித்தல்.

முதலியன வாய்விட்டுப் படித்தலின் நல்லியல்புகளாகும்.

**நிறைகள்**

- ஒலிப்புமுறையைக் கற்க உதவுகிறது.
- ஒலிப்பிலுள்ள குறைகளைத் திருத்த முடிகிறது.
- மனப்பாடம் செய்வதற்கு ஏற்றதாய் உள்ளது.
- நிறுத்தற் குறிகளின் பயனை உணர முடிகிறது.
- ஓசைநயம், செய்யுட் சுவை முதலியவற்றைப் படித்துணர்ந்து இன்புற இயலும்.
- பேச்சு, உரையாடல், நடித்தல், சொற்பொழிவாற்றல், சொற்போர் ஆகியவற்றில் பயிற்சி ஏற்படவாய்ப்பு நல்குகிறது.
- விளம்பரச் செய்திகளை அறிவிக்க உதவுகிறது.
- கண், வாய், மனம் இவற்றிற்கு ஒரு பிணைப்பு ஏற்படுகிறது.
- பல உறுப்புகள் ஒருங்கிணைந்து செயல்படுவதால் கற்றல் வலிமை பெறுகிறது.

**குறைகள்**

- வாய்விட்டுப் படிக்கும்போது, படித்தல் வேகம் குறைகிறது; காலம் வீணாகிறது.
- ஒலிப்புறுப்புகள் எளிதில் களைப்படையும். அதனால், படிப்பதில் சோர்வு தோன்றும்.
- சொற்களை ஏற்றமுறையில் படிக்கவேண்டும் என்பதிலேயே கவனஞ் செல்வதால் பொருள் உணர்தலில் காலதாமதம் ஏற்படும்.
- உடனிருப்போருக்கு இடையூறு ஏற்படும்.

## வாய்க்குட் படித்தல்

நூல் ஒன்றினைப் படிக்கும்போது வாய்விட்டு உரக்கப் படிக்காமல், மனத்திற்குள்ளேயே வாய் திறவாமல், உதடுகள் சிறிதும் அசையாமல், கருத்தை உள்வாங்கிப் பொருளுணர்ந்து கொள்ளும் படிப்பே வாய்க்குட் படித்தலாகும். வாய்விட்டுப் படித்தல் நன்கு கைவரப்பெற்ற பின்னர்க் கையாள வேண்டியமுறை வாய்க்குட் படித்தலாகும். இது படித்தலில் வளர்நிலையைச் சார்ந்தது.

மூன்றாம் வகுப்பிலிருந்தே வாய்க்குட் படித்தலைத் தொடங்கலாம். அவ்வகுப்பில் வாய்க்குட் படித்தல் 40 விழுக்காடும் வாய்விட்டுப் படித்தல் 60 விழுக்காடும் அமைதல் நன்று. உயர் வகுப்பிற்குச் செல்லச் செல்ல வாய்க்குட் படித்தலின் விழுக்காடு உயர்ந்துகொண்டே செல்லவேண்டும்.

**நிறைகள்**

- வாய்க்குட் படித்தலின்போது ஒலித்தல் இன்மையால் ஒலிப்புறுப்புகளுக்கு ஓய்வு கிடைக்கிறது.
- குறைந்த கால அளவில் அதிகமாகப் படிக்கலாம்.
- கண்ணும் மனமும் மட்டும் செயல்படுவதால் படித்தலின் வேகம் அதிகரிக்கும்; பொருளுணரும் ஆற்றல் வளரும்.
- படிக்கும்போது இடையில் நிறுத்திச் சிந்திப்பதற்கு வாய்ப்புண்டு.
- அருகிலிருப்போருக்கு இடையூறு இல்லாமல் படிக்கலாம்.
- அவரவர்களுடைய திறமைக்கேற்றவாறு விரைவாகவோ மெதுவாகவோ படிக்க வழிவகுக்கிறது.
- அகன்ற படிப்பிற்கு வித்திடுகிறது.

**குறைகள்**

- வாய்க்குட் படித்தலின்போது எழுத்துகளின் தவறான ஒலிப்புகளைத் திருத்த வாய்ப்பில்லை.
- வாய்மொழிப் பயிற்சி இல்லாததால் நடித்தல், உரையாடல், பேச்சு,சொற்பொழிவுகள் முதலிய வற்றிற்குப் பயிற்சியளிக்கத் துணைபுரியாது.
- மனத்திற்குள்ளேயே படிப்பதால், பாடல்களில் அமைந்துள்ள சந்தநயம், ஒலிநயம் முதலிய வற்றைக் கேட்டு இன்புறவியலாது.

**படிக்கக் கற்பிக்கும் முறைகள்**

குழந்தைகளுக்குப் படிக்கக் கற்பிக்க எழுத்துமுறை, சொல்முறை, சொற்றொடர் முறை என மூன்று முறைகள் உள்ளன. இம் மூன்று முறைகளின் நிறைகுறைகளைக் காண்போம்.

**எழுத்துமுறைப் படிப்பு**

இது மிகப் பழைய முறை. எழுத்துகளை வரிசையாகக் கற்பித்துப் பின் எழுத்துக் கூட்டி முழுச் சொற்களையும் பின்னர்ச் சொற்றொடர்களையும் கற்பிக்கும் முறையே எழுத்துமுறைப் படிப்பாகும்.

இம் முறையில் முதலில் ஓரெழுத்து, ஈரெழுத்துச் சொற்களையும் பின்னர் மூன்று, நான்கு எழுத்துச் சொற்களையும் அதன்பின் முற்றுச் சொற்றொடர்களையும் கற்பிப்பர்.

**நிறைகள்**

- எழுத்துகளை முறைப்படி படிப்பதால், அவற்றின் வரிசைமுறைகளை நன்குணர்ந்துகொள்ள முடிகிறது.
- எழுத்துகளைக் கற்ற பின்னர்ச் சொற்களைக் கற்பதால் ஐயந்திரிபற எழுத்தறிவுபெற முடிகிறது.
- தமிழ்மொழியில் ஒலிப்பதுபோன்றே எழுதுகிறோம். எனவே, ஒவ்வோர் எழுத்துக்குரிய ஒலியினை நன்கு உணர்ந்துகொள்வதால், எழுதும் பயிற்சி எளிதாகின்றது.
- எழுத்துப் பிழைகள் மிகுதியும் ஏற்படுவதில்லை; படிப்பதும் பிழையின்றி அமையும்.

**குறைகள்**

- உளவியல் முறைக்கு மாறானது. குழந்தைகளுக்குப் படிப்பதில் கவர்ச்சி ஏற்படுவதில்லை; களைப்பையும் வெறுப்பையும் ஏற்படுத்தக் கூடும்.
- தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதல் என்னும் கற்பித்தல்முறைக்கு இது மாறுபட்டதாகும்.
- எழுத்துக்கூட்டிப் படிப்பதிலேயே முழுக் கவனஞ் செலுத்துவதால்பொருளுணராமல் படிக்கும் நிலை வளர்ந்து படிப்பின் நோக்கம் நிறைவேறாமல் போக வாய்ப்புள்ளது.

**சொல்முறைப் படிப்பு**

எழுத்துமுறைக்கு மாறுபட்டது சொல்முறையாகும். இம் முறையில் அட்டைகளில் உருவப் பொருள்களையும் அவற்றிற்குரிய சொற்களையும் ஒருங்கே காட்டிச் சொற்களை முழுமையாகக் கற்கச் செய்கின்றனர். பின்னர், ஒவ்வொரு சொல்லையும் பகுத்து அதிலுள்ள எழுத்துகளைக் கற்கச் செய்கின்றனர். அடுத்து, அவ்வெழுத்துகளாலான புதுச் சொற்களைப் படிக்கச் செய்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு சொல்லாகக் கற்பிப்பது சொல்முறைப் படிப்பு எனப்படும்.

**நிறைகள்**

- குழந்தைகள் எழுத்தெழுத்தாகப் பேசுவதில்லை; சொற்களாகவே பேசுகின்றனர்.அதனால், இம்முறை பொருத்தமாகவே உள்ளது.
- 'முழுமையிலிருந்து பகுதிக்குச் செல்லுதல்', 'தெரிந்ததிலிருந்து தெரியாததிற்குச் செல்லுதல்' என்னும் உத்திக்கு ஏற்றது.
- ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனிப் பொருளுண்டு. பொருளோடு கூடிய சொல்லைக் கற்பித்தலே சாலச் சிறந்தது.
- இம் முறையில் பொருளுணர்ந்து படிப்பதால், படிப்பதில் ஆர்வம் ஏற்படுகிறது.

**குறைகள்**

- படங்களின் துணைகொண்டு கற்பிக்கப்படுவதால், மாணவர்கள் சொற்களைப் பார்க்காமலேயே படத்தைப் பார்த்து மனப்பாடமாகப் பொருளுணராது,சொல்லிக் கொண்டே போகலாம்.
- ஒரு படத்தை மறைத்துக்கொண்டு சொல்லைப் படிக்கச் சொன்னால் படிக்க முடியாமல் இருக்கவும் வாய்ப்புண்டு.
- தமிழ் எழுத்துகளின் வரிசைமுறைகளை அறிய முடியாமல் போகக்கூடும்.

**சொற்றொடர் முறைப் படிப்பு**

எளிய சொற்றொடர்கள் பலவற்றைக் கற்பித்தபின், அச் சொற்றொடர்களிலமைந்த சொற்களையும் எழுத்துகளையும் கற்பிப்பது சொற்றொடர் முறைப் படிப்பாகும். புதிதாகக் கையாளப் படும் முறைகளுள் இதுவும் ஒன்று. இது கதைமுறை என்றும் கூறப்பெறும்.

**நிறைகள்**

- வெறுஞ் சொல்லாகக் கற்பதைவிட, அச் சொல் கையாளப் பெற்றிருக்கும்சொற்றொடர் மாணவர்களுக்குப் பொருளைக் கொடுக்கவல்லது. 'குயில்'என்றால் திகைக்கலாம். ஆனால், 'குயில் பாடுகிறது' என்றால் எளிதில் புரிந்துகொள்வர்.
- இதனை விளையாட்டு முறையில் கற்பித்தால், மாணவர்களிடம் கற்கும் ஈடுபாடு மிகுதியாகும்.
- இம் முறையில் படிப்பதில் மாணவர்களுக்கு ஆர்வம் அதிகரிக்கும்.

**குறைகள்**

- தொடக்க நிலையிலேயே சொற்றொடராகப் படிப்பது மாணவர்களுக்கு இடர்தருவதாகவும் சிக்கல் மிகுந்ததாகவும் இருக்கும்.
- சொற்றொடர்களைப் பார்க்காமலேயே ஒப்புவிக்கக் கூடும். ஆனால், கரும்பலகையில் எழுதிப்படிக்கச் சொல்லும்போது அறியாது திகைக்கக்கூடும்.
- இம்முறை எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுதல் என்பதற்கு எதிர்மாறானதாகும்.

செயல்வழிக் கற்றல் முறையில் 'யானை' குறியீடு அமைந்த பாடப்பகுதிகள் சொல்முறைப் படிப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குழந்தைகள், தாங்கள் படிக்கவேண்டிய அட்டைகளைத் தாங்களே எடுத்து ஆர்வமாகக் கற்கின்றனர். குழந்தைகள் விரும்பிக் கற்கும் இம்முறை படித்தல் திறனை வளர்க்கப் பொருத்தமான முறையாகும்.

**பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் முறை**

தொடக்க நிலையில் எழுத்துகளைக் கற்பிப்பதா, எழுத்துகளாலான சொற்களைக் கற்பிப்பதா என இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. சொல்முறைக் கற்பித்தல்தான் விரைவாகப் படித்தலுக்கான பயிற்சியாகும். ஏனெனில், கண்கள் சொற்களை முழுமையாக நோக்குந் திறன் உடையன. ஒரே நேரத்தில் பதினைந்து எழுத்துகள் அடங்கிய சொல்லைக்கூட நோக்குங் குழந்தைகள் சொற்களைப் படிக்க ஊக்குவிக்கவேண்டும்.

தொடக்கநிலை மாணவர்கள் சொற்றொடர்முறைப் படிப்பைப் பின்பற்றிக் கற்பது கடினமாக உள்ளது. இதனால், சொல்முறைப் படிப்பு முறையே பள்ளிகளில் பின்பற்றப்படுகிறது.

**ஆழ்ந்த படிப்பு**

ஒரு நூலை மேலோட்டமாகப் படித்துச் செய்தியை மட்டும் அறியாமல் அந் நூலிலுள்ள கருத்துகள், சொற்றொடரமைப்புகள், சொல்லாட்சிச் சிறப்புகள் முதலிய அனைத்தையும் படித்து அறிதலே ஆழ்ந்த படிப்பாகும்.பள்ளி நிலையில் ஆழ்ந்த படிப்புத் திறனை வளர்ப்பதற்குச் செய்யுள், உரைநடைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆழ்ந்த படிப்பின் நோக்கங்கள்**

உரைநடைப் பாடத்தை ஆழ்ந்து படிக்கச் செய்வதால் கீழ்க்குறிப்பிட்ட நோக்கங்கள் நிறைவேறும்.

- சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்படும்.
- தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதச் செய்து, சொல்லாட்சித்திறனை வளர்க்கலாம்.
- ஒரு பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதும் திறன் வளரும்.
- உரைநடைச் சிறப்பை உணர்த்தலாம்.
- செய்யுட் பாடத்தை ஆழ்ந்து படிக்கச் செய்வதன்மூலம் கீழ்க்குறிப்பிட்ட நோக்கங்கள் நிறைவேறும்.
- சொல்நயம், பொருள் நயம் உணர்தல்.
- எதுகை, மோனை, இயைபுத் தொடைகளை அறிதல்.
- கற்பனை நயம், உவமை நயத்தை அறிதல்.
- செய்யுளைப் பொருளுணரும்வண்ணம் பிரித்தறிதல்.
- செய்யுளை ஓசைமுறைப்படி படித்தல்.

**நிறைகள்**

- மொழியின் அடிப்படைத் திறன்களில் நல்ல பயிற்சி கிடைக்கிறது.
- நயமுணர்திறன் வளர்கிறது.
- சொற்களஞ்சியம் பெருகுகின்றது.
- படைப்பாற்றல் திறன் வளர வாய்ப்புள்ளது.
- படித்ததன் கருத்தை அறியும் ஆற்றல் வளர்கிறது.

**குறைகள்**

- ஒரே பகுதியை ஆழ்ந்து படிப்பதால் சலிப்பு ஏற்படலாம்.
- பகுதியைப் படித்துச் செய்தியை மட்டும் அறிந்து வினாக்களுக்கு விடைகூறும் நிலை மட்டும் ஏற்பட்டுவிடுதல் கூடும்.

**அகன்ற படிப்பு**

செய்தி திரட்டுதலை நோக்கமாகக்கொண்டு ஒரு நூலை மேலோட்டமாகப் படித்தல் அகன்ற படிப்பு எனப்படும். கதை, கட்டுரை, மாத, வார இதழ்கள், துணைப்பாட நூல்கள் முதலியன அகன்ற படிப்பிற்குத் துணைபுரியும்.

**அகன்ற படிப்பின் நோக்கங்கள்**

- வாய்க்குட் படித்தல் திறனை வளர்த்தல்.
- படித்ததைச் சுருக்கி எழுதும் திறனை வளர்த்தல்.
- பிறர் துணையின்றித் தாமே படித்துச் செய்திகளை யறிதல்.
- ஓய்வுநேரத்தைப் பயனுள்ள முறையில் செலவழித்தல்.
- கற்பனையாற்றலையும் படைப்பாற்றலையும் வளர்த்தல்.
- தன்னம்பிக்கை வளர்த்தல்.

**நிறைகள்**

- வேகமாகப் படித்தல், பொருளுணர்தல் முதலிய திறன்கள் வளர்கின்றன.
- முறையான பொழுதுபோக்கிற்கு வாய்ப்பளிக்கிறது.
- ஆழ்ந்த படிப்பில் பெற்ற மொழியறிவை உறுதிசெய்ய உதவுகிறது.

**குறைகள்**

- எந்த நூலையும் மேலோட்டமாகப் படிக்கும்நிலை ஏற்படலாம்.
- திருத்தமான மொழியறிவுபெற உதவுவதில்லை.
- கதைகளை மட்டுமே படிக்கும் பழக்கம் ஏற்பட்டுவிடின், அறிவு வளர்ச்சிக்கு இடமில்லாது போய்விடலாம்.

**படித்தல் திறனை வளர்க்கும் பயிற்சிகள்**

படித்தல் திறன் வளர்க்கும் பயிற்சிகள் கற்பவர் முதிர்ச்சிக்கேற்ப அமையவேண்டும்; வடிவமைக்கப்படும் பயிற்சிகள் படித்தல் நிலையின் நோக்கத்திற்கேற்பவும் அமையவேண்டும். தொடக்க வகுப்பு மாணவர்களின் படித்தல் திறன் வளர்க்கக் கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகளைக் கொடுக்கலாம்.

1. படமும் சொல்லும் அடங்கிய அட்டைகளைக் கொடுத்துப் படிக்கச் செய்தல்.
2. எளிய சந்தப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து அவற்றை உரத்த குரலில் பாடச் செய்தல்.
3. குழந்தைகளுக்கான எளிய கதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து, அவற்றை உரத்த குரலில் படிக்கச் செய்தல்.
4. பேச்சிலும் எழுத்திலும் அதிகம் பயன்படுத்தாத 'ங', 'ஞ' எழுத்துகளைச் சொற்களில் அடையாளங் கண்டு படிக்கச் செய்தல்.
5. சாலை அடையாளங்களான நில், கவனி, செல், குறுகலான வளைவு, பள்ளம் பார்த்துச் செல், ஒலி எழுப்பாதே, தொடர்வண்டிப் பாதை முதலியவற்றைப் படிக்கச் செய்தல்.
6. சுவரொட்டி விளம்பரங்கள், எளிய எச்சரிக்கைகள் முதலியவற்றைத் தயார் செய்து படிக்கச் செய்தல்.
7. குழந்தைகளின் பயிற்சி ஏடுகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொடுத்துப் படிக்கச் செய்தல். இதனால், பிறரது கையெழுத்துகளைப் படிக்குந் திறன் பெறுவர்.
8. வீட்டிற்கு வரும் கையெழுத்துக் கடிதங்களைப் படிக்கச் செய்தல்.
9. சிறுவர் மலர், குழந்தைகளுக்கான கதை நூல்களைப் படிக்கச் செய்தல்.
10. செய்தித்தாளைக் காலை வழிபாட்டுக் கூட்டத்திலும் வகுப்பறையிலும் படிக்கச் செய்தல்.
11. பேருந்து நிலையத்தில் இடம்பெறும் பேருந்து புறப்படும் கால அட்டவணை,அங்காடிகளில் இடம்பெறும் பொருள்களின் விலைப்பட்டியல் முதலியவற்றைப் படிக்கச் செய்தல்.
12. செய்தித்தாள்களில் இடம்பெறும் வானிலை அறிக்கை, தட்பவெப்பநிலை, வரைப்படங்கள் முதலியவற்றைப் படிக்கச் செய்தல்.

**குழந்தைகளின் படிப்பு வளர்ச்சிக்கான வழிமுறைகள்**

1. படிக்கும்போது குறைந்தது ஓர் அடி இடைவெளியில் நூலைப் பிடிக்குமாறு செய்தல்.
2. இடப்பக்கத்திலிருந்து ஒளி வரும்படி மாணவர்களை உட்கார வைத்தல்.
3. நிமிர்ந்து நேராக அமர்ந்து படிக்குமாறு செய்தல்.
4. குழந்தையின் கண்பார்வையில் கோளாறு இருப்பின், அதனை நீக்க ஆலோசனை கூறுதல்.
5. கண் படிக்கும்போதும் பாயும்போதும் தலையசையாதிருக்கச் செய்தல்.
6 .வாய்க்குட் படிக்கும்போது உதடு அசையாமலும் முணுமுணுக்காமலும் பார்த்துக் கொள்ளுதல்.

இவ் வழிமுறைகளைப் பின்பற்றச் செய்வதன்மூலம் குழந்தைகளின் படித்தல் திறன் வளர்ச்சியை அதிகரிக்கலாம்.

**படித்தலை விரைவாக்கும் வழிமுறைகள்**

படித்தல் திறனை அதிகரிக்க கண்காண் அளவு, கண் நகர்ச்சி, கண் பாய்ச்சல், பொருளுணரும் ஆற்றல் இவற்றை அதிகரித்தல் வேண்டும்.

**கண்காண் அளவு (Eye Span)**

படிக்கும்பொழுது கண் வரிவடிவத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பார்க்கிறது. பின்பு, அடுத்த பகுதியைப் பார்க்கிறது. ஒருமுறை பார்ப்பதில் கண்டறிகின்ற சொற்றொகுதியைக் ‘கண் காண் அளவு’(Eye Span) என்பர்.

‘அறிவழகன் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றான்’ எனுந் தொடரில், ‘அறிவழகன்’ என்பதை மட்டும் ஒருமுறை பார்க்க முடியுமெனில், படிக்கும் வேகம் குறையும். ‘அறிவழகன் பேச்சுப் போட்டியில்’ என்பதுவரை ஒருமுறையில் பார்க்க முடியுமெனில் படித்தலின் வேகம் அதிகரிக்கும். எனவே, கண்காண் அளவு அதிகரிக்கப் பயிற்சி அளித்தல் இன்றியமையாதது.

**கண் நகர்ச்சி (Eye jerk)**

படிக்கும்பொழுது வரிவடிவத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஒருமுறை பார்த்தபின், அடுத்த பகுதியைப் பார்க்கக் குதிப்பது கண் குதிப்பு (Eye jerk) என்றும் கண் நகர்ச்சி என்றும் கூறுவர்.

ஒரு பகுதியைப் படிப்பதற்குக் கண் நிற்பதைக் ‘கண் நிறுத்தல்’ என்பர். கண் நிறுத்தல் ஒரு பகுதிக்குக் கால் வினாடி தேவை என்றும், இதனைக் கண்நிறுத்த அளவு என்றும் கூறுவர். கண் நிறுத்தம் அதிகமாயின் படித்தலின் வேகங் குறையும். கண் நிறுத்தம் கால அளவைக் குறைத்துப் படிக்கப் பயிற்சி அளித்தல் வேண்டும்.

**கண் பாய்ச்சல்**

படிக்கும்போது ஒரு தொடர் முடிந்ததும் அடுத்த தொடருக்குக் கண் பார்வை தாவுகிறது. இத் தாவுதலைக் கண் பாய்ச்சல் என்பர். கண் பாய்ச்சல் அடி பிறழாது செல்லவேண்டும். ஒரே வரியை மீண்டும் படிப்பதும் ஒரு வரிவிட்டுப் படிப்பதும் சில வேளைகளில் நிகழ்வதுண்டு. அது படிக்கும்வேகத்தைக் குறைக்கும். கண் பாய்ச்சல் முறையானதாக அமையப் பயிற்சியளித்தல் வேண்டும்.

**பொருளுணரும் ஆற்றல்**

படித்தலின் உயிர்நாடி பொருளுணர்தலே. பொருளுணர் திறனின் வளர்ச்சிப் படிகளை,

- வரியைப் படித்தல்,
- வரிக்குட் படித்தல்,
- வரிக்கப்பால் படித்தல் - என மூன்றாகக் காணலாம்.

எடுத்துக்காட்டாக, ‘மகாத்மா காந்தி இனிமையானவர்’ எனச் சொற்களைப் படித்தல் வரியைப் படித்தலாகும். ‘இனிமை’ என்பதை பொருளோடு மட்டும் பொருத்திப் பார்க்காமல், அப் பொருள்தரும் பண்பைப் பொருத்திப் பார்த்தல் வரிக்குட் படித்தலாகும். பண்பினை இனிமை என்னும் சொல் தருகிறது. இச் சொல்லுக்குப் பேச்சில் இனிமை, நடத்தையில் இனிமை, காட்சியில் இனிமை எனப் பல்வேறு பொருள்களை இணைத்துக் காண்பது வரிக்கப்பால் படித்தலாகும்.

**பொருளுணர் ஆற்றலை வளர்க்கும் வழிவகைகள்**

- குழந்தைகளின் அறிவுநிலைக்கேற்றவாறு புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கக் கொடுக்கவேண்டும்.
- தொடக்கத்திலிருந்தே கதை, புதினம், நாடகம், நாட்டுவளம், நகைச்சுவை அடங்கிய புத்தகங்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவேண்டும்.
- மாணாக்கர் படிக்கும் புத்தகங்களில் கடினச் சொற்களும் பொருள்விளங்காத கருத்துகளும் அதிகமாக இருத்தல் கூடாது.
- பள்ளி நூலகங்களில் துணைப் படிப்புக்கென அதிகமான நூல்கள் வாங்கி வைக்கவேண்டும்.
- நல்ல இதழ்களையும் செய்தித்தாள்களையும் வரவழைத்துப் படிக்கச் செய்தல்வேண்டும்.
- விருப்பு வெறுப்பின்றி நூல்களைப் படித்து அவை கூறுகின்ற காரணங்களை ஏற்று ஆய்கின்ற மனப்பக்குவத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்தவேண்டும்.

**நாள்தோறும் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டிய செயல்கள்:**

1. ஒரே ஒலிப்புடைய சொற்களை மாணவர் கண்ணில் படுமாறு எழுதி வைத்தல்.
2. தகவல் பலகையில் புதுப்புதுத் தகவல்களை எழுதுதல்,
3. செய்திப் பலகையில் அன்றாடச் செய்திகளை எழுதி வைத்தல்.
4. எழுத்துப் பிறக்கும் இடங்களை உணர்த்தத் தேவையான படங்கள் வரைந்து, மாணவர் கண்ணில் படுமாறு வைத்தல்.
5. ‘இன்றைய சிந்தனைக்கு’ எனச் சிறுசிறு பொன்மொழிகளையோ நீதி வாக்கியங் களையோ குறட் பாக்களையோ எழுதி வைத்தல்.
6. காலை வழிபாட்டின்போது செய்திகள், அறிவியற் சிந்தனைகள் முதலியவற்றைப் படிக்கச் செய்தல்.

**சொற்களின் வேறுபாடறிக.**

அரை, அறை; வழி,வளி,வழி; மரை, மறை; விலை, விளை; அறுகு, அருகு; முரி, முறி; கலை, களை, கழை; மரம், மறம்; அழி, அளி; விளி, விழி; உன், உண்; ஊண், ஊன்; கிளவி, கிழவி; குளவி, குழவி; குளி, குழி; உளை, உழை; உளவு, உழவு; ஆள், ஆழ்; ஆளி, ஆழி; அளகு, அழகு; கல், கள்; விளா, விழா; தாளம், தாழம்; தாளி, தாழி;தோளன், தோழன்; முளவு, முழவு; புளுகு, புழுகு; கோளி, கோழி; கேள், கேழ்; கூளம், கூழம்; பொருத்தல், பொறுத்தல்;பரி, பறி; மருகு, மறுகு; தரு, தறு; திரை, திறை; துரவு, துறவு; சொரி, சொறி; தேரல், தேறல்; மணம், மனம்;உலை, உளை, உழை; வளம், வலம்.

## 6. எழுதுதல் திறன்

மொழி தோன்றி வளர்ந்து பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரே எழுத்து வாயிலாகவும் எண்ணத்தை எடுத்தியம்ப முடியும் எனக் கண்டறிந்தனர். பேசும்மொழியை அதாவது, ஒலி வடிவத்தை வரி வடிவமாக்குவதே எழுத்தாகும். எழுதுதல் என்பது படிக்கக் கற்றுக் கொள்ளுதலை விடக் கடினமானதாகும்.

மொழியைக் கற்கும்போது அதிலுள்ள எழுத்துகளையும் சொற்களையும் தொடர்களையும் முறையாக எழுதுந்திறன் பெறுதல் எழுதுதல் திறன் எனப்படுகிறது.

'படிப்பு ஒருவனை முழு மனிதனாக்குகிறது; பேச்சு அவனை விழிப்புள்ளவனாக்குகிறது; எழுதுதல் ஒருவனைச் செம்மையானவனாக்குகிறது' என்னும் ஆங்கில உரைநடையாசிரியர் பேகனின் கூற்று எழுத்துத் திறனின் சிறப்பைக் குறிக்கும். எழுத்துத் திறன் மொழியின் உயர்நிலைத் திறனாகும்.

**எழுதுதலின் நோக்கங்கள்**

எழுதுதல், கருத்தையும் பேச்சையும் நிலையாகப் பதிவு செய்தல், தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ளுதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டது.

**கருத்தையும் பேச்சையும் நிலையாகப் பதிவு செய்தல்**

நாம், நம் எதிரில் உள்ளவரிடம் நம் கருத்துகளையும் எண்ணங்களையும் பேச்சுமூலம் வெளிப் படுத்துகிறோம். சில நாள்களுக்குப்பின் நாம் எக்கருத்தைக் கூறினோம் என்பது மறந்து விடுதல் கூடும். அதேபோன்று கேட்டவரும் மறக்கக் கூடும்; அல்லது மனமாறுதல் காரணமாகப் பேசிய கருத்தை மறுத்தோ கூட்டியோ குறைத்தோ மாறுபட்டோ கூறுதல் கூடும். அதனால், மன வேறுபாடும் குழப்பமும் ஏற்படும். இவற்றைத் தவிர்க்கக் கருத்துகளை நிலையாகப் பதிவு செய்ய எழுதுதல் உதவுகின்றது.

**தொலைவில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ளுதல்**

நம் கருத்துகளை அறியவேண்டியவர் தொலைவில் இருந்தால், பேச்சுமூலம் முழுமை யாகக் கருத்துகளைத் தெரிவிக்க இயலாது. எழுத்தின்மூலமே கருத்துகளையும் எண்ணங்களை யும் முழுமையாக வெளிப்படுத்த இயலும். இடத்தால் தொலைவில் உள்ளவரிடம் மட்டுமன்றிக் காலத்தால் பிற்பட்டோரிடமும் தொடர்புகொள்ளுதற்கு எழுத்துப் பயன்படும். இந்த அடிப்படையில் தான் முற்காலத்தில் ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள் செப்பேடுகள் உருவாயின.

**எழுதுவதற்குமுன் பயிற்சி அளித்தல்**

குழந்தைகள் எழுதப் பழகுமுன் தசைகள், விரல்கள் ஆகியவற்றிற்கு முறையான பயிற்சிகள் வழங்கவேண்டும்.

**தசைப் பயிற்சி**

எழுதுவதற்குத் தசைப் பயிற்சி இன்றியமையாதது. குழந்தைகள் பள்ளிக்கு வரும் முன்னரே ஓரளவு தசைப் பயிற்சி பெற்றிருப்பர். அதை மேலும் வலுப்படுத்தும் வகையில் புத்தகங்களைத் தூக்கவும் அடுக்கவும் பயிற்சி அளிக்கலாம். குழந்தைகளால் தூக்க முடிந்த சிறுசிறு பொருள்களைத் தூக்கி, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தில் வைக்கச் செய்யலாம். விதைகள், கொட்டைகள், களிமண் உருண்டைகளை வரிசையாக அடுக்கச் செய்யலாம். இதனால், தசை நார்கள் வலுவடைந்து, இணைந்து செயலாற்றும் பயிற்சி கிடைக்கிறது.

**விரலசைவுப் பழக்கம்**

குழந்தைகளின் விரல் மென்தசைகள் பழக்கப்பட்ட பின்னரே எழுதுவதற்கு எழுதுகோல் வழங்கவேண்டும். எழுதுவதில் முதல்நிலை கிறுக்குதலாகும். வலக்கை ஆட்காட்டிவிரல் முதல் எழுது கருவியாகிறது. ஆட்காட்டி விரல்கொண்டு மணல், தண்ணீர், காற்று முதலியவற்றில் குழந்தைகளை விருப்பம்போல் கிறுக்கச் செய்யலாம். இதனால் ஆட்காட்டி விரலுக்கு நல்ல பயிற்சி கிடைக்கிறது. பின்னர் எழுதுகுச்சி (பல்பம்), கரிக்கோல் (பென்சில்), தூவி (பேனா) முதலிய வற்றைப் பயன்படுத்தச் செய்யலாம்.

**களிமண் உருவங்கள் செய்தல்**

குழந்தைகளின் கைவிரல்கள் நன்றாகப் பயிற்சிபெறக் குழந்தைகளிடம் களிமண் கொடுத்து நன்கு பிசையச் செய்யவேண்டும். பின்னர்க் குழந்தைகள் விரும்பியவண்ணம் உருவங்களைச் செய்யக் கூறலாம். இதனால், குழந்தைகளின் கையும் விரல்களும் அவர்களின் கற்பனைக்கேற்பச் செயல்படுவதைப் பார்க்க முடியும். பின்னர்க் குழந்தைகளைக் கரிக்கோல் (பென்சில்) கொண்டு எழுதப் பயிற்சி அளிக்கவேண்டும்.

**உருவொற்றி வரையும் கருவியில் பயிற்சி அளித்தல்**

பள்ளிகளில் செயல்வழிக் கற்றல் அட்டைகளுடன் கொடுக்கப்பட்டுள்ள தாராநாத், சீத்தாப்பழம் ஆகிய உருவொற்றி வரையும் அட்டைகள்கொண்டு நேர்கோடுகள், படுக்கைக் கோடுகள், வளைகோடுகள் ஆகியவற்றை வரையப் பயிற்றுவிக்கவேண்டும்.

**உப்புத்தாள், மணல், கொட்டைகளில் எழுதுதல்**

எழுத்துகளின் வடிவங்களை உப்புத்தாளில் வெட்டி, அவற்றை முறையாகத் தொடக்கம், முடிவுப் பகுதிகளைத் தடவிப் பார்க்கச் செய்யவேண்டும். இதனால், எழுத்துகளின் வரிவடிவத்தை உணர்வு வாயிலாக உள்வாங்கிக் கொள்வர். இவற்றிற்கு மென்மையான, வழவழப்பான துணிகளையும் பயன்படுத்தலாம்.

மணலில் எழுத்துகளை எழுதி, அவற்றின்மீது முறையாக எழுதச் செய்யலாம். புளியங் கொட்டைகளை எழுத்து வடிவத்தில் அடுக்கி அவற்றின்மீது எழுதப் பழக்கலாம். கட்டைகளில் எழுத்து வடிவத்தைச் செதுக்கி அவற்றின்மேல் எழுதச் செய்யலாம். இப் பயிற்சிகள் எழுத்துகளின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு ஆகியவற்றைக் குழந்தைகளுக்குத் தெளிவுபடுத்தும்.

**தாழ்நிலைக் கரும்பலகை**

பள்ளிகளில் குழந்தைகளுக்கு எட்டும் உயரத்தில் தாழ்நிலைக் கரும்பலகை அமைத்து, அதில் சுண்ணக் கட்டியால் வளைவுகள், சுழிகள், கோடுகள் முதலியவற்றை வரைந்து பழக்க வேண்டும். இதில் கிறுக்கும் நிலையிலிருந்து சற்று முன்னேறித் தேவைப்படும் கோடுகளை வரையப் பயிற்றுவிக்க வேண்டும்.

கோடுகளை ஓரளவு சரியாக வரையக் கற்றபின்னர் வட்டம், சதுரம், செவ்வகம், முக்கோணம் ஆகியவற்றை வரையப் பழக்கவேண்டும். பின்னர், இவற்றின் உதவியினால் பட்டம், ஏணி, மாம்பழம் முதலிய எளிய உருவங்களை வரையச் செய்யவேண்டும். அவற்றின் பெயர்களையும் எழுதச் செய்யலாம்.

**எழுதுகோலைப் பிடிக்கும் முறை**

‘தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்’, ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’ என்பன பழமொழிகள். தொடக்க நிலை முதலே குழந்தைகள் எழுதுகோலைச் சரியாகப் பிடித்து எழுதுவதற்குப் பயிற்றுவிக்கவேண்டும். எழுதுகோலை நடுவிரல், ஆட்காட்டிவிரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களால்தான் பிடிக்கச் செய்யவேண்டும்.

பொதுவாக, எழுதுகோலை எழுதும் நுனிக்கு 3 முதல் 4 செ.மீ. தூரத்தில் விரல்களால் பிடித்தல்வேண்டும். குழந்தைகள் எழுதும்போது எழுதுகோலைப் பிடிக்கும்முறை, எழுதுபலகை, தாள் முதலியவற்றை வைக்கும்முறை ஆகியவற்றை ஆசிரியர் கவனித்து உரியமுறையைப் பின்பற்றச் செய்யவேண்டும்.

**வரிவடிவம் எழுதப் பயிற்றுவித்தல்**

தமிழ் வரிவடிவம் கோடு, வலஞ்சுழியால் ஆனது. தமிழ் வரிவடிவத்தை முதலில் கோட்டெழுத்துகளும் பின்னர்ச் சுழி எழுத்துகளுங்கொண்டு எழுதப் பழக்கலாம். அவ்வாறு எழுதப் பழக்கும்போது, அவ்வெழுத்துகளோடு கூடிய உயிர்மெய்யெழுத்துகளையும் எழுதச் செய்யவேண்டும்.

வரிவடிவத்தை எழுதத் தொடங்குவதற்குமுன், ஆசிரியர் கீழ்க்காட்டிய படிநிலைகளில் வரிவடிவத்தை எழுதிக் காட்டவேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | ட | ப | ய | ம | ழ | |
| 2. | ஈ | ர | ச | க | த | |
| 3. | ந | ங | | | | |
| 4. | அ | ஆ | இ | | | |
| 5. | எ | ஏ | ஞ | | | |
| 6. | வ | ல | | | | |
| 7. | ற | ஐ | | | | |
| 8 | ள | ன | ண | | | |
| 9. | ஒ | ஓ | ஔ | | | |
| 10. | உ | ஊ | ஃ | | | |
| 11 | ஸ | ஜ | ஷ | ஹ | க்ஷ | ஸ்ரீ |

பதினொரு படிகளாக உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், கிரந்த எழுத்துகள் ஆகியன உள்ளன. இவ்வெழுத்து வடிவங்களை மாணவர்கள் எழுதத் தொடங்குவதற்குமுன் வரி வடிவங்கள் எவ்விடத்தில் தொடங்கி எவ்விடத்தில் முடியவேண்டும் என்பதனை எளிமையாகக் கையாளத் தகுந்தமுறையில் கற்றுத் தரவேண்டும்.

இன்று மாணவர்களின் பெயர்களில் பெரும்பாலும் கிரந்த எழுத்துகள் இடம்பெறுவதால், அவ்வெழுத்துகளை எழுதும் முறையையும் கற்றுத் தருதல் தேவையாகிறது.

**வடிவமைப்பில் எழுதப் பயிற்றுதல்**

தமிழ் எழுத்துகள் அவை எழுதப்படும் வடிவமைப்பைக்கொண்டு நடுப்பகுதி எழுத்துகள், நடு கீழ்ப்பகுதி எழுத்துகள், நடு மேல்பகுதி எழுத்துகள், முப்பகுதியும் சேர்ந்த எழுத்துகள் என வகைப்படுத்தப்படுகின்றன.


மாணவர்களை ஐந்து கோடிட்ட பயிற்சி ஏட்டில் வரி வடிவத்தை எழுதப் பயிற்றுவிக்கும் போது இம்முறைகளைப் பின்பற்றச் செய்யவேண்டும்.

**நடுப்பகுதி எழுத்துகள்**

ஐந்து கோட்டில் நடுவிலுள்ள மூன்று கோட்டிற்குள் அடங்குமாறு எழுதப்படும் எழுத்துகள்.


நடு, நடுமேல், நடுக்கீழ், முப்பகுதி எழுத்துகளைப் பட்டியலிட்டு, ஐந்துகோட்டில்

அனைத்துத் தமிழெழுத்துகளையும் எழுதும் முறைகளைப் பயிற்றுவிக்கவேண்டும்.




**நடு கீழ்ப்பகுதி எழுத்துகள்**

ஐந்துகோட்டில், நடுவிலுள்ள மூன்று கோட்டிற்குள்ளும் அதன்கீழுள்ள கோட்டிற் குள்ளும் அடங்கி வருமாறு எழுதப்படும் எழுத்துகள்.




**நடு மேல் பகுதி எழுத்துகள்**

ஐந்துகோட்டில், நடுவிலுள்ள மூன்று கோட்டிற்குள்ளும் அதன்மேலுள்ள கோட்டிற்குள்ளும் அடங்கி வருமாறு எழுதப்படும் எழுத்துகள்.



**மேல், நடு, கீழ் ஆகிய முப்பகுதியிலும் அமைந்து வருவன**

ஐந்து கோட்டில், ஐந்து கோட்டிலும் இடம்பெறுமாறு அமைந்து வரும் எழுத்துகள். மேற்குறிப்பிட்ட முறைகளில் வரிவடிவத்தை எழுதப் பயிற்றுவிக்கவேண்டும். இதனால், வரி வடிவம் எங்குத் தொடங்கி எங்கு முடியவேண்டுமென்பதை அறிந்துகொள்ளலாம். இப்பயிற்சி யினால் எழுத்து வடிவம், அளவு, அழகு, தெளிவு பெற்றுத் திகழும்.



**நல்ல கையெழுத்தின் இயல்புகள்**

நல்ல கையெழுத்து நல்ல கல்விக்கும் மனப் பயிற்சிக்கும் அறிகுறி எனலாம். முத்துப் போன்ற அழகிய கையெழுத்து மாணவர்களின் தசைநார்களை அடக்கி ஆள்வது மட்டுமன்றி, மனத்தையும் நன்முறையில் பயில்விக்கின்றது. காந்தியடிகளும் ‘தனக்கு அழகிய கையெழுத்து அமையவில்லை’ என வருந்திக் கூறியுள்ளார். எனவே, தெளிவான அழகிய கையெழுத்து மிகவும் இன்றியமையாதது.

**தெளிவு**

ஒருவர் எழுதுவது பிறர் படிப்பதற்காகவே. எனவே, எழுத்துகளைத் தெளிவாய் எழுதுதல் வேண்டும். தமிழ் எழுத்துகளைத் தனித்தனியே எழுதவேண்டும். எழுத்துகளைச் சேர்த்து எழுதுவது தமிழ்மொழி மரபன்று. எழுத்துகளை முனை முரியாமல் எழுதவேண்டும்.

எழுத்துகளின் வளைவு, சுழிவு, மேற்கோடு ஆகியவற்றைக் கவனித்துச் சீரான அமைப்பில் எழுதவேண்டும். ‘மு’ என்பதற்கும் ‘மு’ என்பதற்கும் தெளிவான வேறுபாடு காட்டி எழுத வேண்டும்.

துணை எழுத்துகளான கால் (ா), ஒற்றைக்கொம்பு (ெ), இரட்டைக்கொம்பு (ே), இணைக்கொம்பு (ை), எழுத்துத்துணை (ள) ஆகியவற்றைத் தெளிவாக எழுதப் பயிற்றுவிக்க வேண்டும்.

**இடைவெளி**

தமிழில் எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், சொற்றொடருக்குச் சொற்றொடர் போதிய இடைவெளிவிட்டு எழுதுதல்வேண்டும். கோடிடப்படாத தாளில் எழுதும்போது ஒரு வரிக்கும் அடுத்த வரிக்கும் இடையே ஒரு வரியோ இரு வரியோ தேவைக்கேற்ப இடைவெளி விடவேண்டும். பத்தியைத் தொடங்கும்போது ஓரக்கோட்டிலிருந்து மூன்றெழுத்து அல்லது ஐந்தெழுத்து இடைவெளிவிட்டு எழுதவேண்டும்.

**விரைவு**

எழுத்துகள் தெளிவாகவும் அழகாகவும் இருக்கவேண்டும் என்பதற்காக மிக மெதுவாக எழுதுதல் கூடாது. தெளிவும் அழகும் கெடாதவகையில் விரைவாக எழுதவும் பயிற்சியளித்தல் வேண்டும். ஒரு மணித்துளியில் மூன்றாம் வகுப்பில் 35 முதல் 40 எழுத்துகளையும், நான்காம் வகுப்பில் 40 முதல் 50 எழுத்துகளையும், ஐந்தாம் வகுப்பில் 50 முதல் 60 எழுத்துகளையும் எழுதலாம். பெரியவர்கள் ஒரு மணித்துளியில் 100 எழுத்துகள் வரை எழுதலாம். மாணவர்கள் விரைந்து எழுதுவதற்குத் திட்டமிட்டுப் பயிற்சி அளித்தல்வேண்டும்.

**அளவும் அழகும்**

எழுத்துகள் அழகாக இருந்தால்தான் படிப்பதற்கு மகிழ்ச்சி உண்டாகும். எழுத்துகள் ஒரே அளவாக இருந்தால் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஒரு வரியில் சில எழுத்துகள் பெரியனவாகவும் சில எழுத்துகள் சிறியனவாகவும் அமைதல் கூடாது. தமிழ் எழுத்துகளைச் சாயாமல் செங்குத்தாக எழுதுகின்றனரா என ஆசிரியர் கவனித்தல்வேண்டும்.

தமிழில் நடுப்பகுதி எழுத்துகள், நடு கீழ்ப்பகுதி எழுத்துகள், நடு மேல்பகுதி எழுத்துகள், முப்பகுதி எழுத்துகள் என எழுத்தின் வடிவத்தால் வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றை முறையாக எழுதுவதற்கு ஐந்து கோடிட்ட அச்சிட்ட பயிற்சி ஏடுகளைப் பயன்படுத்தவேண்டும். இதனால், கையெழுத்துச் சரியான அளவும் அழகும் கொண்டதாக அமையும்.

**எழுதுதல் திறன் வளர்க்கும் வழிவகைகள்**

மாணவர்களின் கையெழுத்து நன்முறையில் அமைவதற்குத் தொடக்கப் பள்ளிகளில் வரியொற்றி எழுதுதல், அடியொற்றி எழுதுதல், பார்த்தெழுதுதல், சொல்வதெழுதுதல் முதலிய முறைகளில் பயிற்சி அளிக்கவேண்டும்.

**வரியொற்றி எழுதுதல்**

கையெழுத்து அழகுற அமைய வரியொற்றி எழுதுதல் சிறந்த பயிற்சியாகும். ஐந்து கோடிட்ட ஏட்டில் எழுத்துகள் புள்ளிகளாக எழுதப்பட்டு, எங்குத் தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என அம்புக் குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கும். அம்புக்குறி காட்டியுள்ளபடி புள்ளிகளின்மீது எழுதப் பயிற்றுவித்தலே வரியொற்றி எழுதுதல் ஆகும். ஒவ்வொருமுறையும் கீழ்ப்பகுதியிலுள்ள கோட்டிலிருந்து எழுதப் பயிற்றுவித்தால் எப்பொழுதும் சரியானதைப் பார்த்து எழுதியதாக அமையும்.இப் பயிற்சியின்மூலம் மேல்விலங்கு, கீழ்விலங்கு ஆகியவற்றை எவ்வளவு தூரம் நீட்ட வேண்டுமென்றும், எழுத்தின் அளவு எவ்வளவு இருக்கவேண்டுமென்பதையும் அறிய இப்பயிற்சி வழி வகுக்கின்றது.

**பார்த்து எழுதுதல்**

பாடப்புத்தகத்தில் உள்ள பகுதிகளையோ ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதையோ பார்த்துக் குறிப்பேட்டில் எழுதுதல் பார்த்து எழுதுதலாகும். குழந்தைகள் எதைப் பார்த்தாலும் அதை அப்படியே பார்த்து எழுத விரும்புகின்றனர். பார்த்து எழுதும் பயிற்சி வழங்கும்போது, முதலில் சிறுசிறு சொற்களாகவும் பின்பு சொற்றொடராகவும் எழுதப் பழக்கவேண்டும். பார்த்து எழுதும்போது சொல்லிக்கொண்டே எழுதச் செய்யவேண்டும். இதனால், கையெழுத்துத்

திருந்துவதுடன் பிழைநீக்கி எழுதவும் வாசிக்குந் திறன் பெறவும் பொருளறிவு ஏற்படவும் வழியேற்படும்.

**சொல்வதெழுதுதல்**

ஆசிரியர் அல்லது மீத்திற மாணவர் ஒருவர் படிப்பதைக்கேட்டு எழுதுதல் சொல்வ தெழுதுதல் பயிற்சியாகும். சொல்வதெழுதுதல் பயிற்சி வழங்கும்போது ஏற்கெனவே கற்பிக்கப் பட்ட பகுதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமேயல்லாது புதிய பகுதியைத் தேர்ந்தெடுத்தல் கூடாது. இது மாணவர்களின் கேட்டலைப் பாதிக்கும். முழுவதும் கேட்ட பின்னரே எழுதத் தொடங்கவேண்டு மென முதலிலேயே அறிவுறுத்தவேண்டும். எனினும், ஓரிருமுறை கூறியதை அவர்கள் பாதி எழுதிக் கொண்டிருக்கும் நிலையில் மீண்டும் கூறலாம். ஆசிரியர் அல்லது மாணவர் படிக்கும்போது சரியான ஒலிப்புமுறை அமைதல்வேண்டும்.

**தானே எழுதுதல்**

சொல்வது எழுதுதலுக்கு மேம்பட்ட எழுதுதல்திறன் தானே எழுதுதலாகும். தொடக்க வகுப்புகளில் குழந்தைகள் தாமே எழுதுதலை மேற்கொள்ள உதவும் படங்களைப் பயன் படுத்தலாம். குழந்தைகள் தானே எழுதும்போது மாணவர்களே ஒலியை எழுப்பி, அவ் வொலிக்குரிய எழுத்து வடிவங்களை அறிந்து எழுதுகின்றனர். எடுத்துக்காட்டாக, எந்த எழுத்தை மாணவர் பிழையின்றி எழுதவேண்டுமெனக் கருதுகின்றோமோ அந்த எழுத்து, சொல்லில் அமைந்து விடையாக வரும்படி படங்களைக் காட்டலாம் அல்லது வினாக்கள் கேட்கலாம். ஓகர உயிர்மெய்யெழுத்து கோ, மோ, தோ முதலியன. கோழி படங்காட்டல் - பெயர் எழுதச் செய்தல். விரலில் அணியும் அணியின் பெயர் என்ன? - எனக் கேட்டல், மோதிரம் என எழுதச் செய்தல். இச் செயல் எழுதுதலில் மேம்பட்டதாக அமையும்.

## 7. தொகுப்புரை

அடிப்படைத் திறன்கள் என்னும் இவ்வியல் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் நான்கு அடிப்படைத் திறன்களையும் அவற்றின் உட்கூறுகளையும் அவற்றை வளர்க்கும் வழிவகைகளையும் தெளிவுபட விளக்குகிறது. எழுத்துகள் பிறக்குமிடத்தையும் வெளிப்படு முறையையும் சுட்டுகிறது. நல்ல கையெழுத்திற்கான பயிற்சிகளை வடிவமைத்துத் தருகிறது. மாணவர்கள் மொழித்திறனில் வல்லமைபெற, அடிப்படைத் திறன்களில் அடைவுபெற, வகுப்பறையில் ஆசிரியர் மேற்கொள்ளவேண்டிய செயல்கள் விளக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் அடிப்படைத்திறன்களில் முழுமையான அடைவு பெறும்போது மொழியைத் திறம்படக் கையாளும் ஆற்றல் பெறுவார்கள் என்பதையும் முயற்சியும் பயிற்சியும் மொழியை ஆள்வதில் முழுமையான வெற்றியைப் பெறும் என்பதை இவ்வியல் தெற்றென விளக்குகிறது.

தமிழ் எழுத்துகளுக்குச் சிறிய எழுத்துகள், பெரிய எழுத்துகள் எனத் தனித்தனியாக வரிவடிவங்கள் இல்லை. தமிழ் எழுத்துகள் ஒவ்வொன்றையும் தனித்தனி எழுத்தாகத்தான் எழுதவேண்டும்; ஒன்றோடொன்று சங்கிலித்தொடர்போல் இணைத்து எழுதக்கூடாது. எந்தவொரு வரியின் தொடக்கத்திலும் மெய்யெழுத்தைக் கொண்டு தொடங்கக் கூடாது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தமிழ் எழுத்துகளை வடிவம் மாறாமல் கரும்பலகையிலும் ஏடுகளிலும் எழுதவேண்டும்; எக்காரணம் கொண்டும் எழுதும்பொழுது முனைமுரிந்த எழுத்துகளாகவோ குறையெழுத்து களாகவோ எழுதக்கூடாது; ஓவிய எழுத்துகளை (Drawing or Stylish Writing) எழுதக் கூடாது. அச்சுப் பிசகாமல் முத்து முத்தாகக் கையெழுத்து எழுதக் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

# 3. பாடங்களைக் கற்பித்தல்

## அறிமுகம்

மேனிலை வகுப்புகளில் மொழிப்பாடத்தில் என்னென்ன பாடப் பகுதிகளைக் கற்றீர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப் பாடம், கட்டுரையென ஐவகைப் பாடங்களையும் படித்திருப்பீர்கள். படித்த செய்திகளை மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் ஆற்றலைத் தற்பொழுது வளர்த்துக்கொள்ள இருக்கிறீர்கள். மொழி கற்பித்தல் என்பது மொழியைப் படித்தறிந்து மொழித்திறன் கைவரப்பெற்ற ஒருவர் தாம் அறிவதோடு பிறரையும் அறியச் செய்வதாகும். மொழியை அறிந்துகொள்வதைவிட, மொழியைக் கற்பிப்பது சற்றுக் கடினமான பணியாகும். தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு மொழிப்பாடத்தைக் கற்பிக்கவிருக்கும் நீங்கள் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் ஆகிய நான்கு பாடங்களின் நோக்கங்கள், கற்பிக்கும் முறைகள் முதலியவற்றை இவ்வியலில் அறிந்து கொள்ளலாம்.

## படிநிலைகள்

1. உரைநடை கற்பித்தல்
   உரைநடையின் தன்மை
   உரைநடைப் பாடங்கற்பித்தலின் நோக்கங்கள்
   உரைநடை கற்பிக்கும் முறை
   உரைநடை வகைகள்
2. செய்யுள் கற்பித்தல்
   செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள்
   செய்யுள் கற்பிக்கும் முறை
   செய்யுள் உரைநடை கற்பித்தல் நோக்கங்களிலும் முறைகளிலும் உள்ள வேறுபாடுகள்
3. இலக்கணங் கற்பித்தல்
   இலக்கணங் கற்பிப்பது பற்றிய கருத்துகள்
   இலக்கணங் கற்பித்தலின் நோக்கங்கள்
   இலக்கணங் கற்பிக்கும் முறை
4. துணைப்பாடங் கற்பித்தல்
   துணைப்பாடங் கற்பித்தலின் நோக்கங்கள்
   துணைப்பாடங் கற்பிக்கும் முறை
5. தொகுப்புரை

## 1. உரைநடை கற்பித்தல்

### உரைநடையின் தன்மை

ஒருவர், தம் கருத்தைப் பிறர் உள்ளம் ஏற்குமாறு எடுத்துரைப்பது மொழிநடை எனலாம். அதாவது, உரிய சொற்கள் உரிய இடங்களில் அமைந்து வருமாறு எழுதுவதெனக் கூறலாம். “உரைநடை எழுதுபவர் முதலாவதாகச் செவிக்கினிய விழுமிய ஓசை பயக்குஞ் சொற்களை எடுத்தாளவேண்டும். இரண்டாவதாகக் கற்பவர் வாய் மணக்கும் வகையில் இன்னிசையோடு தொடர்களை அமைக்கவேண்டும். மூன்றாவதாகச் சிறந்த கருத்துகளை அழகாகவும் முறையாகவும் அமையுமாறு எழுதவேண்டும்” என்றும், “அறிஞர் பலருடைய சிறந்த கட்டுரைகளைப் பயின்று பயின்று நான் நல்ல உரைநடை எழுதுந்திறமை பெற்றேன்” என்றும் ஆங்கிலப் புலவர் ஸ்டீவன்சன் குறிப்பிடுவார்.

மக்கள் பலரும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துஞ் சொற்களைத் திருந்திய வடிவில் எழுதுவதே எளிய மொழிநடையாகும். எடுத்துக்காட்டாக, ஒரு மலரைப் பார்த்து, 'இது அழகான மலர்' என்பது எளிய நடை. இதனையே இது, 'எழில்மிகு மலர்' என்பது உயர்மொழிநடையாகும். ஆறுமுக நாவலர், பேச்சுமொழியைப் பயன்படுத்தாமல் திருத்தமான சொற்களைக் கையாண்டு, உரைநடையை எளிய தெளிவான நடையில் எழுதித் தமிழர்களுக்கு வழிகாட்டினார். எளிய தெளிவான நடையே இக்காலத்திற்கு ஏற்புடையது.

**உரைநடைப் பாடங் கற்பித்தலின் நோக்கங்கள்**

உயரிய கருத்துகளை நன்கு உரைத்திடுவது உரைநடை. ஆசிரியர், தம் எண்ணங் களையும் கருத்துகளையும் தமக்கே உரிய நடையில் கட்டுக்கோப்புத் திறனுடனும் கோவை யாகவும் எடுத்துரைப்பது உரைநடையாகும்.

உரைநடை கற்பித்தலின் நோக்கங்கள்:

1. தமிழ்மொழியைப் பிழையின்றித் தெளிவாகவும் கோவையாகவும் பேசவும் படிக்கவும் எழுதவும் பயிற்றுவித்தல்.
2. மாணாக்கரிடம் கருத்துவளம், சொல்வளம் பெருக்குதல்.
3. மாணவர்களின் சொற்களஞ்சியம் பெருக்குதல், சொல்லாட்சித்திறன் வளர்த்தல், மரபுத் தொடர்கள் அறியச் செய்தல்.
4. ஒரு பகுதியைப் படித்து, அதன் பொருளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளச் செய்தல்.
5. உரைநடைப் பகுதியில் இயல்பாகக் காணப்படும் இலக்கணத்தை உணரச் செய்தல்.
6. அகராதி பார்த்துப் பொருளறியச் செய்தல்
7. மொழிப்பற்றுக் கொள்ளச் செய்தல்.
8. நடையின் ஒலிச்சிறப்பை உணரச் செய்தல்.
9. பண்பாட்டை வளர்த்தல்.

## சொற்களஞ்சியம் பெருக்குதல்

பிறர் பேசுவதைக் கேட்டுப் பொருளுணரவும் படிக்கும் பகுதிகளின் பொருளையுணரவும் தன் கருத்துகளைப் பேச்சுமூலம் வெளியிடுவதற்கும் அடிப்படைத் தேவை சொற்களஞ்சியமாகும். பாடநூலின் ஒவ்வொரு பாடத்திலும் வருகின்ற அனைத்துச் சொற்களின் பொருளையும் மாணவர்கள் உணர்ந்து கொள்ளும்வண்ணம் கற்பிப்பதுடன்அதனுடன் தொடர்புடைய சொற் களையும் கற்பிப்பதன்மூலம் மாணவர்களது சொற்களஞ்சியத்தைப் பெருக்க முடியும்.

### சொல்லாட்சித் திறன்வளர்த்தல்

மொழித்திறன் வளர்ச்சிக்கும் சொற்களஞ்சியம் பெருக்குதல் இன்றியமையாதது. அறிந்த சொற் களஞ்சியத்தைப் பயன்படுத்தவும் அறியவேண்டும். சொற்களஞ்சியத்தைப் பயன் படுத்தும்போதுதான் பேசுந்திறமையும் எழுதுந்திறமையும் வளரும். இதனையே சொல்லாட்சித் திறன் வளர்த்தல் என்போம். உரைநடைப் பாடத்தில் இடம்பெறும் அச்சம், வெகுளி, வனப்பு போன்ற சொற்கள், பேரும்புகழும், சீருஞ்சிறப்பும் போன்ற நேரிணைச் சொற்கள், உயர்வுதாழ்வு, மேலுங்கீழும் போன்ற எதிரிணைச் சொற்கள், வெள்ளைவெளேரென்று, கன்னங்கரிய போன்ற செறிவிணைச் சொற்கள், நகமுஞ் சதையும், மலரும் மணமும் போன்ற உவமைகள், யானைக்கும் அடி சறுக்கும் போன்ற பழமொழிகள் முதலியவற்றைப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தப் பயிற்சியளித்தல் வாயிலாகச் சொல்லாட்சித் திறன் வளரும்.

**மரபுத்தொடர்களைப் பயன்படுத்துதல்**

சில தொடர்கள், தொடர்ப்பொருளேயன்றி வேறுபொருளைக் குறிக்கும் வண்ணம் பயன்படுத்தப் பெறுதலும் உண்டு. அவற்றை மரபுத்தொடர்கள் என்கிறோம். எடுத்துக்காட்டாக, 'ஏழைகள் வயிற்றில் அடிக்காதே' எனுந் தொடர், வயிற்றில் அடித்தல் எனுந் தொடர்ப்பொருளைத் தராது, ஏழைகட்குத் துன்பஞ் செய்யாதே, அவர்களின் கூலியைக் குறைக்காதே எனும் பொருளைத் தருவதால், இது மரபுத்தொடர் எனப்படும்.

பாடநூலில் உரைநடைப் பகுதியில் விரவிக்கிடக்கும் மரபுத்தொடர்களைக் கையாளப் பயிற்சி யளித்தல்வேண்டும். மேலும் பழமொழிகள், உவமைகள், வருணனைகள் முதலியவற்றையும் மாணவர் பொருளறிந்து பயன்படுத்திப் பயிற்சியளித்தல் வேண்டும்.

**இலக்கணமுணர்தல்**

உரைநடைப் பாடங்களைக் கற்பிக்கும்போது, ஆங்கு இயல்பாகக் காணக் கிடக்கும் இலக்கணச் செய்திகளைக் கூறிச் செல்வது மாணவர்தம் இலக்கண அறிவை வளர்க்க உதவும். தொடக்க வகுப்புகளில் இலக்கணத்திற்கெனத் தனி வகுப்பு நடத்தாமல், உரைநடைப் பாடத்தைப் பயன்படுத்தி நடத்தப்பெறும் இலக்கணம் நடைமுறை இலக்கணம் எனப்படும்.

உரைநடையில் வரும் இலக்கணச் செய்திகளை முழுமையும் கூறாது, அவ்வப்போது ஆங்காங்கே உள்ளனவற்றை மட்டும் விளக்கினால் போதுமானது. எடுத்துக்காட்டாக, உரைநடைப் பாடத்தில் 'ஊர் சிரித்தது' எனுந்தொடர்வரின், இஃது இடவாகு பெயர் என்பதை மட்டுஞ் சுட்டிக்காட்டி, எவ்வாறு இடவாகு பெயராயிற்றெனக் கூறவேண்டுமேயன்றி, ஆகு பெயரின் அனைத்து வகைகளையும் கூறவேண்டியதில்லை. அவ்வாறு கூறுவது உரைநடைப் பாடங் கற்பித்தலைவிட்டு விலகிச் செல்வதாகிவிடும். எனவே, தேவையான எழுத்திலக்கணம், சொல்லிலக்கணச் செய்திகளை மட்டுங்கூறி, எளிய மொழிப் பயிற்சிகளை யளித்து உரைநடையை நடத்திச் செல்லவேண்டும்.

**மொழிமரபை மேற்கொள்ளல்**

ஒரு பொருளை முன்னோர் எச்சொல்லில் குறித்தனரோ, அப்பொருளை அதே சொல்லால் குறிப்பதே மரபு என்பர்.

"எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" - நன். 388

என்பது நன்னூல் கூறும் இலக்கணம். மரபை மீறினால் மொழியறியாது பேசுகிறார் எனக் கூறுவர். மேலும் நகைப்புக்கும் இடமேற்படும். புதிதாகத் தோன்றிய தென்னம்பாளையைத் 'தென்னங் குருத்து' எனவும், புதிதாக அரும்பிய மாவிலையை 'மாந்தளிர்' எனவும் கூறுதல் மரபு. இவ்வாறின்றித் தென்னந்தளிர் எனவோ மாங்குருத்து எனவோ கூறுதல் பிழையாகும். பசுங்கன்று, மான்குட்டி எனவும், யானை பிளிறியது, சிங்கம் முழங்கியது, புலி உறுமியது, குயில் கூவியது, மயில் அகவியது எனவும் கூறுதல் தமிழ் மரபாகும். மரபுச் சொற்களைத் தக்கவாறு பயன்படுத்தக் கற்பிப்பதும் உரைநடைப் பாடங் கற்பித்தல் நோக்கங்களுள் ஒன்றாகும்.

தமிழில் பெயர் மரபு, வினைமரபுச் சொற்களைப் பட்டியலிடுக.

**தொடர் மரபைப் பின்பற்றி எழுதுதல்**

தமிழில் சொற்றொடர்கள் எவ்வாறு அமையவேண்டுமென நமது முன்னோர் வழங்கி யுள்ளனரோ, அதுபோலச் சொற்றொடரை அமைத்து எழுதுவது தொடர் மரபாகும். எழுவாய்க்

கேற்ற பயனிலை, எழுவாய், செயப்படுபொருள், பயனிலையென முறையாக அமைத்தல், வினா எழுத்துகளைச் சொல்லுக்கு இறுதியிலோ வினைக்கு முன்போ அமைத்தல் தொடர் மரபாகும். உரைநடையைக் கையாளும்பொழுது பொருத்தமான மரபுத்தொடரைப் பயன்படுத்தக் கற்பிக்க வேண்டும்.

**மொழித் தூய்மை**

அன்றாட வாழ்வில் பேசும்பொழுது பயன் படுத்தும் ஆங்கிலச்சொற்களையும் அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் எழுதுக.

ஒருமொழி பேசும் மக்கள், தங்கள் பேச்சில் பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவது வழக்கமாகிவிட்டது. அவ்வாறு மொழிக் கலப்புடன் பேசுதல் அம்மொழி யின் தனித்தன்மையைக் கெடுத்துவிடும். மாணவர்கள் பிறமொழிச் சொற்கலப்பின்றிப் பேச, எழுத உரைநடைப் பாடம் உதவுகிறது. எழுதும்போதும் பேசும்போதும் தனித்தமிழ் நடையைப் பின்பற்ற மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் வேண்டும்.

**கருத்து வளம் உண்டாக்குதல்**

பாட நூலில் இடம்பெறும் உரைநடைப் பாடங்கள் அனைத்திலும் புதிய சொற்களும் சொற்றொடர்களும் மரபுத் தொடர்களும் இடம்பெற்றிருக்குமெனக் கூறவியலாது. சில பாடங்கள் செய்தியறிவிப்பனவாகவும் சில பாடங்கள் கருத்தறிவிப்பனவாகவும் அமைந்திருக்கும். சில பாடங்களில் இடம்பெறும் மேற்கோள்களைக் கொண்டு கருத்துவளம் பெருக்கலாம். எடுத்துக் காட்டாக, 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' எனும் அடி மேற்கோளாக இடம்பெற்றிருப்பின், பின்வருமாறு செய்திகளைக் கூறுதல் கருத்துவளத்தை உண்டாக்கும். இவ்வடி புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. புறநானூறு புறச்செய்திகளைப் பற்றிக்கூறும் நானூறு பாடல்களைக் கொண்டது. இப்பாடலைப் பாடியவர் கணியன் பூங்குன்றனார் என விளக்கங் கூறுதல்வேண்டும்.

**வாய்விட்டுப் படித்தல் திறன் வளர்த்தல்**

மாணவர் சொற்களஞ்சியம் பெருக்கியவராய்ச் சொற்றொடர் அறிவினைப் பெற்றிருப்ப தோடு நீண்ட நெடும்பகுதிகளைப் பிறருக்காகப் படிக்கவும், மன்றக் கூட்டங்களில் பிற கழகங்களில் செய்தியறிக்கை வாசிப்பது பற்றியும் அறிந்திருக்கவேண்டும். வாய்க்குட் படித்தலின்போது ஒலிப்பில் செய்யும் பிழைகளை அறிய முடியாது. வாய்விட்டுப் படிக்கும்போதுதான் ஏற்ற விடத்தில் பொருள்விளங்கும் வண்ணம் நிறுத்தவும் பிழையின்றி ஒலிக்குவும் முடியும். தொடக்க நிலையில் வாய்விட்டுப் படித்தலையே பின்பற்றவேண்டும். உரைநடைப் பாடம் அதற்கு வாய்ப்புத் தருவதாக அமையவேண்டும். எனவே, உரைநடைப் பாடங் கற்பிக்கும்போது ஒலி ஏற்றத்தாழ்வுகளுடன் ஏற்றவிடத்தில் நிறுத்திப் படிக்கவும் பொருளுணர்ந்து படிக்கவும் ஒலிப்புப் பிழையின்றிப் படிக்கவும் பயிற்சியளித்தலை முதன்மை நோக்கமாகக் கொளல் வேண்டும்.

**பண்பு வளர்த்தல்**

உரைநடைப் பாடத்தின்வழி பாடத்தொடர்பான நற்பண்புகளை வளர்த்தல் முக்கிய நோக்கமாகும். இன்சொற் பேசுதல், பிறருக்கு உதவுதல், பெரியோரிடம் பணிவாக நடத்தல், பிற உயிர்களிடத்து அன்பு காட்டுதல் முதலான பல பண்புகளைப் பற்றிக்கூறும் வாய்ப்பேற்படும் போது, அவை தொடர்பான கதைகள், நிகழ்ச்சிகளைக் கூறி மாணவர் களிடம் நற்பண்புகளை வளர்த்தல்வேண்டும்.

**கற்றல் இலக்குகள்**

கீழ்க்குறிப்பிட்ட கற்றல் இலக்குகள் நிறைவேறும் வகையில் உரைநடைப்பாடத்தை அமைத்துக் கற்பித்தல்வேண்டும். கற்றல் இலக்குகளின் வாயிலாக மாணவர்மொழித் திறன்களைப் பெறுவர்.

- பாடப்பகுதியைப் படித்துப் பொருளறிதல்.
- பாடப்பகுதியைக் கேட்டும், படித்தும் மையக் கருத்தறிதல்.
- சரியான ஒலிப்புமுறையில் படித்தல்.
- நிறுத்தற் குறிகளுக்கேற்பப் படித்தல்.
- பாடப்பகுதியில் வரும் புதிய சொற்களின்பொருளறிதல்.
- சொற்றொடர் உருவாக்குந் திறன் வளர்த்தல்.
- தொகைச் சொற்கள்பற்றியறிதல்.
- இணைச்சொற்களை அறிந்து பயன்படுத்துதல்.
- கொச்சைச் சொற்களுக்குத் திருத்தமான சொற்களைக் கையாளுதல்.
- வல்லினம் மிகுமிடம், மிகாவிடங்களை யறிந்து பயன்படுத்துதல்.
- இலக்கியங் காட்டும் ஒழுக்கப் பண்பாட்டுச் சிறப்புகளைப் பின்பற்றல்.
- இலக்கணப் பகுதிகளை நடைமுறை எடுத்துக்காட்டுகளோடு இணைத்தறிதல்.

**உரைநடை கற்பிக்கும் முறை**

உரைநடைப் பாடத்தைக் கற்பிக்கப்புகும் ஆசிரியர் ஆர்வமூட்டல், முன்னுரை, பாடப்பகுதியைப் படித்தல், பாடச் செய்திகளை விளக்குதல், துணைக்கருவிகளைப் பயன் படுத்துதல், இணைத்துக் கற்பித்தல், சொற்களஞ்சியம் பெருக்குதல், மொழிப் பயிற்சியளித்தல், மாணாக்கரைப் படிக்கச் செய்தல், பாடத்தைத் திருப்புதல், தொடர்செயல் வழங்குதல் ஆகிய படி நிலைகளை மனத்திற் கொள்ளவேண்டும்.

**ஆர்வமூட்டல்**

மாணவர்களுடன் இயல்பான சூழ்நிலையில் உரையாடத் தொடங்கிப் பாடத்துக்கேற்ற கருத்துகளை மாணவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும்வண்ணம் கதையாகவோ பாடலாகவோ வினாவிடையாகவோ கூறி ஆர்வமூட்டலாம். எடுத்துக்காட்டாகத் ‘தமிழ்க் காப்பியங்கள்’ எனும் பாடப்பகுதியைக் கற்பிக்கப் புகும்போது,

“செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே”

எனும் பாரதியார் பாடலைப் பாடியும் பாடச்செய்தும் ஆயத்தப்படுத்தலாம்.

**பாட முன்னுரை**

பாடத்திற்கேற்ற செய்திகளைக் கூறி ஆயத்தப்படுத்திய பின்னர், “தமிழ்க் காப்பியங்கள்” பாடத்துக்குத் தேவையான முன்னுரையைக் கூறவேண்டும். எட்டுத்தொகை நூல்கள், பத்துப் பாட்டு நூல்கள், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்களைக் கூறுதல் பாடத்திற்கேற்ற முன்னுரையாக அமையும்.

**பாடப்பகுதியைப் படித்தல்**

கற்பிக்கவிருக்கும் பாடப்பகுதியை ஆசிரியர் படிக்கவேண்டும். பாடம் முழுமையையும் படிக்க வேண்டியதில்லை. ஒரு பாடவேளையில் எத்தனை பத்திகளைக் கற்பிக்க முடியுமோ அத்தனை பத்திகளை மட்டும் படித்தால் போதுமானது. ஆசிரியர் படிக்கத் தொடங்குமுன்,” முதற் பத்தியைப் படித்தபின், அதன் மையக் கருத்தைக் கேட்பேன். எனவே, கவனமாகக் கேட்க வேண்டும்” எனக் கூறுதல் நன்று. ஆசிரியர் படித்தபின் மையக் கருத்தைக் கேட்கவேண்டும். மாணவர்களால் கூற முடியவில்லையெனில், ஆசிரியரே கூறவேண்டும்.

**செய்திகளை விளக்குதல்**

பாடப்பகுதியின் மையக் கருத்தைக் கரும்பலகையில் எழுதவேண்டும். பின்னர், ஒவ்வொரு சொற்றொடராகப் படித்துப் புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்குதல் வேண்டும். 'மேற்கோள்' கொடுக்கப்பட்டிருந்தால், அம்மேற்கோள்பற்றியும் அது இடம்பெறும் நூல்பற்றியும் கூறுதல்வேண்டும். பாடக்கருத்துகளை மட்டும் அப்படியே விளக்கிச் செல்லாது, வாழ்க்கையுடன் தொடர்பு படுத்திக் கற்பித்தல்வேண்டும்.

**துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்**

பாடத்தைக் கற்பிக்கும்பொழுது, பாடப் பொருளுக்கேற்ற துணைக்கருவிகளை ஆசிரியர் தகுந்தமுறையில் பயன்படுத்துதல்வேண்டும். தமிழ்க் காப்பியப் பகுதியை விளக்க வரைப்படத் தாள், மின்னட்டைகள், சுழலட்டைகள், விசிறி மடிப்பட்டைகள், படங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தலாம்.

மொழிப்பாடத்தில் விளக்கத் தாளின் பயன்பாடு குறித்துக் கலந்துரையாடுக.

**சொற்களஞ்சியம் பெருக்குதல்**

பாடப்பகுதியில் இடம்பெறும் சொற்களைப் பிரித்துக் கூறியும், பிரித்து எழுதச் செய்தும், சேர்த்து எழுதச் செய்தும், விளக்கங் கூறியும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கலாம். தமிழ்க் காப்பியப் பாடப்பகுதியின் வாயிலாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் ஆகியவற்றை விரித்துக் கூறலாம்.

பெருங்காப்பியம், சிறு காப்பியம் என்பதன் பொருளை விரிவாகக் கூறலாம். பாடப்பகுதியில் இடம்பெறும் வீடுபேறு, சிந்தை முதலிய சொற்களின் பொருளை அறியச் செய்தும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கலாம்.

**கரும்பலகையைப் பயன்படுத்துதல்**

பாடத் தலைப்பினைக் கரும்பலகையில் எழுதுதல்வேண்டும். பாடத்தின் மையக் கருத்து, அருஞ்சொற் பொருள், சொற்களைப் பிரித்துக் காட்டுதல், ஒலி வேறுபடும் சொற்களை எழுதிக் காட்டல், தேவையான படம் வரைதல் முதலிய செயல்களின்போது கரும் பலகையைப் பயன் படுத்துதல்வேண்டும். காதால் கேட்பதைவிடக் கண்ணால் பார்ப்பது மனத்தில் எளிதில் பதியு மாகையால் கரும்பலகையை ஆசிரியர் பயன்படுத்துதல்வேண்டும்.

**மொழிப் பயிற்சியளித்தல்**

பாடப்பகுதியைக் கற்பிக்கும்போதே அரிய சொற்களைச் சொற்றொடரில் அமைக்கச் செய்தல், மரபுத்தொடர்கள், பழமொழிகள், உவமைகள் இடம்பெற்றிருப்பின் அவற்றைச் சொற்றொடரில் அமைத்துக் கூறவும் எழுதவும் செய்யப் பயிற்சியளித்தல் வேண்டும்.வாக்கிய வகைகளைச் சுட்டிக்காட்டி, உடன்பாடு- எதிர்மறை, செய்தி- வியப்பு, நேர்க்கூற்று-அயற்கூற்று, செய்வினை-செயப்பாட்டுவினை ஆகிய வாக்கியங்கள் பற்றியும் வாக்கிய மாற்றங்கள் பற்றியும் வகுப்பு நிலைக்கேற்றவாறு மொழிப்பயிற்சி அளிக்கலாம். உரைநடைப் பாடத்தில் மொழிப் பயிற்சியளித்தல் மாணவர் மொழித்திறன் பெறப் பெரிதும் உதவும்.

**மாணாக்கரைப் படிக்கச் செய்தல்**

ஆசிரியர் பாடத்தைக் கற்பித்த பின்னர், மாணவர்களைப் படிக்கச் செய்யவேண்டும். பாடத்தைக் கற்பிப்பதற்கு முன்பு மாணவர்களைப் படிக்கச் செய்தல் கூடாது. ஏனெனில், புதிய பாடப்பகுதியில் அருஞ்சொற்றொடர்கள், புதிய சொற்கள், புதிய கருத்துகள் இடம்பெற்றிருக்கும். அவற்றை மாணவர் புரிந்துகொண்டு படிப்பது கடினம்.

“படிக்குங் காலம் பொற்காலம்
பண்பை வளர்க்கும் நற்காலம்” - ஆலந்தூர் மோகனரங்கம்

ஆசிரியர் நன்கு கற்பித்த பின்பு மாணவர்களைப் படிக்கச் செய்யும்போது, பொருள் புரிந்து படிக்கிறார்களா? ஏற்ற நிறுத்தங்களுடன் படிக்கிறார்களா? சரியான ஒலி வேறுபாடுகளுடன் படிக்கிறார்களா? என்பதைக் கவனித்தல் வேண்டும்.

**பாடத்தைத் திருப்புதல்**

பாடத்தைக் கற்பித்து முடித்த பின்னர்க் கற்பித்த பகுதியை மாணவர் அறிந்து கொண்டனராவெனத் தேர்ந்தறிய வினாக்கள் கேட்டல்வேண்டும். புதிய சொற்களின் பொருள் கேட்டல், சொற்களை வாக்கியத்தில் அமைத்துக் கூறச் செய்தல், பாடப்பகுதியின் மையக் கருத்தைக் கேட்டல் ஆகியன திருப்புதலில் அடங்கும். பாடத்தைத் திருப்புதல் செயல்பாடு சிறந்த வாய்மொழிப் பயிற்சியாகவும் அமையும். ஆசிரியர் கட்டாயமாகப் பாடத்தைத் திருப்புதலுக்கு நேரம் ஒதுக்கித் திருப்புதல் செயலை மேற்கொள்ளவேண்டும்.

**தொடர்செயல் வழங்குதல்**

பாடங் கற்பித்தலின் இறுதியில் திருப்புதல் வினாவிற்கு மாணாக்கர் வாய்மொழியாக விடை கூறுவர். அவ்வினாக்களுக்கு வீட்டில் விடையெழுதியும் படித்தும் வரச் செய்யலாம். இதனால், எழுத்துப் பயிற்சியும் மனப்பாடத்திறனும் வளரும். பாடத் தொடர்பான படங்கள், செய்திகளைத் திரட்டி வரச் செய்யலாம். இதனால் பெற்றோர், அண்டை அயலார் உறவு ஏற்படுகிறது. தொடர்செயல் மாணவனுக்குச் சுமையாக இல்லாமல் சுவையாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளல்வேண்டும்.

**மொழிநடை**

ஆசிரியப் பயிற்சி மாணாக்கர் உரைநடையில் இடம்பெறும் பல்வேறு உரைநடைகளை அறிதல் இன்றியமையாததாகும். எளிய தெளிவான நடையே இக்காலத்திற்கு ஏற்புடையது. கருத்துத் தெளிவிருந்தால் தெளிவான நடை கைவரப் பெறலாம். இதற்கு நல்ல மொழிநடை நூல்களைக் கற்ற வண்ணமிருத்தல் வேண்டும். எளிமையே மொழிநடைக்கு அணியாகும்.

மாணவ ஆசிரியர் பல்வகையான உரைநடைகளை அறிவதுடன், தனக்கென ஒரு நடையை அமைத்துக்கொண்டு கட்டுரை, கதைகள் எழுதுதல்வேண்டும்.

**உரைநடை வகைகள்**

எழுதும் முறையால், சொற்கள் அமைந்து வரும் தன்மையால் உரைநடை பலவகைப் படும். அவை: அடுக்குமொழிநடை, தனித்தமிழ் நடை, எளிய நடை அல்லது ஆற்றொழுக்கு நடை, வினா விடை நடை, மணிப்பிரவாள நடை, இனிய நடை, இலக்கிய நடை, செய்யுள் நடை முதலியன.

**அடுக்குமொழி நடை**

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் சிறைச்சாலை வாழ்வுபற்றிப் பேசியதை, டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை, “சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ! கைத் தோலுரியக் கல்லுடைக்கும்போது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ! சிறைக்கோட்டத்தில் வேலை ஒழிந்த வேளையில் தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். வள்ளுவர் குறள் படித்து உள்ளம் தழைத்தேன்” என்று எழுதுவார்.

டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை பல்வேறு எதுகை மோனைகள் அமையச் சொற்களைக் கையாண்டு அடுக்கிக் கூறியதால் இது ‘அடுக்குமொழி நடை’ எனப்பட்டது.

## தனித்தமிழ் நடை

பிறமொழிச் சொற்கள் கலவாது தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி எழுதுவது தனித்தமிழ் நடையாகும். “திருவள்ளுவர் தமிழ்நாட்டில் தோன்றியவர்; திருக்குறள் என்ற நூலை யாத்தவர். இங்கே அவர் தோன்றிய நாட்டுக்குச் சிறப்பளிப்பதா? அல்லது அவர் யாத்த நூலுக்குச் சிறப்பளிப்பதா? நூலுக்குச் சிறப்பளிப்பதே சால்பு. ஏன்? திருக்குறள் தமிழ்நாட்டுக்கு மட்டும் பயன்படுவதாய் அமையவில்லை. அஃது உலகுக்கும் பயன்படுவதாய் அமைந்துள்ளது. நாட்டினும் உலகம் பெரிதன்றோ?” என மு.வரதராசனாரின் ‘ திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்’ எனும் நூலுக்கு எழுதிய அணிந்துரையில் திரு.வி.க. கூறுவார். இதில் பிறமொழிச் சொற்கள் இடம்பெறாது தனித்தமிழே இடம்பெற்றுள்ளதால், இது தனித்தமிழ் நடை எனப்படும்.

### எளியநடை அல்லது ஆற்றொழுக்கு நடை

எளிய நடையில் தங்குதடையின்றி எளிதில் பொருள் உணரும்வண்ணம் அமைந்து வருவது எளிய நடை அல்லது ஆற்றொழுக்கு நடை எனப்படும். தம்பிக்கு எனும் நூலில் டாக்டர் மு. வரதராசனார், “தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத் தீய வழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடைநடுவே அல்லல்படுகிறான். உடலும் வேண்டும் உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும்.” என்று குறிப்பிடுவார். இதில் கருத்து முன்பின் மாறாமல் ஆற்றின்போக்கைப்போல் செல்வதால் இதனை ஆற்றொழுக்கு நடை என்று கூறலாம்.

### வினாவிடை நடை

வினாவிடையாக அமைத்து எழுதும் நடை வினாவிடை நடையாகும். கல்வியாளர் நெ.து. சுந்தர வடிவேலு கல்விக்கூடம்பற்றிக் குறிப்பிடும்போது, “மாணவ மாணவியர் தாம் விரும்பிப் படிக்க வாய்ப்புகள் தேவை ஒப்புக்கொள்கிறேன். நல்ல நூல் நிலையங்கள் அத்தகைய வாய்ப்புகளைக் கொடுக்கும். இது உங்கள் முடிவு, சரிதானே? அந்நூல் நிலையங்கள் கல்லூரிகளோடு நிற்கலாமா? கூடாது. உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் எட்டிப் பார்த்தால் போதுமா? போதாது.” என்று கூறுவார். இப்பகுதி வினாவிடையாக அமைந்து வந்துள்ளமையால், இது வினாவிடை நடை எனப்படும்.

### மணிப்பிரவாள நடை

மணிப்பிரவாள நடை யென்பது இடைக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த நடையாகும். மணியும் பவளமும் கலந்ததுபோல் வடசொற் களையும் தமிழ்ச் சொற்களையும் கலந்து எழுதுவது மணிப்பிரவாள நடையாகும். பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி முதலிய நூல்கள் மணிப்பிரவாள நடையில் அமைந்தனவாகும். வைணவ உரையாசிரியர்கள் இந்த நடையைப் பெரிதும் வளர்த்தனர்.

வைணவ உரையாசிரியரான பெரியவாச்சான் பிள்ளை எழுதிய பெரிய திருமொழி வியாக்கியானத்தில், “வாஸுதேவ தருச்சாயா பார்த்த இடமெல்லாம் நிழலாய் இருக்கை. எங்கும் ஒக்க நிழல்செய்து, இந்நிழலில் அல்லது புறம்பு ஒதுங்க நிழல் இன்றிக்கே இருக்கை, நாதி சீதா நகர்மதா அடிவல்ல இடுதல், வேர்த்தல் செய்யாது இருக்கை” என்ற பகுதி இடம்பெற்றுள்ளது. இப்பகுதியில் தமிழும் வடமொழியும் கலந்து வந்துள்ளமையால் இதனை மணிப்பிரவாள நடை என்கிறோம்.

**இனிய நடை**

திரு.வி.க., டாக்டர் மு.வ. ஆகியோரின் நடைச் சிறப்புணர்த்த அவர்தம் நூல்களிலிருந்து இரு பகுதிகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

எளிய, இனிய சொற்கள் சிறுசிறு வாக்கியங்களில் அமைந்து வருவது இனிய நடை யாகும். எடுத்துக்காட்டாகத் திரு.வி.க., "பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; வணக்கம் செலுத்துங்கள். பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம். அவளைக் கட்டுப்படுத்தல், அடிமைப் படுத்தல், கொடுமையாக நடத்தல் அநாகரிகம்" என்று பெண்ணைப் போற்றுதல்பற்றிக் கூறுவர். இதில் சொற்கள் சிறுசிறு வாக்கியங்களில் வந்து இனிமை செய்வதால் இது இனிய நடையாகும்.

**இலக்கிய நடை**

கற்றோர்க்கு மட்டும் பொருள் விளங்குமாறு சொற்கள் அமைத்து எழுதுவது இலக்கிய நடையாகும். எடுத்துக்காட்டாகச் சிவஞான சுவாமிகள் நன்னூலுக்கு எழுதிய உரையில், "அற்றேல் கேட்போர் மாணாக்கரும் கேட்பிப்போர் ஆசிரியருமாகலான் இவ்விரண்டும் பொதுப் பாயிரத்தால் பெறப்படுமாமோவெனின், அற்றன்று; பொதுவகையான் ஆசிரியருக்கும் மாணாக்கருக்கும் இலக்கணம் பெறப்பட்டன வல்லது இந்நூற்கின்னா ரென்னும் சிறப்பு வகை. ஆண்டுப் பெறப்படா மையின் இஃதீண்டுக் காட்டப்படும்" என்பார். இந்நடை கற்றோர்க்கு மட்டுமே புரியக் கூடியதாக இருப்பதால், இது உயர்ந்த இலக்கிய நடையைச் சார்ந்ததாகும்.

**செய்யுள் நடை**

செய்யுளமைப்பில் அமைந்துவரும் உரைநடை செய்யுள் நடையாகும். இளங்கோவடிகள்,

"மண மதுரையோடு அரசு கேடுற
வல்வினை வந்து உறுத்தகாலை
கணவனை அங்கு இழந்து போந்த
கடுவினையேன் யான்"

எனக் கண்ணகி கூற்றாக அமைத்துக் கூறுவார். இது உரைநடையோடும் செய்யுள் தன்மையில் உள்ளதால் செய்யுள் நடை எனப்படுகிறது.

## 2. செய்யுள் கற்பித்தல்

தமிழ்மொழிக் கல்வியில் செய்யுளே உயர்நிலையான பகுதி. செய்யுள் என்பது தேர்ந் தெடுத்த சொற்களால் செய்திகளைச் சுருக்கமாகக் கூறுவது. உணர்ச்சி மேலீட்டால் வெளிப் படுவது. தடுக்கமுடியாத பேருணர்ச்சியின் வெளிப்பாடே செய்யுள் என்றும், உள்ளத்திலுள்ளது கவிதை, இன்ப உருவெடுப்பது கவிதை என்றும் அதனைப்பற்றிக் கூறுவர்.

'கவிஞனுடைய ஆற்றல் வாய்ந்த உணர்ச்சிகள் தாமே ததும்பி வழிவது செய்யுள்' என்று வேர்ட்ஸ்வொர்த் கூறுகிறார். ' சிறந்த கருத்துகளைச் சிறந்த அமைப்பில் சிறந்த வார்த்தைகளால் வெளியிடுவதே செய்யுள்; செய்யுள் கற்பனையின் எல்லா அமைப்புகளையும் கொண்டது' என்று ஷெல்லி கூறுகிறார். 'பாட்டில் உள்ள சொற்கள் ஒரு பொருளை விளக்கவில்லை. மாறாக, அந்தப் பொருளையே நம் மனத்தில் படைத்துவிடுகின்றன' என்று ஆபர்கிராம்பி கூறுகிறார்.

'செய்யுளில்லையேல் நம் அறிவியல் முழுமை பெற்றதாகாது' என்று மாத்யூ அர்னால்டு கூறுகிறார். ' சிறந்த செய்யுள் ஆன்மாவின் ஒலிப் புலப்பாடே' என்கிறார் டால்ஸ்டாய். 'ஒரு மதிப்பு வாய்ந்த பொருளைப் பற்றி எழுதுகிற பாடலே உண்மைச் செய்யுளாக இருக்கவேண்டும்.' என்று மில்டன் கூறுகிறார்.

செய்யுளில் ஒன்பான் சுவைகளும், பத்துவகை அழகுகளும், இறைச்சி, உள்ளுறை, உவமம் முதலியன சிறந்து காணப்படும். படிப்போர் மனத்தை ஈர்த்தற்குரிய சொல்நயம், பொருள் நயம், ஓசைநயம் முதலியன செய்யுளின் சிறப்புக் கூறுகளாகும். இத்தகைய சிறப்புக் கூறுகள்உள்ள செய்யுட் பகுதியைக் கற்பித்தலின் நோக்கத்தையும் முறைகளையும் அறிந்து பயன்படுத்துதல் ஆசிரியரின் கடமையாகும்.

**செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள்**

உங்கள் உளங்கவர்ந்த கவிநயம் மிகுந்த இருபாடல்கள் எழுதுக.

“உள்ளத் துள்ளது கவிதை - இன்ப
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை”

**– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

கவிதைகளையும் செய்யுள்களையும் கற்பிக்கும் நோக்கங்களை அறிந்துகொள்வோம்.

- செய்யுளில் அமைந்துள்ள எதுகை, மோனை ஒலிநயங்களை அறிதல்.
- சொற்சுவை, பொருட்சுவையை உணர்தல்.
- உவமை நயம், சிலேடை நயங்களை அறிதல்.
- கற்பனைத்திறன் வளர்த்தல்.
- பண்பாட்டினை வளர்த்தல்.
- படைப்பாற்றல் திறன் வளர்த்தல்.
- பாடலின் கருத்துணர்தல்.
- செய்யுளைப் படித்துப் படித்து மகிழ்தல்.
- நாட்டுப்பற்று, மொழிப்பற்றுக் கொள்ளல்.
- அருஞ்சொற்களுக்கு அகராதியைப் பார்த்துப் பொருளறிதல்.
- தொகைச் சொற்களின் விரிவுகளை அறிதல்.
- சிந்தனைத் திறனையும் படைப்பாற்றல் திறனையும் வளர்த்தல்.

உங்கள் உளங்கவர்ந்த கவிநயமிக்க பாரதியார், பாரதிதாசன், வாணிதாசன் பாடல்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**ஒலிநயங்களை அறிதல்**

கவிஞர் தாம் உணர்ந்ததையும், தம் அனுபவத்தையும் படிப்பவர்க்கு உணர்த்துவதற்கேற்ற எளிய செஞ்சொற்களைப் பயன்படுத்துவர். மிக எளிய சொல்லும் பயன்படும் விதத்தால் நயம் பொருந்தக் கூடும். கவிஞர் பயன்படுத்தும் எதுகையும் மோனையும் படிப்பதற்கு இன்பந்தரும். வல்லின, மெல்லின எழுத்துகளைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதாலும் ‘பா’ அமைப்பினாலும் ஒலிநயம் ஏற்படலாம்.

கம்பர் தாம் எழுதிய இராமாயணத்தில் அரக்கி சூர்ப்பனகை மென்மையான பெண் வடிவந் தாங்கி வந்தாள் எனப் பாடியுள்ளார். அப்பாடல் மெல்லின எழுத்துகளையே மிகுதியும் பெற்று ஒலிநயம் உடையதாக அமைந்துள்ளது.

“பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்”

இப்பாடலைப் படிக்கும்போது மெல்லின எழுத்துகளின் ஒலிநயத்தினை உணர்வதுடன், மாறிமாறி அடியெடுத்து வைத்து நடக்கும் ஒலிநயத்தினையும் உணரலாம். இவ்வொலி நயம் பா அமைப்பால் ஏற்பட்டதாகும்.

**எதுகை நயம்**

முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை. செய்யுள் அனைத்திலும் எதுகை நயத்தினைக் காணலாம். கவிஞர்கள் சிலவிடங்களில் சொற்களை வல்லினமாக்கியும் மெல்லினமாக்கியும் எதுகை நயம் அமையும்படி செய்வர். எதுகை நாம் படிப்பதற்கு இன்பந்தருவதை ஆசிரியர் செய்யுளை வாய்விட்டுப் படித்தலின்மூலம் உணரச் செய்யலாம்.

"பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கும்
மின்னாகிப் பரவிஇன்ப வெள்ளம் தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்கும் தேவே!"

என இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாவில் பொன்னாகி, மன்னாகி, முன்னாகி, பின்னாகி என எதுகை வந்துள்ளமையைக் காணலாம்.

எதுகை, மோனைத் தொடைகள் இடம்பெற்றுள்ள பாடல்களைக் கண்டறிக.

**மோனை நயம்**

செய்யுளில் முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வரும் சீர்கள் ஒன்றோ பலவோ முதலெழுத்து ஒன்றி வருதல் மோனை எனப்படும்.

"உண்ணீர்உண் ணீரென்(று) உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்."

எனும் ஔவையாரின் நான்குகோடிப் பாடலில், முதலடியின் முதலெழுத்தும் இரண்டாம் அடியின் முதலெழுத்தும் ஒன்றி வந்து மோனை நயத்தைத் தருவதைக் காணலாம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." - குறள்: 391

இத்திருக்குறளின் முதலடியில் நான்கு சீர்களிலும் முதலெழுத்து 'க'கரம் ஒன்றுபோல் வந்து மோனை தருவதை மாணவர்க்கு விளக்கலாம்.

**பொருள் நயம்**

பாடலிலுள்ள ஒரு சொல்லின் பொருளை வேறொரு சொற்கொண்டு விளக்குவதே பொருட்சுவையாக அமையும்.

"நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு"

என்ற நளவெண்பாப் பாடல்மூலம் பொருள் நயத்தை அறியலாம்.

தமயந்தி இயற்கை அழகுடையவள்; அழகை ஆட்சிபுரிகிறாள்; அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நான்கு பண்புகளையும் தன்னைப் பாதுகாக்கும் யானை, குதிரை, தேர், காலாள் ஆகிய நான்கு படைகளாகக் கொண்டுள்ளாள்; மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன் களையும் நல்ல அமைச்சர்களாகப் பெற்றுள்ளா; அவள் காலில் அணிந்திருக்கும் சிலம்பு வெற்றி

முரசாக ஒலிக்கிறது. வேட்படையும் கூரியவாளும் அவளது இரு கண்களாக மின்னுகின்றன. அழகிய முகம் அவளது அழகிற்குப் பெருமை சேர்க்கும் வெண்கொற்றக் குடையாகத் திகழ்கிறது. இங்ஙனம் தமயந்தியிடம் அழகும் பெண்மையும் ஆட்சிபுரிகின்றன எனக் கூறுவதன்மூலம் பொருள்நயம் அறியலாம்.

**சொல் நயம்**

திரிகூடராசப்பக் கவிராயரின் நாட்டுவளப் பாடலில், ஓடக் காண்பது, ஒடுங்கக் காண்பது, வாடக் காண்பது, வருந்தக் காண்பது, போடக் காண்பது, புலம்பக் காண்பது, தேடக் காண்பது என மீண்டும் மீண்டும் 'காண்பது' எனுஞ் சொல்லே வந்து, சொல் நயத்தை உணர்த்துவதைக் காணலாம். இவ்வாறு செய்யுளில் இடம்பெறும் சொல்நயத்தை மாணவர்களை உணரச் செய்ய வேண்டும்.

**உவமை நயம்**

ஒரு செய்தியைச் சுவைபடச் சொல்லவும் அழகுள்ள ஒரு பொருளைப் பற்றிக் கூறவும் உவமைகளைக் கவிஞர்கள் பயன்படுத்துவர். வல்லூர் தேவராசப்பிள்ளை குசேலோ பாக்கியானத்தில் குசேலனின் வருகையைக் கேட்ட கண்ணன் தாயின் வருகையைக் கேட்ட குழந்தைபோல மகிழ்ந்தான் என்று கூறுவார். இதனை,

"தாயது வருகை கேட்ட
 தனியிளங் குழவி போன்று
நேயமிக் குடைய னாகி
 நெஞ்சினுள் உவமை பூப்பப்
போயழைத் திடுமின் இன்னே
 போயழைத் திடுமின் இன்னே
போயழைத் திடுமின் இன்னே
 எனவிரை பொருளிற் சொற்றான்"

எனுஞ் செய்யுள்மூலம் அறியலாம். இங்ஙனம், கவிஞர்கள் பண்பினாலும் செயலினாலும் பயன் தருவதாலும் உள்ள ஒற்றுமையை நுணுகியறிந்து வெளிப்படுத்தும் திறனுடையவர்கள். செய்யுளில் இடம்பெறும் அணிநயங்களை மாணவர்களை அறியச் செய்தல்வேண்டும்.

**சிலேடை நயம்**

ஒரு சொல்லையோ தொடரையோ இருபொருள் தரும்படி அமைத்துப் பாடுதல் சிலேடை என்பர். இதனை, 'இரட்டுற மொழிதல்' எனவுங் கூறுவர். சொல்வளம் மிக்க புலவர் தாம் இயற்றும் பாடல்களில் சிலேடை நயம் பொருந்தப் பாடுவர்.

"ஆடிக் குடத்(து) அடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றில் பரபரெனும் பாரில்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது."

> சிலேடைநயம் உணர்த்தக் கவி காளமேகம் பாடல்கள் இரண்டு எழுதுக.

எனும் பாடலில் காளமேகப் புலவர், பாம்பையும் எள்ளையும் ஒருசேர அமைத்துப் பாடியுள்ளார். பாம்பு, படமெடுத்து ஆடிவிட்டுப் பெட்டியில் சேரும். எள், செக்கிலிட்டு ஆட்டப்பெற்று எண்ணெயாகக் குடத்தில் சேமிக்கப்படும். பாம்பு - படமெடுத்து ஆடும்பொழுது 'உஸ்' என இரைச்சல் ஒலியை எழுப்பும். எள், செக்கிலிட்டு ஆட்டும்பொழுது 'நொய்ங்' என்னும் ஒலியெழும். பாம்பு, பாம்பு உள்ள பெட்டியின் மூடியைத் திறந்தால், 'உஸ்' என்று ஒலியெழுப்பிச் சீறித் தலையைத் தூக்கும்; படமெடுத்து முகத்தைக் காட்டும். எண்ணெய்க் குடத்தைத் திறந்து

பார்த்தால் திறப்பவரின் முகத்தைக் காட்டும். பாம்பிற்குப் பிளவுபட்ட நாக்குண்டு. எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுத்தபின் பிண்ணாக்கு கிடைக்குமெனப் பாம்பையும் எள்ளையும் ஒரேபொருளில் அமைத்து நயம்படப் பாடியுள்ளமையை எடுத்துக்கூறி, மாணவர்கள் கற்க ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்.

**கற்பனைத் திறன் வளர்த்தல்**

கற்பனை நயம் பாடல்களுக்குச் சிறப்புச் சேர்க்கும். கவிதைகளில் இடம்பெறும் கற்பனையின் சிறப்புப் பற்றிக் கி.வா.ஜெகந்நாதன் அவர்கள்,

"கற்பனையாம் பரிக்கே - ஒரு கடிவாளம் என்பதில்லை
வெற்பினில் ஏறிவரும் - அந்த விண்ணிலும் பறக்கும்." எனப் பாடியுள்ளார்.

இராமாயணத்தில் கம்பர், இராமனுடைய அம்பு இராவணனுடைய உடலைத் துளைத்தது பற்றிக் கூறும்போது,

"வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

இதில் அம்பு இராவணனுடைய உடலைத் துளைத்துச் செல்வதைக் கூறுவது கற்பனை நயம் மிக்கதாய் உள்ளது.

இக்காலக் கவிஞராம் இராமச்சந்திர கவிராயரின் கற்பனையோ துன்பத்தின் எல்லையை உடைத்து அதற்கப்பாலுஞ் செல்லும்படி அமைந்துள்ளது.

"ஆவீன மழைபொழிய இல்லம்வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமை சாவ
மாவீரம் போகுதென்று விதைகொண் டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்
தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பந் தீண்ட
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சணையைக் கொடுவென் றாரே!"

என உலகிலுள்ள அத்தனை துயரங்களையும் ஒருசேர அமைக்கும் கற்பனைத் திறம் கவிஞர்களின் தனிச் சொத்தாம். அதன் நலமனைத்தும் மாணவர் நுகர நல்வழிப்படுத்துதல் ஆசிரியர்தம் நோக்கமாக இருத்தல் நலம்.

**எழிலுணர்வு**

கவிஞர்கள் தாம் கண்ட இயற்கைக் காட்சிகளை நாமும் காணுமாறு எழிலுறப் பாடுகின்றனர். குற்றால மலையில் குரங்குகள் விளையாடுவதைக் குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் திரிகூடராசப்பக் கவிராயர்,

‘வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
ககன சித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவி திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே”

என எழிலுறப் பாடியுள்ளார். படிப்போர் தம்மையும் குற்றாலத்திற்கு அழைத்துச் செல்கிறார். இது போன்ற பாடல்கள்மூலம் மாணாக்கர் உள்ளத்தில் எழிலுணர்வு தோன்றச் செய்வது செய்யுட் கற்பித்தலின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

**பண்பாட்டினை வளர்த்தல்**

மொழிப்பாடத்தின் வாயிலாக மாணவர் மனத்தில் உயர்ந்த பண்பாட்டினை விதைக்க முடியும். தமிழிலக்கிய அற நூல்கள், சங்க இலக்கியங்களில் காணப்படும் பண்பாட்டுச் செய்திகளை மாணவர்கள் அறியச் செய்தல்வேண்டும். புறநானூற்றில்,

“யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”

“ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று”

என உயர்ந்த கருத்துகள் கூறப்பட்டுள்ளன. அறநூல்களுள் ஒன்றான திருக்குறள்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.”

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு”

என்று சிறந்த அறக்கருத்துகளை எடுத்தியம்பும். மகாகவி பாரதியார் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு,

“பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா”
“சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்”

என நீதிக் கருத்துகளை எடுத்துக் கூறுவார். ஔவையார்,

“சாதி இரண்டொழிய வேறில்லை”

எனக் கூறுவார். இத்தகைய அறக் கருத்துகளையும் பண்பாட்டுச் செய்திகளையும் மாணவப் பருவ முதலே ஊட்டுவதும் உணர்த்துவதும் மொழிப்பாடத்தின் தலையாய நோக்கமாகும்

தமிழ்ர்க்கே உரிய பண்பாட்டுக் கூறுகளை இலக்கியங்களின்வழிப் பட்டியலிடுக.

**.படைப்பாற்றல் திறன் வளர்த்தல்**

ஒருவரின் சிறந்த செயல்திறனைக் காணும்பொழுது தாமும் அதுபோலச் செயல்பட வேண்டும் எனும் எண்ணம் அனைவருக்கும் வருவதுண்டு. அதேபோலச் சிறந்த படைப்புகளை உணர்ந்து மகிழ்ந்தோருக்குத் தாமும் அவைபோன்று படைக்க வேண்டுமென்ற எண்ணம் எழுவது இயற்கை.

மாணவர்களுக்குக் கவிதை எழுதும் ஆர்வத்தைத் தொடக்க வகுப்பிலிருந்தே ஊக்கு வித்தல் வேண்டும். மகாகவி பாரதியார் தமது பத்தாவது வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். எனவே, தொடக்க வகுப்பு மாணவர்களுக்குப் பாடல் அடியொன்றைக் கொடுத்து அதற்கிணை யாக ஓரடியை எழுதச் செய்யலாம். இடைநிலை வகுப்பில் பாவின் இலக்கணத்தைக் கூறி, அவர்கள் திறமையாகக் கவிதை படைக்க ஊக்குவிக்கலாம்.

மாணவர் உள்ளத்தில் ஊறிக்கிடக்கும் எண்ணங்களை எழுத்தில் வடிக்க உதவும் வாய்ப்புகளை வகுப்பில் உருவாக்கித் தருதல்வேண்டும். சிறந்த கவிதைகளை எடுத்துக் கூறுதல், சூழ்நிலை அமைத்துக் கொடுத்தல், செய்யுளில் பொதிந்துள்ள சுவைகளை உணர்த்துதல் முதலியன மாணவர்களிடம் கவிதை படைக்குந் திறனை வளர்க்கும். சத்திமுத்தப் புலவர்,

“நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயும் நின்மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகு வீராயின்
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே”

என வறுமையில் வாடுங் கணவன், வறுமையில் வாடுந் தன் மனைவிக்கு நாரை ஒன்றைத் தூது விடுவதாக அமைத்துள்ளார். இப்பாடலில் அமைந்துள்ள உவமை நயம், ஏழையின் துயரம் படிப்பவர் மனத்தில் ஆழப்பதிந்துவிடுவதைக் காணலாம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மரத்தில் தொங்கும் ஒரு பாம்பினை ஆலம் விழுதெனக் கருதி, அதனைத் தொட்டகுரங்கு பட்டபாட்டினை நாமும் அப்படியே காணுமாறு நகைச்சுவையுடன் பாடியுள்ளார்.

“கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்”

இங்ஙனம், நயமிக்கப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து மாணவர்களை மீண்டும் மீண்டும் படித்து மகிழச் செய்தல்வேண்டும்.

**கற்றல் இலக்குகள்**

செய்யுள் கற்பதன் வழியாக மாணவர் பெறவேண்டிய மொழித்திறன்களையும் செய்யுளின் நோக்கங்களையும் இலக்குகளாகக் கொண்டு கற்பித்தல்வேண்டும்.

- செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்துப் படித்தல்.
- செய்யுளைப் பொருள் விளங்கும்படி படித்தல்.
- செய்யுளிலுள்ள பொருட் செறிவான சொற்களைக் கண்டறிதல்.
- செய்யுளிலுள்ள சுவையான பகுதிகளைச் சுவைத்தல்.
- அருஞ்சொற்களின் பொருளைக் கூறுதல்.
- செய்யுளில் அமைந்துள்ள எதுகை, மோனை நயங்களைக் கூறுதல்.
- பொருளுணர்ச்சிக்கு ஏற்றவாறு குரலேற்றத் தாழ்வுடன் படித்தல்.
- செய்யுளில் இடம்பெறும் அணிகளை நயம்பட உரைத்தல்.

புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை. - குறள்: 59

சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும். - குறள்: 98

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. -குறள்: 426

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல் - குறள்: 797

இக்குறட்பாக்களைப் பொருள்தரும் வகையில் பிரித்தெழுதிப் படிக்க.

**செய்யுள் கற்பிக்கும் முறை**

செய்யுளைக் கற்பிக்குங்கால் நோக்கங்களை மனத்திற்கொண்டே கற்பிக்கத் தொடங்க வேண்டும். செய்யுள் அல்லது கவிதை கற்பித்தலின் தலையாய நோக்கம், கவிஞன் உணர்ந்ததைப் படிப்போனும் உணருமாறு செய்தலாகும். செய்யுள் கற்பிக்கப் புகும் ஆசிரியர்,ஆர்வமூட்டித் தொடங்குதல், ஆசிரியர் வரலாறு கூறித் தொடங்குதல், சூழ்நிலை கூறித் தொடங்குதல், இசையுடன் பாடுதல், பிரித்துப் படித்தல், நயமுணர்த்துதல், நன்னெறிகளை அறியச் செய்தல், மீண்டும் பாடுதல், தொடர்செயல் ஆகிய படிநிலைகளை மனத்திற் கொள்ள வேண்டும்.

**ஆர்வமூட்டித் தொடங்குதல்**

செய்யுளைக் கற்பிக்கும் முன்னர்க் கற்பிக்கவிருக்கின்ற பாடலின் கருத்தினை அறிந்து கொள்ளவேண்டும் எனும் ஆர்வத்தை ஏற்படுத்திக் கற்பிக்கத் தொடங்கவேண்டும். மாணவர்களிடம் கற்கவேண்டும் எனும் ஆர்வம் ஏற்படத்தக்க சூழ்நிலையை அமைத்துக் கூறல் வேண்டும். திருக்குறளைக் கற்பிக்கப் புகுமுன் திருக்குறளின் தன்மை, திருவள்ளுவரின் பெருமை, இலக்கிய வரலாற்றில் திருக்குறள் பெற்றிருக்குமிடம், திருக்குறள் உலகப் பொதுமறையாகத் திகழ்வது முதலிய செய்திகளைக் கூறினால், திருக்குறளைக் கற்கவேண்டும் எனும் ஆர்வம் மிகும்.

கற்பிக்கவிருக்கும் இலக்கியங்களின் சுவைமிகுந்த பகுதிகளை விளக்கிக் கூறியும் ஆர்வமூட்டலாம். செய்யுள், கவிதைகளைக் கற்பிப்பதற்கு ஆர்வமூட்டிக்கற்பித்தல் சிறந்த முறையாகும்.

**ஆசிரியர் வரலாறுகூறித் தொடங்குதல்**

இது பெரும்பாலான ஆசிரியர் களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது சிறிதும் பொருத்தமற்ற முறை. ஆசிரியர் வரலாறு, அவரியற்றிய நூல்கள், அவர் காலத்துப் புலவர்கள், அவர் வாழ்ந்த காலம் முதலிய செய்திகளைக் கூறியபின், செய்யுட் பகுதியைத் தொடங்கும்போது மாணவர் களைப்படைந்துவிடுவர். எனவே, செய்யுளுக்குள் எவ்வளவு விரைவாகச் சென்றுவிட

முடியுமோ அவ்வளவு விரைவாகச் சென்று கற்பிக்கத் தொடங்கவேண்டும். வேண்டாத விவரங் களையெல்லாம் கூறிச் செய்யுளின் சுவையைக் கெடுத்துவிடக் கூடாது.

செய்யுளைக் கற்பித்தபின் இறுதியில் இத்தகைய சுவைமிகுந்த பாடலைப் பாடியவர் யார் தெரியுமா? என்னும் வினாவை யெழுப்பி, ஆர்வமூட்டி ஆசிரியர் வரலாறு முதலியனவற்றைக் கூறலாம்.

“காலை யெழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும்விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா” - இப்பாடலுக்கு ஆசிரியர் வரலாறு கூறுக.

## சூழ்நிலை கூறித் தொடங்குதல்

உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றுகின்ற பாடல், கவிஞரின் குறிப்பிட்டவொரு சூழ்நிலையில் உருப்பெற்றிருக்கும். கவிஞனின் உள்ளத்துணர்வுகள் திடீரென்று வெளிப்படஉதவிய தூண்டுதல் எது என்பதை உணர்ந்துவிட்டால், கவிஞன் உணர்ந்தவற்றை உற்றவாறு உணர்ந்து நாம் சுவைக்க முடியும். அத்தகைய சூழ்நிலையை அறிந்து விளக்கிப் பாடலைக் கற்பிக்கலாம். இம்முறை சிறந்த முறையே என்றாலும் எல்லாப் பாடங்களுக்கும் இம்முறை பொருந்துமெனக் கூற முடியாது. இன்பத்தின் உச்சத்திலும் துன்பத்தின் ஆழத்திலும் எழும் உணர்வின் வெளிப்படையான பாடலை உணர, அது எழுந்த சூழலை அறிவித்துத் தொடங்கும் முறை பயன்படும். பெரும்பாலும் தனிப்பாடல்களுக்கு இம்முறை பெரிதும் உதவும்.

வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;
மையோ! மரகதமோ! மறிகடலோ! மழைமுகிலோ!
ஐயோ! இவன் வடிவுஎன்பது ஓர்அழியா அழகுஉடையான்.
- (கம்பராமாயணம்: கங்கைப்படலம்)

இப்பாடலைப் படித்து அதன் சொற்பொருள் நயத்தை உணர்ந்தெழுதுக; கலந்துரையாடுக.

கைம்மா றுஉகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் - அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதா மென்று. - (நன்னெறி: 27)

இச்செய்யுள் பகுதி உணர்த்தும் நன்னெறிக் கருத்தை விளக்குக.

### இசையுடன் பாடுதல்

செய்யுளைக் கற்பிப்பதற்குரிய தகுந்த சூழ்நிலை அமைத்த பின்பு, அதனை முதன்முதல் அறிமுகப்படுத்தும்பொழுது இசையுடன் பாடுதல் சிறந்தது. உரைநடையைப் படிப்பதுபோல் படித்தால் சொற்களின் ஒலிநயத்தினை மாணவர் உணர முடியாது. இசையுடன் பாடுந்திறமை தமக்கில்லையென ஆசிரியர் கருதினால், சீர் பிரித்துச் சந்த அமைப்போடு குரலேற்றத் தாழ்வோடு

தொடக்க, நடுநிலை வகுப்பிற்குரிய பாடல்களைப் பதிவு செய்த ஒலிநாடா மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் கல்வித் தொழில் நுட்பத் துறையில் கிடைக்கும். அதனைப் பெற்று மாணவர்களைக் கேட்கச் செய்யலாம்.

படித்துக் காட்டவேண்டும். அப்பொழுதுதான் உரைநடையினின்றும் அது வேறுபட்டது என்பதனை மாணவர் உணர்வர்.

வாய்ப்பு இருக்குமானால், செய்யுள் அல்லது பாடலை இசையுடன் பாடுபவரைக் கொண்டு பாடச்செய்து, ஒலிப்பதிவு நாடாவில் பதிவுசெய்து, வகுப்பில் மாணவர்களைக் கேட்கச் செய்யலாம்.

**பிரித்துப் படித்தல்**

ஆசிரியர் இரண்டு அல்லது மூன்றுமுறை இசையுடன் படித்தபிறகு, செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்துப் படிக்கவேண்டும். செய்யுள் யாப்பின்படி சீர்கள் அமையப் புணர்ச்சி விதிகளைப் பயன்படுத்திச் சொற்களைச் சேர்த்து எழுதியிருப்பர். அல்லது சீருக்காகச் சொற்களைப் பிரித்து எழுதியிருப்பர். இவற்றையறிந்து தனித்தனிச் சொற்களாகப் பொருள் விளங்கும் நிலையில் பிரித்துப் படித்தல்வேண்டும். எடுத்துக்காட்டாக,

“அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்” எனுங் குறட்பாவை,

“அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்” எனப் பிரித்துக் கூறவேண்டும்.

செய்யுளைப் பிரித்துப் படித்தபின்னர்ச் செய்யுளில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறுதல்வேண்டும். அவ்வாறு பொருள் கூறும்பொழுது, தக்க சூழ்நிலையமைத்து மாணவரே பொருளறியச் செய்தல் நன்று. புதிய சொற்களாயிருப்பின் ஆசிரியர் பொருள்கூறி விளக்க வேண்டும். அருஞ்சொற்களை விளக்கிய பின்பு செய்யுளின் திரண்ட கருத்தினையும் அறியச் செய்தல் வேண்டும்.

**செய்யுள் நயஞ்சுட்டல்**

செய்யுளின் கருத்தை உணரச் செய்வதோடு அதன் நயத்தினையும் உணரச் செய்ய வேண்டும். டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள், தன் ஆசான் சடகோபையங்காரின் கற்பித்தல் பற்றிக் கூறும்போது, “பொம்மைகளைக் (பாவை) காட்டிக் குழந்தைகளைக் கவர்வதுபோலத் தமிழ்ச் செய்யுள்களின் நயத்தை எடுத்துக்காட்டி என் உள்ளத்துக்குள் அந்த இளம்பருவத்தில் தமிழ் விதையை விதைத்தவர் அவரே” எனக் கூறியுள்ளார். இக்கூற்றின்மூலம் செய்யுளில் இடம் பெறும் சொல்நயம், பொருள்நயம், சந்தநயம், உவமை நயம், சிலேடை நயம் முதலியவற்றை விளக்குவது இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது.

செய்யுளின் நயத்தை எடுத்துக் கூறுவதே செய்யுள் வகுப்பின் சிறந்த, சுவைமிகுந்த பகுதி யாகும். சொற்சுவையும் பொருட்சுவையும் தொடைநயமும் அணிநயமும் சந்த இனிமையும் கொண்ட பாடல்களில் மாணவர்களைத் திளைக்க வைப்பதே ஆசிரியர்களின் முதற் கடமை யாகும்.

> செய்யுள் நயம் கற்பிக்கப்படுமொன்றன்று;
> உணர்ச்சியால் பற்றிக்கொள்ளப்படுவதாகும்.

**நன்னெறிகளை அறியச் செய்தல்**

செய்யுள் உணர்த்தும் பொருள் படிப்பவர் மனத்தில், புலவர் பதிக்க நினைக்கும் நன்னெறி யாகும். ‘அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்” எனுந் திருக்குறள் அன்பினது தன்மையினை வெளிப்படுத்துகிறது. அன்பு என்பது மனத்தின் நெகிழ்ச்சியாகும். அன்புநெறி ஒருவருக் கொருவரை இணங்க வைக்கும் நன்னெறியாகும். அந்நன்னெறியை மாணாக்கர்களைக் கடைப் பிடிக்கத் தூண்டுவதோடு, நாம் அனைவரிடமும் அன்புடன் நடந்துகொள்ளவேண்டும் எனும் நன்னெறியை மாணவர்கள் மனத்திற் பதித்தல் வேண்டும்.

**தொடர்செயல் வழங்குதல்**

செய்யுளைக் கற்பித்து முடித்த பின்னர், மாணாக்கர்க்குத் தொடர்செயலாகச் சில செயல்பாடுகளைக் கொடுத்தல்வேண்டும். செய்யுளின் கருத்து, நயங்கள், அருஞ்சொற் களுக்குப் பொருளெழுதி வரச் செய்யலாம். செய்யுளின் கருத்திற்கேற்பப் பொருத்தமாகப் படம் வரைந்தோ படங்களைச் சேகரித்தோ வரச் செய்யலாம். ஆசிரியர் தகுந்த, பொருத்தமான தொடர் செயலை முன்னதாகவே திட்டமிட்டுக் கொடுத்தல் வேண்டும்.

<table>
<tr><td colspan="2">செய்யுள்- உரைநடை கற்பிக்கும் நோக்கங்களிலும் முறைகளிலும் உள்ள ஷவேறுபாடுகள்<br>செய்யுள், உரைநடை ஆகிய இரு பாடங்களை நடத்துவதன் நோக்கங்களிலும் முறைகளிலும் இயல்பாகவே வேறுபாடுகள் உள்ளன. அவை:</td></tr>
<tr><th>செய்யுள்</th><th>உரைநடை</th></tr>
<tr><td colspan="2">அ. நோக்கம்</td></tr>
<tr><td>1. ஓசைநயம், சொற்சுவை, பொருட்சுவை மரபு எழிலுணர்வு, கற்பனை ஆகியவற்றின் வழி மாணாக்கர் தம் பண்பாட்டைவளர்த்தல்<br>2. உணர்ச்சிகளைக் செம்மைப்படுத்தல்<br>3. சுவையுணர்திறன், அழகுணர்திறன் வளர்த்தல்</td><td>1. ஒலியமைதி, சொல் மரபு, தொடர் சொற்களஞ்சியப் பெருக்கம், நடை முறை இலக்கணம் ஆகியவற்றின் வழி மொழியறிவை வளர்த்தல்.<br>2. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்ஆகிய அடிப்படைத் திறன்களை வளர்த்தல்.<br>3. மொழியறிவை வளர்த்தல்.</td></tr>
<tr><td colspan="2">ஆ. தொடங்கு நிலையில் வேறுபாடு</td></tr>
<tr><td>1. பாடப்பகுதிக்கு முன்னுள்ள கதைப்பகுதியை அல்லது நிகழ்ச்சியை, சூழலைக் கூறித் தொடங்குதல்.<br>2. செய்யுளுக்குரிய ஓசையுடன் படித்தல்.<br>3. சொற்களைப் பொருள்புரியும்வண்ணம் பிரித்துப் படித்துக் காட்டுதல்.</td><td>1. ஆர்வமூட்டிப் புதிய பாடப்பகுதியைத் தொடங்குதல்.<br>2. வாய்விட்டுப் படித்தல்.<br>3. பாடநூலில் உள்ளதை அப்படியே படித்துக் காட்டுதல்.</td></tr>
<tr><td colspan="2">இ. வளர்ச்சி நிலையில் வேறுபாடு</td></tr>
<tr><td>1. ஒலிநயமுணர்ந்து மகிழவேண்டுமாகையால் வாய்விட்டுப் படித்தல் சிறப்பிடம் பெறும்.<br>2. சொல்லுக்குச் சொல் உரை சொல்வது, செய்யுட் படிப்பைச் சுவையற்றதாக்கும்.<br>3. செய்யுளில் நல்ல பகுதிகளையோ முழுச் செய்யுளையோ நெட்டுருப் போடலாம். அதனால் இன்பம் பெறலாம்.</td><td>1. கருத்துணர்தல் நோக்கமாகையால் வாய்க்குட் படித்தலைப் படிப்படியாக வளர்த்தல் சிறப்பு.<br>2. சொல்லுக்குச் சொல் உரை சொல்வது சொற்களைத் தொடர்களில் அமைக்க உதவுவதாகும்.<br>3. பொதுவாக, உரைநடையில் நெட்டுருச் செய்ய இடமில்லை.</td></tr>
</table>

| ஈ. இலக்கணங் கூறலில் வேறுபாடு | |
|---|---|
| 1. செய்யுளில் பயின்றுவரும் இலக்கணங்களுள் பொருளுணர்ந்து போற்றுவதற்காக ஓரிரண்டைக் கூறுதல். | 1. மொழியின் அமைப்பை அறியவும், புணர்ச்சியிலக்கணம் அறியவும் நடைமுறை இலக்கணமாக அதிக அளவில் கூறுதல். |
| **உ. பிற வேறுபாடுகள்** | |
| 1. செய்யுள் செறிவும் சுருக்கமும் கொண்டது.<br>2. அடிவரையறைக்குட்பட்டது.<br>3. கற்பனையை அடிப்படையாகக் கொண்டது.<br>4. யாப்பிலக்கண விதிகளுக்குட்பட்டது.<br>5. கவிஞன் தான் அனுபவித்த இன்பத்தைப் பிறரும் அடையச் செய்வது. | 1. நெகிழ்ச்சியும் பெருக்கமும் கொண்டது.<br>2. அடிவரையறையின்றிப் பரந்து செல்வது.<br>3. ஆராய்ச்சியை, காரணகாரியத் தொடர்பை, அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டது.<br>4. யாப்பிலக்கண விதிகள் தேவையில்லை.<br>5. சொற்களஞ்சியம் பெருக்குவது, பிழையின்றி எழுதுவது. |

## 3. இலக்கணங் கற்பித்தல்

மாணவர்கள் தாய்மொழியைப் பற்றி நன்கு அறிந்திருத்தலே அவர்கள் அயல் மொழியைக் f‰gj‰F Ça jF ªj mo¥gi lí« M a¤jK « M F « v‹ gh® m ¿ P ® Þ å £ (Sweet). தாய்மொழி அறிவு என்பது சிறப்பாக இலக்கண அறிவையே குறிக்கும். பேச்சிலும் எழுத்திலும் செய்கின்ற பிழைகளைத் திருத்திக் கொள்வதற்கு இலக்கண அறிவு தேவையாகும். மாணவர்கள் மொழியைக் கற்கும் நிலையில் சொல், தொடர், மரபு, வழக்கு ஆகியவற்றை அறிந்துகொள்கின்றனர். எனவே, ஆசிரியர்கள் இலக்கண விதிகளை மட்டுங் கற்பித்து நிறுத்திவிடாமல், அதனை உரைநடை, செய்யுள் ஆகியவற்றோடு பொருத்திக் கற்பித்தல் வேண்டும். அப்போதுதான் அவ்விதிகளும் அவற்றின் பயன்பாடும் மாணாக்கர்களால் நன்கு உணரப்பெறும்.

### இலக்கணங் கற்பித்தலும் மொழி கற்பித்தலும்

மக்கள், தங்களிடம் இயல்பாக அமைந்திருக்கும் ஒலியெழுப்புந் திறனைச் சிறிது சிறிதாகப் பொருள் தரும் ஒன்றாகச் செய்து மொழியைப் படைத்துக் கொண்டனர். மொழிமரபு மாறாமல் காத்தலுக்கும், பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுப் பிந்திய மரபினர்க்கு விளங்காத நிலையில் மொழி அமைந்துவிடாதபடி தடுத்தலுக்கும் இலக்கணம் இன்றியமையாததாகின்றது. மொழி மரபுக்கு உட்பட்டு எழுதப்பட்ட இலக்கியங்களைப் படித்தறிந்து அவற்றிலுள்ள நயங்களை அறிந்து போற்றுவதற்கும் இலக்கணம் உதவுகின்றது. மொழியின் அமைப்பை முற்றும் உணர்ந்து கொள்வதற்கும், விதி விலக்குகளை அறிந்து அதற்கேற்பச் செயல்படுத்துவதற்கும் இலக்கண அறிவு உதவுகின்றது. எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் அணியும் தொடர்புடைய ஏனையவும் எவ்வெவ் வகைகளில் இயங்குகின்றன என்பதனை அறிய இலக்கண அறிவு உதவுகிறது.

### இலக்கணங் கற்பிப்பது பற்றிய கருத்துகள்

‘எள்ளினின்றும் எண்ணெய் எடுப்பது போன்று இலக்கியத்தினின்றும் எடுபடுவது இலக்கணம்’ – பேரகத்தியம்

‘இலக்கியங் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்’ என்று நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவரும் கூறியுள்ளார். இத்தகைய இலக்கணம் பயிற்றுவதுபற்றி மூன்று வகையான கருத்துகள் நிலவுகின்றன.

**இலக்கணம் வீண்**

திருத்தமான பேச்சைக் கேட்பதாலும் செம்மையான நடையில் எழுதப்பெற்ற நூல்களைப் படிப்பதாலும் மொழியினைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் தெரிந்துகொள்ளலாம். அதனால், இலக்கணத்தைப் பள்ளியில் ஒரு பாடமாகக் கற்பிப்பது வீண் எனச் சிலர் கூறுவர்.

**இலக்கணம் தேன்**

இலக்கணத்தை முறையாகப் பயிலாவிடில் மொழியைச் செம்மையுறக் கற்றதாகக் கொள்ள முடியாது. பழங்காலத்தில் தொல்காப்பியம், நன்னூல் கற்றபின்பே இலக்கியங் கற்பிக்கப்பட்டது. எனவே, இலக்கணப் பாடத்தை அனைத்து வகுப்புகளிலும் தனியாகக் கற்பிக்கவேண்டும் எனவும் கூறுவர்.

**நடைமுறை இலக்கண அறிவு**

“இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும்வித வாதன மன்னே” -(நன்: 165)

இந்நூற்பாவை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

மொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் தேவைப்படும் இலக்கண அறிவைப் பாடத்தோடு இணைத்துக் கற்பிக்கவேண்டும். மொழியறிவை உறுதிப்படுத்துவதற்கு இலக்கணம் ஒரு துணையாகவே உள்ளது என்பதனை நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

**எவ்வகுப்புமுதல் தொடங்கப் பெறல்வேண்டும்?**

தொடக்கநிலை வகுப்புகளில் இலக்கணத்தைத் தனிப்பாடமாகக் கற்பிக்க வேண்டிய தில்லை. சொல், பொருள், சொற்றொடர் ஆகியவற்றில் அறிவு பெறவுள்ள இளம் மாணாக்கர் கட்கு இலக்கண அறிவு ஒரு பயனையும் தராது.

இடைநிலை மாணாக்கர்கட்கு நடைமுறையில் (Functional) செய்யுள், உரைநடைப் பாடங்களைக் கற்பிக்கும்போது தொடர்புடைய இலக்கணத்தை விளக்குதல் நன்முறையாகும். உயர்நிலை, மேனிலை வகுப்பு மாணாக்கர்கட்கு இலக்கணத்தைத் தனிப்பாடமாகக் கற்பிக்கலாம்.

தற்போதுள்ள பாடத்திட்டப்படி இலக்கணப் பெயர்களையும் சொற்களையும் அறிமுகப் படுத்துதல் மூன்றாம் வகுப்பில் எளிய முறையில் தொடங்கிச் சிறிது சிறிதாக ஏழாம் வகுப்புவரை நடைபெறுகின்றது. இலக்கணப் பகுதி உரைநடைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டிருப் பதால், அவற்றை அவ்வப்பாடத்தோடு இணைத்துக் கற்பிக்கலாம். எட்டாம் வகுப்புமுதல் இலக்கணம் தனிப்பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. இம்முறை மாணவர் அறிவுநிலைக்கு ஏற்றதாகவே உள்ளது.

**இலக்கணங் கற்பித்தலின் நோக்கங்கள்**

**மொழியின் சிறப்பியல்புகளை யறிந்து போற்றுதல்:**

ஒவ்வொரு மொழியும் தனக்கெனச் சில சிறப்பியல்புகளைக் கொண்டு திகழும். அவற்றை அறியும்படி செய்தல் இலக்கணங் கற்பித்தலின் மற்றொரு நோக்கமாகும். மொழியின் ஒலி இயல்பினை இலக்கணம் உணர்த்துகின்றது. பிறமொழிச் சொற்களைத் தமிழ்மொழியில் படைக்கும்பொழுது பின்பற்றவேண்டிய ஒலியியல்பினை நாம் இலக்கணம் வாயிலாக அறியலாம். திணை, பால், அமைப்பு முறையை யறிதல், இயல்பு வழக்கு, தகுதி வழக்கு முதலிய பேச்சு

வழக்கினையறிதல், திணை, பால், எண், இடம், கால வழுவமைதி போன்றவற்றையறிதல் முதலியன நமக்கு மொழியின் சிறப்பியல்புகளை உணர்த்துவனவாம்.

**திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பித்தல்**

குழந்தைகள் அனைவரும் அவரவர் தாய்மொழியில் ஓரளவு பேச்சுத்திறன் பெற்றே பள்ளிக்கு வருகின்றனர். அந்நிலையில் அவர்கள் தாய்மொழியாம் தமிழைப் பேசுகின்றனர் என்பதைவிட, அவரவர் வீட்டுமொழியைப் பேசுகின்றனர் எனலாம். ஏனெனில், அவர்கள் பேச்சில் வட்டார வழக்குகளும் கொச்சைமொழிகளும் வழூஉச் சொற்களும் மிகுந்திருக்கும். அவற்றைக் களைந்து திருந்திய மொழியில் பேசவும், சொற்றொடர் அமைப்பு, சொல்லாட்சிமுறை முதலிய வற்றையறிந்து எழுதவும் வழிவகுத்தல் இலக்கணப் பாடத்தின் நோக்கமாகும்.

ஒரே மொழியினைப் பல்வேறு பகுதிகளிலும் பலவிதமாகப் பேசத் தொடங்கினால், பல்லாண்டுகளுக்குப் பின் அது பல்வேறு மொழிகளாக மாறிவிடக்கூடும். எனவே, மொழி மரபைப் பாதுகாக்கத் திருத்தமான பேச்சு இன்றியமையாதது.

வல்லினம் மிகுமிடம், மிகாவிடங்களை அறிதல், என்னென்ன எழுத்துகள் மொழிமுதல், மொழியிறுதியில் வருமென அறிதல், எழுத்து மயக்கம் அறிதல், சொற்களின் திருந்திய வடிவங்களையறிதல் முதலியவற்றின்மூலம் எழுதுங்கால் ஏற்படும் பிழைகளை நீக்குதல் கூடும்.

**செய்யுள் இயற்றுதற்கும் படித்து மகிழ்தற்கும் உதவுதல்**

புணர்ச்சி விதிகளையறிவதால் செய்யுள்களிலுள்ள சொற்றொடர்களைப் பிரித்துப் பொருள் காணலாம். சிலேடைப் பொருள் கண்டு மகிழலாம். தொகைநிலைத் தொடர்கள், ஆகுபெயர்கள் முதலிய செய்யுளிலுள்ள இலக்கண அமைதிகளைக் கண்டு போற்ற முடியும். அணியிலக்கணத்தின்மூலம் செய்யுளில் அமைந்துள்ள அணிநயம் அறிந்து பாராட்டலாம். யாப்பிலக்கண அறிவு செய்யுள் அழகினை அறிந்து போற்ற உதவுவதுடன் ஒருவர் செய்யுள் இயற்றுவதற்குரிய திறனையும் அளிக்கும். செய்யுள் மரபறிந்து இயற்றவும், புதிய மரபினை அமைக்கிறோமென அறியவும் இவ்வறிவு துணையாக நிற்கும். மேற்கூறிய அனைத்தையும் அறிவதற்குப் பயன்படுவதே இலக்கணப் பாடத்தின் மற்றொரு நோக்கமாகும்.

**இலக்கணங் கற்பிக்கும் முறை**

இலக்கணங் கற்பிக்கும்பொழுது விதிவருமுறை (Inductive method), விதி விளக்குமுறை (Deductive method) ஆகிய இருமுறைகளைப் பின்பற்றுகிறோம். அவ்விருமுறைகளையும்பற்றி விரிவாக அறிந்துகொள்வோம்.

**விதிவருமுறை**

> விதிவருமுறையில் இலக்கணங் கற்பிக்க ஏற்றதொரு இலக்கணப் பகுதியை இனங் கண்டு எழுதுக.
>
> பூஞ்சோலை, பூங்காற்று, பூந்தோட்டம், பூம்பொழில் இவ்வெடுத்துக்காட்டுகளைப் பிரித்துக் கூறி விதியை வரவழைக்க.

மாணவர்களுக்குத் தெரிந்த எடுத்துக்காட்டுகளைக்கொண்டு அவற்றிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து ஒரு பொதுவிதியினை வருவித்துக் கற்பித்தல் விதிவரு முறையாகும். விதியினை முதலில் கூறாது மாணவர்தம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் சொற்றொடர்களிலிருந்து மாணவர்களே விதியினை அறிந்துகொள்ளச் செய்வதால் இது சிறந்த முறையாகிறது. சிறந்த பேச்சுமுறையில், திருந்திய எழுத்துமுறையில் அமைந்துள்ள இயல்பினை வரையறுத்துக் கூறுவதே இலக்கண விதியென்பதனையும் மாணவர் நன்குணர்வர்.

சொற்றொடர்களை அல்லது எடுத்துக்காட்டுகளைக் கரும்பலகையில் எழுதுவதற்கு மாணவரிடம் இயல்பாக உரையாடுவதுபோல் ஆசிரியர் தொடங்கவேண்டும். உரையாடலின்

இடையே சில தொடர்களை ஆசிரியர் திட்டமிட்டுப் பயன்படுத்தவேண்டும். ஆனால், மாணவர் அது இயல்பாக ஏற்பட்டதாக எண்ணும்படி அமைதல் நன்று. இவ்வாறு அமையின், பாடம் சுவை மிக்கதாக விளங்கும்.

ஆசிரியர் ஒரு நிகழ்ச்சியைக் கூறுவதாகத் தொடங்கலாம். "வரும் வழியில் ஒரு சிறுவன் மாமரத்தின்மீது கல்லெறிந்தான்; தோட்டக்காரன் வருவதுகண்டு ஓடினான்; கீழே விழுந்தான். அவன் காலொடிந்தது...." இவ்வாறு சிலவற்றைச் சொல்லிவிட்டுச், சிறுவன் என்ன செய்தான்? கல்லெறிந்தான் எனவும், அவனுக்கு என்ன நேர்ந்தது? காலொடிந்தது எனவும் வினாக்கள்மூலம் விடைகளை வரவழைத்துத் தனித்தனியே கரும்பலகையில் எழுதிப் பிரித்து எழுதச் செய்யலாம். கல் + ல் + எறிந்தான். கால் + ஒடிந்தது எனவும் எழுதுவர். இதனைத் தொடர்ந்து பொன்னாசை, தன்னியல்பு, பொய்யுடல், பல்லாண்டு முதலிய தொடர்களையும் 'பயிருயர்ந்தது', 'வாயகன்றது', 'பழமினித்தது' போன்ற தொடர்களையும் கரும்பலகையில் வகைப்படுத்தி எழுதலாம். நிலைமொழியில் தனிக்குறிலின் பின்வரும் ஒற்று, வருமொழி முதலில் உயிர் வந்தால் இரட்டிக்கும் தன்மையை அவர்களையே கூறச் செய்தல்வேண்டும். இறுதியில், "தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்னும் விதியினைக் கூறச் செய்யலாம்.

**விதிவருமுறையின் நன்மைகள்**

விதிவருமுறையைப் பின்பற்றிக் கற்பிப்பதில் பல நன்மைகள் உள்ளன.

அ) மாணவர்கள் தாங்கள் அறிந்த பல செய்திகளிலிருந்து, அறியாத ஒரு பொதுவிதியினை அறிந்துகொள்வர். கற்பித்தலில் தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் வேண்டும் எனும் உளவியற் கொள்கைக்கு இது பொருத்தமாயுள்ளது.

ஆ) மாணவர் புதிய விதியினைத் தாமே எண்ணிப் பார்த்து அறிந்துகொள்வதால், அவர்கள் மனத்தில் அது நன்றாகப் பதிகிறது.

இ) இம்முறையில் மாணவர்களுக்குப் பாடத்தில் ஆர்வம் ஏற்படுகிறது. தாங்களாகவே ஒரு விதியைக் கண்டுபிடித்த உணர்ச்சி ஏற்படுவதால் அவர்களது தன்னம்பிக்கை வளர்கிறது.

இம்முறையின்மூலம் கற்பிப்பதில் சில குறைகளும் உள்ளன.

அ) இம்முறையின்படி பல எடுத்துக்காட்டுகளைப் பார்த்து, மாணவர் ஒவ்வொரு பொதுவிதியினை அறிவதற்கு நீண்டநேரமாகும்.

ஆ) இம்முறையைப் பின்பற்றிக் கற்பித்தால் மாணவர் பெறவேண்டிய இலக்கண அறிவு முழுமையையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கற்பித்து முடித்தல் இயலாததாகும்.

இ) மாணவனைக் 'கண்டுபிடிப்போன்' நிலையில் வைத்து, எடுத்துக்காட்டுகள்மூலம் அவனையே பொதுவிதியினைக் கண்டுபிடிக்கச் செய்வதற்கு ஆசிரியர் தனித்திறமை வாய்ந்தவராதல்வேண்டும். மேலும், ஆசிரியர் ஒரு பாடத் தலைப்புக்கே நீண்ட நேரந் தயாரித்தல் தேவைப்படும்.

**விதி விளக்குமுறை**

மாணவர்களே எளிதில் கண்டுணர முடியாத சில விதிகளை ஆசிரியர் விதி விளக்கு முறையில் கற்பிக்கலாம். இலக்கண விதியொன்றைக் கூறி, அதனைப் பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குதல் விதிவிளக்கு முறையாகும். இம்முறையே பழங்காலத்தில் இலக்கணங் கற்பித்தலில் பின்பற்றப்பட்ட முறையாகும்.

மெய்யீற்றுப் புணர்ச்சியில் ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சியைக் கூறும் நன்னூல் விதி,

"ண ன வல்லினம் வர டறவும், பிறவரின்
இயல்புமாகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு
அனைத்து மெய்வரினும் இயல்பாகும்மே" - (நன்: 209 )

எனக் கூறி, அதன் பின்னர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுக் கொடுத்தல்வேண்டும்.

வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வர ணகர மெய் டகர மெய்யாகவும், னகர மெய் றகர மெய்யாகவும் மாறும்.

மண் + குடம் = மட்குடம்; பொன் + குடம் = பொற்குடம்.

வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் வர ணகரமும் னகரமும் இயல்பாகவே இருக்கும்.

மண் + மலை = மண்மலை; பொன் + வன்மை = பொன்வன்மை

அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் மூவினமும் வர ணகரமும் னகரமும் இயல்பாகவே இருக்கும்.

பொன்சிறந்தது; விண்நிறைந்தது.

இவ்வாறு விதியைக் கூறி, எடுத்துக்காட்டின்மூலம் விளக்கிச் செல்வதால் வரும் நன்மைகளாவன:

அ) இலக்கணப் பாடப்பகுதியை மிக விரைவாகக் கற்பிக்கலாம்.

ஆ) இலக்கண விதிகளும் எடுத்துக்காட்டுகளும் நூலில் கொடுக்கப்பட்டிருப்பதால் ஆசிரியர் மிக எளிதாகக் கற்பித்தல் கூடும்; நீண்ட நேரத் தயாரிப்புத் தேவையில்லை.

விதிவிளக்குமுறையில் சில குறைகளும் உள்ளன:

அ) கற்பித்தலில் தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல்வேண்டும் என்னும் உளவியற் கொள்கைக்கு இம்முறை முற்றிலும் மாறானது.

ஆ) ஆசிரியர் இலக்கண விதியை விரைவாகக் கற்றுக் கொடுத்துவிடலாம். ஆனால், மாணவர் விதியை நன்றாக அறிந்துகொண்டார்களா என்பதை உறுதியாகச் சொல்லமுடியாது.

இ) இம்முறையின்படி ஆசிரியர் சொல்வதை மாணவர் கேட்டுக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு வேலை செய்வதில்லை. ஆதலால், கற்பிக்கப்படும் இலக்கண அறிவு நெடுநாள்களுக்கு நிலைத்திருக்குமெனச் சொல்வதற்கில்லை.

விதிவிளக்குமுறை, விதிவருமுறை ஆகிய இருமுறைகளிலும் குறைகளும் நிறைகளும் உள்ளன. ஆசிரியர் இலக்கணப் பாடத்தைக் கற்பிக்கும்பொழுது ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற முறையைக் கையாளுதல்வேண்டும். விதிவருமுறையும் விதி விளக்குமுறையும் கலந்ததொரு முறைப்படி கற்பித்தலும் நலம் பயப்பதாகும்.

ஒன்றுமுத லீரைந் தாயிரங் கோடி
எண்ணிறை யளவும் பிறவரிற் பத்தின்
ஈற்றுயிர் மெய்கெடுத் தின்னு மிற்றும்
ஏற்ப தேற்கு மொன்பது மினைத்தே. - (நன்: 197)

1. இந்நூற்பாவைப் பிரித்தெழுதுக.
2. இந்நூற்பாவை விதிவிளக்குமுறையில் விளக்குக.
3. 11, 12, 13, 25, 30, 68, 99, 101,300, 400, 500, 800, 999, 10000, 60000 ஆகிய எண்களுக்கு எண்ணுப் பெயர்களை எழுதுக.
4. ஒன்றுமுதல் ஓரிலக்கம் வரை எண்ணுப்பெயர்களை எழுதுக.
5. ஒவ்வொன்று, இவ்விரண்டு, நந்நான்கு, ஐவைந்து, அவ்வாறு, பப்பத்து, மூவொன்று, மூவெடை, மூவுழக்கு, மூவுலகு, முத்தமிழ், முப்பது, முக்கழஞ்சு, முந்நாழி, மும்மொழி, ஒருபது, பன்னிரண்டு, இருபது, ஒன்பதினாயிரம், நாலாயிரம், நால்வகை, நாலொன்று, நானாழி, நான்மணி, நாற்கவி, ஐந்நூறு, பதினாயிரம், அறுபதினாயிரம், எண்குணம், எண்கலம், ஓராயிரம், ஈராயிரம் - இவ்வெண்ணுப் பெயர்களைப் பற்றிக் கலந்துரையாடுக.

| விதிவிளக்குமுறை - விதிவருமுறை இரண்டுக்குமுள்ள வேறுபாடுகள் | |
|---|---|
| **விதிவிளக்குமுறை** | **விதிவருமுறை** |
| 1. பொது விதியைக் கூறி எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது. | 1. எடுத்துக்காட்டுகளைக் கூறி அவற்றினின்றும் பொதுவிதியை அமைக்கிறது. |
| 2. புதிய அறிவு முதலிலேயே வழங்கப்படுகிறது. | 2.பாடமுடிவில்புதியஅறிவு பெறுகின்றனர். |
| 3. விரைவாகக் கற்பிக்கலாம். காலச்செலவு குறைவு. | 3. மெதுவாகச் செல்லும் முறை. நேரம் அதிகமாகும். |
| 4. பெறும் இலக்கண அறிவு உறுதியாக நிலை பெற்றிருக்கும் எனக் கூற முடியாது. | 4. பெற்ற இலக்கண அறிவு உறுதியாக நிலைபெற்றிருக்கும். |
| 5. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குச் செல்லுதல் முதலிய உளநூற் கொள்கைகளுக்கு ஏற்றமுறை யன்று. | 5. உளநூல் கொள்கைகளுக்கு ஏற்றமுறை |
| 6. சுயசிந்தனைக்கு இடமில்லை. | 6. சிந்தனை செய்து பொதுவிதியைக் கண்டுபிடிப்பதால் தன்னம்பிக்கையை வளர்க்கின்றது. |
| 7. இலக்கண நூலில் உள்ள நூற்பாவினையும் எடுத்துக்காட்டுகளையும் கூறுவதால் ஆசிரியர் வேலை எளிதாகின்றது. | 7. மாணாக்கர் தம் வயதுக்கும் அறிவு நிலைக்கும் ஏற்ப எடுத்துக்காட்டுகளைத் தயாரிக்கவேண்டியிருப்பதால் ஆசிரியருக்கு வேலை அதிகமாகின்றது. |

## 4. துணைப்பாடங் கற்பித்தல்

மாணவர்களுக்குப் பல்துறைப் பயிற்சியும் இலக்கிய ஆர்வமும் பெருகுவதற்குத் துணை புரிபவை துணைப்பாட நூல்களாகும். துணைப்பாட நூல்கள், நூலக நூல்கள்முதலியன அகன்ற படிப்புக்கு உரியனவாகும். கல்விக்கூடங்களில் ஆறாம் வகுப்பிலிருந்தே ஆழ்ந்து பயிலும் பாட நூல்களோடு மாணவர்களின் சிந்தனையை வளர்க்கத்தக்க துணைப்பாட நூல்களும் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் துணைப்பாடங் கற்பித்தலின் நோக்கம், கற்பிக்கும்முறை ஆகியவை பற்றி அறிந்துகொள்வது மிகவும் தேவையானது.

### துணைப்பாடங் கற்பித்தலின் நோக்கங்கள்

#### 1. மொழியறிவு வளர்த்தல்

மாணவர்கள் துணைப்பாட நூல்களில் கதைகள், வாழ்க்கை வரலாறுகள், அறிவியற் கண்டுபிடிப்புகள் முதலிய பிற செய்திகளையும் படிக்கின்றனர். அப்பகுதிகளில் புதிய சொற்கள் பல இடம் பெறலாம். அவற்றை இடம்நோக்கிப் பொருளறிந்து மேலும் படிக்கின்றனர். அகராதியைப் பார்த்துப் பொருளறிகின்றனர். ஆசிரியரைக் கேட்டும் பொருளறிகின்றனர். இதனால், அவர்களது சொற்களஞ்சியம் விரிவடைகின்றது; மொழியறிவு வளர்கின்றது. இவ்வாறு மொழியறிவு வளர்த்தல் துணைப்பாட நூலின் ஒரு நோக்கமாகும்.

### 2. விரைவாகப் படிக்குந்திறன் வளர்த்தல்

துணைப்பாட நூலை வகுப்பில் கற்பிக்கும்பொழுது மாணாக்கர் வாய்க்குட் படிக்கின்றனர். ஆசிரியர் திட்டமிட்டபடி கால வரையறை செய்து, இத்தனை நிமிடங்களுக்குள் இத்தனை பக்கங்களைப் படித்தல்வேண்டும். படித்து முடித்ததும் வினாக்களுக்கு உரிய விடைகள் அல்லது செய்திச் சுருக்கங் கூறவேண்டுமென அறிவிப்பதால் மாணாக்கர் போட்டி மனப்பான்மையோடு படிப்பில் ஈடுபடுவர். தம்மையறியாமலேயே அவர்கள் விரைந்து படிக்குந்திறன் பெறுவர். இவ்வாறு விரைந்து படிக்குந் திறனைத் துணைப்பாடங்களின் வாயிலாக வளர்த்தலை ஒரு நோக்கமாகக்கொண்டு அதற்கேற்பப் பயிற்சியளித்தல்வேண்டும்.

### 3. வாய்க்குட் படிக்குந்திறன் வளர்த்தல்

தொடக்கநிலையில் மாணவர் எழுத்துகளைப் பார்த்து ஒலித்துப் படிக்கக் கற்றுக் கொள்கின்றனர். உயர்நிலைக்கு வரவரப் படிக்க வேண்டியதனைத்தையும் வாய்விட்டுப் படித்தறிதல் என்பது முடியாததொரு செயலாகும். வாய்க்குட் படித்தலின்மூலம் பிறருக்கு இடையூறு ஏற்படாமல் மிகுதியான பகுதிகளை விரைவாகப் படிக்கலாம். ஒலி உறுப்புகளுக்குச் சோர்வு ஏற்படுவதில்லை. கருத்தூன்றல், பொருளுணர்தல் முதலியவற்றில் கவனம் மிகும். தன்னம்பிக்கையும் தன்முயற்சியும் ஏற்பட வழியுண்டு. ஆதலால், வாய்க்குட் படித்தல் திறன் மாணவர்பெற நாம் பள்ளியில் பயிற்சியளித்தல் வேண்டும். அப்பயிற்சிக்குத் துணைப்பாடங் கற்பித்தல் முறையை நன்கு பயன்படுத்தவேண்டும். எனவே, வாய்க்குட் படித்தல் திறன் வளர்த்தலைத் துணைப்பாட நூல்களைக் கற்பிக்கும்பொழுது ஒரு நோக்கமாகக் கொள்ளுதல் வேண்டும்.

### 4. தன்னம்பிக்கை வளர்த்தல்

ஆர்வத்துடன் நூல்களைப் படிப்பதாலும், பல்துறை நூல்களைப் படித்து அறிவுபெறு வதாலும், பலரது வாழ்க்கை வரலாறுகளைத் தாமே படித்துச் செய்தியறிவதாலும் மாணாக்கர்க்குத் தன்னம்பிக்கை வளர்கின்றது. பின்னர், நூலகஞ் சென்று மேலும் பல நூல்களைப் படிக்குந் திறமை பெறுகின்றனர். இவ்வாறு மாணாக்கரிடம் தன்னம்பிக்கையை வளர்த்தல் துணைப்பாட நூல் களின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

### 5. படிப்பில் ஆர்வமூட்டல்

துணைப்பாட நூல்களில் இடம்பெற்றுள்ள கதைகள், வரலாறுகள் ஆகியவற்றில் சிறுசிறு பகுதிகளைக் கூறிப் பிறவற்றை மாணாக்கரே படித்தறியும்படி ஆர்வத்தைத் தூண்டலாம். எடுத்துக்காட்டாக, "நமக்கு அதிகம் உதவுவது குடையா, செருப்பா" என்னும் வினாவை எழுப்பி, உரையாடி, 'வேண்டாதவர் நட்பு' என்னும் கதையைப் படியுங்களென ஆறாம் வகுப்புக் குழந்தைகளுக்குக் கூறலாம். இதுபோன்றே தேசிங்குராஜன், பகத்சிங், அண்ணா போன்றோர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறி, எட்டாம் வகுப்பு மாணாக்கரைத் துணைப்பாட நூலைப் படிக்கச் செய்யலாம். அவர்கள் முழு விவரம் அறிய ஆர்வத்தோடு படிக்கத் தொடங்குவர். இவ்வாறு படிப்பில் ஆர்வமூட்டச் செய்வது துணைப்பாட நூல்களின் நோக்கமாகும்.

### 6. கருத்துணர் திறன் வளர்த்தல்

படிக்கக் கற்றுக்கொண்ட மாணவர் ஒரு பகுதியைப் படித்ததும் அதில் கூறப்பட்டிருக்கும் கருத்தை யறிந்து கொள்ளுந்திறன் பெறுதல்வேண்டும். செய்முறை வேலைகளைச் செய்தல், திறன்களை வளர்த்துக்கொள்ளுதல், கருத்துகளைப் பெறுதல் முதலியனவற்றிற்காக மாணவர் நூல்களைக் கற்கின்றனர். எனவே, படிப்பு பலவற்றைக் கற்றுக்கொள்ளப் பயன்படுகிறது. இதனையே கல்வி வல்லார் ஒருவர், 'குழந்தை முதலில் படிக்கக் கற்றுக்கொள்கிறது'. பின்னர்க்

கற்றுக்கொள்ளப் படிக்கிறது. (At first the child learns to read, then reads to learn) எனச் சுவையாகக் கூறியுள்ளார். இவ்வாறு அறிவை வளர்த்துக்கொள்ளப் படிக்கும் பகுதியின் கருத்து உணர்ந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். இத்திறனை வளர்க்கத் துணைப்பாட நூல்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துதல்வேண்டும்.

### 7. பல்துறை அறிவினைப் பெறுதல்

'கல்வி கரையில' என்னுந் தொடருக்கேற்ப நாடோறும் பல்விதமான அறிவியல் நூல்களும் கதை நூல்களும் உலகச் செய்திகள் பற்றிய நூல்களும் உடல்நலம் பேணும் நூல்களும் வெளிவந்த வண்ணமுள்ளன. அத்தகைய நூல்களுள் மாணாக்கர் அறிய வேண்டியவற்றைத் தேர்ந் தெடுத்துத் தொகுத்து எளிமையாக்கித் துணைப்பாட நூல்களாக அமைக்கின்றனர். அதனால், மாணாக்கரது பல்துறை அறிவு பெருகுகின்றது. இவ்வாறு பல்துறை அறிவினை வளர்த்தலும் துணைப்பாட நூல்களின் நோக்கமாகும்.

### 8. கற்பனைத் திறன் வளர்த்தல்

துணைப்பாட நூல்களில் மாணாக்கர் சிறுகதைகளையும் அறிவியற் கண்டுபிடிப்பு களையும் படிக்கின்றனர். அவ்வாறு படிக்குங்கால் கதையாசிரியருடைய கற்பனையை இவர்கள் படித்து அறிகின்றனர். இது மீளாக்கக் கற்பனையாம். இவ்வாறு மீளாக்கக் கற்பனையில் பல தடவை ஈடுபட்ட மாணாக்கர் தாமே கற்பனை செய்யவும் தொடங்குவர். இவ்வாறு அவர்கள் கற்பனைத் திறன் வளரத் துணைப்பாட நூல்கள் பெரிதும் உதவுகின்றன. இதனை ஒரு சிறப்பு நோக்கமாகக் கொள்ளலாம்.

### 9. சுருக்கியெழுதுந் திறன் வளர்த்தல்

துணைப்பாட நூல்களைப் படித்து அவற்றில் குறிப்பிட்ட தலைப்பிலுள்ள செய்திகளைச் சுருக்கி முறையாக எழுதுந்திறனை வளர்த்தலும் துணைப்பாட நூல்களின் மற்றொரு நோக்கமாகும். இதில் பயிற்சியளிப்பதற்காக ஒவ்வொரு துணைப்பாட நூலின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரைப் பயிற்சிக்குரிய தலைப்புகளோடு மேலும் சில தலைப்புகளை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

### 10. பத்தியின் மையக்கருத்து அறிதல்

வருணனைகளை விடுத்து இன்றியமையாச் செய்திகளைத் திரட்டிக் கொள்ளுதல், முறையாகக் கட்டுரை வடிவில் எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சியளிப்பதன்மூலம் இந்நோக்கத்தை நிறைவேற்றலாம்.

### 11. சொற்களஞ்சிய விரிவு

சொற்களஞ்சியம் அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்துஞ் சொற்களஞ்சியமென இரண்டு வகைப்படும். அறிந்த சொற்களஞ்சியத்தை விரிவடையச் செய்தல் துணைப்பாட நூல்களின் தலையாய நோக்கமாகும். ஒரு சொல்லுக்கு நேராக உள்ள பொருளை விளக்கிக் கூறமுடியாத நிலையிலும் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடம்நோக்கி, அதன் பொருளை ஒருவர் அறிந்துகொள்ளுதல்வேண்டும். இவ்வகையான திறனை வளர்த்துத் துணைப்பாட நூல்கள் சொற் களஞ்சியத்தை விரிவடையச் செய்யும்.

### 12. ஓய்வுநேரத்தை நன்கு பயன்படுத்தி மகிழ்தல்

மாணாக்கருக்கு வீட்டில் மிகுதியான ஓய்வுநேரங் கிடைக்கும். வகுப்பில் துணைப்பாட நூல் தொடர்பான சிறுசிறு செய்திகளைக் கூறி ஆர்வமூட்டியிருப்பதால், வீட்டில் தமது ஓய்வு நேரத்தில் அவற்றைப் படிப்பர். இவ்வாறு ஓய்வுநேரத்தில் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி

விட்டால் எப்பொழுது ஓய்வு கிடைத்தாலும் மேன்மேலும் நூல்களைப் படிக்க எண்ணுவர். இதனால், அவர்களது சொற்களஞ்சியம் பெருகுவதுடன் பல்துறை அறிவையும் பெறுவர். இவ்வாறு ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்துவதில் பயிற்சிபெறத் துணைப் பாடநூல்கள் உதவும். அப்பயிற்சி அளிப்பதைத் துணைப்பாடங் கற்பிப்பதன் நோக்கமாகக் கொள்ளுதல் வேண்டும்.

### 13. மூல நூல்கள் - அகராதிகள் பயன்படுத்துந்திறன் வளர்த்தல்

துணைப் பாடநூல்களில் மேற்கோளாகச் செய்யுள்களோ உரைநடைப் பகுதிகளோ காட்டப் பெறலாம். மாணவர் மூலநூலைப் பார்த்து, அச்செய்யுள்கள் அல்லது பகுதிகள் வரும் இடங்களை அறிந்து அவற்றைப் படித்தல் நன்று. ஒரு நூலிலிருந்து மேற்கோள் பகுதிகளை ஆசிரியர் எவ்வாறு கையாள்கிறார் என அறிவதுடன், தாமும் அவ்வாறு மேற்கோள்களை எழுதும் ஆற்றலைப் பெறுவர்.

புதிய பாடத்திட்டத்தின்படி நடுநிலைப் பள்ளிப் பருவத்திலேயே மாணவருக்கு அகராதி பார்த்துப் பொருளறியும் பழக்கம் ஏற்படுத்துதல்வேண்டும். அத்திறன் வளர்க்கத் துணைப்பாட வகுப்பே ஏற்றதாகும். துணைப்பாட நூலில் உள்ள அறியாத புதிய சொற்களுக்கு அகராதியைப் பார்த்து அவர்களையே பொருளெழுதும்படி செய்யலாம். ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களில் அந்த இடத்துக்கேற்ற பொருளையறியுந் திறன் வளரும். ஒரு சொல்லின் பல பொருள்களையும் அறிவதால் மறைமுகமாகச் சொற்களஞ்சியமும் விரிவடையும். அகராதி பார்த்துப் பொருளறியுந் திறனும் வளரும்.

### துணைப்பாடங் கற்பிக்கும் முறை

தமிழ்மொழிப் பாடத்துக்குத் துணையாக அமைந்ததொரு நூல்தானே எனக் கருதி, மாணவர்களைத் துணைப்பாட நூலின் ஒரு பகுதியை வீட்டில் படித்துவரச் சொல்லி, வகுப்பில் கட்டுரை எழுதச் செய்கின்றனர். இம்முறையைப் பின்பற்றுவதால் மாணவருடைய விரைவாகப் படித்தறியுந் திறனைத் திட்டமிட்டு வளர்த்தல் இயலாது. துணைப்பாட நூல் வைக்கப் பெற்றதன் நோக்கங்கள் நிறைவேறப் பின்வரும் கற்பிக்கும் முறைகளைப் பின்பற்றலாம்.

#### 1) செய்திகளைக் கூறி ஆர்வமூட்டல்

துணைப்பாடநூலை முதன்முதலாகப் படிக்கத் தொடங்கும் முன் தகுந்த செய்திகளைக் கூறி நூலைப் படிப்பதற்கு ஆர்வமூட்டவேண்டும்.

#### 2) சரியான வேகத்தில் மாணவர் படித்தல்

திட்டமிட்டபடி மாணவர்களை எந்தப் பக்கம்முதல் எந்தப் பக்கத்தில் எந்தப் பத்திவரை படிக்கவேண்டுமெனக் கூறுதல்வேண்டும். எத்தனை நிமிடங்களில் படிக்கவேண்டுமெனக் கூறுதல்வேண்டும். ஆறு, ஏழாம் வகுப்புகளில் ஒரு பக்கத்தைப் படிக்க மாணவர்களுக்கு 2 நிமிடம்முதல் 3 நிமிடநேரமாகலாம். மேல் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல நேரத்தைக் குறைக்கலாம். குறித்த நேரத்திற்குள் மாணவரைப் படிக்கச் செய்தல்வேண்டும். மாணவரை அவர்களின் இல்லத்திலேயே முன்னதாக ஒருமுறை படித்து வரச் செய்யலாம்.

#### 3) வினாக்கள் கேட்டுக் கருத்து எழுதுதல்

குறிப்பிட்ட சிறிய பகுதியைப் படித்த பின்னர், அப்பகுதியின் தலைப்பையும் பத்திகளின் மையக் கருத்தையும் தகுந்த வினாக்கள்மூலம் வரவழைத்துக் கரும்பலகையில் முறையாக எழுதி வரல்வேண்டும். இறுதியில், இது கட்டுரை எழுதுவதற்கேற்ற குறிப்புச் சட்டகமாக அமையும்.

**4)கருத்தை விளக்குதல்**

பொதுக்கருத்தை எழுதிய பின்னர், மேற்கோள் செய்யுள், பழமொழிகள், கதைக் குறிப்புகள் ஆகியவற்றை மாணவர் அறிந்துள்ளனரா எனத் தகுந்த வினாக்கள்மூலம் அறிதல்வேண்டும். மாணவர் அறிந்துகொள்ளவில்லையென அறிந்தால் ஆசிரியர் விளக்குதல் வேண்டும். இவ்வாறே குறிப்பிட்ட பிற பகுதிகளைக் கற்பிக்கவேண்டும்.

**தொகுத்துக் கூறல்**

மாணவர் கூறும் விடைகளை அவர்களையே தொகுத்துக் கூறச் செய்தல்வேண்டும். மாணவர் தொகுத்துக் கூறுவதற்கேற்ற வினாக்களை ஆசிரியர் கேட்கலாம். இல்லையேல், ஆசிரியரே செய்திகளைத் தொகுத்துக் கூறலாம்.

**சுருக்குதல்**

தொகுத்த செய்திகளைக் குறிப்பிட்ட தலைப்பின்கீழ்ச் சுருக்கிக் கூறச் செய்தல் வேண்டும். இவ்வாறு பயிற்சியளிக்கும்பொழுது பத்தித் தலைப்பையும், பத்தியில் இடம்பெறும் இன்றியமையாக் கருத்துகளையும் மாணவர் அறிவர். இது முறையாக, கோவையாக அமையும்படி பார்த்துக் கொள்ளல்வேண்டும்.

**புதிய சொற்களை விளக்குதல்**

துணைப்பாட நூலில் இடம்பெற்றுள்ள புதிய சொற்களை ஆசிரியர் விளக்கும்போது, மாணவர் அறிந்துகொள்வர். அப்பொழுதே அவர் அவற்றைக் கரும்பலகையில் எழுதுதல் நன்று. மாணவரும் தம் குறிப்பேட்டில் எழுதி வைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று அகராதியைப் பார்த்து மீண்டும் பொருளறிதல் வேண்டும். அவ்வாறாயின், அவர்களது சொற்களஞ்சியம் பெருக வாய்ப்புண்டு.

**5) கட்டுரை எழுதுதல்**

வகுப்பில் தயாரிக்கப் பெற்ற குறிப்புச் சட்டகத்தை வைத்துக்கொண்டு மாணவரைக் கட்டுரை எழுதச் செய்தல்வேண்டும். இவ்வாறு நடுநிலைப்பள்ளி நிலையில் ஆசிரியர் வழிகாட்டியாக இருந்து குறிப்புச் சட்டகம் தயாரித்தால்தான் உயர் வகுப்புகளில் மாணவர்களே ஒரு நூலைப் படித்துக் குறிப்புகளைத் தயாரிக்கவியலும். இம்முறையில் துணைப்பாடங் கற்பித்தால், கற்பிக்கும் நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும்.

## 5. தொகுப்புரை

இவ்வியலில், தமிழிலக்கிய வடிவங்களான செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் ஆகியவற்றின் தன்மைகள், வகைகள், கற்பதன் நோக்கங்கள், மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறைகள் முதலியன விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் முதலியவற்றை விளக்க மொழிப் பயிற்சிகளும் எடுத்துக்காட்டு களுடன் விளக்கப்பட்டுள்ளன. பாடங்களைக் கற்பித்தல் என்னும் இவ்வியலின் வாயிலாக மாணவ ஆசிரியர் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் ஆகியவற்றைக் கற்பிக்குந் திறனைக் கைவரப் பெறுவர். செய்யுளின் நயமறிந்து போற்றுவர். உரைநடைத் திறமறிந்து பின்பற்றுவர். இலக்கணத்தின் இனிமையை அறிவர். துணைப்பாடத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவர். மொத்தத்தில் சிறந்த மொழியாசிரியராகத் திகழ்வர் என்பது வெளிப்படை.

# 4. பயிற்றுமுறைகள்

## அறிமுகம்

நாம் செய்திகளை அறிந்துகொள்ளுதல் ஒரு நிலை. ஆனால், அச் செய்திகளைப் பிறர் அறியுமாறு பயிற்றுதல் வேறு நிலை. அவ்வாறு பயிற்றுவதற்குப் பல்வேறு முறைகளைப் பின்பற்றலாம். பல்வகையான கற்பித்தல் முறைகள் உலகெங்கும் பின்பற்றப்பட்டு வருகின்றன. கற்பித்தல் நோக்கம், பாடப்பொருள், மாணவர் எண்ணிக்கை, தேவை, கற்பிக்குங்காலம், சூழலுக்கேற்ப மேற்குறிப்பிட்ட முறைகளில் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்து ஆசிரியர் கற்பிக்கவேண்டும். அப்போதுதான் மாணவர்தம் கற்றலடைவு சிறப்புறும். எல்லாக் கற்பித்தல முறைகளிலும் நிறைகளும் உண்டு; குறைகளும் உண்டு. இம்முறைதான் சிறந்ததென யாரும் உறுதியாகவோ அறுதியிட்டோ கூறவில்லை. வரலாறு, புவியியல், அறிவியற் பாடங்கள் பாடப்பொருள் பாடங்கள். மொழிப்பாடம் திறன் வளர்க்கும் பாடமாகும். பள்ளி நிலையில் மொழிப்பாடத்தில் திறன்கள் வளர்ப்பதற்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமேயன்றிப் பாடப்பொருளுக்கன்று. இத்திறன்களை வளர்ப்பதற்கேற்ற பயிற்றுமுறைகளாக விரிவுரைமுறை, நடிப்புமுறை, விளையாட்டுமுறை, கலந்துரையாடல் முறை, செயல்திட்ட முறை, ஒப்படைப்புமுறை, செயல்வழிக் கற்றல் முதலிய பயிற்றுமுறைகளைப் பற்றியும் பல்வகுப்புக் கற்பித்தல், கற்பித்தலில் தொழில்நுட்பம், தொடர்செயல், கற்றல் கற்பித்தல் பொருள்கள் ஆகியன பற்றியும் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

**படிநிலைகள்**

1. விரிவுரைமுறை
2. நடிப்புமுறை
3. விளையாட்டுமுறை
4. செயல்திட்ட முறை
5. ஒப்படைப்புமுறை
6. செயல்வழிக் கற்றல்
7. பல்வகுப்புக் கற்பித்தல்
8. கற்பித்தலில் தொழில் நுட்பம்
9. தொடர் செயல்
10. கற்றல் கற்பித்தல் பொருள்கள்
11. தொகுப்புரை

## 1. விரிவுரை முறை

கல்வியுலகில் பெரும்பாலானோரால் கையாளப்படும் கற்பித்தல்முறை விரிவுரை முறையாகும். மேனிலை, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் இம்முறை பின்பற்றப்படுகிறது. உயர்கல்வி மாணவர்கள் கல்வியறிவும் வயதுக்கேற்ற பட்டறிவும் பெற்றவர்களாதலால் கூறும் கருத்துகளைக் கற்பனை செய்யவும் விளங்கிக் கொள்ளவும் இயலும் என்பதாலேயே விரிவுரை முறையைக் கையாளுகின்றனர். இம் முறையின் வாயிலாகப் பெருங்குழுக்களுக்கு எளிமையாகக் கற்பிக்கலாம். நாற்பது மாணவர்கள்முதல் இருநூறு மாணவர்களுக்கு ஒரே நேரத்தில் விரிவுரை முறையில் கற்பிக்கலாம்.

**முன்னேற்பாடு**

ஒரு மணிநேரம் அல்லது ஒரு பாடவேளைக்கான விரிவுரை தயாரிப்புக்குக் குறைந்தது நான்கு மணி நேரமாவது பாடுபட்டுத் தலைப்பு/பாடப்பொருளுக்கேற்ற கருத்துகளைத் தொகுக்க வேண்டும். தேடித் தொகுத்தவற்றை, வகைப்படுத்தி, முறைப்படுத்தி, முன்னுக்குப்பின் முரணில்லாமல் கோக்கவேண்டும். விரிவுரைக்குத் தேவையான குறிப்புகளைக் கையடக்கத் தாளில் எழுதிக்கொள்ளவேண்டும். இக் குறிப்புகளைக்கொண்டு எச்சூழலிலும் சிறப்பாகக் கற்பிக்கலாம். அல்லது, நடைமுறைக்கேற்றவாறு ஒளியூடுருவுத் தாள் (Transparency sheets), நழுவங்கள்(Slides), கணினி நழுவங்கள்( Power Point), காட்சிப் படங்கள், கருத்துப் படங்கள், வரைப்படங்கள், புள்ளி விவரங்கள் முதலியவை கொண்டும் கற்பிக்கலாம்.

**விரிவுரையாற்றும் முறை**

விரிவுரைமுறையில் மாணவர்களின்/கேட்போரின் வயது, மனநிலை, பாடப்பொருள், ஆகியவற்றை மனத்திற் கொள்ளவேண்டும். வகுப்பறைக்கேற்ற, அனைவரும் அறிந்த எளிமை யான சொற்களையே பயன்படுத்தவேண்டும். இடத்திற்கேற்பவும் கருத்துக்கேற்பவும் உள்ளூர் மொழிவழக்குகளைப் பயன்படுத்தலாம்.

விரிவுரை தங்குதடையில்லாமல் ஆற்றோட்டமாகவும் கேட்போரின் ஏற்குந்திறனுக் கேற்றவாறும் இருக்கவேண்டும். கவனச்சிதறல் ஏற்படாவண்ணம் விரிவுரையாற்றுவதும் கவனச் சிதறல் ஏற்பட்டால் ஒருமுகப்படுத்துவதும் விரிவுரையாளரின் கடமையாகும். ஒரு கருத்தை விளக்கிய பிறகே அடுத்த கருத்துக்குச் செல்லவேண்டும்.

விரிவுரைமுறையில் இடையிடையே ஐயங்களை எழுப்ப, வினாக்கள் கேட்க இடந் தருவதோ அல்லது விரிவுரைக்குப்பின் இடமளிப்பதோ விரிவுரையாற்றுபவரைப் பொருத்ததாகும். எப்படியிருப்பினும் கற்போருக்கு/கேட்போருக்கு ஏற்படும் ஐயங்களையும் வினாக்களையும் கேட்பதற்கான நேரத்தை ஒதுக்கவேண்டும். இல்லையெனில், அவர்களுக்கு மனநிறைவு ஏற்படாது. மேலும், விரிவுரையாற்றுபவர் கேட்போரின் கற்றலடைவையும்/ தான் கூறிய கருத்தடைவையும் இதன்வழி அறிந்துகொள்ளலாம்.

**நிறைகள்**

- ஒரே நேரத்தில் அதிகமானோர்க்குக் கற்பிக்கலாம்.
- கல்வியறிவும் பட்டறிவும் மிக்கவரிடமிருந்து கற்பதால் ஈர்ப்பும் வியப்பும் கேட்போர்க்கு ஏற்படுகிறது.
- சிந்தனையைத் தூண்டுவதாக இருக்கிறது.
- தேவையான விளக்கங்களைக் கேட்டுப்பெற வாய்ப்பளிக்கப்படுகிறது.
- வினாக்கள், ஐயங்கள் கேட்க நேரம் ஒதுக்கப்படுகிறது.

**குறைகள்**

- அனைவரும் சிறப்பாக விரிவுரையாற்றுவர் எனக் கூற முடியாது.
- விரிவுரைக்கு முன்தயாரிப்புப் பணிகள் அதிகம். தேவையான நூல்கள் கிடைப்பதரிது.
- அனைவரும் முன்தயாரிப்போடு சிறப்பாக விரிவுரையாற்றுவர் என எதிர்பார்க்க முடியாது.
- விரிவுரைமுறை ஒருபோக்கினதாக அமைகிறது.
- பெருங்குழுக் கற்றலால் கேள்விகள் கேட்க அனைவருக்கும் வாய்ப்போ நேரமோ இல்லை.

- குறிப்பிட்ட நேரத்திற்குள் விரிவுரையை முடிக்கவேண்டும் என்பதால், தான் தொகுத்தவற்றை யெல்லாம் கூறிவிடவேண்டும் எனும் வேகத்தோடு விரிவுரையாற்றுவர்.
- வினாக்கள், ஐயங்கள் கேட்கக் குறைந்த நேரமே ஒதுக்கப்படுவதால், அனைவருக்கும் வாய்ப்பில்லாமல் போகிறது.
- மின்சாதனத் துணைக்கருவிகளைப் பயன்படுத்தவியலா/செயல்படா நிலை ஏற்படலாம்.
- அனைவருக்கும் கற்றல் சென்றடைந்தது எனக் கூற முடியாது.
- கவனச் சிதறலுக்கு வாய்ப்பு அதிகம். பெருங்குழுவாதலால் கட்டுப்படுத்துவது கடினம்.
- ஒரு சிலரே முழு நிறைவோடு கற்றிருப்பர்.
- விரிவுரையாற்றுபவருக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது.

> பெண் கல்வி பற்றிப் பதினைந்து நிமிடம் பேசக் குறிப்பெடுத்து விரிவுரையாற்றுக.

## 2. நடிப்பு முறை

நடிப்பு என்பது ஒன்றைப்போலவோ ஒருவரைப்போலவோ செய்யும் ஓர் உயர்ந்த கலையாகும். குழந்தைகளின் உலகம் கற்பனை உலகமாகும். பள்ளிக் குழந்தைகள் ஆசிரியர் போல் நடித்தல், யானைபோல் நடத்தல், முயல்போல் குதித்தல், சிங்கம்போல் முழங்குதல், நாய்போல் குரைத்தல், காகம்போல் கரைதல் முதலியனவற்றைச் செய்து காட்டுவதில் பேரின்பம் அடைவர். வகுப்பு நிலைக்கேற்ப விலங்குகள், பறவைகள், தலைவர்கள், நாடக உறுப்பினர்கள், மாவீரர்கள்போல் உடலசைவுகளோடு, குரலேற்றத்தாழ்வோடு நடிக்கும்போது அவர்கள் திறன் பெறுவதோடு பார்ப்பவர்களின் உணர்ச்சிகளையும் தூண்டுவதாய் நடிப்புமுறை அமைகிறது. நடிப்புமுறையைப் பயன்படுத்திக் கற்றலை எளிமையாக்கலாம். இப்பயிற்சியினால் மற்றவர் நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும் மனநிலை ஏற்படுகிறது. பாடப்பொருள், திறனுக்கேற்பக் கதை மாந்தர்களாக மாணவர்களை ஆசிரியர் நடிக்கச் செய்து கற்றலை மேம்படுத்தலாம்.

### நடிப்புமுறையைக் கையாளுதல்

நல்ல குரல்வளமும் குரலேற்றத் தாழ்வும் உணர்ச்சி வெளிப்பாடும் உடல்மொழியும் தங்குதடையற்ற சொல்லாட்சியும்கொண்டு ஆசிரியர் நடித்துக் காட்டவேண்டும். வகுப்பறைக் கற்பித்தலில் கருத்திற்கேற்ற உடைகளோ ஒப்பனைகளோ இல்லையென்றாலும் காட்சிப்படுத்தும் ஆற்றலோடு கருத்தை வெளிப்படுத்திக் கற்பிக்கவேண்டும். பல்வேறு மொழித்திறன்களை ஒருங்கே வெளிப்படுத்த நடிப்புமுறையைவிடச் சிறந்தமுறை வேறெதுவும் இல்லை யெனலாம்.

நடிப்பில் மொழித்திறன்கள் பல வெளிப்படுவதால் ஒவ்வொரு மாணவனுக்கும் ஏதேனும் ஒரு கருத்தைக் கொடுத்து நடிக்க வாய்ப்பளிக்கவேண்டும். அச்சம், கூச்சம், மேடைப்பயம் போக்கிக் கொள்ள இந் நடிப்புமுறைக் கற்பித்தல் பேருதவி புரியும். நடிப்புமுறையில் ஆசிரியர் முன்மாதிரி யாகக் கற்பித்தால் மாணவர்களும் முன்வந்து நடிப்பு முறையைப் பின்பற்றிக் கற்றுக்கொள்வர்.

### நடிப்புமுறையில் எழுத்துத்திறன் வளர்ச்சி

நாடகத்தை அறிவிப்பதற்கான முன்னுரை எழுதுதல், நாடகப்பகுதிக்கான உரையாடல்கள் எழுதுதல், காட்சி விளக்கம் எழுதுதல், பாடல்கள் எழுதுதல் ஆகியவற்றில் மாணவரை ஈடுபடுத்தி, அவர்களது எழுத்தாற்றலை வளர்க்கலாம்.

**நடிப்புமுறையில் பேசுதல் திறன் வளர்ச்சி**

நாடக உறுப்பினர் நிலைக்கு ஏற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பேசுதல், கோபம், வியப்பு, இரக்கம் முதலிய உணர்ச்சிகளுக்கு ஏற்பப் பேசுதல், வினா, வியப்பு வாக்கியங்களை அவற்றிற்குரிய ஒலிப்புடன் பேசுதல் முதலியவற்றில் மாணவர் ஈடுபடுவதால் அவர்களது பேசுதல் திறன் வளர்ச்சி பெறும்.

**நடிப்புமுறையில் மனப்பாட ஆற்றல் வளர்ச்சி**

நாடக உறுப்பினர் பேசும் உரையாடல்களையும் பாடும் பாடல்களையும் மாணவர் மனப்பாடஞ் செய்து நடிப்பதில் பங்கேற்பர். அதனால், அவர்களது மனப்பாட ஆற்றல் வளரும்.

**நடிப்புமுறையில் சொற்களஞ்சியப் பெருக்கம்**

நடிப்புக்காக மாணவர் நாடக உறுப்பினர் பேசும் உரையாடல்களை மனப்பாடஞ் செய்து கூறுவர். அவ்வாறு கூறுங்கால் அச்சொற்களை, தொடர்களைத் தகுந்த இடமறிந்து கூறுவர். சொற்களும் தொடர்களும் அவர்களுடையதாகின்றன. இதனால், அவர்களது சொற்களஞ்சியம் பெருகும்.

**நிறைகள்**

- நடிப்புமுறையினால் நினைவாற்றல், குரல் வளம் பெறுகின்றனர்.
- பலர் முன்னிலையில் ஆடிப்பாடி நடிப்பதால் அச்சம் கூச்சம் விலகிக் கதை மாந்தரோடு ஒன்றி நடிக்கும் ஆற்றலை மாணவர்கள் வளர்த்துக்கொள்கின்றனர்.
- மாணவர்கள் தாமே ஏற்று நடிப்பதால் பாடப்பொருளிலும் திறனிலும் கற்றலடைவு உறுதியாகிறது.
- கதையோடு ஒன்றிவிடுவதாலும் கதை உறுப்பினராகவே மாறிச் செயல்படுவதாலும் மனவெழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் தேவையான இடத்தில் வெளிப்படுத்தும் ஆற்றலும் திறனும் மாணவர்களுக்கு ஏற்படுகின்றன.
- உணர்ச்சியோடு நடிப்பதால் மாணவர்களுக்குச் சொற்றொடர்கள் மனத்தில் பதிந்து நிலைபெற்று விடுகின்றன.
- குரலேற்றத்தாழ்வு, உணர்ச்சிகளுக்கேற்ற குரல்வளம், மெய்ப்பாடுகள், உடலசைவுகள், நடை, உடை, செயல்களனைத்தும் மாணவனின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் ஏற்றதாக அமைகின்றன.
- மாணவர்தம் மனப்பாட ஆற்றலையும் சொல்லாட்சித் திறனையும் மொழியாற்றலையும் மொழியாளுமையையும் மொழிவளத்தையும் வெளிப்படுத்த உதவும்.

**குறைகள்**

- எல்லாப் பாடப்பொருள்களையும் நடிப்புமுறையில் கற்பிப்பது இயலாவொன்று.
- முயற்சியும் பயிற்சியும் காலமும் செலவினமும் அதிகமாகும்.
- மாணவர்கள் அனைவரையும் ஈடுபடுத்துவது வற்புறுத்தலுக்குட்படுத்தி விடும்.
- வகுப்பு வேளையில் செயல்படுத்துவது கடினமான செயல்.
- உரக்கப் பேசியும் பாடியும் நடிக்கவேண்டியிருப்பதால் பிற வகுப்புகளின் கவனஞ் சிதறும்.

கண்ணகி, கோவலன், மன்னன், அரசி - நான்கு உறுப்பினர் பங்கேற்கும்படியமைந்த கண்ணகி வழக்குரை காட்சியை நடித்துக் காட்டுக.

## 3. விளையாட்டு முறை

விளையாட்டில் ஆர்வமும் ஈடுபாடும் காட்டுவது குழந்தைகளின் இயல்பு. விளையாடுவதால் உடல் வளர்ச்சியடைவதோடு மகிழ்ச்சியும் மனநிறைவும் கூட்டுறவு மனப் பான்மையும் ஆளுமைத்திறனும் குழந்தைகளுக்கு ஏற்படுகின்றன. மேலும் எண்ணங்களை வெளிப் படுத்துதல், விதிமுறைகளுக்குக் கட்டுப்படுதல், ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுதல், திட்ட மிடுதல், தலைமையேற்றல், தன்முறை வரும்வரை காத்திருத்தல் முதலிய குணங்களை விளையாட்டு வாயிலாக மாணவர்கள் பெறுகின்றனர். பள்ளியில் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியிலும் விளையாட்டுகளை நடத்தலாம்.

> "எந்த விளையாட்டு எல்லாக் குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்ப்பதோடு ஒவ்வொருவரின் தனித்திறன் வளர்ச்சிக்கு உதவுகிறதோ அதுவே வகுப்பறைக்கேற்ற விளையாட்டு"
>
> - அமனஷ் வீலி

மொழி பயிற்றுவித்தலில் வகுப்பறை விளையாட்டுகளே பெரும்பாலும் விளையாடப் படுகின்றன. ஆசிரியரின் திறமை, திட்டமிடுதல், ஆர்வம், நோக்கம், பாடப்பொருளுக்கேற்பப் பல்வகை மொழி விளையாட்டுகளை அமைக்கலாம். இவ் விளையாட்டுகளின் வாயிலாகக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், சொற்களஞ்சியப் பெருக்கம், சொல்விளையாட்டுகள் முதலியவற்றை வடிவமைத்து மொழித்திறனை வளர்க்கலாம்.

பயிற்றுவிக்கும் பாடப்பொருள், பாடவேளை, சூழல் முதலியவற்றிற்கேற்ப மொழி விளையாட்டுகளை ஆசிரியர் திட்டமிடவேண்டும். விளையாடுவதற்குத் தேவையான பொருள்களைச் செய்து தொகுத்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு விளையாட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட திறன்கள் வெளிப்படினும் மொழித் திறனுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். மொழி விளையாட்டுகளை வகுப்பறைக்குள்ளேயே அமைத்துச் செயல்படுத்துவதே சிறப்பு.

மொழி விளையாட்டில் விளையாடுவோரின் எண்ணிக்கை, குழுவினருக்கான தலைவர், விளையாடும் முறை, விளையாட்டிலிருந்து வெளியேறுதல், விளையாட்டின் பயன், மதிப்பெண் வழங்குபவர், நடுவர் என விளையாட்டிற்கேற்ற விதிமுறைகளை வகுத்துக்கொள்ளவேண்டும். மொழி விளையாட்டில் சிந்திக்கவும் வெளிப்படுத்தவும் முன்னுரிமை அளிக்கவேண்டும். சிக்கல்கள் ஏற்படும்போது நடுவராக இருந்து ஆசிரியர் வழிகாட்டவேண்டும். தவறு செய்து வெளியேறும் போது தவற்றிற்கான காரணத்தைக் கூறி வெற்றிபெறுவதற்கு வழிகாட்டுபவராவும் ஊக்கமூட்டக் கூடியவராகவும் ஆசிரியர் திகழவேண்டும்.

### விளையாட்டுமுறையில் தமிழ் கற்பித்தல்

தொடக்கநிலை, நடுநிலைப் பள்ளிகளில் தமிழ்மொழி கற்பித்தலில் விளையாட்டு முறையை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை அறிந்துகொள்வோம். அவற்றைக் கருத்துடனும் நம்பிக்கையுடனும் திறமையுடனும் கையாண்டால் நல்ல பயனை எதிர்பார்க்கலாம்.

### தொடக்கநிலை வகுப்புகளுக்கு

#### 1. குறிப்பிட்ட எழுத்துகளை வட்டமிடல்

கரும்பலகையில் தா, நா, பா, நா முதலிய எழுத்துகளையும் தோட்டம், தாத்தா, நாள், நோய் என்பனவற்றையும் எழுதி, 'தா' எழுத்தை 'நா' எழுத்தை வட்டமிடு எனக் கூறுக.குழந்தைகள் 'தோட்டம்' என்னுஞ் சொல்லிலுள்ள 'தா' வரி வடிவத்தை வட்டமிட்டால் அது பிழையென்பதை உணர்த்தும்.

2. **படங்களின் பெயர்களில் ஓர் எழுத்து விடுபட்டிருக்க, அதனை எழுத்துகளிலிருந்து எடுத்து நிரப்பச் செய்தல்**

சேவல் படம் -வல் என இருக்கும். ‘சே’ என்பதை எடுத்து அமைத்தல்.

3. **படங்களையும் பெயர்களையும் பொருத்துதல்**

ஒரு வரிசைக் குழந்தைகளிடம் படங்களையும் மற்றொரு வரிசைக் குழந்தைகளிடம் பெயர்களையும் கொடுத்து ‘அணில்’ என்றதும் அணில் படமுள்ள குழந்தையும் ‘சொல்’(அணில்) உள்ள குழந்தையும் ஒன்றாக வந்து நிற்றல்.

4. **பொருள்களைப் பார்த்துப் பெயர் எழுதச் செய்தல்**

பல பொருள்களின் படங்கள் அடங்கிய பெரியதொரு படத்தைக் கொடுத்துக் குறிப்பிட்டதோர் எழுத்தில் தொடங்கும் பெயர்களை எழுதச் செய்யலாம். கப்பல், கண், கண்ணாடி ... முதலியன.

5. **பொது எழுத்தோடு சேர்த்து வாசித்தல்**

| | |
|---|---|
| கா | |
| பா | ய் |
| வா | |

6. **பொருத்துதல் விளையாட்டு**

| | |
|---|---|
| கைக்கு | தொப்பி |
| காலுக்கு | வளையல் |
| தலைக்கு | செருப்பு |
| விரலுக்கு | தோடு |
| | மோதிரம் |

7. **மாறியுள்ள எழுத்துகளைப் பொருள்தரும் சொல்லாக மாற்றுதல் (**மூன்று - நான்கு எழுத்துகள் மட்டும்)

ல்ப்பக - கப்பல்

டல்க - கடல்

8. **எழுத்துக் கூட்டல் விளையாட்டு**

தனித்தனி எழுத்தட்டைகளைக் குவித்து வைத்துக்கொண்டு ஆளுக்கொரு எழுத்தாகச் சொல்லிச் சொற்களை உருவாக்குதல் (அல்லது) ஒரு சொல்லைச் சொல்ல, அச்சொல்லுக்குரிய எழுத்துகளை எடுத்தல்.

9. **ஓர் எழுத்து சேர்த்துச் சொல்லாக்குதல்.**

ப - ம் = படம், பழம், பயம்.

- ரம் = ஈரம், வீரம், மரம், காரம், தூரம், ஆரம் ...

**10. இரட்டைக்கொம்பு சேர்த்துச் சொல்லாக்குதல்.**

சாறு - சோறு

தாள் - தோள் (போன்றன)

**11. சொற்களை முறைமாற்றிக் கொடுத்து வாக்கியமாக்குதல்.**

(எ.டு) புல் பசித்தாலும் புலி தின்னாது.

புலி பசித்தாலும் புல் தின்னாது.

**12. விடை தருக.**

குழந்தைகள் வட்டமாக அமர, ஒரு குழந்தை நடுவில் நிற்றல். எதிர்ச்சொல் கூறுக என்பது வினா. வட்டத்தில் உள்ளவர் ஒரு சொல்லைக் கூற, நடுவிலுள்ள குழந்தை எதிர்ச்சொல் கூறவேண்டும். உயிரினம் கூறுக வினா வட்டத்தில் உள்ளவர் தண்ணீர் என்றால், நடுவிலுள்ள குழந்தை 'மீன்' எனக் கூறவேண்டும். வானம் என்றால், 'கிளி' எனக் கூறவேண்டும். நிலம் என்றால் 'மான்' என அங்குள்ள உயிரினத்தின் பெயர் கூறவேண்டும்.

**13. ஓர் ஒலியமைந்த சொற்கள் கூறுதல்.**

கட்டு - துட்டு, எட்டு, பட்டு ... எனக் கூறுதல்.

அலை - மலை, கலை, தலை ... எனக் கூறுதல்.

**14. கதை அமைத்தல்.**

ஒரு கதையின் முதற் சொற்றொடரை ஆசிரியர் கூறியதும் மாணாக்கர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொடராக அமைத்துக் கதையை முடித்தல்.

**15. அன்னியனைக் கண்டுபிடி.**

ஒரே இனத்தைச் சேர்ந்த பல சொற்கள் அடங்கிய பல தொகுதிகளைத் தயார் செய்து கொள்க. ஒவ்வொரு தொகுதியிலும் அந்த இனத்தைச் சேராத ஒரு சொல்லைச் சேர்த்திடுக. குழந்தைகள் இனத்தைச் சேராத சொல்லைக் கோடிட்டுக் காட்டவேண்டும்.

எ.டு. காது, கண், மூக்கு, நாக்கு, <u>பாக்கு,</u> கை, கால்.

பசு, எருது, கழுதை, <u>காக்கை</u>, நாய், சிங்கம்.

**16. படம் ஒன்றைக் காட்டி, ஏற்ற தலைப்புத் தரச் செய்தல்.**

**17. குழந்தைகள் வட்டமாக நின்று ஒவ்வொருவரும் ஒரு குறள் கூறச் செய்தல்.**

½ நிமிடத்தில் குறள் சொல்லாதவர் வெளியேறுதல். இறுதிவரை விளையாடுதல் (சொன்ன குறளை மீண்டுஞ் சொல்லுதல் கூடாது.)

**18. ஒரு நிகழ்ச்சி பற்றிய பல தொடர்களைக் கொடுத்துக் கருத்தொழுங்கு ஏற்படும்படி முறைப்படுத்துதல்.**

**19. ஒரு கதையினைப் பாதி கூறி முடிக்கச் செய்தல்.**

**20. இருபொருள் தருஞ் சொற்களைக் கூறச் செய்தல்.**

மாலை, ஆடு, ஓடு ...

**12. சொற்கள் அமையும்படி விடுகதைகள் கூறுதல்.**

எ.டு. மூன்று எழுத்துகளாலான சொல்.
தலைபோனால் மறைக்கும்.
இடைபோனால் குரைக்கும்.
கடைபோனால் குதிக்கும். - குதிரை

**குறிப்பு:-** இவைபோன்று மாணாக்கர்தம் திறமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, ஆசிரியர் மொழி விளையாட்டுகள் பல அமைத்து, மொழித்திறனை வளர்த்தல்வேண்டும்.

**நிறைகள்**

- கற்கிறோம் என்னும் எண்ணந் தோன்றாமல் எளிதாகக் கற்பிக்க ஏற்றமுறையாக உள்ளது.
- விளையாட்டில் குழந்தைகள் மகிழ்ச்சி யடைகின்றனர்.
- கற்றல் விளைவுகளைக் கண்முன்னே காண முடிகிறது.
- மாணவர்களிடையே ஒற்றுமை, உதவும் மனப்பான்மை ஏற்படுகிறது.
- விளையாட்டை முடித்ததும் வெற்றிப்பெருமிதம் உண்டாகிறது.
- தானே ஒன்றைச் செய்யும்போது நினைவில் நிலைபெறுகிறது.
- முயன்று தவறிக் கற்பதால், மீண்டும் தவறு செய்ய வாய்ப்பில்லை.
- ஆசிரியர் திட்டமிட்டுவிடுவதால் பேசுவது குறைகிறது.
- குழந்தை மையக் கற்றலுக்கு வழிவகுக்கிறது.

**குறைகள்**

- எல்லாவற்றையும் விளையாட்டு முறையில் கற்பிக்க முடியாது.
- ஒரே விளையாட்டை அனைவரும் விளையாடும்போது கூச்சல், குழப்பம் ஏற்படும்.
- ஒவ்வொரு நாளும் பாடப்பொருளையும் விளையாட்டு முறையையும் பொருள்களையும் திட்டமிடுவதும் செய்வதும் வேலைப் பளுவைத் தரும்.
- நாள் முழுவதும் தொடர்ந்து விளையாடிக் கற்பதும் கற்பிப்பதும் சோர்வைத் தரும்.
- ஒவ்வொரு நிமிடமும் திட்டமிட்டுச் செயல்பாடுகளை நிகழ்த்துவது இயலாவொன்று.
- பிற வகுப்புகளின் கவனம் சிதறும்.

## 4. செயல்திட்ட முறை

மாணவர்கள் கற்கவேண்டிய பாடப்பகுதிகளைத் தனித்தனியாகத் தொடர்பற்ற முறையில் கற்பதற்குப் பதிலாக ஒரு செயல் திட்டத்தை மையமாகக்கொண்டு பல பாடங்களையும் இணைத்துக் கற்பித்தலே செயல்திட்ட முறை (Project Method) யாகும். இது நேரடியனுபவ முறைகளுள் மிகவும் பயனுடையதெனக் கூறப்படுகின்றது.

'பல பிரச்சினைகளை உள்ளடக்கிய ஒரு செயலை, அதனது இயற்கை நிலையிலேயே முழுமையும் நிறைவுறும்படி செய்து முடித்தலே செயல் திட்டம்' என ஸ்டீவன்சன் என்பார் கூறுகிறார்.

செய்து கற்றல் என்னும் உளநூற் கொள்கையை அடிப்படையாகக்கொண்ட இம்முறையை உருவாக்கியவர் கில்பாட்ரிக் என்னும் அமெரிக்கக் கல்வியாளராவர்.

கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் கல்லூரியில் தொழிற் பயிற்சிக் கூடத்தின் தலைவராயிருந்த சி.ஆர். ரிச்சர்ட்ஸ் என்பவர் முதன்முதலில் 'செயல் திட்டம்' என்னுந் தொடரைப் பயன்படுத்தினார். அதன்பின்பு மசாசூசட்ஸ் நகரில் உள்ள தொழிற் பள்ளியின்

பிரிவுகளில் பயிர்த்தொழில் பகுதி மாணவர்கள் ஈடுபடுகின்ற வேலைகளுக்குச் செயல் திட்டம் என்னும் பெயரை ஸ்டீவன்சன் என்பார் பயன்படுத்தினார். அதனைத் தொடர்ந்து பயிர்த்தொழில் மட்டுமன்றிக் கல்வியின் பிற பிரிவுகளிலும் இது பயன்படுத்தப்பட்டது. கில்பாட்ரிக் என்பவர் பள்ளிகளில் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் திட்டம் வகுத்தார்.

இச் செயல்திட்ட முறையில் சிறந்த உளவியற் கொள்கைகள் அடங்கியுள்ளன.

1. பள்ளி வேலைகளில் ஈடுபட்டுச் செய்வதன்மூலம் தம் நோக்கம் அல்லது குறிக்கோள் நிறைவேறும் என்பதறியும் மாணவர்க்குச் செயலில் கவர்ச்சி ஏற்படுகின்றது. கவர்ச்சி தரும் வேலையில் முழு ஆர்வத்துடன் ஈடுபட வாய்ப்பளிக்கின்றது.
2. கற்றலில் சிறந்த உளவியற் கொள்கையான ‘செய்து கற்றல்’ என்னுங் கொள்கையை இம்முறை பெரிதும் பின்பற்றுகின்றது. மாணவர்கள் தாங்களே திட்டமிட்டுத் தங்களால் முடிந்தவரை செயலைச் செய்து முடிக்கிறார்கள்.
3. செயலை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிகளையும், தோன்றும் இடையூறுகளைத் தவிர்ப்பதற்கான முறைகளையும் மாணவர் நேரடி அனுபவங்களின் வழியே அறிகின்றனர்.
4. பள்ளி வாழ்க்கை கற்பனை விளையாட்டாகவும், போலிச் செயலாகவும் இல்லாமல், வெளியுலக வாழ்க்கையில் நிகழக்கூடிய செயல்களை ஒத்தனவாக அமைய இத்திட்டம் உதவுகின்றது. கல்வி வல்லுநர்களான ஜான் டூயி, கில்பாட்ரிக் முதலியோரது கருத்துகளே இம்முறையின் அடிப்படைகளாக அமைகின்றன.

செயல் திட்டத்தினை நிறைவேற்றுவதில்,

1. செயலைத் தேர்ந்தெடுத்தல்,
2. திட்டமிடுதல்,
3. நிறைவேற்றுதல்,
4. மதிப்பிடுதல் என நான்கு நிலைகள் உள்ளன.

### 1. செயலைத் தேர்ந்தெடுத்தல்

- செயல் திட்டத்திற்குரிய செயலை மாணவர்களே தேர்ந்தெடுத்தல் வேண்டும்.
- ஏற்ற செயலைத் தேர்ந்தெடுக்க மாணவர் அத்துணை அனுபவமுடையவராயிருக்கமாட்டாரெனின் ஆசிரியர் வழிகாட்டலாம். ஆனால் மாணவர், அவர்களே தேர்ந்தெடுத்ததாக உணரும்படி ஆசிரியர் பணியாற்ற வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் செயல் திட்டம் மாணவருடைய அறிவு, திறன் ஆகியவற்றிற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
- மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் ஆசிரியரால் சுமத்தப்பட்டதாயின் மாணவர் செயல் திட்டத்தில் விருப்பத்தோடு ஈடுபடமாட்டார்கள்.

### 2. திட்டமிடுதல்

- செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடுதல், நிறைவேற்றும் வழிகளை ஆராய்தல் ஆகியவற்றில் மாணவர்க்குப் பயிற்சியளித்தல் வேண்டும். கூடுமானவரை மாணவரையே திட்டமிடச் செய்தல் நன்று.
- திட்டமிடத் தேவையான அறிவு தேவையாயின், நூல் நிலையத்திற்குச் சென்று பல நூல்களைப் பார்க்கச் செய்தல்வேண்டும். எந்தெந்த நூல்களில் எந்தெந்தப் பகுதிகளைப் படிக்க வேண்டுமெனவும் ஆசிரியர் வழிகாட்டலாம்.
- மாணவர்கள் திட்டமிடும்பொழுது சிறுசிறு தவறுகள் ஏற்படலாம். மிகச் சிறிய தவறுகளின் விளைவுகளை மாணவர்களே அனுபவிக்கும்படி விடலாம். பின்பு, அவர்கள் திருத்திக் கொள்வர். ஆனால் உயிரிழப்போ பொருட்செலவோ ஏற்படும் பெருந்தவறுகள் இழைக்கும்படி செயலாற்றுவாராயின், ஆசிரியர் குறுக்கிட்டு வழிகாட்ட வேண்டும்.
- திட்டமிட்டதை வரன்முறையாக எழுதி வைக்கச் செய்தல் நன்று.

### 3. நிறைவேற்றுதல்

- செயல்திட்ட முறையில் செயலை நிறைவேற்றுதலாகிய இந்நிலையே மிகவும் சுவையுடையதாகும். இடையில் தோன்றும் இடையூறுகளையும் சிக்கல்களையும் நீக்கிச் செயலை நிறைவேற்றுவதால், இதில் மாணவர் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுவர்.
- மாணவர் ஆர்வமிகுதியால் செயல்திட்டத்தின் நோக்கத்திற்குப் புறம்பாகச் சென்றுவிடாதபடி ஆசிரியர் மேற்பார்வை செய்தல்வேண்டும்.
- ஒவ்வொரு பகுதியும் நிறைவேறும்பொழுது ஆசிரியர் மாணவரைக் கண்காணித்தல் நன்று. அவர்களே செயலைச் சரிபார்த்துக் கொள்ளத் தூண்டுதல் வேண்டும்.
- இந்நிலையில் ஏற்படும் சிறு சிக்கல்களினால் மாணவர் செயலை முற்றுவிக்காது கைவிடுதல் கூடாது. ஆசிரியர் தகுந்த முறையில் வழிகாட்ட வேண்டும்.

### 4. மதிப்பிடுதல்

- செயல் திட்டத்தினை நிறைவேற்றிய பின்பு குறைகளையும் நிறைகளையும் மாணவர் ஆராய்தல் வேண்டும்.
- செய்ய விடுபட்டுப் போனவை, செய்யாமல் தவிர்க்க வேண்டியவை எவையெவை யென மாணவர்களே ஆராய்ந்து கூறச் செய்தல்வேண்டும்.
- செயல் திட்டத்தைச் சிறப்புடையதாக்க வேறு என்னென்ன வழிகளைக் கையாளலாம் என மாணவர்கள் கூறுவது நல்லது.
- மேற்கொள்ளக் கூடிய மாறுதல்களை அடுத்த செயல் திட்டத்தில் பின்பற்றுதலுக்கு உதவும் வண்ணம் குறித்து வைக்கச் செய்தல்வேண்டும்.

### செயல்திட்ட முறையின் நன்மைகள்

- மாணவர் குறிப்பிட்ட நோக்கத்துடன் செயலில் ஈடுபடுகின்றனர். நோக்கத்தினை நிறைவேற்றும் ஆர்வமிருப்பதால் ஊக்கத்தோடு செயலாற்றுவர். ஊக்கத்தோடு செயற்படும் இப்பண்பினை வளர்த்தல் இத்திட்டத்தின் சிறப்பியல்புகளாகும்.
- தான் தொடங்காற்றல் (Initiative), பொறுப்புணர்ச்சி, திட்டமிட்டு நிறைவேற்றுதல், மதிப்பிடுதல், கூட்டுறவு மனப்பான்மை முதலிய பண்புகளை இம்முறை மாணவர்களிடம் வளர்க்கின்றது.
- நடைமுறை வாழ்க்கையில் எதிர்ப்படும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள இம்முறை பெரும் பயிற்சியளிக்கின்றது. செயல் திட்ட வேலையில் ஈடுபடும்பொழுது எதிர்ப்படும் இடையூறுகளைத் தன்னம்பிக்கையோ எதிர்கொள்கின்றனர்.
- ‘உடல் உழைப்பு தாழ்வானது’ எனுங் கருத்து நீங்கவும், உழைப்பின் உயர்வை மாணவர் உணரவும் இத்திட்டம் வழி வகுக்கின்றது.
- செயல் திட்டங்கள் மாணவனின் படைப்பாற்றலை வளர்க்கின்றன. சிறப்பாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் செயலில் ஈடுபடும்பொழுது, அவர்கள் புதியனவற்றைச் செய்யுந்திறன் பெறுகிறார்கள்.
- மேற்கூறிய நன்மைகள் இத்திட்டத்தில் இருப்பினும் சில குறைகளும் உள்ளன.
- பாடத் திட்டத்திலுள்ள பாடப்பகுதிகளை ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு மாணவர் அறிந்து கொள்ள முடிவதில்லை.
- மேலும், இச் செயல் திட்டத்தில் இயல்பாகப் பொருந்திவரும் பாடங்களை மட்டும் கற்கலாமே தவிர, எல்லாப் பாடங்களையும் கற்க முடியாது.
- ஒவ்வொரு செயல் திட்டத்தையும் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டுமாயின், மிகுந்த பணச் செலவாகும்.
- குறித்த செயல் திட்ட வேலையைக் குறித்த காலத்தில் முடியும் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை; காலச் செலவாகலாம்.

• வகுப்பறைக்கு வெளியே வேலையில் ஈடுபடுவதால், மாணவர்களை ஓர் ஒழுங்குக்கு உட்படுத்தி வைத்தல் சற்றுச் சிரமமானது. ஆசிரியர் மிகுந்த திறனுடையவராதல்வேண்டும். இல்லையெனில், ஓரிருவர் வேலை செய்யப் பலர் ஒன்றுஞ் செய்யாதிருப்பர்.

இத்திட்டத்தில் சில குறைகள் இருப்பினும், நன்மைகள் சில சிறப்பாயிருப்பதால் செயல் திட்ட வேலையைப் பள்ளிக் கல்விச் செயல்முறையில், சிறப்பாகப் பத்து வயதுக்குட்பட்ட மாணவருக்குக் கற்பிக்கையில் ஆசிரியர் பயன்படுத்துவது நல்லது.

## 5. ஒப்படைப்பு முறை

அமெரிக்க நாட்டில் டால்டன் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய பார்க்ஹஸ்ட் அம்மையாரால் இவ்வொப்படைப்புமுறை தொடக்க, உயர்நிலை வகுப்புகளில் நடைமுறைப் படுத்தப்பட்டது. மாணவர்களின் மனவளர்ச்சிக்கேற்பப் பாடங்களைப் பல பகுதிகளாகப் பிரித்துக் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களாகவே கற்பதே ஒப்படைப்பு முறையாகும். மேல் வகுப்புகளில் மாணவர்கள் தாங்களாகவே ஒன்றைக் கற்றுக்கொள்ள இம்முறை பெரிதும் உதவும். இம்முறையில் பெற்றோர்கள் துணையுடன் செயல்படுங் குழந்தைகள் மிகச் சிறப்பாகக் கற்கின்றனர். உயர் வகுப்புகளில் இலக்கியச் சுவையுணர்தல், திறனாய்வு செய்தல், ஒரு தலைப்பில் கருத்துகளைத் தேடித் தொகுத்து எழுதுதல், திறன்சார்ந்த செயல்கள் விரிவு படுத்துதல், மொழித்திறன் கூறுகளைக் கற்றறிதல், படைப்பாற்றல் வளர்த்தல், உதவி பெறுதல், திட்டமிடல், தொகுத்தல், பகுத்தல், மதிப்பிடல், வெளியிடல் எனப் பல்வேறு திறன்களை ஒப்படைப்பு முறையினால் மாணவர்கள் பெறுகின்றனர்.

**முன்னேற்பாடு**

வகுப்புநிலை, பாடப்பொருள், அறிவு வளர்ச்சி, உடனடித்தேவை முதலியவற்றைக் கருத்திற் கொண்டு ஒப்படைப்புத் தலைப்புகளை ஆசிரியர் தெரிவு செய்யவேண்டும். பாடப்பொருள், ஒப்படைப்புகளாயின், கருத்திற்கேற்ற பார்வை நூல்கள், கிடைக்குமிடங்கள், கருத்துகளைக் கையாளும் முறை, எழுதும் முறை, மேற்கோள் காட்டும் முறை, பத்தியமைப்பு முதலியனவற்றை ஆசிரியர் விளக்கமாகக் கூறவேண்டும். இதேபோன்று மாணவர்தம் தேவைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் ஒப்படைப்புகளைத் தரலாம். ஒப்படைப்புகளை எழுதும் முறை, ஒப்படைக்குங் காலம், பக்க அளவு முதலியவற்றைத் திட்டமிட்டு வடிவமைக்கவேண்டும். ஒரே ஒப்படைப்பைப் பலருக்கும்கூடத் தரலாம். ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒப்படைப்பு களும் தரலாம். வகுப்புநிலை, அறிவுநிலை, செயல் திறன், தேவை முதலியவற்றிற்கேற்பவும் முன்தயாரிப்புகளை மேற்கொள்ளவேண்டும்.

> "நான் கற்கிறேன் என்று சொல்வதைக்காட்டிலும் நான் அனுபவங்களைப் பெறுகிறேன் என்று குழந்தைகள் கூறினால், அதனையே உண்மையான கல்வி எனலாம்."
>
> - ஜான் டூயி

**ஒப்படைப்புகளை அளிக்கும் முறை**

1. ஒப்படைப்புகள் குறிப்பிட்ட நோக்கமுடையனவாகவும் தெளிவானவையாகவும்இருத்தல் வேண்டும்.

2. அவை மாணாக்கர் விரும்பக் கூடியனவாகவும் ஆர்வமூட்டக்கூடியனவாகவும்அமைதல் வேண்டும்.
3. தரப்படும் புதிய பகுதிகள் மாணாக்கரின் முந்தைய பட்டறிவுடன் தொடர்புடையனவாக இருத்தல்வேண்டும்.
4. படிக்கவேண்டிய நூல்கள், அந்நூல்களின் பகுதிகள் முதலியன குறிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.
5. சிறியதாக அமையினும் தவறில்லை; மிகப் பெரியதாக அமையாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.
6. மாணாக்கரின் சிந்தனையைத் தூண்டக் கூடியனவாக அமைதல்வேண்டும்.
7. வகுப்பு நேரத்துக்கும் மாணாக்கர் வயது, அறிவு ஆகியவற்றிற்கும் பொருத்தமானதாக அமைதல்வேண்டும்.

**மொழிப்பாட ஒப்படைப்புகள்**

மொழிப்பாடத்தில் உரைநடை, இலக்கணம், செய்யுள், கட்டுரை ஆகியவற்றைக் கற்பதில் ஒப்படைப்புகளைக் கையாளலாம். குறிப்பிட்ட தலைப்பில் செய்திகளைத் திரட்டுதல், கலைக்களஞ்சியம், செய்தித் தொகுப்புகளைப் படித்துக் கட்டுரைக்கு வேண்டிய செய்திகளை எழுதுதல், அகராதியின் உதவியால் சில பகுதிகளை விளக்கி எழுதுதல், இலக்கண விதிகளைத் தாமே கண்டறிதல் போன்றவற்றிற்கு ஒப்படைப்புகள் தரலாம்.

தாம் கற்பிக்கவிருக்கும் பாடப்பொருளுக்கு ஏற்பவும் மாணாக்கர் அறிவுநிலை, பள்ளிச் சூழ்நிலைக்கு ஏற்பவும் ஒப்படைப்புகளை ஆசிரியர் தயாரித்துத் தரலாம். செயல் திட்டமுறையை நோக்கும்போது, அதன் வளர்ச்சியே ஒப்படைப்பு முறை எனலாம்.

**நிறைகள்**

- ஒப்படைப்பு மாணவர்தம் அறிவாற்றலையும் செயல்திறனையும் மேம்படுத்துகிறது.
- நூல்களைத் தேடிக் கருத்துகளைத் தொகுத்து வகைப்படுத்தி முறைப்படுத்தும் உயர்நிலைத் திறன் உண்டாகிறது.
- குறித்த நேரத்தில் ஒரு செயலைத் திறம்பட முடிக்கும் ஆற்றல் பெறுகின்றனர்.
- திட்டமிடல், சிந்தனைத்திறன், தானே கற்றல் திறன்கள் வளர்கின்றன.

**குறைகள்**

- தொடக்கப் பள்ளிகளுக்குச் சிறிது கடினமான முறையாகும்.
- அதிகமான ஒப்படைப்புகள் கொடுக்கும்போது மாணவர்கள் சலிப்படைந்துவிடுவர்.
- ஒப்படைப்புகளை பார்வையிட்டுத் திருத்தித் தருவதை வேலைப்பளுவாகக் கருதுகின்றனர்.
- அனைத்து மாணவர்களும் குறித்த நேரத்தில் ஒப்படைப்புகளை ஒப்படைப்பர் எனக் கூற முடியாது.
- அதிகமான கவனம் ஒப்படைப்புகளில் செலுத்தும்போது வகுப்புக் கற்றலில் மனம் செல்லாது.

## 6. செயல்வழிக் கற்றல்

**அறிமுகம்**

கற்பித்தலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பயிற்றுமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒவ்வொரு பயிற்றுமுறையிலும் நிறைகளும் குறைகளும் உள்ளன. அப்பயிற்றுமுறைகளுள் ஒன்றே செயல்வழிக் கற்றல் முறையாகும். வகுப்பறையின் பெரும்பான்மையான நேரத்தை ஆசிரியர்களே எடுத்துக்கொள்வதை விடுத்துக் கற்றல் செயல்களில் மாணவர்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்தித் தாங்களாகவே கற்க வழியேற்படுத்தித் தருவதே செயல்வழிக் கற்றலாகும். குழந்தைகள் பொருள்களை வைத்துக்கொண்டு செயல்பாடுகளில் ஈடுபட்டும் தொடர்ந்து

பயிற்சிகளை மேற்கொண்டும் கற்றலில் முழுமையடைய முடியும். கற்றலுக்கேற்ற சூழலை ஏற்படுத்தித் தருவதும் தேவைப்பட்டால் அவ்வப்போது குழந்தைகளுக்கு உதவி செய்வதுமே ஆசிரியர் பணியாகும். தமிழகப் பள்ளிகளில் பெரும்பாலும் பல்வகுப்பு, பலபாடங்கள் கற்பிக்கும் சூழலே நிலவுகிறது. இச்சூழலில் குழந்தைகள் அனைவரும் முழுமையான கற்றலடைவுபெறச் செயல்வழிக் கற்றல் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

செயல்வழிக் கற்றல்முறையில் ஒரு திறனை மேற்கொண்டு அதனைத் தெளிவாகக் கற்றறிந்த பிறகே அடுத்த திறனுக்குச் செல்ல முடியும். எனவே, ஒரு வகுப்பில் அனைத்துத் திறன்களையும் கற்று முடித்தபிறகே அடுத்த வகுப்பிற்குச் செல்ல முடியும். இம்முறையில் தானே கற்றலுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் தாங்களாகவே செயலட்டைகளை எடுத்துக் கற்கின்றனர். மேலும் மாணவன் எந்த நிலையில் உள்ளான் எவ்வளவு திறன் பெற்றுள்ளான் என்பதைத் தெரிந்துகொள்ள ஆசிரியருக்கு வாய்ப்புள்ளது. மாணவன் தன் திறமையைத் தானே அறிந்துகொள்ளவும் வழி செய்கிறது.

செயல்வழிக் கற்றல் திட்டம் முதன்முதலாக 2003 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 23 ஆம் நாள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 10 மண்டலங்களில் 13 மாதிரிப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. 2004-2005ஆம் கல்வியாண்டில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இப்பொழுது தமிழகம் முழுவதும் தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

**செயல்வழிக் கற்றலின் அணுகுமுறைகள்**

- பாடத்திட்டத்தை முழுமையாகப் பின்பற்றுதல்
- திறன்களைச் சிறுசிறு பிரிவுகளாகப் பிரித்துக் கற்றல் படிகளாக மாற்றுதல்
- ஒவ்வொரு கற்றல் படியிலும் பல செயல்களை மேற்கொள்ளுதல்
- அனைத்துக் கற்றல்படிகளையும் சங்கிலித்தொடர்போல் இணைத்துத் தொடர்புபடுத்திக் கற்றல் ஏணிப்படியை உருவாக்குதல்.

**ஒவ்வொரு கற்றல் படியிலும் அமைக்கப்பட்டுள்ள செயல்பாடுகள்:**

1. திறன் வளர்ச்சிக்கான தொடக்கநிலைச் செயல்பாடுகள் அமைத்தல்
2. அறிமுகப்படுத்தப்பட்ட திறனுக்கான வலுவூட்டல் செயல்களை மேற்கொள்ளல்
3. திறன்வளர் பயிற்சிக்குரிய செயல்கள்
4. மதிப்பீட்டுச் செயல்பாடுகள்
5. குறைநீக்குஞ் செயல்பாடுகள்
6. வளம்பெருக்குஞ் செயல்பாடுகள்

**அட்டைகள்**

- திறன்கள்சார்ந்த கற்றல் அட்டைகள்
- பல்வகுப்புக் கற்பித்தல் முறைக்கேற்பக் கற்பிக்கும் குழு அட்டைகள்
- கற்றலடைவைப் பதிவு செய்யுந் திறனடைவுப் பட்டியல்

**பயன்கள்**

- மாணவர்கள் தத்தம் கற்றல் வேகத்திற்கேற்பக் கற்பர்.
- உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மட்டுமே ஆசிரியர் நேரத்தைச் செலவிடுவார்.
- குழந்தைகள் கற்றல் செயல்களில் ஈடுபடுவது உறுதி செய்யப்படுகிறது.
- தானே கற்றல், குழுக் கற்றல், வகுப்பு மாணவருடன் கற்றல் முதலிய புதிய உத்திகள் கற்றலடைவை மேம்படுத்துகின்றன.
- கற்றலடைவு அறிவியல் முறையில் மதிப்பிடப்படுகிறது.
- உடல் நலமின்மை, உள்ளூர்த் திருவிழா, பருவக் காலத் தொழிலுக்காக வெளியூர் செல்லல்,

- குடும்பச் சூழல் முதலிய காரணங்களுக்காக இடைநிற்கும் மாணவர்கள் மீண்டும் பள்ளிக்கு வந்து, விட்ட செயல்பாடுகளிலிருந்து தொடர்ந்து கற்க வழியேற்படுகிறது.
- கற்றலட்டைகள் கவர்ச்சியாகவும் ஆர்வம் ஊட்டக்கூடியதாகவும் உள்ளன.
- தங்களின் கற்றல் நிலையைத் தாங்களே அறிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது.
- மாணவர்களுக்கும் ஆசிரியருக்குமிடையேயான இடைவெளி குறைந்து மாணவர்களால் ஆசிரியரை எளிதில் அணுக முடிகிறது.
- குழந்தைகள் தங்களுக்கான செயல்பாடுகளைச் செயல்படுத்தும் முழு உரிமை பெறுகின்றனர்.
- மாணவர்கள் தங்களுக்குள் கருத்துகளைக் கலந்தாயவும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளுந் திறன் வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்புகள் அதிகம்.
- ஆசிரியர் நல்ல வழிகாட்டியாகவும் ஏதுவாளராகவும் கண்காணிப்பாளராகவும் ஊக்கமூட்டு பவராகவும் பணியாற்றுகிறார்.

**வகுப்பு நிருவாகம்**

செயல்வழிக் கற்றல் வகுப்புகளைக் கவனத்துடன் அமைக்கவேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் எளிதாக எழுந்து சென்று வருவதற்கேற்பவும் குழுக்களாகச் செயல்படவும் இடமிருப்பதாக இருக்கவேண்டும். மாணவர்கள் குழுக்களாக உட்கார்ந்து செயல்பாடுகளை மேற்கொள்வதற் கேற்பப் பாய்களை விரித்துப்போடவேண்டும். இடையூறாக உள்ள பொருள்களை ஒருபுறமாக ஒதுக்கி வைக்கவேண்டும்.

**தாழ்நிலைக் கரும்பலகை**

வகுப்பறைச் சுவரின் நான்குபுறமும் தரையிலிருந்து மூன்றடி உயரத்திற்குக் கருப்பு வண்ணம் பூசிக் கரும்பலகையை உண்டாக்கவேண்டும். (Low-level black board) இக்கரும்பலகையில் மாணவர் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு மாணவனுக்கும் குறைந்தது இரண்டடி அகலத்தில் இடம்ஒதுக்கி மாணவனின் பெயரெழுதவேண்டும். அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தமிழ், ஆங்கிலம், கணிதம், சமூகஅறிவியல் பாடங்களுக்குரிய பயிற்சிகளை எழுதலாம், வரையலாம், கணக்கிடலாம். ஆசிரியர் ஒரு குழுவில் கவனஞ் செலுத்தும்போது மற்றவர்கள் தாழ்நிலைக் கரும்பலகையைப் பயன்படுத்தலாம்.

**கம்பிப் பந்தல்**

வகுப்பறையில் ஆறரை அடி உயரத்திற்குமேல் மெல்லிய கம்பிப் பந்தல் ஒன்று அமைக்க வேண்டும். இக்கம்பிப் பந்தலில் மாணவர்களின் படைப்புகள், வண்ணந்தீட்டியவை, வரைந்தவை ஆகியவற்றைத் தொகுத்து, அவரவர் பெயரெழுதி நூலில் கட்டிக் கம்பிப் பந்தலில் தொங்கவிட வேண்டும். புதுப்புதுப் படைப்புகள் வரும்பொழுது பழையனவற்றைக் கழற்றிப் பாதுகாப்பாக வைத்து விட்டுப் புதியனவற்றைக் கட்டவேண்டும்.

**அட்டைகளைப் பாதுகாத்தல்**

கற்றல் அட்டைகளை அவற்றின் குறியீடுகளுக்கேற்பத் தனித்தனித் தட்டுகளில் (Tray) வைக்கவேண்டும். ஒவ்வொரு தட்டின் முன்பக்கமும் அதில் வைக்கப்படும் அட்டைகளின் குறியீடு (logo) பெரிதாக ஒட்டப்பட்டிருக்கும். (எ.கா.) "யானை" குறியீடு ஒட்டப்பட்ட தட்டில் அனைத்து வகுப்புக்குரிய யானை அட்டைகளும் வைக்கப்பட்டிருக்கும். அட்டைகளின் விளிம்புப்பட்டை வண்ணத்தைக்கொண்டு அது எவ்வகுப்புக்குரியது எனக் கண்டெடுத்துக் கற்கவேண்டும்.

அட்டைகள் வைக்கப்பட்டுள்ள தட்டுகள் மாணவர்கள் எடுத்து வைக்கும் உயரத்தில் சுவரோரத்தில் வகுப்பறையின் ஏதாவது ஒருபக்கமாக இருக்கவேண்டும்.

**குழு அட்டைகளும் குழுக்களும்**

முதன்முதலாகப் பள்ளியில் சேர்க்கப்படும் மாணவர்கள் முதற் குழுவில்தான் உட்கார வேண்டும். அனைத்துப் பாடங்களுக்குரிய அடிப்படைத் தன்மைகளும் இக்குழுவில் விளக்கப்படும். இக்குழு மாணவர்களை ஏணிப்படி முறையில் கற்பிக்கத் தயார்படுத்தும். இக்குழுவிலேயே துணைக் கருவிப்பெட்டியில் குறியீடுகள் அனைத்தும் உள்ளன. ஒவ்வொரு பாடத்திற்கான அனைத்துக் குறியீடுகளையும் மாணவர்கள் புரிந்துகொள்ளுமாறு விளக்க வேண்டும்.

செயல்வழிக் கற்றலில் ஆறு குழுக்கள் உள்ளன. இந்த ஆறு குழுக்களுக்கும் ஆறு அட்டைகள் உள்ளன. இந்த அட்டைகளுக்குக் குழு அட்டைகள் எனப் பெயர். ஒவ்வோர் அட்டையிலும் அக்குழுவில் இடம்பெறும் அனைத்துக் குறியீடுகளின் படங்களும் குழு எண்ணும் இருக்கும்.

**குழுவில் மாணவர் செயல்படும் முறை**

முதற் குழுவில் உள்ள செயல்பாடுகளை முடிக்கும் மாணவர்களுக்கு ஏணிப்படியின் அமைப்பினை விளக்கவேண்டும். ஒவ்வொரு படிநிலையிலும் உள்ள குறியீடுகளுக்குரிய செயல் பாடுகளை அதே வரிசையில் செய்து முடிக்கவேண்டும். ஒரு குறியீட்டினைச் செய்யும் முன் அக்குறியீடு ஆறு குழு அட்டைகளில் எந்தக் குழுவில் உள்ளது என்பதைக் கவனித்து அக்குழு விற்கு அம்மாணவன் செல்லவேண்டும். தொடக்க நிலையில் மாணவர்கள் சரியான குழுவுக்குச் செல்ல ஆசிரியரும் வகுப்பு மாணவர்களும் உதவிடவேண்டும். காலப்போக்கில் மாணவர்களே ஏணிப்படிகளில் உள்ள குறியீடுகளைப் பார்த்து, அடுத்துத் தாங்கள் செல்லவேண்டிய குழுவினைத் தெரிந்துகொள்வார்கள்.

**அட்டைகளை எடுத்தலும் வைத்தலும்**

ஏணிப்படியைப் பார்த்துத் தான் கற்கவேண்டிய அட்டையை மாணவர் தெரிந்துகொள்ள வேண்டும். மாணவர்கள் இதற்குமுன் முடித்த அட்டையையும் இனி முடிக்கவேண்டிய அட்டையைப் பற்றியும் இப்பொழுது செயல்படுத்திக்கொண்டிருக்கும் அட்டையைப்பற்றியும் தெரிந்திருக்கவேண்டும். குறியீடுகளின் எண்களைச் சரியாக அறிந்த பின்பே அட்டைப் பெட்டித் தட்டுகளிலிருந்து சரியான அட்டையை எடுத்திட வியலும். அட்டையை எடுத்ததும் அதற்குரிய குழுவுக்குச் சென்று முறையாகக் கற்றதும் மீண்டும் எடுத்த இடத்தில் வரிசையெண்படி அட்டையை வைக்கவும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

**குழு விளையாட்டுகள்**

ஏணிப்படிகளில் பல குழு விளையாட்டுகளும் பொம்மலாட்டம் போன்ற செயல்பாடுகள் கொடுக்கப்பட்டிருக்கும். இச்செயல்பாடுகளின்போது அனைத்து மாணவர்களையும் ஒன்றாகக் கூட்டிச் செயல்படலாம். செயல்பாடுகள் முடிந்ததும் அவரவர் தத்தம் குழுக்களுக்குச் செல்லவேண்டும்.

**காலநிலை அட்டவணை**

காலநிலைச் செயல்பாட்டு அட்டவணை சூழ்நிலையியலில் வருகிறது. இச்செயல்பாட்டை மாணவர்கள் குழுக்களாகத்தான் செய்யவேண்டும். மாணவர்கள் வகுப்பறையைவிட்டு வெளியே சென்று காலநிலையைக் காணவேண்டும். அவர்களுக்குள் நல்ல விவாதம் செய்து முடிவுகளை அட்டவணையில் குறிக்கவேண்டும். நாள்தோறும் காலை மாலை இருவேளையும் காலநிலையை அறிந்து குறிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தவேண்டும்.

**திட்டம் செயல்படும் முறை**

**செயல்வழிக் கற்றலில் வகுப்பறை**

1. மாணவர் அனைவரும் பாய்களில் அமர்வர். ஆசிரியரும் அவர்களுக்கு இடையில் அமர்ந்து கற்பிப்பார்.

2. உயரம் தாழ்ந்த கரும்பலகைகள், சுவர்ப்பலகைகள் இடம்பெறும்; மாணவர் எழுதுவதற்கும் வரைவதற்கும் உதவியாக அமையும்.
3. மாணவர் வரைந்த ஓவியங்களைக் காட்சிப்படுத்த வகுப்பில் தலைக்குமேல் சற்று உயரத்தில் கம்பிப்பந்தல் இருக்கும். அதில் ஓவியங்களையும் பிறவற்றையும் காட்சிப்படுத்துவர்.
4. மாணவர் வருகையைப் பதிவு செய்ய அவர்கள் பெயர்கள் எழுதப்பட்ட தானே வருகைப் பதிவு செய்யும் தாள்.
5. காலநிலையைக் குறிப்பதற்காகக் காலநிலை அட்டவணை ஒன்று.
6. ஆரோக்கியச் சக்கர அட்டை ஒன்று.
7. படக்குறியீடு ஒட்டப்பட்ட தட்டங்கள் (**Trays**) அலமாரிகளில் இருக்கும்.
8. செய்முறை வேலைகளுக்கு உதவும் வண்ணமெழுகுகள், களிமண், பொம்மலாட்டத்துக்கான பொருள்கள்.
9. மாணவர் அடைவினைப் பதிவு செய்யும் விளக்கத்தாள்
10. ஏணிப்படி அட்டைகள்
11. பாய்களின்மீது என்னென்ன குறியீடுகளை வைத்துள்ளவர் எங்கெங்கு அமரவேண்டு மெனக் குறிக்கும் குழு அட்டைகள்

**செயல்வழிக் கற்றல் செயல்பாடுகளுக்கு உதவுவன:**

1)குறியீடுகள் உள்ள பட அட்டைகள் ஒவ்வொரு பாடத்துக்கும் வெவ்வேறு குறியீடுகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| தமிழ் | - | விலங்குகள் |
| ஆங்கிலம் | - | வாகனங்கள் |
| கணிதம் | - | பறவைகள் |
| சூழ்நிலை அறிவியல் | - | பூச்சிகள் |

2) வகுப்புகளுக்குரிய அட்டைகளின் ஓரங்கள் வெவ்வேறு வண்ணங்களால் அமைக்கப் பட்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| முதல் வகுப்பு | - | கருஞ்சிவப்பு |
| இரண்டாம் வகுப்பு | - | கரும்பச்சை |
| மூன்றாம் வகுப்பு | - | கருநீலம் |
| நான்காம் வகுப்பு | - | மஞ்சள் |

3) குழு அடிப்படையில் குழந்தைகள் அமர்தல்

செயல்வழிக் கற்றல்முறையில் ஆறு குழு அடிப்படையில் குழந்தைகள் அமர்வர். தன் கற்றல் விரைவுக்கேற்ப ஒவ்வோர் அட்டையாகக் கற்கும்போது அவ்வட்டையில் உள்ள சின்னங்கள் உள்ள குழுவில் குழந்தைகள் அமரவேண்டும்.

குழு - 1 கற்றலுக்குத் தயார் செய்யப்படவேண்டிய குழு முழுமையும் ஆசிரியர் பொறுப்பு (Preparatory group)
குழு - 2 ஆசிரியரை முழுவதும் சார்ந்த குழு (Fully Teacher supported group)
குழு - 3 ஆசிரியரை ஓரளவு சார்ந்த குழு (Partially Teacher supported group)
குழு - 4 உடன்பயில்வோரை முழுவதும் சார்ந்த குழு (Fully peer supported group)
குழு - 5 உடன்பயில்வோரை ஓரளவு சார்ந்த குழு (Partially peer supported group)
குழு - 6 தானே கற்கும் குழு (Self-learning group)

**செயல்வழிக் கற்றலுக்குத் தயாரிப்பு**

பள்ளியில் மாணவர் சேர்ந்ததும் முதன்முதலாக அவர்களுக்குக் குறியீடுகள்பற்றியும், வகுப்புக்குரிய அட்டை, வண்ணங்கள் பற்றியும் ஆசிரியர் எடுத்துக் கூறுவார். இந் நிகழ்ச்சி

முதல் ஆறு வாரங்கள் நடைபெறும். இந்நிலையில் அவர்கள் விலங்குகள் தமிழ்ப்பாடத்துக்கு, பறவைகள் கணிதப் பாடத்துக்கு, வாகனங்கள் ஆங்கிலத்துக்கு, பூச்சிகள் சூழ்நிலை அறிவியலுக்கு என்பதை அறிவர்.

அட்டையின் ஓரத்தில் கருஞ்சிவப்பு இருப்பின் அது முதல் வகுப்புக்குரியது; கரும்பச்சை இரண்டாம் வகுப்புக்குரியது; கருநீலம் மூன்றாம் வகுப்புக்குரியது; மஞ்சள் நான்காம் வகுப்புக்குரியது என்பதை அறிவர்.

**செயல்படத் தொடங்குதல்**

முதல் வகுப்பில் ஒவ்வொரு பாடத்துக்கும் '0' படிநிலை கற்றலுக்குத் தயார் செய்வதாகும். இதிலுள்ள குறியீடுகள் மாணவர் பேச, கேட்க, கைவிரல்களைப் பயன்படுத்த, விளையாட உதவுவனவாகும்.

**'0' படிநிலை**

இப் படிநிலை, குழந்தைகளைக் கற்றலுக்கு ஆர்வமூட்டித் தயார் செய்வதாகும். இதில் பதினாறு குறியீடுகள் உள்ளன. ஒவ்வொரு குறியீட்டிற்கும் ஒரு செயல்பாடு உள்ளது. இச்செயல்பாடுகள் குழந்தைகள் மகிழ்வுடன் ஈடுபடுமாறு அமைக்கப்பட்டுள்ளது. இச்செயல் பாட்டில் பெறும் அனுபவங்கள் பின்னாளில் குழந்தைகள் ஏணிப்படியில் கற்கும்போது மிகவும் பயனுள்ளதாக அமையும். பதினாறு குறியீடுகளுக்கான செயல்பாடுகளை ஆறு வாரங்கள் வரை வழங்கலாம். '0' படிநிலையில் உள்ள பதினாறு குறியீடுகளுக்கான செயல்பாடுகளை ஏணிப்படியில் உள்ளவாறு வரிசையாகக் கொடுக்க வேண்டுமென்பதில்லை; ஆசிரியர், குழந்தைகள் விருப்பத்திற்கேற்பச் செயல்பாடுகளை மாற்றியும் தரலாம்.

மேற்கண்ட தயாரிப்பின்போதே குழந்தைகளின் திறனை ஆசிரியர் ஓரளவு அறியலாம். அதைக்கொண்டுதான் குழந்தைகளை ஏணிப்படியைப் பின்பற்றிக் கற்றல் அட்டைகளை எடுத்துக் குழுக்களில் அமர்ந்து படிக்கத் தொடங்குவர். முதலில் ஓரிரண்டு குழுக்கள் மட்டுமே அமையும். பிறகுதான் அனைத்துக் குழுக்களுக்கும் குழந்தைகள் செல்வர். எலி அட்டையை அடையும் குழந்தைகளுக்குக் கிரீடம் வைக்கப்படுகிறது. ஏணியில் குழந்தைகள் ஏறும்போது மேற்படியில் உள்ள குழந்தைகள் கீழ்ப்படியில் உள்ள குழந்தைகளுக்கு உதவுவார்கள். ஏணிப்படியில் உள்ளவாறே வரிசைமுறையைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை.

எடுத்துக்காட்டாக, (மொழிப்பாடத்தில்)

| | | |
|---|---|---|
| தாராநாத் | - | உருவொற்றி நேர்கோடுகள் வரைதல் |
| சீத்தாப்பழம் | - | உருவொற்றி வளைவுகோடுகள் வரைதல் |
| பென்சில் | - | வண்ணந்தீட்டுதல், வரைதல் |
| பானை | - | களிமண்ணால் உருவங்கள் செய்தல் |
| ஆலமரம் | - | விளையாடுதல் ... என அமையும். |

மொழிப்பாடத்துக்குரிய குறியீடுகளும் செயல்பாடுகளும் பற்றி இணைப்பு - 1 இல் காண்க.

**குறியீடுகளின் விளக்கம்**

**முயல்**

முயல் அட்டைகள் கேட்டல் திறனுக்கானவை. இவ்வட்டைகளில் கதைகள், உரையாடல்கள் எழுதப்பட்டிருக்கும். ஆசிரியர் படிக்க மாணவர் கேட்பர். மீத்திறன் மாணவர்கள் கேட்கும் திறன் பெற்றதும் விரும்பினால் அவர்களாகவே படிக்கலாம். வண்ணப் படங்களுடன் இவ்வட்டைகள் இடம்பெற்றுள்ளன.

**புலி**

இவ்வட்டைகள் மாணவர்களைப் பேச வைப்பதற்காக இடம்பெற்றுள்ளன. ஒருபுறம் வண்ணப்படம், மறுபுறம் படங்களுக்கான வினாக்கள் இடம்பெற்றிருக்கும். வினாக்களை ஆசிரியர் கேட்க மாணவர் விடை கூறுவர். வினாக்களில் இடம்பெறாத சில காட்சிகளையும் மாணவர்கள் கற்பனையாகக் கூறலாம். இவ்வட்டையில் மாணாக்கர்கட்குப் பேச்சுத்திறன் வளர வாய்ப்புள்ளது.

**யானை**

இவ்வட்டைகள் படிக்கும் அட்டைகளாகும்; இவ்வட்டைகளில் மேலே படங்கள் இருக்கும்; கீழே வாக்கியத் தொடர்கள் இருக்கும்; சில கோடிட்ட இடங்களும் அமைந்திருக்கும்; படித்த பின்பு படங்களைப் பார்த்துக் கோடிட்ட இடங்களை நிரப்பலாம்.

**அணில்**

இவை எழுத உதவும் அட்டைகள். அட்டைகளில் மேலே உள்ள படத்தைப் பார்த்துக் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதலாம். மேலும், எழுத்துகளைச் சீராக இரட்டை வரிகளில் எழுதவும் பயிற்சி தரப்பட்டுள்ளது. அவற்றை மாணவர்கள் தங்கள் பயிற்சி ஏடுகளில் எழுதலாம்.

**சிங்கம்**

செய்யுள் தொடர்பான அட்டைகள் இவை. இவற்றில் செய்யுளுக்கு அருஞ்சொற்பொருள், திரண்ட கருத்து வழங்கப்பட்டிருக்கும். மேலும், அச்செய்யுள்கள் கூறும் கருத்துகள் அடங்கிய கதைகள் வழங்கப்பட்டுள்ளன. அக்கதைகளைப் படித்தாலே மாணவர்கட்குச் செய்யுளின் கருத்து ஆழமாகப் பதியும்.

**ஆலமரம்**

மாணவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் விளையாட்டுகள்கொண்ட அட்டைகள் இவை. விளையாட்டுகளை எப்படி விளையாடவேண்டுமெனச் சுருக்கமான விதிகளுடன் விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் அவற்றைப் படித்தறிந்து மாணவர்களை விளையாடச் செய்யலாம்.

**வாய்**

இவ்வட்டைகளில் பாடல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை மாணவர்கள் இசையோடு பாடலாம். பாடப்புத்தகத்தில் வந்துள்ள பாடல்களே பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன.

**பொம்மலாட்டம்**

இதில் ஐந்து பொம்மலாட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கதை உறுப்பினர்களை வண்ணங்களில் மாணவர்கள் உதவியோடு ஆசிரியர் தயாரிக்கவேண்டும். மாணவர்கட்குக் கதை உறுப்பினர்களின் தன்மைகளை உணர்த்தி உணர்ச்சியோடு குரல் ஏற்ற இறக்கத்துடன் மாணவர்கள் வசனங்களைப் பேசி நடிக்கும் வண்ணம் சிறந்த பயிற்சி வழங்கவேண்டும். தேவைப்படும் நேரங்களில் இவற்றைத் திரும்பத் திரும்பச் செய்யலாம். மாணவர்கட்கு இச்செயல்பாடு மகிழ்ச்சியூட்டும்.

**வீடு**

இவ்வட்டைகளை வீட்டிற்கு எடுத்துச் சென்று வீட்டுப்பாடம் செய்து வரலாம். இல்லையேல், மிகச்சிறிய அளவிலிருக்கும் இவ்வட்டைகளைப் பார்த்து எழுதிச் சென்று வீட்டுப்பாடங்கள் செய்து வரலாம்.

**பென்சில்**

மாணவர் பயிற்சி ஏடுகளில் கொடுக்கப்பட்டுள்ள சித்திரங்களுக்குத் தேவையான வண்ணங்களை மாணவர்களைக் கொடுக்கச் செய்யலாம்.

**புத்தகம்**

அரசு அளித்துள்ள பாடப்புத்தகங்களிலுள்ள சில மொழிப் பயிற்சிகளை இவ்வட்டைகளில் பக்க எண், வினா எண்ணுடன் தரப்பட்டுள்ளன. இவ்வட்டைகளுக்கு மாணவர் வரும்போது அட்டையை எடுத்துப் படித்துப் பார்த்துப் பாடப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளைச் செய்ய வைக்கலாம்.

**ஆடு**

இது சோதனை அட்டையாகும். இதில் பலவிதமான மாதிரிகள் வினாக்களாக அமைந்திருக்கும். இதற்குமுன் கேட்டு, படித்து, எழுதிப் பார்த்த அட்டைகளிலிருந்து அவ்வினாக்கள் அமைந்திருக்கும். இந்த அட்டையைச் சிறப்பாக மாணவர் முடித்தால் இத்திறனில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

**நாய்**

இவை ஒட்டுமொத்தமாக முன்னரே அறிந்தவற்றை மீட்டுணர்ந்து சோதனை செய்யும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை தேர்வு அட்டை வடிவில் இருந்தாலும் தேர்வு இல்லை. மாணவர்கள் பெற்ற திறனை அறியும் அளவுகோலாக நாய் அட்டை அமைந்து உள்ளது.

மாணவன் ஒவ்வொரு குறியீடுபற்றியும் நன்கறிந்து ஒவ்வொரு படியிலும் உள்ள குறியீட்டுச் சின்னங்களைப் பின்பற்றி முன்னேறி 23 படிகளையும் கடந்தால், மொழிப்பாடத்தில் முதல் வகுப்பைப் படித்து முடித்தவனாகக் கருதப்படுவான். ஒவ்வொரு படியிலும் முன்னேறும்பொழுது வகுப்பறையிலுள்ள அடைவினைப் பதிவு செய்யும் விளக்கத்தாளில் ஆசிரியர் பதிவு செய்வார். மாணவன் எவ்வாறு முன்னேறி வருகிறான் என்பது இதன்வழி தெரியும். வீட்டுப் பயிற்சியாகக் கொடுக்கப்படுவனவற்றையும் தானே கற்றல் பகுதியில் மாணவர் செய்து முடிப்பனவற்றையும் ஆசிரியர் பார்வையிட்டுத் திருத்துவார். ஒரு பாடத்துக்குரிய குறியீடுகளைப் பின்பற்றிச் செயல்பட்ட மாணவர், ஆசிரியர் அடுத்து என்ன பாடஞ் சொல்கிறாரோ அக்குறீயீட்டுச் சின்னங்களை எடுத்து இவ்வாறே செயல்படுவர்.

## 7. பல்வகுப்புக் கற்பித்தல்

ஆசிரியர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வகுப்புகளுக்குக் கற்பிக்கும் நிலையையே பல்வகுப்புக் கற்பித்தல் என்கிறோம். தமிழகத்தில் ஈராசிரியர் பள்ளிகளே அதிகம். ஐந்தாசிரியர்கள் இருந்தாலும் ஒருவர் விடுப்பில் சென்றாலும் அப் பள்ளி பல்வகுப்புக் கற்பித்தல் நிலைக்குச் சென்றுவிடுகிறது. எனவே, தமிழகப் பள்ளிகள் பெரும்பாலானவை பல்வகுப்புக் கற்பித்தல் முறையிலேயே செயல்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருமே பல்வகுப்புக் கற்பித்தலோடு பல பாடங்கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் திகழ்கின்றனர். பல்வகுப்பு, பல பாடங் கற்பிப்பதற்கு ஆசிரியர் சிறந்த திட்டமிடுபவராகவும் திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் ஆற்றல் மிக்கவராகவும் மீத்திற மாணவர்களைப் பயன்படுத்தத் தெரிந்தவராகவும் மாணவர் நலனில் அக்கறைகொண்டவராகவும் பணிப்பட்டறிவு மிக்கவராகவும் இருக்கவேண்டும்.

**வகுப்பு இணைப்புமுறை**

ஆசிரியர்-மாணவர் விகிதத்திற்கேற்ப வகுப்புகளை இணைத்துக் கற்பித்தலை மேற்கொள்ளும்போது கற்றல்-கற்பித்தல் சிறப்பாக நடைபெறும். அவ் வகுப்பு இணைப்பைச் சூழலுக்கேற்பவும் திறனுக்கேற்பவும் ஆசிரியர் மாணவர் எண்ணிக்கைக்கேற்பவும் கீழ்க்காணுமாறு அமைத்துக்கொள்ளலாம்.

| ஆசிரியர் எண்ணிக்கை | வகுப்புகள் | வகுப்புகள் | வகுப்புகள் | வகுப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | 1, 2, 3, 4, 5 | | | |
| 2 | 1, 2 | 3, 4, 5 | | |
| 3 | 1 | 2,3 | 4, 5 | |
| 4 | 1 | 2 | 3 | 4, 5 |

x‹ W ¡F« nk‰g£l tF¥òfS ¡F xnu neu¤âš f‰ã¥gJ fod khd gÂ ahÆD «f‰F«FHªijfË‹ v© Â ¡iffiwthfïU¥gjhš tF¥giwxG§F f£L¡FŸ ïU¡F«.xnuneu¤âš gytF¥òfS¡F¡f‰ã¡fnt© oaNHÈš tF¥giw ÃUthf«,neuo¡f© fhÂ ¥ò,Û¤âw khz t®Jiz ,âw‹ fis xU§»iz ¤J¡ f‰ã¤jš,jhnd f‰wš,FG¡f‰wš KjÈ amQ FKiwfis¥ã‹g‰wyh«.

**வகுப்பறை நிருவாகம்**

ஓராசிரியர் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர், ஒவ்வொரு நாளும் திட்டமிட்டே பள்ளியை நடத்திச் செல்லவேண்டும். எவ்வெவ் வகுப்புகளை இணைக்கலாம்? எவ்வெத் திறன்களை ஒருங்கிணைக்கலாம்? எந்தெந்தப் பாடவேளைகளில் என்னென்ன செயல்பாடுகளை மேற்கொள்வது? மீத்திற மாணவர்களிடமுள்ள திறன்களைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வது எப்படி? தான் ஒரு வகுப்பிலிருக்கும்போது பிற வகுப்புகளுக்கு என்னென்ன பணிகளைத் தருவது? கற்றலடைவை மதிப்பிடுவது எவ்வாறு? உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதெப்படி? வகுப்பமைப்பை எவ்வாறு அமைத்துக் கொள்வது? கற்றல் மூலைகளை, துணைக்கருவிகளை, செயல்வழிக் கற்றல் அட்டைகளை, மாணவர் குழுக்களை எவ்வாறெல்லாம் கற்றல்-கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம் என எண்ணித் திட்டமிடும் ஆசிரியருக்கு வகுப்பறை நிருவாகம் கைவந்த கலையாகும்.

**திறன் ஒருங்கிணைப்பு**

பாடத்திட்டம், பாடங்கள், திறன்களை நன்கறிந்த ஆசிரியருக்குப் பல்வகுப்பும் பல பாடங் கற்பித்தலும் ஒரு சுமையாகத் தெரியாது. ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளை இணைத்து ஒரு திறனை வளர்க்கவும், பல பாடங்களிலுள்ள ஒத்த திறன்களை இணைத்து ஒரு வகுப்பில் கற்பிக்கவும் திட்டமிடுந் திறனும் திறனறிவும் மிக்க ஆசிரியரால் மட்டுமே இயலும். திறமைமிக்க ஆசிரியர் ஒரு பாடத்தின்மூலம் பல்வேறு பாடக் கருத்துகளைப் புகுத்திக் கற்பிக்க முடியும். தேர்ந்த ஆசிரியரால் அறிவியல், சமூகவியலில் மொழிப் பாடங்களையும், மொழிப் பாடங்களில் பிற பாடங்களையும் இணைத்துக் கற்பிக்க இயலும். இவ்வாறு கற்பிப்பதால் ஒன்றோ டொன்று இணைத்தும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் கற்கும்போது நினைவாற்றல் மேம்படுகிறது. மேலும் அறிதல், புரிதல், பயன்படுத்தல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் எனும் ஆற்றல்கள் வளர்கின்றன. இவ்வாறு இணைத்துக் கற்பிக்கவியலாத திறன்களை நேரடியாகக் கற்பிக்கலாம்.

மீத்திற மாணவர்களைக்கொண்டு நடுத்தர மாணவர்களுக்கும் மெதுவாகக் கற்போருக்கும் எளிதாகக் கற்பிக்கலாம். ஒரு குழந்தையே மற்றொரு குழந்தைக்குக் கற்பிக்க

முடியும் என்னும் மொழியைப் பின்பற்றி ஆசிரியர் செயல்படலாம். மீத்திற மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு வழிகாட்டுவதோடு அவர்தம் அறிவுப் பசிக்கும் வேட்கைக்கும் வழிகாட்டி உதவவேண்டும்; இல்லையெனில், மீத்திற மாணவர்களிடையே நடத்தைப் பிறழ்ச்சி ஏற்பட்டு விடும். ஆசிரியர் மீத்திற மாணவர்களின் துணையை முழுவதுமாகச் சார்ந்திராமல் தேவையான போது மட்டுமே நாடிப் பயன்படுத்த வேண்டும்.

பல்வகுப்புக் கற்பித்தலில் எந்தெந்த வகுப்புகளை இணைத்து எந்தெந்தத் திறன்களைக் கற்பிக்கலாம் எனத் திட்டமிடுக.

**பல்வகுப்புக் கற்பித்தலின் சிறப்புகள்**

பல்வகுப்புக் கற்பித்தலில் திறன்மிக்க மாணவர்களை உருவாக்க முடியும். இக் கற்பித்தலில் குறைபாடுகள், இடர்ப்பாடுகள், அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டாலும் திறமையான ஆசிரியராக இருந்தால் சிறந்த குழந்தைகளை நாட்டுக்கு அளிக்க முடியும்.

- ஆசிரியர், தன் எண்ணத்திற்கேற்பவும் நினைத்தவாறும் குழந்தைகளை உருவாக்கலாம்.
- முதல் வகுப்புமுதல் ஐந்தாம் வகுப்புவரை பாடங்களைப் பல முறை கேட்கவும் கற்கவும் குழந்தைகளுக்கு வாய்ப்பு.
- முதல் வகுப்புமுதலே அனைத்து வகுப்புக் குழந்தைகளுடன் பேச, படிக்க, எழுத, விளையாட, கற்க வாய்ப்பு.
- வயது வேறுபாடின்றி மூத்த குழந்தைகளின் செயல்களை அறிந்துகொள்ள, பின்பற்ற, பழக வாய்ப்பு.
- குழந்தையைப் பார்த்தே குழந்தை கற்றுக்கொள்வதால் ஆசிரியருக்குக் கற்பிப்பது எளிது.
- மீத்திற மாணவர்கள் துணையிருப்பதால் ஆசிரியர் மெதுவாகக் கற்போரைக் கண்டுணர்ந்து கற்றலை மேம்படுத்துகிறார்; அக்கறை செலுத்துகிறார்.
- குறைந்த எண்ணிக்கை மாணவர்களே இருப்பதால் அனைவரைப் பற்றியும் ஆசிரியர் முழுவதுமாகத் தெரிந்துகொள்கிறார்.
- ஒத்த திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பிப்பதால் ஒவ்வொரு வகுப்பிற்கும்தனித்தனியாகக் கற்பிக்கத் தேவையில்லை.
- ஒருங்கிணைக்கவியலாத் திறன்களை மட்டும் குறிப்பிட்ட வகுப்புக்கு நேரடியாகக்கற்பித்தால் போதும்.

**பல்வகுப்புக் கற்பித்தலில் இடர்ப்பாடுகள்**

- ஆசிரியருக்கு உடல்நலக்குறைவு ஏற்படும்போது விடுப்பெடுப்பது எளிதான செயலன்று.
- நாள்தோறும் திட்டமிட்டுப் பள்ளியை இயக்கவேண்டும்.
- மாணவர் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது வகுப்பறை ஒழுங்கு கெடுகிறது.
- பணிச்சுமை அதிகமாகிறது.
- வயது வேறுபாட்டினால் மாணவர்களிடையே ஒழுக்கக் குறைவுக்கு வழி வகுக்கிறது.
- கற்றலடைவை மதிப்பிடுவது கடினம்.
- அடிக்கடி விடுப்பெடுக்கும் ஆசிரியரால் வகுப்பின் கற்பித்தல் தடைபடுகிறது. புதிய ஆசிரியருக்கு ஒத்த திறன்களை ஒருங்கிணைத்துக் கற்பிப்பது கடினம்.

## 8. கற்பித்தலில் தொழில் நுட்பம்

ஐம்பதாண்டுகளுக்குமுன் வானொலியைப் பார்த்திராதவர், கேட்டிராதவர் நம்மிடையே உள்ளனர். ஆனால், இன்றைய குழந்தைகள் வானொலி, தொலைக்காட்சி, செல்பேசி, கணினி எனப் பல அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தொழில் நுட்பத் துணைக்கருவிகளைத் தொட்டு இயக்கிப் பார்க்கும் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். தனியார் பள்ளிகள் மட்டுமின்றி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளும் நகராட்சிப் பள்ளிகளும் கற்பித்தல் தொழில் நுட்பங்கள் பலவற்றைப் பெற்றுள்ளன. இன்னும் ஐந்தாண்டுகளுக்குள் பள்ளிகள் அனைத்தும் கணினிவழிக் கல்வியையும் கல்வித் தொலைக்காட்சி வழியான கல்வியையும் பெற்றுவிடும். ஆசிரிய மாணவர்கள் அவற்றை இயக்கிக் கற்பிக்கத் தங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கற்பித்தலில் ஆசிரியருக்கு உதவுவன கற்பித்தல் துணைக்கருவிகளே. துணைக்கருவி களைச் செய்யவும் மின் கருவிகளை இயக்கவும் கற்றுக்கொள்ளாத ஆசிரியர், தம் பணியைச் சிறப்புறச் செய்யவியலாது. இந்த அலகில் துணைக்கருவிகள், இயக்கம், பயன்படுத்தும் முறை ஆகியவற்றைச் சுருக்கமாக அறிந்துகொள்வோம். மேலும் சிறப்பாகக் கற்க, கல்வித் தொழில் E £ g ü š fi s (Educational Technology Books) நாடிக் கற்கலாம்.

### கற்பித்தல் துணைக்கருவிகள்

தொழிற் கருவியின் நேர்த்தியைப் பொறுத்தே தொழிலாளியின் பணி சிறக்கும். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது திறன்மிக்கோர் பற்றிய வாக்கு. திறன்மிக்க ஆசிரியர் எளிய, செலவிலாப் பொருள்களைப் பயன்படுத்திக் கற்றலடைவை மேம்படுத்துவார். விலையுயர்ந்த கருவிகள் இருந்தால்தான் கற்பிக்க முடியும் என்பது பயனற்ற பேச்சு. சில பள்ளிகளில் விலையுயர்ந்த கற்பித்தல் பொருள்கள் இருக்கும். ஆனால், அவற்றை முறையாக இயக்கத் தெரியாமலும் பாடப்பொருள், திறனுக்கேற்பப் பயன்படுத்தும் திறனின்றியும் வீணாய்ச் சீரழியும். மாணவர் வயது, எண்ணிக்கை, பாடப்பொருள், பாடத்திறன், நேரம் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு கிடைக்கும் பொருள்களைக்கொண்டு துணைக்கருவிகளைச் செய்தும் பயன்படுத்தியும் சிறப்பாகக் கற்பித்துக் கற்றலடைவை மேம்படுத்த வேண்டும்.

ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் எளிய, செலவிலா, வீணாகும் பொருள்களைக் கொண்டு துணைக்கருவிகளைச் செய்யவும் பயன்படுத்தவும் தம் பயிற்சிக் காலத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும். மின் பொருள்களை இயக்கவும் பராமரிக்கவும் பயன்படுத்தவும் அறிந்துகொள்ள வேண்டும். கணினியை இயக்கவும் கணினி நழுவங்களை (Power Point Slide Presentation) மாணவர்களை ஈர்க்கும்படியாக வண்ணங்கள், எழுத்தளவுகள், இயக்கங்கள், ஒலியமைப்புகள், படங்கள் சேர்த்தல், இயக்கப் படங்களைச் சேர்த்தல், காட்சிப்படுத்துதல் முதலிய செயல்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். உங்கள் பணிக்காலம் கணினிவழிக் கற்றல்-கற்பித்தல் காலமாகவும் கல்வித் தொலைக்காட்சிவழிக் கற்றலை மேம்படுத்துங் காலமாக இருக்கும் என்பதனைக் கருத்திற்கொள்ளுங்கள். ஒவ்வோராசிரியப் பயிற்சி மாணவனும் கீழே குறிப்பிட்டுள்ள கற்றல்-கற்பித்தல் துணைக்கருவிகளைச் செய்யவும் பயன்படுத்தவும் அறிந்து கொள்ளவேண்டும்.

### துணைக்கருவிகள்

விளக்க அட்டைகள், சுழலட்டைகள், பொருத்தட்டைகள், செருகட்டைகள், பலநோக்குச் செருகட்டைகள், வெட்டுருக்கள், நழுவங்கள், முப்பரிமாணப் பெட்டகங்கள், ஒளியூடுவுருவுத் தாள், ஒலிநாடா, மாதிரிகள், உண்மைப் பொருள்கள், மின்னட்டைகள், பொருத்து மின்னட்டைகள், தானியப் பைகள், எழுத்து வடிவங்கள், சொல்லட்டைகள், சொற்றொடர் அட்டைகள், நிறுத்தற் குறியீடுகள், உருளைகள், கூம்புகள், கனச் சதுரப் பெட்டிகள், தொலைக்காட்சிப்பெட்டிகள், தூண்டில்கள் முதலிய துணைக்கருவிகள் மொழிப்பாடங் கற்பிக்க உதவும் துணைக்கருவிகளாகும். மேலும், புதுப்புதுத் துணைக்கருவிகளைப் பாடப்பொருளுக் கேற்பவும் திறன் வளர்ப்பதற்கேற்பவும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திச் செய்யலாம்.

எளிய, செலவிலாப் பொருள்களாகக் குச்சிகள், கொட்டைகள் - புளியங் கொட்டைகள், வேப்பங்கொட்டைகள், புங்கங்கொட்டைகள் இன்னபிற - கூழாங்கற்கள், சிப்பிகள், பெட்டிகள், தட்டுகள், அட்டைகள், கட்டைகள், நாளிதழ்கள், நாட்காட்டித் தாள்கள், நாட்காட்டி அட்டைகள், பற்பசை அடைப்பான்கள், பல்விளக்குந் தூறுகள் (Tooth brushes), இலைகள், பூக்கள், காய்கள், கனிகள், கீரைகள், பயிர் வகைகள், வேலம் பிசின் முதலிய பொருள்களைக்கொண்டும் துணைக்கருவிகளைச் செய்து கற்பிக்கலாம். ஆசிரியருக்கு மனமும் அக்கறையும் இருந்தால் கற்றல்-கற்பித்தலுக்கான பொருள்கள் எண்ணற்றவை தம் கண்முன்னே தெரியும்; விரியும்.

ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் கற்றல்-கற்பித்தலுக்கான தொகுப்பேடுகளைப் பயிற்சிக் காலத்திலேயே தொகுத்து வைத்துக்கொண்டால், பணிக்காலத்தில் எளிதாகப் பயன்படுத்தலாம். தாய்ப்பறவை எவ்வாறு உணவைத் தேடித்தேடிக் குஞ்சுகளுக்கு ஊட்டுகிறதோ அதே மனப்பான்மையோடு ஒவ்வோர் ஆசிரியரும் இருக்கவேண்டும். பறவை ஊட்டுவதோ உடல் வளர்ச்சிக்கு; நீங்கள் ஊட்டப்போவதோ அறிவு வளர்ச்சிக்கு என்பதை மறந்துவிடக் கூடாது.

**தொகுப்பேடுகள்**

குழந்தைப் பாடல்கள், சிறுகதைத் தொகுப்பு, சித்திரக் கதைத் தொகுப்பு, நன்னெறிக் கதைகள், ஓரங்க நாடகங்கள், சிறந்த கருத்து நாடகங்கள், படக் கட்டுரைகள், ஒரு பக்கக் கட்டுரைகள், கட்டுரைகள், புலவர்கள், அரசர்கள் வரலாறு, பழமொழித் தொகுப்பு, விடுகதைத் தொகுப்பு, பெயர்த்தொகுதி (மரபுப் பெயர்கள், உறவுமுறைப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள், கிழமைப் பெயர்கள், ஆண்டுப் பெயர்கள்), ஆத்திசூடித் தொகுப்பு (ஔவை, பாரதி, பாரதிதாசன்) முதலியவற்றை நூலகத்திலிருந்தும் நாளிதழ்களிலிருந்தும் தொகுத்து வைத்துக்கொள்ள வேண்டும். கையெழுத்துத் தொகுப்புகளை மாணவர்களின் கட்டுரையேடுகள், தேர்வுத்தாள்கள், அஞ்சலட்டைகள் முதலியவற்றிலிருந்து தொகுக்கலாம். செய்தித் தலைப்புத் தொங்கலிலிருந்து பெரிய எழுத்துத் தொகுப்பைச் செய்யவேண்டும்.

**படத்தொகுப்புகள்**

பழைய நுல்கள், நாளிதழ்கள், வார இதழ்கள், திங்கள் இதழ்கள், மலர்கள் முதலிய வற்றிலிருந்து பின்வரும் படவகைகளைத் திரட்டலாம். உடைவகைகள், உணவு வகைகள், வீட்டு வகைகள், ஐவகை நிலப் படங்கள், திருவிழாக்கள்( இந்து, இஸ்லாம், கிறித்துவம், சமணம், பௌத்தம், சீக்கியம்) காய்கனிகள், விலங்குகள், பறவைகள், பன்னாட்டுக் கொடிகள், பூக்கள், தலைவர்கள், புலவர்கள், கவிஞர்கள், தொழில்கள், இசைக்கருவிகள், சிற்பக் கலை, ஓவியக்கலை, வாகனங்கள் - நிலம் நீர் ஆகாயம்; நாட்டியக் கலைகள் - பரதம், கதக்களி, குச்சுப்புடி; நாட்டுப்புறக் கலைகள்- மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், புலியாட்டம் இன்னபிற. விளையாட்டுகள், வீட்டுப்பொருள்கள், மின்பொருள்கள் முதலியவற்றின் படங்களையும் பெயர்களையும் தொகுத்து மாணவர் கற்றலடைவை மேம்படுத்தலாம்.

**தொழில் நுட்பக் கருவிகள்**

ஆசிரியர், பாடப்பொருள், பாடப்பொருளைக் கொண்டுசெல்லும் வழிமுறை, மாணவர், மீள்பார்வை, கற்றல் விளைவு என்னும் ஆறு நிலைகளில் கற்றல் நிகழ்கிறது. கருத்தை எடுத்தியம்பு வதற்கான கட்புல-செவிப்புலக் கருவிகள் தேவை. வானொலி, ஒலி நாடா, ஒலிப் பெருக்கிகள்,தொலைபேசி,செல்பேசி முதலியன கேட்புக் கருவிகளாகும். கரும்பலகை, அறிவிக்கைப் பலகை, படங்கள், சுவரொட்டிகள், விவர விளக்க அட்டைகள், மின்னட்டைகள், பட நுல்கள் (Flip book, Flip chart), துணிப்பலகைகள் (Flannel board, graph), படப் பட்டைகள் (Picture strips), வரைப்படங்கள் (Graphs), கண்காட்சிகள் (Exhibits) பலகை விளம்பரங்கள் (Hoardings) முதலியன கட்புலக் கருவிகளாகும். தொலைக்காட்சி, ஒலி-ஒளிப் படக்காட்சிகள், கணினி முதலியன கட்புலச் செவிப்புலக் கருவிகளாகும்.

**மொழி கற்பித்தல் கருவிகள்**

ஒற்றைத்தாள் வெளியீடுகள் (Leaflets) (ஒரு பக்கச் செய்திகள்), மடிப்பு வெளியீடுகள் (ஒன்றுக்குமேற்பட்ட பக்கங்கள் மடிக்கப்பட்டவை) (Folders), துண்டு வெளியீடுகள்(குறிப்பிட்ட தலைப்பில் மூன்றுமுதல் பன்னிரண்டு பக்க அளவு) (Pamphlets), கால அறிவிப்பு வெளியீடுகள் (பல்வேறு தலைப்புகளில் விவரமாக எழுதப்பட்ட சின்னஞ்சிறு செய்திகள்) (Bulletin), சிற்றேடுகள் (Booklets), சுற்றறிக்கைக் கடிதங்கள் (Circular letters), செய்திக் கடிதங்கள் (News letters), செய்தித்தாள்கள் (Newspapers), பருவ இதழ்கள் (Magazines), குறிப்பேடுகள் (Journals) முதலியன மொழி கற்பித்தலையும் கற்றலையும் மேம்படுத்தும்.

**கணினியில் தமிழ்**

கணக்கீடு கருவியாகத் தொடக்கக் காலத்தில் வடிவமைக்கப்பட்ட கணினி, இன்று தகவல் பரிமாற்றத்தில் தன்னேரில்லாமல் திகழ்கிறது. கல்வியில் தகவல் பரிமாற்றம் சிறப்பிடம் பெறுவதால், கணினியின் பயன்பாடும் கல்வி வளர்ச்சியில் தவிர்க்க இயலாததாகும்.

நீங்கள், கல்வி நுட்பவியல் என்னும் பாடப்பகுதியில் கணினியை இயக்கப் பழகி யிருப்பீர்கள். கணினியுள் அமைந்த நினைவையில் (Memory) வைக்கப்பட்டிருக்கும் மென்னுருக்களுக்கு ஏற்ப, அதை நாம் பயன்படுத்தவியலும். இவையன்றியும் நெகிழ்வட்டுகள் (Floppies) குறுத்தட்டுகளிலும் (Compact disc) பயன்பாட்டு மென்னுருக்கள் மின்னணுத் தொழில் நுட்பத்தால் பதிவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் தமிழைக் கற்பிப்பதற்கும் கற்பதற்கும் பயன்படுகின்ற மென்னுருக்கள்பற்றி இப்பகுதியில் காண்போம்.

**மொழித்திறன் வளர்ச்சிக்கான மென்னுருக்கள்**

நாம் நூலைப் படிப்பதுபோலக் கணினியின் நினைவை, நெகிழி, குறுத்தட்டுப் போன்றவற்றில் பதியப்பட்ட தகவல்களைக் கணினித் திரைக்குக் கொண்டுவந்து படிக்கலாம். நூலின் பக்கங்களைப் புரட்டுகிறோம்; படிக்கிறோம். இவ்வாறே கணினியில் தகவல்களை மேன்மேலும் படிக்கலாம். கணினித் திரையில் தகவல்கள் மேன்மேலும் காட்சிதரக் கணினிக் குமிழ்ப்பலகையில் உள்ள அம்புக் குமிழை அழுத்தினால் போதுமானது.தற்காலக் கணினிகளில் ஒளி மட்டுமல்லாது, ஒலியும் இணைக்கப்பட்டிருப்பதால் ஒலி, ஒளி ஆகிய இரு ஊடகங்கள் வழியாகக் கணினியின் துணைகொண்டு மொழியைக் கற்கலாம்; கற்பிக்கலாம்.

**கேட்டல் திறன் வளர்க்கக் கணினி**

மின்னணுத் தொழில் நுட்பத்தால் பதியப்பட்டுள்ள தகவல்களைக் கணினித் திரைவழியாகப் பார்க்க முடியும். தகவல்களோடு ஒலியையும் இணைக்கும்போது, ஒலி மற்றும் ஒளித் தகவல்கள் பெறப்படுகின்றன. செவி, கண் ஆகிய இரு கற்றல் வாயில்களும் பயன்படுகின்றன. இவற்றின் பயன்பாட்டைக்கொண்டு, கேட்டல் சூழலைக் கணினியால் தர முடியும். கேள்வியோடு காட்சியும் இணைவதால் கற்றல் விளைவு மேம்படுகிறது.

கேட்டல் திறனை வளர்க்கும் பல பயிற்சிகளுள் எவை தக்கன எனச் சிந்திக்கவும்.கேட்டல் சூழல்களை, ஒலிக்கூறுகளாக மட்டுமே ஒலிப்பதிவு நாடா வழியாகத் தரவியலும். ஆனால், கணினி வழியாகக் கேட்டல் சூழல் நிகழ்ச்சிகளையே திரையில் காட்சிப்படுத்த முடியும். அவ்வாறு காட்சிப்படுத்துதலை உருப்போலி (Simulation) என்பர். காட்சியையும் ஒலியையும் இணைப்பதோடு, ஆர்வமூட்டுந் துணைக்கருவியாகவும் கணினி விளங்குகிறது.

கேட்டல் திறனை அளந்தறியும் தேர்வினையும் கணினி வாயிலாக மேற்கொள்ள முடியும். முன்பே வடிவமைக்கப்பட்ட தேர்வு வினாக்களைக் கணினி வாயிலாகக் கேட்கச் செய்து, தேர்ந்தெடுப்பு அல்லது அமைப்பு விடைகளால் கற்பவரின் திறனை உடனுக்குடன் அளக்க முடியும்.

**படித்தல் திறன் வளர்க்கக் கணினி**

கணினித் திரையில் கொண்டுவரப்படும் கற்றல் பொருளைப் படிக்கச் செய்து, படிப்பு வேகத்தை அளக்கவும் கணினியைப் பயன்படுத்தலாம். கணினியுள் அமைக்க மென்னுருத் தொழில் நுட்பத்தால் படிப்பவரின் விரைவினை அளக்க முடியும். கணினித் திரைவழியாகத் தரும் கட்டளைகளை மேற்கொண்டு ஒரு நிமிடத்திற்கு வழங்கப்படும் சொற்களைக் கணித்து விடலாம். இச்செயல்கள் எல்லாம் கற்போர் குமிழியை (Mouse) இயக்கச் செய்வதாலே நடைபெறும். படித்தலுக்காக வழங்கப்படும் பழகு செயல்கள் நிறைவில், கேட்டல் திறனை வினாக்கள்வழி அளப்பதுபோலப் படித்தலின் பல்வேறு திறக்கூறுகளைக் கணினி இயக்கத்தால் அளக்கலாம். இச்செயல்களை எல்லாம் மேற்கொள்ளுவதற்கு முன்னரே வடிவமைக்கப்பட்ட மென்னுருக்களைக் கணிப்பொறி வல்லுநர்கள் உருவாக்கியுள்ளனர். அவற்றை முறைப்படி பயன்படுத்துவதே நமது பணி.

**கணினியின் பிற பயன்பாடுகள்**

இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்ட கணினிப் பயன்பாடுகள் எப்போது நிகழும்? கற்பவர் ஒவ்வொருவருக்கும் ஒரு கணினி என்னும் நிலை ஏற்பட்டால்தான். இந்நிலை ஏற்படச் சில காலம் ஆகலாம். எனினும் கணினிப் பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட சில மென்னுருக்கள் கற்பதற்கு மட்டுமின்றிக் கற்பிப்பதற்கும் பெரிதும் பயன்படும்.

## 9. தொடர்செயல்

மாணவன், தான் கற்றவற்றை வாழ்க்கைச் சூழலில் செயல்படுத்திப் பார்க்கும் பொழுது தான் அது பயனுறு கல்வியாகிறது. தொடர்செயல் வழங்குவதால், தான்பெற்ற கல்வியின் பயனை உடனுக்குடன் பயன்படுத்திக் கல்வியின் தேவையை உணரவும் கற்றதை மீட்டுருவாக்கிப் பார்க்கவும் வாய்ப்பேற்படுகிறது. ஆகவே, கற்றல்-கற்பித்தலில் தொடர்செயல் இன்றியமையாப் பங்கு வகிக்கிறது.

**தொடர்செயல் வழங்குமுறை**

அன்றாடப் பாடப்பொருளைக் கற்பித்தபின், தொடர்செயல் வழங்குவதை வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். படித்தல், மனப்பாடஞ் செய்தல், எழுதுதல் (கடிதம், கட்டுரை, கவிதை, அறிக்கைகள், படியெடுத்தல் நாட்குறிப்பு, பாடப்பொருள்), குறிப்பெடுத்தல், உற்றுநோக்கல், வரைதல், வடிவமைத்தல், முன்னேற்பாடுகள் செய்தல், கருவிகள் செய்தல் எனக் கற்பித்தற் கேற்பச் செயல்களை வழங்கவேண்டும்.

கல்விபெறும் முதல் தலைமுறையினருக்கு இறுதிப் பாடவேளையிலோ சிறப்பு வகுப்பு நேரத்திலோ இச்செயல்களைச் செய்ய ஆசிரியர் வழிகாட்டவேண்டும். இல்லையெனில், கல்லாப் பெற்றோர் தங்களால் வழிகாட்ட இயலாமல் தனிப்படிப்புக்கு (Tuition) அனுப்பும் நிலைக்கு ஆட்படுகின்றனர்.

ஒரு நாளில் ஓரிரு பாடங்களுக்கு மட்டுமே தொடர்செயல் வழங்கவேண்டும். அனைத்துப் பாடங்களுக்கும் தொடர்செயல் வழங்குவதை மாணவர்கள் பெருஞ்சுமையாகக் கருதிப் பள்ளியை வெறுக்கின்றனர். இன்னின்ன நாள்களில் இன்னின்ன பாடங்களுக்குத் தொடர்செயல் வழங்குவதென ஆசிரியர்கள் திட்டமிட்டுக்கொள்ளவேண்டும். பெரும்பாலான ஆசிரியர்கள் விடுமுறைக் காலங்களில் வினாத்தாள்களுக்கு விடையெழுதி வருமாறும் கற்பித்த பாடங்கள் அனைத்திற்கும் வினா-விடைகள் எழுதி வருமாறும் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இம்முறையை விடுத்துப் பாடப்பொருள்சார்ந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள், அறிக்கைகள், செயல்திட்டங்கள் பற்றி எழுதி வருமாறு செய்தல் பயனுள்ளதாக இருக்கும்.

**தானே கற்றல்**

பள்ளியில் ஆசிரியரின் உதவியுடன் கற்கும் மாணவன் வீட்டில் அக்கற்றலை மேற் கொண்டு தானே படித்தும் எழுதியும் வரைந்தும் பார்க்கிறான். ஐயந்தோன்றும்பொழுது வீட்டிலுள்ள, அக்கம் பக்கத்திலுள்ளோரின் உதவியை நாடிக் கற்றுக்கொள்கிறான். இதனால், தன்னால் தனியாகச் செய்து முடிக்கவியலும் என்னும் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. மனப்பாடஞ் செய்ய, பிறர் உதவி யின்றிச் சிந்தித்துக் கட்டுரை எழுத, கவிதை எழுத, அறிக்கை எழுத வீடே ஏற்ற இடமாகும். தொடர் செயல்கள் மாணவன் தானே செய்வதாகவும் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்திச் செய்வதாகவும் இருத்தல் சிறப்பு. அப்பொழுதுதான் தொடர்செயல்மீது ஆர்வமும் மகிழ்ச்சியும் ஏற்படும். மேலும் மாணவனே தனித்துச் செய்யக் கூடியதாக வழங்குவதே சிறப்பு.

**தொடர்செயலை மதிப்பிடும் முறை**

தொடர்செயலை வழங்குவது எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது அதனை மதிப்பிடுவதாகும். நாள்தோறும் பாடவேளையைத் தொடங்கும் போதே முந்தைய நாள் தொடர்செயலைப் பார்வையிட்ட பின்னரே கற்பித்தலைத் தொடங்க வேண்டும். இவ்வாறு பார்ப்பதால் மாணவர்கள் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் தொடர்ந்தும் தொடர்செயலைச் செய்து வருவர். பாடவேளையின் முடிவிலோ மாலையிலோ பார்ப்பதாகத் தள்ளிவைத்தால் நேரமின்மையால் பார்வையிட வியலாமற் போய்விடும். இப்பழக்கம் ஆசிரியரிடம் நீடித்தால், மாணவர்களுக்கு அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டுவிடுவதோடு, அடுத்த முறை தொடர்செயல் செய்வதை நிறுத்திவிடுவர்.

தொடர்செயலைப் பார்வையிட்டதற்காகச் சரிக் குறியீட்டைத் தவறாமல் இடவேண்டும். அத்துடன், பணியை முடித்திருக்கும் நிலைக்கேற்ப நன்று, மிக நன்று, சரி, முன்னேற்றந் தேவை, முயற்சிதேவை எனக் குறிப்பிடவேண்டும். சொற்களாலும் புன்முறுவலாலும் பாராட்டவேண்டும். சிறு குழந்தைகளைத் தட்டிக்கொடுத்தும் பாராட்டலாம்.

**ஆசிரியர் சிந்தனைக்கு**

தொடர் செயல் வழங்குமுன் மாணவர் முன்னேற்றத்திற்கு இச்செயல் எவ்வகையில் உதவும்? நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றதா? வாழுஞ் சூழலுக்குப் பொருத்தமானதா? பாடத்திறன், பாடப்பொருளுக்குத் தொடர்புடையதா? கொடுக்கப்படும் தொடர்செயல் சுமையானதா? சுகமானதா? மாணவனால் தனியாகச் செய்ய வியலுமா? ஓரிரு மணிநேரத்திற்குள் முடிக்க முடியுமா? என்பதையறிந்து தொடர்செயல் வழங்கவேண்டும்.

தொடக்க வகுப்பு மாணவர்களின் கற்றலை மேம்படுத்த எத்தகைய தொடர்செயல்கள் வழங்கலாம் என்பதை மாணவ ஆசிரியர் வகுப்பறையில் கலந்துரையாடுக.

# 10.கற்றல்- கற்பித்தல் பொருள்கள்

ஒரு செயலை/வேலையை/பணியை/தொழிலை எளிதாகவும் செம்மையாகவும் விரைவாகவும் செய்ய உதவுவது அதற்குரிய கருவிதான் எனில் அது சாலப் பொருந்தும். ஆசிரியர் தொழிலும் அவ்வாறே. ஆசிரியரின் தொழிற் கருவியாவது, தான் கற்பிப்பதற்கும் மாணவர் கற்றலுக்கும் உதவும் துணைக்கருவிகளே. கற்றல் கற்பித்தல் மாணவன் மனத்தில் நிலைபெறச் செய்யவேண்டுமாயின், ஐம்புலன்களும் உணருமாறு கற்பித்தல் வேண்டும். ஆசிரியர் சொல்வதனாலும் மாணவர் கேட்பதனாலும் மட்டுமே கற்றல் நிகழ்ந்துவிடாது. கற்றல் 100 விழுக்காடு நிகழும்போது, எவ்வெப் புலன்களின்வழி எவ்வளவு சென்றடைகிறது என்பதனை உளவியலறிஞர் கணக்கிட்டுக் கூறியுள்ளதைக் காண்போம்.

| | | |
|---|---|---|
| சுவையுணர்வு மூலம் | = | 1.0% |
| தொடுபுலன் மூலம் | = | 1.5% |
| நுகர்வுமூலம் | = | 3.5% |
| செவி மூலம் | = | 11% |
| கண் மூலம் | = | 83% |

இதேபோன்று 100 விழுக்காடு கற்றல் நிகழும்போது எவ்வளவிற்கு மனத்திற் பதிகிறது என்பதையும் அறிஞர் ஆய்ந்து கூறியுள்ளனர்.

கேட்டல் 100 விழுக்காடு எனில் மனத்திற் பதிவது 20 விழுக்காடு.
காணல் 100 விழுக்காடு எனில் மனத்திற் பதிவது 30 விழுக்காடு.
கேட்டலும் காணலும் 100 விழுக்காடு எனில் மனத்திற் பதிவது 50 விழுக்காடு.
பேசுவது 100 விழுக்காடு எனில் மனத்திற் பதிவது 80 விழுக்காடு.
பேசுவதும் செயற்படுவதும் 100 விழுக்காடு எனில் மனத்திற் பதிவது 90 விழுக்காடு.

அறிஞர்களின் கூற்றுப்படி மாணவர்களுடன் பேசுவதனாலும் அவர்களைச் செயற்படச் செய்வதனாலும் 90 விழுக்காட்டிற்குமேல் கற்றலடைவைப் பெறச் செய்யவியலும் என்பது தெளிவாகிறது. 'தொட்டுப் பழகாத கல்வி, சுட்டுப்போட்டாலும் வராது' என்பது தமிழ்நாட்டு வழக்கு. பள்ளிகளில் செயல்வழிக் கற்றல்(Activity Based Learning), செய்து கற்றல் ( Learning by doing), தானே கற்றல் (Self-learning), செய்முறைச் சோதனைகள் (Practicals), பாட நூற் பயிற்சிகள்(Exercises), செயல் திட்டமுறைகள்( Projects) முதலியன மாணவர்களே செய்து கற்க வேண்டும் எனும் நோக்கில்தான்அமைக்கப்படுகின்றன.

> அவ்வவ் வயதிற்கேற்ற செயல்பாடுகளைச் செய்ய அனுமதிக்காதபோது, வாய்ப்புகளை மறுக்கும்போது, தேவையான பொருள்களைத் தராதபோது, நேரத்தை ஒதுக்கித் தராதபோது குழந்தைகளை நாம் முடமாக்கிவிடுகிறோம்; கற்றலைத் தடுத்துவிடுகிறோம். அதனால், அவ்வவ் வயதிற் பெறவேண்டிய கற்றல் நிகழாமல் போய்க் கற்றல் குறைபாடுடைய குழந்தையாகிவிடுகிறது. 'பருவத்தே பயிர் செய்' எனும் பழமொழி கற்றலுக்கும் பொருந்தும்.

கற்றல் என்பது வயது வேறுபாடின்றி நடைபெறும் ஒரு தொடர்செயலாகும். எந்தவொரு புதுமையும் புதியனவும் எல்லாருமே கற்க வேண்டியதே. குழந்தைகள் ஒவ்வொரு நொடியும் தங்களின் ஐம்புலன்வழியே கற்றவண்ணமே இருக்கின்றனர். குழந்தைகளின் கற்றலை யாராலும் தடுத்து நிறுத்தவியலாது. அவர்கள்ஏதோவொன்றை எப்பொழுதும் கற்றுக்கொண்டே இருக்கின்றனர். ஆசிரியர்கள் குழந்தைகளின் கற்றலுக்குத் துணைபுரிய வேண்டும்; வாய்ப்புகளை உருவாக்கித் தரவேண்டும்; தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்; வயது, ஆர்வம்,

தேவை, நாட்டம், விருப்பத்திற்கேற்ப வழிநடத்திக் குழந்தைகளின் கற்றலுக்குத் துணை நிற்கவேண்டும். குழந்தைகளுக்குக் கற்றலில் ஆர்வங் குறையும்போதும் ஐயமேற்படும்போதும் தடுமாற்றம் ஏற்படும்போதும் அறிவுரை வழங்கி, வழிகாட்டுபவராக, மேம்படுத்துபவராக, ஊக்கமூட்டுபவராக ஆசிரியர் திகழவேண்டும்.

"ஒரு படம் ஓராயிரம் சொற்களுக்கு இணையாகும்" - சீனப் பழமொழி

"புலன்காட்சியின் வழியே பெறப்படும் அனுபவங்களே
கல்வியின் அடிப்படையாகும்" - அறிஞர் காமினியஸ்

"சொற்களுக்குமுன் பொருள்கள்" - பெஸ்டலாசி

"புலன்களே அறிவின் வாயில்கள்" - மாண்டிசோரி

"நான் கேட்கிறேன்; ஆனால், மறந்துவிடுகிறேன்.
நான் பார்க்கிறேன்; ஓரளவு மனத்தில் தங்குகிறது.
நான் செயலில் ஈடுபடுகிறேன்; முழுமையாகப் புரிந்துகொள்கிறேன்."
- சீனப் பழமொழி


ஒரு குழந்தைதான் மற்றொரு குழந்தைக்குக் கற்பிக்க முடியும். மற்றவர்கள் கற்றலில் ஊக்கப்படுத்தலாம்; வசதிகளை ஏற்படுத்தித் தரலாம்; வழிகாட்டலாம்; அறிவுரை கூறலாம்; பாராட்டலாம்; பங்கேற்கலாம்; முறைப்படுத்தலாம்; முன்னுதாரணமாகத் திகழலாம்.


## கற்றல் பொருள்களின் பயன்கள்

- கற்றல் பொருள்கள் வண்ணம், வடிவம், இயக்கம், அளவு ஆகியன குழந்தையைக் கற்றலின்பால் ஈர்க்கின்றன.
- கற்றல் பொருள்களைத் தொட்டும் இயக்கியும் செய்தும் கற்பதால், கற்றவை மனத்தில் நிலைத்து நிற்கின்றன.
- கற்றல் பொருள்களின் வாயிலாகக் கற்பதால், கற்ற கருத்துகளை நினைவிற் கொண்டுவருவது எளிதாகிறது.
- கற்றல் கற்பித்தல் பொருள்களைப் பயன்படுத்திக் கற்பிப்பதால் ஆசிரியருக்குப் பணி எளிதாகிறது.
- கற்பது சுமையாக இல்லாமல் சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் நடைபெறுகிறது.
- தானே கற்கவும் பிற மாணவர்களுடன் குழுவாகக் கற்கவும் வழி செய்கிறது.
- பொருள்களை அறிந்து பேசவும் எழுதவும் செய்வதால் முறைப்படி கற்க வழிவகுக்கிறது.

## கற்றல் பொருள்கள்

கற்றல் பொருள்கள் காட்சிப் பொருள்கள், கேள்விப் பொருள்கள், காட்சி-கேள்விப் பொருள்கள் என மூவகைப்படும். காட்சிப் பொருள்கள் கண்ணால் கற்கப் பயன்படுவன.






முதலாம் இரண்டாம் வகுப்புக் குழந்தைகளுக்கு உண்மைப் பொருள்களைக் காட்டியே அவற்றின் பெயர்களை அறிமுகஞ் செய்யவேண்டும். உண்மைப் பொருள்கள் கிடைக்காதபோது அவ்வுருவங்களை அடர்வண்ணப் படங்களாகவோ முப்பரிமாண உருவங்களாகவோ மாதிரி உருவங்களாகவோ காண்பித்தல்வேண்டும். பொருள்கள் அறிமுகமான பிறகே படங்களாகவும் சொற்களாகவும் வண்ணங்களின்றியும் காட்டவேண்டும். இவ்வாறு கற்பிப்பதால் குழந்தைகளின் மனத்தில் எளிதில் பதிந்துகொள்ளவும் தேவையானபோது மீட்டுருவாக்கவும் இயலுகிறது.

**கற்றல் பொருள்கள் தயாரித்தலும் பயன்பாடும்**


**விளக்கத்தாள் (Chart):** இலக்கண இலக்கியச் செய்திகளை முறையாகக் கூறுவதற்குப் பதிலாகப் படங்களாக வரைந்தும் எழுதியும் காட்டப் பயன்படுவது விளக்கத்தாள். இவ்விளக்கத்தாளைப் பார்த்தவுடனேயே ஒரு தலைப்பு பல பிரிவுகளாகப் பிரிந்து செல்வதை எளிதில் அறியலாம். எடுத்துக்காட்டாக:





**மின்னட்டைகள்**: மின்னட்டைகளை மூன்றுவிதமாகத் தயாரிக்கலாம். ஒருபுறம் படம் அதன் மற்றொருபுறம் விளக்கம். ஒருபுறம் சொல், அதன் மற்றொருபுறம் பொருள். இருபுறமும் படம் என்னும் முறையில் அமையலாம். மூன்று அட்டைகளில் முதலட்டை படமும் சொல்லும்; இரண்டாவது அட்டையில் படம் மட்டும்; மூன்றாவது அட்டையில் சொல் மட்டும் என்றவாறு தொகுப்பு மின்னட்டையைத் தயாரிக்கலாம். மின்னட்டையின் அளவு 18 x 10 செ.மீ. மின்னட்டையின் ஓரப்பகுதிகள் வண்ணமிடப்படவேண்டும். செய்திகள் அடர்வண்ணத்தில் எழுதப்படவேண்டும். மின்னல் வேகத்தில் மாணவர் படிக்கும்வண்ணம் செய்திகள் மிகப் பெரிய அளவில் எழுதப்படவேண்டும்.




**சுழலட்டை:** மாணவர்கள் கையாள்வதற்கு ஏற்றவகையில் 15 செ.மீ. ஆர அளவிற்குள் வட்டமாக அட்டைகளைக் கத்தரித்து எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரே அட்டை, பெரிய சிறிய அட்டை,ஒரே அளவிலான இரண்டு அட்டைகள், சிறிதிலிருந்து பெரிதாக மூன்று அட்டைகள், ஒரே பட்டையில் இணைக்கப்பட்டுள்ள இரண்டு அட்டைகள் போன்ற வடிவங்கள் இவற்றில் உண்டு.ஒருமுறை சுழற்றியவுடன் அனைத்து விடைகளும் நேருக்குநேர் பொருந்தும்படி அமைவது கற்பித்தல் சுழலட்டையாகும். விடைகாண ஒவ்வொருமுறையும் அட்டையைச் சுழலற்றும்படி அமைத்தல் தேர்ந்தறிதல் சுழலட்டையாகும். ஒரே நிறம் அல்லது வடிவம் பார்த்து இணைக்கும் தானே கற்றல் சுழலட்டை எனப் பலவகைகள் உண்டு.




கற்றல் கற்பித்தல்பொருள்கள் கற்றலையும் கற்பித்தலையும் மேம்படுத்தும், எளிதாக்கும். எண்ணிறந்த கற்றல் பொருள்கள் கண்முன்னே கிடக்கின்றன. அவற்றைத் திறமையாகப் பயன்படுத்துவது ஆசிரியரின் பணித்திறமையாகக் கருதப்படும்.


**மாய அட்டை:** வினாவையும் விடையையும் இணைத்துக் கற்றல் கருவி அமைப்பது மாய அட்டையாகும். இதில் மாணவர்க்குத் தெரியாதவகையில் மெழுகினால் விடைகள் எழுதப்பட வேண்டும். குங்குமம் போன்ற ஏதேனும் வண்ணங்களை மெழுகு எழுத்தின்மீது பூசி மறைந்துள்ள விடையைக் கண்டறியச் செய்யலாம். இதை வாக்கிய அட்டை, உருவ அட்டை, மின்னட்டையெனச் செய்திகளுக்கு ஏற்றவாறு அமைக்கலாம்.

| | |
|---|---|
| **கனியிருப்பக்** | **கவர்ந்தற்று.** |

மாய அட்டை

| பொருத்துக | |
|---|---|
| **உள்ளே** x | வெளியே |
| **மேலே** x | கீழே |
| **பல** x | சில |

**நழுவட்டை:** சொல்வளம் பெருக்குவதற்கு நழுவட்டையைப் பயன்படுத்தலாம். எழுத்து, சொல்லும் படமும், சொல்லும் விளக்கமும் முதலியவற்றை நழுவட்டையில் அமைக்கலாம்.





நடுவெழுத்து கடையெழுத்து முதலெழுத்து


நழுவட்டைகள்




நடுவெழுத்தை நீக்கிச் சொற்பெறுதல்

**செருகட்டை:** நிலையான ஒரு கற்றல் கருவியாகத் தொடக்க வகுப்புமுதல் மேல் வகுப்புவரை இதனைப் பயன்படுத்தலாம். தடித்த அட்டையில் வெற்றுச் சோப்புப் பெட்டிகள் அல்லது ஊதுவத்திப் பெட்டிகளை ஒட்டி இதனை எளிதாகத் தயாரிக்கலாம். துணிகள், மரக்கட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் செருகட்டைகள் நிலையானதாக இருக்கும்.










அருஞ்சொற்பொருள், எதிர்ச்சொல், சொல்வகைகள், வகைப்பாடுகள், ஓரெழுத்து ஈரெழுத்துச் சொல் முதலிய பயிற்சிகளுக்கு இச்செருகட்டைகளைப் பெரிதும் பயன்படுத்தலாம்.

சிறு பெட்டிகளில் மணலை நிரப்பி, கம்பி அல்லது குச்சி இணைந்த உருவப் படங்களைத் தயாரித்து அதில் செருகியும் செருகட்டை தயாரிக்கலாம்.


**தொடரட்டைகள்:** 18 x 10 செ.மீ. மின்னட்டைகளில் தொடர்புடைய செய்திகளை வரிசையாக எழுதி ரெக்சின் துணிமூலம் இணைக்கலாம். இதனை ஒன்றன்கீழ் ஒன்றாகவும் அடுத்தடுத்தும் இணைக்கலாம். தொடர் நிகழ்வாகப் பேசுதலை மாணவர்களிடத்தில் ஊக்குவிக்கக் கதை மற்றும் சூழல் படங்களை ஒட்டலாம். விளக்கத்தாளை 18 x 10 செ.மீ. அளவில் மடிக்கவும். மேலும் கீழும் வண்ணத்தாள் சுற்றப்பட்ட கட்டைக் குச்சிகளை ஒட்டவும். இரண்டு குச்சிகளை விரித்துப் பிடிக்கத் தொடரட்டை கிடைக்கும்.





**பொருத்தட்டை :** நாட்காட்டி அட்டையில் விளக்கத்தாளை ஒட்டித் தானே கற்றல், தேர்ந்தறி அட்டைகளை உருவாக்கலாம். வினாவிலுள்ள நூலை இழுக்க விடையிலுள்ள நூல் உள்ளே செல்லுமாறு அமைக்கலாம். வினாவிற்கு நேராகப் பாசிமணியை வைத்து மாணவனை அதற்குரிய விடைக்கு நேராகப் பாசிமணியை நகர்த்தச் செய்யலாம்.





(தானே கற்றல்) (தேர்ந்தறிதல்) (மின்னிணைப்பு)

மின்னிணைப்புக் கொடுத்தும் பொருத்தட்டைகள் தயாரிக்கலாம். ஒரேவிதமாக அல்லது வெவ்வேறு வடிவங்களில் வெட்டப்பட்ட விளக்கத்தாள்களை ஒன்றுடன்ஒன்று இணைக்கும் வகையில் பொருத்தட்டைகள் தயாரிக்கலாம்.


**எழுத்தட்டைகள்:** தனித்தனியாக எழுத்துகளை 3x3 செ.மீ. அளவில் சதுரமாக வெட்டி எழுத்தட்டைகளைத் தயாரிக்கலாம். வட்டம், சதுரம், முக்கோணம், பூ, இலை முதலிய வடிவங்களில் எழுத்துகளை எழுதி அட்டைகள் தயாரிக்கலாம்.




**சொல்லட்டைகள்:** 1. ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்து - எனச் சொற்களுக்குத் தக்கவாறு சொல்லட்டைகளின் அளவை அமைத்துக் கொள்ளலாம்.
2. பிற கற்றல் கருவிகளோடு இணைத்தும் இதனைத் தயாரிக்கலாம்.
**வாக்கிய அட்டைகள்:** 1. வாக்கியம் முழுமையும் எழுதுவதாக வாக்கிய அட்டை அமையவேண்டும்.





2. வேண்டிய நீளங்களில், வடிவங்களில் மாணவன் கையாளுவதற்கு ஏற்றதாக அமையலாம். (மேற்கண்ட மூன்று அட்டைகளையும் தடித்த அட்டைகளில் விளக்கத்தாளை ஒட்டித் தயாரிக்கலாம்.)
**பதக்க அட்டைகள்:** 1. சதுரம், செவ்வகம், வட்டம் முதலிய வடிவங்களிலும் பதக்கத்தைத் தயாரிக்கலாம்.
2. இதில் எழுதப்படும் எழுத்தளவு பெரியதாக அடர்வண்ணத்தில் இருக்கவேண்டும்.
3. கழுத்தில் தாழ்வாகத் தொங்கவிட ஏதுவாகப் பெரிய நூல் இணைக்கப்படவேண்டும்.
**பகடைகள்:** 1. குறைந்தது 4 x 4 செ.மீ. அளவிலிருந்து பெரிய அளவுவரை இதனைத் தயாரிக்கலாம்.
2. சதுரம், நீள் செவ்வகம் போன்ற வடிவங்களில் வெற்றுப் பெட்டிகளின் (தீப்பெட்டி, பற்பசைப் பெட்டி, சோப்புப் பெட்டி...) மீது விளக்கத்தாளினை ஒட்டியும், மரக்கட்டை, பிளாஸ்டிக், வெண்நுரை அட்டை முதலியவற்றைக்கொண்டும் இதனைத் தயாரிக்கலாம்.





3. இதில் எழுத்து, சொல், கட்டளை, வாக்கியம், பாடல் வரிகள் முதலியவற்றை எழுதலாம்; படங்களும் ஒட்டலாம்.
**மூகமூடிகள்:** 1. காகிதக் கூழ், விளக்கத்தாள், வண்ணத்தாள், தடித்த அட்டைகள், பாரீஸ் சாந்து கொண்டு முகமூடிகளைத் தயாரிக்கலாம்.
2. விளக்கத்தாள், வண்ணத்தாள், தடித்த அட்டைகளில் உருவங்களை வரைந்து வெட்டி யெடுத்துக் கண்களுக்கு நேராகத் திறப்பு வைத்து, இதனைத் தயாரிக்கலாம். காதுப் பகுதியின் இரண்டு இருபுறங்களிலும் நூல் கட்டுவதற்கு ஏற்றவாறு அமைக்கலாம்.

3. காகிதத்தையும் வெந்தயத்தையும் நீரில் ஊறவைத்து உரலிலிட்டு ஆட்டி, முகமூடி அச்சில் வார்த்தும் இதனைச் செய்யலாம். மேற்கண்டவாறே பாரீஸ் சாந்திலும் தயாரிக்கலாம்.







**உருவப்படம்:** வண்ணப்படங்களைத் (பாரதி, பாரதிதாசன், கவிமணி...) தடித்த அட்டைகளில் ஒட்டி உருவிற்கேற்ப வெட்டி எடுக்கவும். அதன் பின்புறம் புகைப்படச் சட்டங்களுக்கு வைப்பதுபோல நிறுத்தித் தயாரிக்கவும்.




**முப்பரிமாணப் பெட்டகம்:** 1. மாதிரி உருவங்களை ஒளியூடுருவுத்தாள் (அ) கண்ணாடியால் செய்யப்பட்ட பேழையினுள் வைத்து உருவாக்கப்படுவது முப்பரிமாண உருவப் பெட்டகம். உயிரியல் பூங்கா, காடு, ஐவகை நிலம், அஞ்சலகம் என எதையும் மாணவனுக்குக் காட்சிப்படுத்த இது உதவும்.





**சொற்புத்தகம்:** விளக்கத்தாளினை மடித்துப் புத்தகம்போலத் தைத்து இதனைத் தயாரிக்கலாம். படத்தில் உள்ளவாறு இறுதி எழுத்தை நிலையாக்கி, முதலெழுத்து மட்டும் மாறிக்கொண்டே இருக்கும்படியும், இறுதி எழுத்தை மாற்றும்படியும் இதனைத் தயாரிக்கலாம். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திருக்குறள் - வரிகளை அதன் பழமை வடிவோடு உணர்ந்துகொள்ள உதவுவது - சுவடி வடிவப் புத்தகம்.








**சொல் விசிறிகள்:** அட்டைகளில் (அ) விளக்கத்தாளில் சொல்லாட்சிப் பெருக்கத்திற்குப் பயன்படும் சொல்விசிறிகளைத் தயாரிக்கலாம்.




**விரல் பொம்மை:** 12 x 9 செ.மீ. அளவுள்ள விளக்கப்படத் தாளில் படத்திலுள்ளவாறு படம் வரைக. அதை வெட்டி எடுக்க. வரைந்த படத்தின் கீழ்ப்புறத்தில் படத்தில் காட்டியவாறு விரல்கள் நுழையும்படி இரண்டு துளைகள் அமைக்க.




**முட்டையோட்டுப் பொம்மை:** முட்டையோட்டை எடுத்துக்கொண்டு அதன்மீது முகத்தை வரைந்து ஓட்டின் மேற்பகுதியில் கம்பளி நூல்களை ஒட்டவேண்டும். படத்தில் காட்டியுள்ளவாறு குச்சிகளை வைக்கவேண்டும். ஓட்டின் உடைந்த பகுதியை வண்ணத்தாள்கொண்டு மறைக்க வேண்டும்.



**அட்டைப் பெட்டிப் பொம்மை:**அட்டைப்பெட்டியில் மூன்று பகுதிகளை இணைக்கும் வண்ணம் புள்ளிவைத்து, அதனை வெட்டியெடுக்கவும். அதன்மேற் பகுதியில் முகமும் கீழ்ப்பகுதியில் வாயும் ஓரப்பகுதியில் (தனியாக அட்டையில் செய்து) காதும் தயாரித்து ஒட்டவும். அட்டையின் அடிப்பகுதி வழியாக நான்கு விரல்களை மேல்நோக்கியும் கட்டைவிரலை வாய்ப்பகுதியில் தெரியுமாறு அமைக்க.

**துணிப்பலகை:** தடித்த அட்டையின்மேல் (பேருந்து, இருசக்கர வாகனம் துடைக்கப் பயன்படுத்தும்) மெல்லிய துணியை ஒட்டிவிடவேண்டும். பல வடிவங்களில் வெட்டப்பட்ட கற்றல் பொருள்கள்அடங்கிய சிறு அட்டைகளின் பின்புறம் உப்புத்தாள் துண்டுகளை (சொரசொரப்பு வெளியில் தெரியும்படி) ஒட்டவேண்டும். இதனை அப்படியே துணியில் அழுத்தி ஒட்டிவிடலாம். உருவப்படத்திற்குச் செய்ததைப்போலவே இதன் பின்புறம் நிறுத்திச் செய்தால், பலகையை நிற்க வைக்கலாம். அட்டையின்மீது வெண்நுரை அட்டை (அ) மெல்லிய ஸ்பான்ச் ஒட்டியும் பலகை தயார் செய்யலாம். அதில் உப்புத்தாளுக்குப் பதிலாகக் குண்டூசியைப் பயன்படுத்தலாம்.




**உப்புத்தாளில் ஒட்டப்பட்ட எழுத்தட்டைகள்**

**துணிப்பலகை**

## 11. தொகுப்புரை

இவ்வியலில் விரிவுரைமுறை, நடிப்புமுறை, விளையாட்டுமுறை, செயல்திட்டமுறை, ஒப்படைப்புமுறை முதலிய பயிற்றுமுறைகள் விளக்கப்பட்டுள்ளன. இம்முறைகளுக்கான முன்னேற்பாடுகள், நிறைகள், குறைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. செயல்வழிக் கற்றல், அணுகுமுறை, செயல்பாடுகள், வகுப்பறை நிருவாகம், குழுக்களின் அமைப்பும் செயல்பாடும், செயலட்டைகள், தாழ்நிலைக் கரும்பலகை, காலநிலை அட்டவணை, படிநிலைகள் முதலிய செயல்பாடுகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பல்வகுப்புக் கற்பித்தலில் வகுப்பு இணைப்பு முறை, வகுப்பு நிருவாகம், திறன் ஒருங்கிணைப்பு, பல்வகுப்புக் கற்பித்தலின் சிறப்புகள், பல்வகுப்புக் கற்பித்தலில் இடர்ப்பாடுகள் முதலிய கூறுகள் தெளிவாக்கப்பட்டுள்ளன. கற்பித்தலில் தொழில் நுட்பம் என்னும் பகுதியில் கற்பித்தல் துணைக்கருவிகள், பல்வகைத் துணைக்கருவிகள், மொழி கற்பித்தல் கருவிகள், கணினித் தமிழ்ப் பயன்பாடு பற்றி விளக்கப்பட்டுள்ளன. தொடர்செயல் எனும் பகுதியில் வழங்கும் முறை, தானே கற்றல், மதிப்பிடும் முறை பற்றிச் சொல்லப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தல் பொருள்கள் பகுதியில் கற்றல்பொருள்கள் வகைகள், அவற்றைத் தயாரித்துப் பயன்படுத்தும்முறை ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன.

மாணவ ஆசிரியர்கள் முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்கு உண்மைப் பொருள் களையே கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்தவேண்டும். கிடைக்காதவற்றிற்கு மட்டுமே மாதிரிகள், முப்பரிமாணப் படங்கள், வரைப்படங்களைப் பயன்படுத்தவேண்டும். எளிய செலவிலாப் பொருள்களைப் பயன்படுத்தித் துணைக்கருவிகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யவியலாதபோது மட்டும் பொருள்களை விலைகொடுத்து வாங்கித் துணைக்கருவிகளைச் செய்யவேண்டும். அவற்றையும் நிரந்தரமான துணைக்கருவி களாகவும் நீண்டநாள் பயன்படக் கூடியதாகவும் செய்வது சிறப்பு. குழந்தைகள் வண்ணம், வடிவம், இயக்கம், அளவு ஆகியவற்றால் எளிதில் கவரப்படுவதால் இவற்றிற்கு முன்னுரிமை தந்து செயல்படவேண்டும்.

# 5. கற்பித்தல் திறன் வளர்த்தல்

## அறிமுகம்

கல்விச் செயல்முறை கற்றல், கற்பித்தலென இரு கூறுகளைக் கொண்டது. கற்பித்தல் நிகழ்கிற போதெல்லாம் கற்றல் நிகழ்கிறது எனக் கூற முடியாது. முழுமையான கற்றல் நிகழ வேண்டுமெனில் கற்பித்தல் மிகுந்த திறனுடையதாக விளங்கவேண்டும். எனவே, மாணவ ஆசிரியர் தம் கற்றல் திறனை வளர்த்துக்கொள்ளப் பட்டறிவுமிக்க ஆசிரியரின் கற்பித்தலை உற்றுநோக்குதல்வேண்டும். அவ்வாறு உற்றுநோக்கும்பொழுது சிறந்த கற்றல் விளைவுகளைத் தரும் உத்திகளைத் தாமும் பின்பற்றலாம். எனவே, இவ்வலகில் செயல்வழிக் கற்றலை உற்றுநோக்குதல், மரபுவழிக் கற்றலை உற்றுநோக்குதல், படைப்பாற்றல் கற்றல் முறையினை உற்றுநோக்குதல் ஆகியன பற்றியும் அவற்றிற்குரிய படிவங்களை நிரப்புதல் பற்றியும், செய்தி வளம் பெறுவதற்காகச் செய்தி திரட்டல் பற்றியும் அறிந்துகொள்வோம்.

**படிநிலைகள்**

1. உற்றுநோக்கலின் தேவை
   உற்றுநோக்கும் முறைகள்
2. செயல்வழிக் கற்றலை உற்றுநோக்குதல்
   மரபுவழிக் கற்றலை உற்றுநோக்குதல்
   உற்றுநோக்கல் படிவம்
3. குறைகளைதலும் நிறைபின்பற்றலும்
4. செய்தி திரட்டும் திறன்
   அகராதிகள்
   நிகண்டுகள்
5. தொகுப்புரை

## 1. உற்றுநோக்கலின் தேவை

மாணவ ஆசிரியர்கள் பள்ளிகளுக்குச் சென்று பட்டறிவுமிக்க ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையினை நேரடியாக உற்றுநோக்கிப் பெறும் பட்டறிவே உற்றுநோக்கலாகும். பயிற்சிக் காலத்தில் உற்றுநோக்கற் காலம் பத்து நாள்களாகும்.

ஆசிரியர்களின் கற்பித்தலை உற்றுநோக்கித் திறன்மிக்க ஆசிரியர்களாக உருவாகவே பல்வேறு செயல்பாடுகளில் பயிற்சி மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். உற்றுநோக்கப்படும் ஆசிரியரின் கற்பித்தல் திறன்களைக் கடைப்பிடிக்கவும் குறைகளைப் போக்கிக் கொள்ளவும் உற்று நோக்கல் தேவைப்படுகிறது. தலைசிறந்த ஆசிரியராகத் திகழவேண்டுமெனில் ஆசிரியர் பலரின் கற்பித்தலை உற்றுநோக்குவது இன்றியமையாததாகும்.

**உற்றுநோக்கும் முறைகள்**

முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை செயல்வழிக் கற்றல் முறையும், ஐந்தாம் வகுப்புக்கு மரபுவழிக் கற்பித்தல் முறையும், ஆறிலிருந்து எட்டாம் வகுப்புவரை படைப்பாற்றல் கற்றல் முறையையும் பின்பற்றிப் பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டு மொழித்திறன்கள் வளர்க்கப்படு கின்றன.

## 2. செயல்வழிக் கற்றலை உற்றுநோக்குதல்

செயல்வழிக் கற்றலின் படிநிலைகள், குறியீடுகள், அறுவகைக் குழுக்கள், காலநிலை அட்டவணை, ஆரோக்கியச் சக்கரம் (நலச் சக்கரம்), கற்றலட்டைகள், செயல்பாடுகள் இவற்றை

நோக்குவதற்கான படிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படிவத்தை முறையாக நிரப்பவேண்டும். பின்னர், அவை குறித்த சிந்தனைகளைச் 'சிந்தனைப் பதிவுக்கு' என்னும் தலைப்பின்கீழ்ப் பதிவு செய்யவேண்டும்.

செயல்வழிக் கற்றலை உற்றுநோக்கி நிரப்புவதற்கான படிவம் செய்முறைப் பயிற்சி நூலில் (Practicum) கொடுக்கப்பட்டுள்ளது. அதனை மொழிப்பாட உற்றுநோக்கலுக்குப் பயன்படுத்திக் கொள்க.

மிகச் சாதாரண ஆசிரியர் பேசுகிறார்.
சாதாரண ஆசிரியர் விளக்குகிறார்.
சிறந்த ஆசிரியர் செய்து காட்டுகிறார்.
மிகச் சிறந்த ஆசிரியர் உள்ளத்தில் ஒளியேற்றுகிறார்.
- அறிஞர் அர்னால்டு

**மரபுவழிக் கற்றலை உற்றுநோக்குதல்**

ஆசிரியரின் ஆயத்தச் செயல்கள், கற்பித்தல் முறைகள், துணைக்கருவிகள் பயன்பாடு, கரும்பலகைப் பயன்பாடு, வகுப்பறை மேலாண்மை, வினா கேட்கும்முறை, ஆசிரியரின் அணுகுமுறை, ஆசிரியர்-மாணவர் இடைவினை முதலியவற்றை உற்றுநோக்கிக் குறிப்பெடுத்துக் கொண்டு உற்றுநோக்கல் படிவத்தை நிரப்பவும். ஆசிரியரின் கற்பித்தலிலுள்ள திறமைகளை மாணவாசிரியர்கள் கைக்கொள்ள வேண்டும். குழுப் பிரிப்புமுறை, குழுச் செயல்பாடுகள், துணைக்கருவிகளைப் பயன்படுத்தும் பாங்கு, கற்பித்தலுக்கு முன்-பின் செயல்பாடுகள், மதிப்பீடுகள், பாடங் கற்பிப்புத் திட்டம் முதலியவற்றைக் கூர்ந்து நோக்க வேண்டும்.

இவ்வாறு உற்றுநோக்கும்போது அடுத்துள்ள உற்றுநோக்கல் படிவத்தை நிரப்புதல் வேண்டும். நிரப்பும்பொழுது நன்று, மிக நன்று என்னும் பாராட்டுச் சொற்களை மட்டும் குறிக்காமல் வகுப்பில் நிகழ்ந்தவற்றை விரிவாக எழுதவேண்டும்.

## உற்றுநோக்கல் படிவம்

பள்ளியின் பெயர் :

வழிகாட்டி ஆசிரியரின் பெயர் :

மாணவ ஆசிரியர் பெயர் :
வகுப்பு :
பாடம் :
பாட எண் - தலைப்பு :
நாள் :
நேரம் :

1. பாடங் கற்பிப்புத் திட்டம் :

2. ஆயத்தப்படுத்துதல் :

3. கற்றல்-கற்பித்தல்
துணைக்கருவிகள் :

4. கற்றல்-கற்பித்தல் துணைக்
கருவிகளைக் கையாளுதல் :

5. பட விளக்கமும் கரும்பலகை
வேலையும்

6. கற்றல்-கற்பித்தல் செயல்பாடுகள்:

7. வினாக்கள் கேட்டல் :

8. மாணவர் பங்கேற்பு :

9. வலுவூட்டல் :

10. மதிப்பீடு :

11. தொடர்செயல் :

மாணவ ஆசிரியர் கையொப்பம்

வழிகாட்டி ஆசிரியர்

விரிவுரையாளர்
கையொப்பம்

**படைப்பாற்றல் கல்விமுறை**

நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளுக்கான கற்பித்தல்முறை படைப்பாற்றல் கல்வி முறையாகும். இம்முறையில் செயல்வழிக் கற்றலின் அடிப்படைக் கோட்பாடுகள் மாணவர் கற்க ஆசிரியர் துணைபுரிதல், கற்கும் திறன்கள், முறைகள், தானே தெரிந்துகொள்ளுதல், படித்தறியும் முறை, புரிந்துகொள்ளும் ஆற்றல், தானே முழுச் செயலில் ஈடுபடுதல், மன வரைப்படம், படம் வரைந்து பாகங்களைக் குறித்தல், படித்தல், எழுதுதல், தொகுத்தல், கலந்துரையாடல், கடினப் பகுதிகளை எளிமையாக்கிக் கற்றல் ஆகிய படிநிலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை நன்கறிந்து வகுப்பிற் செயல்படுத்துதல் மாணவ ஆசிரியரின் பணியாகும். இரண்டாம் ஆண்டில் படைப்பாற்றல் கல்விமுறைபற்றியும் அவற்றை உற்றுநோக்கும் முறைபற்றியும் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

## 3. குறை களைதலும் நிறை பின்பற்றலும்

ஒவ்வொரு கல்விமுறையையும் உற்றுநோக்கும்போது ஆசிரியரின் கற்பித்தல்முறை, அணுகுமுறை, மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் பாங்கு, நகைச்சுவை உணர்வு, கருத்தை விளக்கும் போக்கு, ஒப்பிடும் முறை, வினா கேட்கும் முறை, துணைக்கருவிகளைக் கையாளுதல் முதலியவற்றில் ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபாடு காணப்படும். உற்றுநோக்கலுக்குச் செல்லும் ஆசிரிய மாணவர்கள் வகுப்புக் கற்றலிலும் கற்பித்தலிலும் உள்ள நிறைகளை தமதாக்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் ஆசிரியரிடமும் ஒவ்வொரு மாணவனிடமும் ஏதோ ஒரு திறமையோ பல திறமைகளோ காணப்படும். அவற்றை ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் உள்வாங்கிப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். அவற்றை விடுத்து, ஒரு சிலரின் குறைகளைப் பெரிதுபடுத்துவதும் தள்ள வேண்டியவற்றைக் கொள்ளுவதும் எதிர்காலப் பணிக்கு அழகு சேர்க்காது.

ஆசிரியர்கள், மாணவர்களிடத்துப் பழகுங்கால் அவர்களிடமுள்ள நல்லாற்றல்களையும் திறன்களையும் பழக்கவழக்கங்களையும் பண்புகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். பள்ளித் தூய்மை, மாணவர் ஒழுக்கம், கற்பிக்கும் பாங்கு, வழிகாட்டும் முறை, தன்னொழுக்கம், உதவும் மனப்பான்மை, கல்வி மேம்பாடு, பழகும் போக்கு, பேசுமாற்றல், எழுது மாற்றல், படிக்கும்முறை, துணைக்கருவிகள் செய்யும் முறை, கல்விசார் செயல்பாடுகள், கல்விசாராச் செயல்பாடுகள், நகைச்சுவை, ஒருங்கிணைப்புத் திறன், ஆளுமைத் திறன், மெய்ப்பாடுகளோடு கற்பிக்கும்முறை, விழாக்களை முன்னின்று நடத்தும் திறன், குடும்ப விழாக்களில் கலந்துகொள்ளல், சேமிக்கும் முறைகள், உள்விளையாட்டுகள், வெளிவிளையாட்டுகள், கற்றலடைவில் சிறக்கும் ஆசிரியர்கள், பதிவேடுகள் பராமரிப்பு, பாடங் கற்பிப்புத் திட்டம் எழுதும் முறை என எத்துணை எத்துணைச் சிறப்புமிக்கோரைக் காணுகிறீர்களோ அத்துணையையும் உள்வாங்கிக் கற்றுக் கொள்ளவே நீங்கள் பள்ளிக்குப் பயிற்சி பெறச் செல்கிறீர்கள் என்பதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்

ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் ஒவ்வொரு நாளும் பள்ளி வளாகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உற்றுநோக்கிக் கற்றுக்கொள்ளவேண்டும். அவ்வாறு உற்றுநோக்கித் தாமே கற்றுக் கொள்ளும்பொழுது தள்ளுவன தள்ளிக் கொள்ளுவன கொள்ளவேண்டும். குறைகளைக் களைந்து நிறையறிந்து பின்பற்றினால் ஒவ்வொரு நாளும் கற்றலில் பொன்னாளே; கல்வி மேம்பாட்டு நாளே; கற்கும் நாளே.

- பயிற்சிக்குச் சென்ற பள்ளியில் கற்பித்தலில் உங்கள் மனங்கவர்ந்த பாடப்பகுதிகளைப் பற்றியும் நிகழ்வுகளைப் பற்றியும் கலந்துரையாடுக..
- உங்கள் கற்பித்தலில் நீங்கள் உணர்ந்த குறைகளையும் அதற்கான காரணங்களையும் நண்பர்களுடன் கலந்துரையாடுக.
- உங்களின் முன்மாதிரி ஆசிரியர் யார்? அவரின் பண்புநலன்களைப் பட்டியலிடுக.
- ஓராசிரியருக்குத் தேவையான நற்பண்புகள் என்னென்னவென்று பட்டியலிடுக.
- கற்பித்தல் நிறைவாக அமைய மேற்கொள்ளவேண்டிய செயல்களை விவாதிக்க.

## 4. செய்தி திரட்டும் திறன்

கற்பிக்கும் ஆசிரியருக்குப் பாடநூல் ஒரு வழிகாட்டியே. அதுவே முழுமையான கற்றலை மாணவர்க்கு அளிக்காது. பாடநூலில் இடம்பெறும் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் விரிவான விளக்கங்களைப் பாடநூலில் காண்பது அரிது. பாடங் கற்பிக்கும் ஆசிரியரே பாடநூலில் காணப்படும் செய்திகளை மாணவர்கள் உள்ளத்தில் பதிக்க மிகை விளக்கங்கள், எடுத்துக்காட்டுகள், தொடர்புடைய செய்திகள் ஆகியவற்றை எடுத்துரைத்துக் கற்பிப்பை உயிரோட்டமுடையதாக்கவேண்டும். உயிரோட்ட முடையதாகக் கற்பித்தல் நிகழ ஆசிரியர்கள் பல்வேறு நூல்கள், பார்வை நூல்கள், அகராதிகள், பேரகராதிகள், நிகண்டுகள், கலைக் களஞ்சியங்கள், திறனாய்வு நூல்களைப் பார்வையிட்டுத் தேவையானவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, அகராதிகள், நிகண்டுகள், கலைக் களஞ்சியங்கள், அபிதான சிந்தாமணி முதலியன பொதுப்பார்வை நூல்களாகும். பாடநூலில் ஓரிரு செய்யுள்களோ பகுதியோ நிகழ்வோ இடம்பெற்றிருக்கும். முழுவதையும் அறிய மூல நூல்களையும் - பொழிப்புரை, தெளிவுரை, கருத்துரை, விளக்கவுரை, குறிப்புரை நூல்களையும் - பார்வையிட்டுப் பாடப்பகுதிக்குத் தொடர்புடைய முன்-பின் கருத்துகளை அறிதல்வேண்டும். அறிவுப் பெருக்கம் ஏற்பட்டுள்ள இந்நாளில் ஆசிரியர் அனைத்தையும் நினைவிலிருத்துதல் இயலாத ஒன்று. ஆனால், எவ்வெச் செய்திகள் எந்தெந்த நூல்களில் கிடைக்கும் என்பதை அறிதல்வேண்டும். இதனையே செய்தி திரட்டுந் திறன் எனக் கூறுவர். பார்வை நூல்களாக விளங்கும் அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியம் முதலியன பற்றி யறிந்து கொள்வோம்.

### அகராதிகள்

மொழியிலுள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி அவற்றுக்கான பொருள் தந்து, தொகுக்கப்பட்டதே அகராதி. இதனை ‘அகர முதலி’ எனவும் கூறுவர். இவ்வகராதியில் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பொருளனைத்தும் கொடுக்கப்பெற்றிருக்கும். அதனைப் பார்த்து நாம் பயன் படுத்துவதற்குரிய பொருளை அறிந்துகொள்ளலாம். கழகத் தமிழகராதி, மதுரைத் தமிழகராதி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தார் வெளியிட்டுள்ள அகராதி முதலியன இவ்வாறு அமைந்தவை.

### தமிழ்மொழி அகராதி (நா. கதிரைவேற் பிள்ளை)

இதில் மொழி அகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என நான்கு பகுதிகள் உள்ளன. மொழி அகராதி - சொல்லுக்குரிய பல்வேறு பொருள்களை அறியலாம். (எடுத்துக்காட்டு) இருள்-இருட்டு, மயக்கம். பொருள் அகராதி - சொல்லுக்கு இலக்கியத்தில்

வழங்கும் வேறு சொற்களை அறியலாம். (எடுத்துக்காட்டு) இருள்-அல், கங்குல், நிசி, நீலம், மங்குல். தொகையகராதி - ஒரு தொகைச் சொல்லை விரித்து அச்சொல் எவ்வெவற்றைக் குறிக்கின்றன என அறியலாம். (எடுத்துக்காட்டு) மணி (9) -நவமணி-கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் (நவமணிகளின் பெயர்களும் அகரவரிசையில் உள்ளமை காண்க.) தொடையகராதி - பாடல் இயற்றும்பொழுது இதிலுள்ள எதுகைச் சொற்களை அறிந்து பின்பற்றுக. எதுகைச் சொற்கள் குறிற்கீழெதுகை, நெடிற்கீழெதுகை என இருவகையாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாகக் குறில் எழுத்தை அடுத்து 'கி' இரண்டாம் எழுத்தாக எதுகை வரவேண்டுமெனில் அகராதியில் உகிர் (நகம்), சுகிர் (உள்துளை), துகிர் (பவளம்), பகிர் (பருப்பு), வகிர் (வழி) என்னும் சொற்களைக் காணலாம்.

நெடில் எழுத்தையடுத்து 'க' இரண்டாம் எழுத்தாக எதுகை வரவேண்டுமெனில் அகராதியில் காகம், கேகம் (வீடு), கோகம் (செந்நாய்), சோகம், தாகம், தேகம், நாகம் என்னும் சொற்களைக் காணலாம். இவ்வாறு இவ்வகராதி மிகவும் பயனுடையது.

**க்ரியாவின் தற்காலத் தமிழகராதி**

இது தமிழ்-தமிழ்-ஆங்கிலம் எனப் பொருள்தரும் அகராதி. இக் காலத்தில் ஒரு சொல் என்னென்ன நுண் வேறுபாடுகளுடன் வழங்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் காட்டுவது இதன் சிறப்பாகும். எடுத்துக்காட்டாக, 'எடு' என்னும் வினை எவ்வெப் பொருளில் வழங்கப்படுகிறது என 26 இடங்கள் குறிக்கப்படுகின்றன. அவற்றுள் ஒருசிலவற்றை அறிவோம். 1. விரலால் தூக்குதல் - தரையில் பளபளப்பாய் மின்னியதைக் குனிந்து எடுத்தான். 2. உயர்த்துதல் - என்னை அடிக்காதே என்று கையெடுத்துக் கும்பிட்டான். 3. வாங்குதல் - எதை எடுத்தாலும் இரண்டு ரூபாய். 4. மொள்ளுதல் - குளத்தில் தண்ணீர் எடுக்கப் போகலாமா? 5. வாகனத்தைக் கிளப்புதல் - வண்டியை எடுக்காமல் யாருக்காகக் காத்திருக்கிறீர்? .......... இவை தவிர, எடு - என்பதனோடு வேறு சொற்கள் சேர்ந்து மரபுத்தொடராதல்; அதன் பொருள் ஆகியனவும் குறிக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாகச் சில: எடுத்துச் செல், எடுத்து வளர், எடுத்துவிடு....

**தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon)**

இப் பேரகராதி 25 ஆண்டுக் காலப் பணியால் வெளி வந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றது. இவ்வகராதியில் தமிழ்ச் சொற்களுக்குக் கீழுள்ளவாறு விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

1. சொல், 2. சொல்லின் ஆங்கில ஒலி பெயர்ப்பு, 3. இலக்கணப் பாகுபாடு, 4. சொல் தோற்றம்,5. இனச் சொற்கள், 6. சொற்பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும், 7. சொற் பொருளுக்கேற்ற இலக்கிய மேற்கோள். இவ்வேழுகூறுகளுள் சில சொற்களுக்கு 4, 5, 6 எண்ணிடப்பெற்ற கூறுகள் இடம்பெறா. ஏழாவது கூறாக உள்ள மேற்கொள்மூலம் சொல்லின் வெவ்வேறு பொருளில் எந்தெந்த இலக்கியத்தில் வந்துள்ளது என நாம் அறியலாம். இதுவே இவ்வகராதியின் சிறப்பாகும்.

மூன்று அகராதிகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றிலும் ஒரு பெயர்ச்சொல் ஒரு வினைச்சொல்லுக்கு எவ்வாறு பொருள் விளக்கம் தருகின்றனர் என்பதை ஒப்பிட்டுக் காட்டுக.

**நிகண்டுகள்**

தமிழில் உள்ள சொற்களைப் பல்வேறு வகைகளுக்கு உட்படுத்தி, அவற்றிற்குப் பொருளைப் பாடல் வடிவில் தந்த நூல்களே நிகண்டுகள். கிடைக்கக்கூடிய நிகண்டுகளில் முதல்

நூல் சேந்தன் திவாகரம். இதனுள் தெய்வப் பெயர்த் தொகுதி முதலாகப் ‘பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி’ ஈறாகப் பன்னிரு தொகுதிகள் உள்ளன. இவற்றுள் ஏறக்குறைய 9500 சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

நிகண்டுகள் பெரும்பகுதி திவாகரத்தை யொட்டியும் சிறுபகுதி மாறுபட்டும் உள்ளன. கி.பி. 15 ஆம் நூற்றாண்டினரான மண்டல புருடர் இயற்றிய சூடாமணி நிகண்டை நிகண்டுகளுள் தலை சிறந்ததாகக் குறிப்பர். இதன் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகக் காண்போம்.

**சூடாமணி நிகண்டு**

0. சிறப்புப் பாயிரம், 1. தேவப் பெயர்த்தொகுதி, 2. மக்கட் பெயர்த் தொகுதி, 3. விலங்கின் பெயர்த் தொகுதி, 4. மரப் பெயர்த் தொகுதி, 5. இடப்பெயர்த் தொகுதி, 6. பல்பொருட் பெயர்த் தொகுதி, 7. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, 8. பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, 9. செயல் பற்றிய பெயர்த் தொகுதி, 10. ஒலி பற்றிய பெயர்த் தொகுதி, 11. ஒருசொல் பல்பொருட் பெயர்த் தொகுதி, 12. பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி எனப் பன்னிரண்டு பகுப்புகளைக் கொண்டதாகும்.

இந்நூல் முழுமையும் விருத்தப்பாவால் ஆன 1197 செய்யுள்களைக் கொண்டது. பிற்காலத்தில் இச் செய்யுள்களுக்கு உரைநடையில் சொல் விளக்கம் கொடுத்துப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. சூடாமணி நிகண்டிலும் பிற நிகண்டுகளிலும் மொழி வளத்தை வெளிப்படுத்தும் பகுதி ‘பல்பெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி’ என்பதாகும்.

**அபிதான சிந்தாமணி**

தனி ஒருவரின் முயற்சியால் 1910 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்க் கலைக் களஞ்சியம் அபிதான சிந்தாமணி. இதைப் படைத்து வெளியிட்டவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் பெருமைக்குரிய ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள். 1600 பக்கங்களுக்கும் மேற்பட்ட இந்நூலில் புலவர்கள், பழம்பெரும் இலக்கியங்கள், இலக்கியப் பாத்திரங்கள், புராண இதிகாசப் பாத்திரங்கள், கோயில்கள் முதலானவற்றைப் பற்றிய வரலாறும் விவரங்களும் உள்ளன. இந்நூல் தமிழாசிரியர்க்குப் பெரிதும் பயன்படும்.

**கலைக்களஞ்சியம்**

செய்திகளைத் தொகுத்துத் தரும் பார்வை நூல்களுள் ஒன்று கலைக்களஞ்சியம். அறிஞர்கள், புலவர்கள், தலைவர்கள் முதலியோரது வரலாறுகள், உயிரினங்கள், தாவரங்கள் பற்றிய செய்திகள், புகழ்பெற்ற இடங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் தொடர்பான விவரங்கள் முதலான பல்வகைச் செய்திகளையும் கலைக்களஞ்சியத்தின்மூலம் அறியலாம்.

## 5. தொகுப்புரை

கற்பித்தல் திறன் வளர்த்தல் என்பது மாணவ ஆசிரியர் நடைமுறையில் பள்ளிகளில் உள்ள கற்பித்தல் செயல்கள்வழி கற்பிக்குந்திறன்களை அறிதலும், தத்தம் திறன்களை மேம்படுத்திக் கொள்ளுதலும் ஆகும். முதல் வகுப்புமுதல் நான்காம் வகுப்புவரை பயன்படுத்தப் படும் செயல்வழிக் கற்றல்முறை, ஐந்தாம் வகுப்பில் பயன்படுத்தப்படும் மரபுவழிக் கற்றல்முறை, ஆகியவற்றை உற்றுநோக்கும் மாணவ ஆசிரியர்கள், அவற்றிலிருந்து அறியுஞ் செய்திகள், படிவங்களில் அவற்றைப் பதிவுசெய்யும் முறைகள், தாம் கண்டவற்றின் குறைகளைக் களைந்து நிறைகளைப் பின்பற்றுவதற்கான குறிப்புகள், நிகண்டுகள், அகராதிகள், பேரகராதிகள் ஆகியவற்றிலிருந்து மொழிசார் செய்திகளைத் திரட்டுதல் குறித்த செய்திகள் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

# 6. பாடங் கற்பிப்புத் திட்டம்

## அறிமுகம்

நன்னூல், 'உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து' எனக் கூறுவதற்கேற்ப, ஒரு பிரிவேளையில் ஒரு பாடத்தையோ பாடப்பகுதியையோ கற்பிப்பதாக இருந்தாலும் அதனை எவ்வாறு கற்பிப்பது என்பதற்கு வழிகாட்டுவதே பாடங் கற்பிப்புத் திட்டமாகும். மாறிவரும் பாட முறைகளுக் கேற்பக் கற்பிப்புத் திட்டங்களும் மாறிவருவது இயற்கையாகும். இன்று தொடக்கப் பள்ளிகளில் முதல் நான்கு வகுப்புவரை செயல்வழிக் கற்றல்முறையும் ஐந்தாம் வகுப்பில் மரபுவழிக் கற்பித்தல் முறையும் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆறுமுதல் எட்டாம் வகுப்புவரை படைப்பாற்றல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியப் பயிற்சி பெறுவோர் இம் மூன்று முறைகளையும் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும். இவ்வியலில் இம்முறைகள் பற்றியும் அவற்றைச் செயல்படுத்தும் முறைபற்றியும் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

**படிநிலைகள்**

1. பாடங் கற்பிப்புத் திட்டத்தின் இன்றியமையாமை
   பாடங் கற்பிப்புத் திட்டத்தின் நன்மைகள்
   சிறந்த பாடங் கற்பிப்புத் திட்டத்தின் பண்புகள்
   பாடங் கற்பிப்புத் திட்டம் செயல்படுத்துதலில் ஆசிரியர் மனத்திற் கொள்ளத் தக்கவை
2. செயல்வழிக் கற்றலில் பாடங் கற்பிப்புத் திட்டம்
   செயல்வழிக் கற்றல் வகுப்பறையில் துணையாக உதவுதல்
3. ஐந்தாம் வகுப்பிற்கான பாடங் கற்பிப்புத் திட்டம்
4. கற்பித்தல் குறிப்பு
5. கற்பித்தல் பொருள் தயாரிப்பு
6. தொகுப்புரை

## 1. பாடங் கற்பிப்புத் திட்டத்தின் இன்றியமையாமை

கற்பித்தலைச் சிறப்பாக்குவதற்கும் வெற்றிகரமாக முடிப்பதற்கும் உள்ள திறவுகோல் வகுப்பறைக் கற்பித்தலை முறையாகத் திட்டமிடுதலே யாகும். எவற்றைக் கற்பிப்பது, எவ்வாறு கற்பிப்பது என்பதை முன்கூட்டியே திட்டமிடுதல் வேண்டும். பாடங் கற்பிக்கப்படுவதன் முதன்மை நோக்கம் அப் பாடத்தை மாணவருக்குக் கற்பிக்கும்போது எவ்வாறு தொடங்குவது, புதிய செய்திகளை எவ்வாறு அமைப்பது, எத்தகைய துணைக்கருவிகளைப் பயன்படுத்துவது, கற்பித்தல் முடிந்தபின் குறிப்பிட்ட நோக்கங்கள் நிறைவேறி உள்ளனவா என அறியச் சோதனை செய்வது முதலியவற்றை முன்கூட்டியே திட்டமிடுதல் இன்றியமையாததாகும்.

> முறையாகக் கற்பித்தலில் பயிற்சி பெறவும் நற்பயன் விளையும்படி கற்பிக்கவும் பாடங் கற்பிப்புத் திட்டம் தயாரித்தல் இன்றியமையாதது.

**பாடங் கற்பிப்புத் திட்டம் எழுதுவதின் நன்மைகள்**

- பாடத்தில் படிப்படியான வளர்ச்சி ஏற்படும்படி செய்து முறையாகக் கற்பிக்க உதவுகிறது.
- அடுத்தடுத்து என்ன செய்யவேண்டும் எனத் திட்டமிடுவதால் வகுப்பில் நேரம் வீணாவதில்லை.
- பாட விளக்கத்திற்குத் தேவையான துணைக்கருவிகளை முன்கூட்டியே தயாரித்து வைத்துக் கொள்ள முடிகிறது.
- சிறந்த, பொருத்தமான கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுத்துக் கற்பிக்க உதவுகின்றது.
- தமிழ் மொழிப்பாடத்தைப் பிற பாடங்களுடன் இணைத்துக் கற்பிக்க வழி வகுக்கின்றது.
- திறமையாகக் கற்பிக்கும் தன்னம்பிக்கையை ஆசிரியருக்குத் தருகின்றது.
- தனியாள் வேற்றுமைகட்கு ஏற்பக் கற்றலனுபவங்களை மாணவர்களுக்கு வழங்கிட உதவி செய்கின்றது.
- பாடத்தின் நோக்கங்களை மாணவர்கள் அடைந்திட ஆசிரியருக்கு உதவியாய் அமைகின்றது.

**சிறந்த பாடங் கற்பிப்புத் திட்டத்தின் பண்புகள்**

- பாடப்பகுதி வெளிப்படுத்தும் குறிக்கோள், நோக்கங்கள் இடம்பெற்றிருக்கும்.
- மாணவர்களிடம் எதிர்நோக்கும் கற்றல் விளைவுகளைக் கொண்டிருக்கும்.
- கற்பித்தல் முறையும் கற்பித்தலுக்கு உதவும் கற்றல் பொருள்களும் பட்டியலிடப்பட்டிருக்கும்.
- பாடப்பொருட் பகுதியில் எடுத்துக்காட்டாகக் கூறுபவை அனைத்தும் தெளிவாக அமைந்திருக்கும்.
- இன்ன செய்முறை வேலை, இன்ன நேரம் நடைபெறும் என வரையறை செய்யப் பெற்றிருக்கும்.
- ஆர்வமூட்டல், முன்னுரை, பாடப்பொருளின் படிப்படியான வளர்ச்சி என ஒவ்வொன்றும் எவ்வளவு நேரம் எனக் குறிக்கப்பட்டிருக்கும்.
- இணைத்துக் கற்பிக்கும் செய்திகளைத் தெளிவுபடுத்தும்.
- வலுவூட்டுதலுக்குப் பயன்படும் செயல்கள் இடம்பெற்றிருக்கும்.
- தொடர்செயலாகக் கொடுக்கப்படும் செயல்களைக் கொண்டிருக்கும்.

**பாடங் கற்பிப்புத் திட்டம் செயல்படுத்துதலில் ஆசிரியர் மனத்திற் கொள்ளத் தக்கவை:**

பாடங் கற்பிப்புத் திட்டமானது சில தலைப்புகளின்கீழ் அமைக்கப்பட்ட பாடப்பொருளைக் கற்பித்து, நிறைவு செய்ய வேண்டுமென்பது இல்லை. பள்ளிக்கு வருகின்ற ஒவ்வொரு குழந்தையையும் ஒரு நீர்கொள்ளும் பாத்திரமாகக் கருதி, நம்மிடம் உள்ள பாடங் கற்பிப்புத் திட்டம் எனும் நீரை அவர்களின் தலையில் புகுத்தக் கூடாது. குழந்தைகள் ஒவ்வொன்றும் ஓர் உயிருள்ள பொருள். அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்க இயலாது; மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்படுபவர்கள். ஆகவே, அவர்களுக்குப் பாடங்களைக் கற்பிக்கத் திட்டமிடும்போது அவர்களையும் கற்றல் செயலில் ஈடுபடுத்த வேண்டும்.

வகுப்பில் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு செயலும் மாணவர் மனத்தில் ஒவ்வொருவித விளைவினை ஏற்படுத்தும். ஒரு பாடப்பகுதியினைக் கற்பிக்கப் பயன்படுத்தும் செயல் ஒரு சில மாணவருக்கு எதிர்பார்க்கும் பலனை அளிக்கலாம். அதேசெயல் சில மாணவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்காமலும் போகலாம். ஆகவே, பாடங்களைக் கற்பிக்கத் திட்டமிடும்போது, பலவிதச் செயல்களைத் திட்டமிட்டால் கற்றல் எல்லா மாணவரிடத்தும் இயல்பாக நிகழும்.

செயல்வழிக் கற்றல் பாடங் கற்பிப்புத் திட்டத்திற்கான படிவங்கள், செய்முறைப் பயிற்சி நூலில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்திப் பாடங் கற்பிப்புத் திட்டச் செயலைச் சிறப்பாக மேற்கொள்க.

மாணவர்களிடம் விரும்பத்தக்க நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் கற்பிப்புச் செயல் திட்டங்களை அமைத்தல்வேண்டும். வகுப்பறைக்குப் பொருத்தமான, தேவையான, சுமையில்லாத, சுவையான செயல்களைக் கற்பிப்புச் செயல்களாகத் திட்டமிட்டு இடம்பெறச் செய்யவேண்டும்.

பல்வகுப்பு, பல்நிலைக் கற்பித்தலுக்குப் பொருத்தமாகும் வகையில் பாடங் கற்பிப்புத் திட்டம் அமையுமாறு கவனித்துக் கொள்ளவேண்டும். 2005ஆம் ஆண்டு தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பில் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை நிறைவேற்றும் கற்பிப்புச் செயல்களை இடம்பெறச் செய்யவேண்டும்.

முதல் நான்கு வகுப்புவரை உள்ள செயல்வழிக் கற்றலின் அடிப்படையாகவுள்ள கொள்கை, அடிப்படை விதிகள், சிறப்பான கூறுகள், கற்றல் அட்டைகள், ஏணிப்படி அட்டைகள், குழு அட்டைகள், அடைவுத்திறன் விளக்கத்தாள்கள், பயிற்சி ஏடுகள் ஆகியவற்றை முழுமையாக அறிந்து மாணவர்கள் கற்க வழிகாட்ட வேண்டும்.

பள்ளிக்குச் சென்று கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுவது என்பது ஆசிரியக் கல்விக் கலைத் திட்டத்தின் முக்கியக் கூறாகும். ஆசிரியக் கல்விப் பட்டயப் பயிற்சியின்போது மாணவ ஆசிரியர்கள் முதல் ஆண்டிலும் இரண்டாம் ஆண்டிலும் தொடக்கப் பள்ளியில் முறையே 30 நாள்கள் கற்பித்தல் பயிற்சி பெறவேண்டும். மாணவ ஆசிரியர்கள் முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை செயல்வழிக் கற்றல் முறையிலும் ஐந்தாம் வகுப்பிற்கு மரபுவழிக் கற்றல் முறையிலும் கற்பித்தல் செயலில் ஈடுபடவேண்டும்.

## 2. செயல்வழிக் கற்றலில் பாடங் கற்பிப்புத் திட்டம்

முதல் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்புவரை ‘செயல்வழிக் கற்றல்முறை’ பின்பற்றப் படுகிறது. இம் முறையில் பாடநூல்களின் இடத்தில் செயலட்டைகள் இடம்பெறுகின்றன. இச் செயலட்டைகள் திறனையும் பாடநூலையும் அடிப்படையாகக் கொண்டு சிறுசிறு கற்றல்படிகளாக உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கற்றல்படியும் சங்கிலிபோல் இணைத்துக் கற்றல் ஏணிப்படி அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆசிரிய மாணவர் கற்பதற்குத் துணையாக உதவுபவராகச் செயல்படுகிறார். ஒவ்வொரு கற்றல் படியும்:

1. திறன் வளர்ச்சிக்கான தொடக்கநிலைச் செயல்பாடுகள்,
2. வலுவூட்டல் செயல்பாடுகள்,
3. பயிற்சிச் செயல்பாடுகள்,
4. மதிப்பீட்டுச் செயல்பாடுகள்,
5. குறைநீக்குஞ் செயல்பாடுகள்,
6. வளம் பெருக்குஞ் செயல்பாடுகள்.

என்னும் முறையில் அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி மாணவ ஆசிரியர்கள் ஒவ்வொரு செயல்பாட்டு அட்டையையும் அதற்குரிய குறியீடுகளையும் (Logo) நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

செயல்வழிக் கற்றல் முறைகளில் இடம்பெறும் அட்டைகள், குறியீடுகள், கற்பிக்கும் முறைகள் ஆகியவை பற்றிப் பயிற்றுமுறைகள் என்னும் இயலில் அறிந்துகொண்டீர்கள்.

**செயல்வழிக் கற்றல் வகுப்பறையில் துணையாக உதவுதல்**

செயல்வழிக் கற்றல் வகுப்பறையில் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடும் மாணவ ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியவை:

- காலை வழிபாட்டுக் கூட்டத்தின்பின் குழந்தைகள் வகுப்பிற்குச் செல்ல உதவுதல்.
- குழந்தைகள் தங்கள் வருகையைப் பதிவு செய்துள்ளார்களா எனக் கேட்டறிதல்.
- காலநிலை அட்டவணை உரிய குழந்தையால் நிறைவு செய்யப்பட்டுள்ளதா எனச் சரிபார்த்தல்.
- ஆரோக்கியச் சக்கரத்தை நிரப்புவதற்கான செயல்களில் குழந்தைகளை ஈடுபடச் செய்தல்.
- குழந்தைகளை அரைவட்ட வடிவத்தில் நிற்க வைத்து ஐந்துநிமிட நேரத்திற்குள் சுறுசுறுப்படையச் செய்யும் செயல்களில் ஈடுபடுத்துதல்.
- குழந்தைகள் படிக்கவேண்டிய பாடங்களுக்கான குழு அட்டைகளைத் தேர்ந்தெடுத்துக் குழுவில் வைக்கச் செய்தல்.
- குழந்தைகள் அனைவரும் தாங்கள் கற்கவேண்டிய அட்டைகளை எடுத்து, அவரவர் குழுவில் அமர்வதை உறுதிசெய்தல்.
- குழந்தைகள்சிலர் தங்களுக்குரிய அட்டைகளை எடுப்பதில் இடர்ப்படுவார்களாயின் அவர்கள் சரியான அட்டையை எடுப்பதற்கு மாணவ ஆசிரியர் உதவவேண்டும்.
- முழுமையும் ஆசிரியர் உதவியுடன் இயங்கும் குழுவிற்குச் சென்று அக்குழந்தைகள் கற்பதற்கு மாணவ ஆசிரியர் உதவவேண்டும்.
- ஒரு குழுவில் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் இருப்பார்களேயாயின் மாணவ ஆசிரியர் மெதுவாகக் கற்போருக்கு உதவி செய்து ஏணிப்படியில் மேலே செல்ல உதவவேண்டும்.
- பிற குழுக்களிலுள்ள குழந்தைகளுக்கு உதவி தேவைப்படின் மாணவ ஆசிரியர்அங்குச் சென்று உதவவேண்டும்.
- தாழ்நிலைக் கரும்பலகையிலும் தங்கள் குறிப்பேட்டிலும் பயிற்சி ஏட்டிலும் குழந்தைகள் எழுதுவதைச் சரி பார்க்கவேண்டும்.
- குழந்தைகளுக்குத் தொடர்செயல் வழங்கவேண்டும்.
- ஏணிப்படியில், பாடநூல் செயல்அட்டை வருகிறபொழுது குழந்தைகள் பாடநூலைப் பயன்படுத்த ஊக்கமளிக்கவேண்டும்.
- மாணவ ஆசிரியர் குழந்தைகளோடு பொம்மலாட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.
- குழந்தைகளின் அடைவுகளை அவ்வப்பொழுது அடைவுத்திறன் அட்டையில் பதிவு செய்தல்வண்டும்.

செயல்வழிக் கற்றல்முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு குழுவிலும் பல நிலைகளில் இருப்பார்கள். எனவே, மாணவ ஆசிரியர் முன்கூட்டியே பாடங் கற்பிப்புத் திட்டம் தயாரித்தல் இயலாது. எனவே, வகுப்பறையில் மாணவர்கள் செயல்பட்ட முறையையும் அதற்கு மாணவ- ஆசிரியர் உதவிய முறையையும் அறிக்கையாகத் தயாரிக்க வேண்டும். இதன்மூலம் மறுநாள் வகுப்பிற்கு மாணவர்களைத் தயார் செய்ய முடியும்.

## 3. ஐந்தாம் வகுப்பிற்கான பாடங் கற்பிப்புத் திட்டம்

ஐந்தாம் வகுப்பிற்கு நடைமுறையிலுள்ள மரபுவழிக் கற்பித்தல் முறை பின்பற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது பின்பற்றப்படும் பாடங் கற்பிப்புத் திட்டத்தில்,

- எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகள்,
- ஆயத்தச் செயல்,
- கற்றல்-கற்பித்தல் செயல்கள்,
- மதிப்பீட்டுச் செயல்கள்,
- தொடர்செயல்கள்

ஆகிய நிலைகள் பின்பற்றப்படுகின்றன.

**எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகள்**

ஐந்தாம் வகுப்புப் பாடநூலில் ஒவ்வொரு பாடப்பகுதியிலிருந்தும் மாணவர்களிடம் வளர்க்கப் படவேண்டிய திறமைகள் அல்லது பாடப்பகுதியைக் கற்றபின் மாணவர்கள் வெளிப்படுத்தும் திறமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றை எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடாகக் குறித்தல்வேண்டும். மேலும், இப்பகுதியில் மொழித்திறன்களோடு மாணவர்களிடம் வெளிப்படவேண்டிய ஒழுக்கம், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பண்பாட்டுக் கூறுகளையும் குறிப்பிடவேண்டும்.

**ஆயத்தச் செயல்**

இதனை ஆர்வமூட்டும் செயல் எனவும் குறிப்பர். பாடங் கற்பிக்கப்புகும் ஆசிரியர் எடுத்த எடுப்பிலேயே பாடச் செய்திகளைத் தருவதோ விளக்கங்கள் கொடுப்பதோ கற்பித்தல் முறையில் விரும்பத் தக்கதன்று. மாணவர்கள் வகுப்பைக் கூர்ந்துநோக்கும் மனநிலையில் இருக்கின்றார்களா? என அறிய வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும். எல்லா மாணவர்களும் வகுப்பைக் கூர்ந்து நோக்கும் மனநிலையில் இருப்பார்கள் எனக் கருத முடியாது. அவர்களுடைய மனநிலையை ஒருமுகப்படுத்தி வகுப்பைக் கூர்ந்துநோக்கும் ஆர்வத்தை ஊட்டுஞ் செயலே ஆயத்தச் செயலாகும்.

இதற்கு மாணவ ஆசிரியர் பாடப்பொருளோடு தொடர்புடைய கதை, பாடல், புதிர், நிகழ்ச்சி விளக்கம் முதலியவற்றில் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தி மாணவர்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.

**கற்றல்-கற்பித்தல் செயல்கள்**

கற்பிக்கும் செயல்முறையில் மாணவர்களுக்கு ஊக்கமூட்டுதல், சொல் விளக்கங்கள் தருதல், துணைக்கருவிகளைக் காட்டி விளக்குதல், கரும்பலகையில் எழுதுதல், பல எடுத்துக்காட்டுகள் தருதல், படம் வரைதல், பாடிக்காட்டுதல், வினாக் கேட்டல், மாணவர் விடைகூறக் குறிப்புக் கொடுத்தல், ஒவ்வொரு மாணவனையும் கூர்ந்து நோக்குதல், வகுப்பறை ஒழுங்கையும் கூர்ந்து நோக்குதல் முதலிய பல செயல்கள் மாணவ ஆசிரியரைச் சார்ந்தனவாகும். பாடப்பொருளுக்கும் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுக்கும் உரியவாறு மேற்கொள்ளும் கற்பித்தல் முறைகள் கற்றல்-கற்பித்தல் செயலில் எழுதப்படவேண்டும்.

பாடப்பொருள் விளக்கத்திற்குத் தேவையான கற்றல் பொருள்களின் பட்டியல், பாடப்பொருள் விளக்கத்திற்குப் பொருத்தமான கற்றல்முறைகள் அதாவது குழுக்கற்றல், பங்கேற்றுக் கற்றல், விளையாட்டுமுறைக் கற்றல், தானே கற்றல், ஒரு மாணவன் மற்றொரு மாணவனுக்குக் கற்றுக்கொடுத்தல் முதலிய முறைகளைப் பின்பற்றுவதும் குறிப்பிடவேண்டும். பாடப்பொருள் தெளிவுபடுத்தத் தேவையான களப்பயணம் பற்றியும் குறிப்பிடவேண்டும்.

எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகளில் கொடுக்கப்பட்டுள்ள மொழித்திறன்களும் ஒழுக்கம், பண்பாடு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று தொடர்பான செய்திகளும் வெளிப்படும் வண்ணம் கற்றல்-கற்பித்தல் செயல்களை அமைத்தல்வேண்டும். மொழிப் பாடங் கற்பித்தலின் உயரிய நோக்கம் மொழித்திறன் வளர்த்தலும் நல்லொழுக்கங்களைப் பதித்தலுமாகும்.

**மதிப்பீட்டுச் செயல்**

கற்பித்தலை மதிப்பிடுதல் கற்பித்தல் நடைமுறையின் இன்றியமையாத செயல்களுள் ஒன்று. வகுப்பில் கற்பித்தலை மேற்கொள்ளும்போதும், கற்பித்தல் செயல் முடிந்த பின்பும் குழந்தைகளின் புரிதல் திறனை அறிய மதிப்பீடு செய்தல்வேண்டும். அதற்காக, எத்தகைய வினாக்களை வினவலாம் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டுக் குறித்தல்வேண்டும்.

**தொடர்செயல்**

'தொடர்செயல்', என்பது கற்பித்த பாடப்பகுதியில் குழந்தைகளுக்கு வீட்டுப்பணி அல்லது வகுப்புப் பணி கொடுத்தலைக் குறிக்கும். தொடர்செயலில் பொருள்களைச் சேகரித்தல், படத்தொகுப்புத் தயாரித்தல், பெற்றோர்-நண்பர்களுடன் களப்பயணம் சென்று வருதல், அங்காடி, தொடர்வண்டி நிலையம், பேருந்து நிலையம், அஞ்சலகம் முதலிய இடங்களுக்குச் சென்று, அங்கு நடைபெறும் செயல்களைக் குறித்துவரச் செய்தல் ஆகும். தொடர்செயல் ஒரு சுமையாக இல்லாமல் சுவையாக இருக்கும்வகையில் அமைத்துக் கொடுக்கவேண்டும். பாடப்பொருள் தொடர்பாக எத்தகைய தொடர்செயலைக் கொடுக்கலாம் என்பதை இப்பகுதியில் குறிப்பிடல் வேண்டும்.

## 4. கற்பித்தல் குறிப்பு (Teaching Notes)

ஒரு பிரிவேளையில் கற்பிக்க வேண்டியதுபற்றி விரிவாக எழுதுதல் பாடங் கற்பிப்புத் திட்டம் (Lesson Plan) என்பதை ஏற்கெனவே அறிந்துகொண்டோம்.

ஆசிரியர், ஒரு வாரத்தில் கற்பிக்கவேண்டிய பாடப்பகுதிகளனைத்தையும் எண்ணிப் பார்த்து எழுதித் தயாரிப்பதைக் கற்பித்தல் குறிப்பு என்கிறோம்.

கற்பிப்புச் சிறப்போடு அமையக் கற்பிக்கும் பாடப்பொருள் தொடர்பான செய்திகளை முன்னரே திரட்டவேண்டும். திரட்டுஞ் செய்திகளை மாதவாரியாகவும் வாரவாரியாகவும் தொகுத்துக்கொண்டு மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். பொதுவாக, ஒரு வாரத்தில் கற்பிக்கவிருக்கும் பாடங்கள் தொடர்பான செய்திகளைத் தொகுப்பதே நடைமுறையில் பள்ளிகளில் பின்பற்றப்படுகிறது. ஒரு வாரத்தில் கற்பிக்கவிருக்கும் செய்திகளைத் தொகுத்துத் தயாரித்தல் கற்பித்தல் குறிப்பு எனப்படுகிறது.

கற்பித்தலுக்கு ஆசிரியர் குறிப்பு இன்றியமையாதது என்பதற்காகவே ஆசிரியர்களை மேற்பார்வை செய்யும் தலைமையாசிரியர் கற்பித்தல் குறிப்பைப் பார்வையிடுகின்றார். பள்ளி ஆய்வுக்கு வரும் ஆய்வாளரும் ஒவ்வோர் ஆசிரியரும் கற்பித்தல் குறிப்பேடு வைத்துள்ளனரா என்பதை ஆய்வு செய்கின்றார். ஆசிரியர் கட்டாயமாகப் பாடத்தைப்பற்றி முன்னதாக எண்ணி, எழுதித் தயாரித்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்துவதற்காகவே இம்முறைகள் பின்பற்றப் படுகின்றன என்பதை மாணவ ஆசிரியர்கள் உணர்தல்வேண்டும்.

**கற்பித்தல் குறிப்புத் தயாரித்தல்**

கற்பித்தல் குறிப்பினைப் பாடப்பொருள் விளக்கம், பொதுக்குறிப்பு என இரு பிரிவுகளாகப் பிரித்து எழுதலாம். பாடப்பொருள் விளக்கத்தில் பாடப்பகுதியின் சுருக்கம் இடம்பெறுவதுடன் விளக்கவேண்டிய கருத்துகளும் அமைதல்வேண்டும். உரைநடையாயின் சொற்களஞ்சியம் பெருக்குதல், சொல்லாட்சித் திறன் வளர்த்தல், மேற்கோள் செய்யுள்கள், துணைக்கருவிகள் முதலியவற்றைக் குறிப்பிடவேண்டும்.

செய்யுட் பகுதியாயின் என்னென்ன முறைகளில் நயம் உணர்த்தப்பெறும் எனக் குறிப்பது சிறப்பு. இறுதியில் மாணவர் மேற்கொள்ளவேண்டிய செய்முறை வேலைகள், வினாக்கள், பயிற்சிகள் எனப் பாடத்திற்கேற்றவாறு அமைத்தல் மேலும் சிறப்பைச் சேர்க்கும்.

பொதுக்குறிப்பில் பாடம் அல்லது செய்யுள் எழுதிய ஆசிரியர் பற்றியும் பாடந்தொடர்பாகக் கூறப்படும் பிற எடுத்துக்காட்டுகள், பிற நூல்களிலிருந்து காட்டும் மேற்கோள்கள், செய்யுளின் மூல நூல்கள், மாணவர் அடையவேண்டிய ஒழுகலாறுகள் முதலியனவற்றையும் குறிப்பிட வேண்டும்.

**பாடங் கற்பிப்புத் திட்டம், கற்பித்தல் குறிப்பு வேறுபாடுகள்:**
**பாடங் கற்பிப்புத் திட்டம்**

1. ஒரு பாடவேளையில் கற்பிப்பதற்குரிய பாடப்பகுதிக்கு எழுதப்பெறுவது.
2. எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாடுகள், ஆயத்தச் செயல், கற்றல்-கற்பித்தல் செயல்கள்,மதிப்பீட்டுச் செயல்கள், தொடர்செயல்கள் என்னும் தலைப்பின்கீழ் எழுதப்பெறும்.
3. ஒரு பாடவேளையில் கற்பிக்கவிருக்கும் அனைத்துச் செய்திகளும் மிக விரிவாகவும் கற்றல்-கற்பித்தல் துணைக்கருவிகளுடனும் கற்பிக்கும் முறைகளுடனும் இடம்பெற்றிருக்கும்.
4. பயிற்சி பெறும் மாணவ ஆசிரியர் தயாரித்துப் பொறுப்பாசிரியர் அல்லது விரிவுரையாளரிடம் கையொப்பம் பெறுவர்.

**கற்பித்தல் குறிப்பு**

1. ஓராண்டிற்குரிய பாடங்களைப் பிரித்து, ஒரு வாரத்தில் கற்பிக்கவேண்டிய பாடப்பகுதிகள் அனைத்துக்கும் எழுதப் பெறுவது.
2. பாடப்பொருள், பொதுக்குறிப்பு, வினாக்கள், வீட்டுவேலை என்னும் தலைப்பின்கீழ் எழுதப் பெற்றிருக்கும்.
3. ஒரு வாரத்தில் கற்பிக்கப்படும் செய்திகள் சுருக்கமாகவும் மாணவர்கள் அடையவேண்டிய ஒழுகலாறுகளும் இடம்பெற்றிருக்கும்.
4. பணியாற்றும் ஆசிரியர் பாடக்குறிப்புத் தயாரித்துத் தலைமையாசிரியரிடம் கையொப்பம் பெறுவர்.
5. முன்திட்டமிட்டு முறையாகத் தயாரித்துச் செயல்பட்டால் எதிர்பார்க்கும் நற்பயன் விளைவது உறுதி.

## 5. கற்பித்தல் பொருள் தயாரிப்பு (Preparation of Instructional Materials)

கற்பித்தல் பொருள்கள் தயாரிப்பு என்பது ஒரு பாட அலகினைக் (Unit) கற்பிப்பதற்குத் தேவையான அனைத்தையும் விரிவாகத் தயாரித்தலைக் குறிக்கும்.

மொழிப்பாடத்தைப் பொருத்தவரையில் ஓர் உரைநடைப் பாடத்தை ஓர் அலகாகக் கொள்ளலாம். செய்யுட் பகுதியில் பாடமாக இடம்பெறும் திருக்குறள், நாலடியார் முதலிய வற்றுள் ஒரு பிரிவை ஓர் அலகாகக் கொள்ளலாம். இலக்கணத்திலும் அவ்வாறே கொள்ள வேண்டும். இவ்வாறு பிரித்துக் கொள்ளும்போது ஓர் அலகினைக் கற்பிப்பதற்குத் தேவையான அனைத்தும் தயாரித்துக் கொள்ளுதலைக் கற்றல்-கற்பித்தல் பொருள் தயாரிப்பு என்கிறோம்.

கற்பித்தல் பொருள் என்பது பாடப்பொருள், அதனைக் கற்பிக்க ஆசிரியர் மேற்கொள்ளும் பிற தயாரிப்புப் பணிகள், மாணவர் ஈடுபடுஞ் செயல்கள், தேர்வு வினாக்கள் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

**பாடப்பொருள்**

கற்பித்தல் பொருள் தயாரித்தலில் இதுவே அடிப்படையான பகுதியாகும். ஆசிரியர், எப்பகுதியைக் கற்பிக்க விரும்புகிறாரோ அப்பகுதிச் செய்திகள் அனைத்தும் இதில் முறையாகவும் விளக்கமாகவும் எழுதப்பெறுதல் வேண்டும்.

**இணைத்துக் கற்பித்தல்**

பாடப்பொருளைக் கற்பிக்கும்போது, அதனோடு பொருந்திவரும் செய்திகளை இணைத்துக் கற்பித்தால் அவை நினைவில் நன்கு பதியும். ஆசிரியர் எவ்வெப் பாடங்களை எவ்வெச் செய்திகளை இணைக்கிறார் என்பதனை இப்பகுதியில் குறித்தல்வேண்டும். உரைநடைப் பாடத்தோடு இலக்கணத்தை இணைத்துக் கற்பிக்கும்போது அவற்றைத் தெளிவாகக் குறித்தல்வேண்டும்.

**மூல நூல்கள்**

பாடப்பொருளைக் கற்பிப்பதற்கும் இணைத்துக் கற்பித்தலுக்கும் மேற்கோள் பகுதிகளை விளக்குவதற்கும் ஆசிரியர் பயன்படுத்தவேண்டிய மூல நூல்களின் பட்டியல் கொடுக்கவேண்டும். மேலும், அம் மூல நூல்களில் எப்பகுதிகள் பயன்படுத்தப் பெறுகின்றன என்பதைக் குறித்தலும் வேண்டும். பாடப்பொருள் தொடர்பாக மாணவர் படிக்க வேண்டியவை எவையென ஆசிரியர் கருதும் நூற்பட்டியலைத் தருதல்வேண்டும்.

**துணைக்கருவிகள்**

பாடப்பொருளைக் கற்பிப்பதற்குத் துணையாகத் தேவைப்படும் துணைக்கருவிகள் அனைத்தையும் தருதல்வேண்டும். வரைப்படங்கள், விளக்கப்படங்கள், நாட்டுப்படங்கள், சுவரொட்டிகள், மாதிரி உருவங்கள், மின்னட்டைகள், சொல்லட்டைகள், சுழலட்டைகள், சொற்புத்தகம், படத்தொகுப்பேடு, முகமூடிகள், பொம்மலாட்டப் பொம்மைகள், பல்வகைப் பயன்பாட்டுப் பலகை, நழுவம், சலனப்படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள், திரைப்படத் துண்டுகள் முதலியவற்றின் பட்டியல் இடம்பெறுதல் வேண்டும்.

**ஆசிரியர் மேற்கொள்ளவேண்டியவை**

துணைக்கருவிகள் தயாரித்தல், வினாத்தாள் எழுதுதல், களப்பயணம் அழைத்துச் செல்ல வேண்டுமாயின் அதுபற்றிய திட்டம் முதலியன இப்பகுதியில் இடம்பெறுதல்வேண்டும்.

**மாணவர் செய்முறை வேலை**

பாடங் கற்பிக்கும்பொழுதும், கற்பித்த பிறகும் மாணவர் மேற்கொள்ள வேண்டுமென ஆசிரியர் திட்டமிடும் வேலைகளனைத்தும் இதில் எழுதப் பெறுதல்வேண்டும். செய்தித் தொகுப்புகள், அகராதி பார்த்து எழுதுதல், இதழ் தயாரித்தல், பழமொழி, மரபுத்தொடர் முதலிய தொகுப்புகள் தயாரித்தல், படங்கள் வரைதல், மயங்கொலிப் பிழைநீக்கி எழுதுதல், விண்ணப்பம், கடிதம், கட்டுரை எழுதுதல், பேச்சு வழக்கிற்கு இணையாக எழுத்து வழக்கை எழுதுதல், தொகைச்சொற்களை விரித்தெழுதுதல் முதலியவற்றைக் குறித்தல்வேண்டும்.

**வினாக்கள் – பயிற்சி**

பாடப் பகுதியறிவை மாணவர் பெற்றுள்ளனரா என அறியவும், ஆசிரியர் திட்டமிட்டு வளர்க்க விரும்பிய திறன்களை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை அறியவும் உதவும் வினாக்களை எழுதுதல்வேண்டும். வினாக்கள் நினைந்தறிதல் வகை, நினைவுக்குக் கொணர்தல் வகை ஆகியவற்றைச் சார்ந்த புதுமுறை வினாக்களும், குறு விடை வினாக்களும், கட்டுரை வினாக்களும் இடம்பெறல்வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பாடப்பகுதியைக் கற்பிப்பதற்கு மேற்கண்டவாறு அனைத்துப் பொருள்களையும் தயாரித்து, எழுதிக் கொள்ளுதலே கற்பித்தல் பொருள் தயாரித்தலாகும்.

## 6. தொகுப்புரை

இவ்வியலில் பாடங் கற்பிப்புத் திட்டம், கற்பித்தல் குறிப்பு, கற்பித்தல் பொருள் தயாரிப்பு ஆகிய மூன்றினைப் பற்றிய விளக்கத்தை அறிந்தோம். இம்மூன்றும் கற்பித்தலை, கற்றலை ஊக்குவிக்கும் செயல்களாகும். தற்போதைய நடைமுறையில் உள்ள செயல்வழிக் கற்றலில் மேற்கொள்ளவேண்டிய அணுகுமுறைகளையும் விளக்கமாகக் கண்டோம். இவை மாணவ ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை வளப்படுத்தப் பெரிதும் பயன்படும்.

| **பின்னிணைப்பு - 2**<br>காலம்: 3 மணி நேரம் | **வினாத்தாள் - 1 திட்ட வரைவு** | | | | | | | | | | | | **உச்ச மதிப்பெண்கள்: 100** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாட அலகு/கற்பித்தல் நோக்கம் | அறிதல் (20) | | | புரிதல் (20) | | | பயன்படுத்துதல் (30) | | | திறன் (30) | | | மொத்தம் (100) | | |
| | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** |
| மொழித்திறன் (40) | 2 | 1 | 0 | 2 | 1(*1) | 0 | 4 | 1(*1) | 0 | 2 | 2(*1) | 0 | 10 | 5(*3) | 0 |
| மொழியின் இயல்பும் கற்பித்தலும் (8) | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | (*1) | 0 | 0 | 0 | 0 | 2 | 1(*1) | 0 |
| அடிப்படைத் திறன்கள்(12) | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | (*1) | 0 | 1 | 0 | 2 | 2 | (*1) |
| பாடங்களைக் கற்பித்தல்(12) | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | (*1) | 0 | 0 | 0 | 0 | 1 | (*1) | 1 |
| பயிற்றுமுறைகள் (12) | 0 | (*1) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | (*1) | 1 |
| உற்றுநோக்கல் (6) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | 1 | 0 |
| பாடங்கற்பிப்புத் திட்டம் (10) | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 | 0 | (*1) | 0 | 0 | 0 | 3 | 1 | (*1) |
| மொத்தம் (100) | 7 | 1(*1) | 0 | 3 | 4(*1) | 0 | 6 | 2(*3) | 1(*2) | 4 | 3(*1) | 1 | 20 | 10 | 2(*2) |

**குறிப்பு:-** சி - சிறு வினா (100 சொற்களுக்கு மிகாமல்)
கு - குறு வினா (200 சொற்களுக்கு மிகாமல்)
க - கட்டுரை வினா (500 சொற்களுக்கு மிகாமல்)
பிறைக்குறிக்குள் ( ) உள்ள எண்கள் மதிப்பெண்களைக் குறிக்கும்.
நட்சத்திரக் குறியீடு (*) உள்ள எண்கள் தெரிவுநிலை வினாக்களைக் குறிக்கும்.
கட்டங்களுக்குள் உள்ள எண்கள் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

**பின்னிணைப்பு - 2**

காலம்: 3 மணி நேரம்

## வினாத்தாள் - 2 திட்ட வரைவு

**உச்ச மதிப்பெண்கள்: 100**



| பாட அலகு/கற்பித்தல் நோக்கம் | அறிதல் (20) | | | புரிதல் (20) | | | பயன்படுத்துதல் (30) | | | திறன் (30) | | | மொத்தம் (100) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** | **சி** | **கு** | **க** |
| மொழித்திறன் (40) | 2 | 1(*1) | 0 | 3 | 1(*1) | 0 | 3 | 2 | 0 | 2 | 1(*1) | 0 | 10 | 5(*3) | 0 |
| மொழியின் இயல்பும் கற்பித்தலும் (8) | 2 | 1 | 0 | 0 | 1 | (*1) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 | 2 | (*1) |
| அடிப்படைத் திறன்கள்(12) | 1 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | (*1) | 2 | 2 | (*1) |
| பாடங்களைக் கற்பித்தல்(12) | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | (*1) | 0 | 0 | 0 | 0 | 1 | (*1) | 1 |
| பயிற்றுமுறைகள் (12) | 0 | 0 | 0 | 0 | (*1) | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 1 | (*1) | 1 |
| உற்றுநோக்கல் (6) | 0 | (*1) | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 1 | (*1) | 0 |
| பாடங்கற்பிப்புத் திட்டம் (10) | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 3 | 1 | 0 |
| மொத்தம் (100) | 8 | 2(*2) | 0 | 3 | 4(*2) | 1(*1) | 5 | 3(*1) | 1 | 4 | 1(*1) | (*1) | 20 | 10 | 2(*2) |







**குறிப்பு:-**






சி - சிறு வினா (100 சொற்களுக்கு மிகாமல்)
கு - குறு வினா (200 சொற்களுக்கு மிகாமல்)
க - கட்டுரை வினா (500 சொற்களுக்கு மிகாமல்)
பிறைக்குறிக்குள் ( ) உள்ள எண்கள் மதிப்பெண்களைக் குறிக்கும்.
நட்சத்திரக் குறியீடு (*) உள்ள எண்கள் தெரிவுநிலை வினாக்களைக் குறிக்கும்.
கட்டங்களுக்குள் உள்ள எண்கள் வினாக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.




## பின்னிணைப்பு -1

### செயல்வழிக் கற்றலுக்கான குறியீடுகளும் செயல்பாடுகளும்

| | | |
|---|---|---|
| 1. வாய் |  | பாடுதல், கேட்டல் |
| 2. தாராநாத் |  | உருவொற்றி வரையும் சாதனம் |
| 3. சீத்தாப்பழம் |  | உருவொற்றி வரையும் சாதனம் |
| 4. உபகரணப் பெட்டி |  | கற்றல் அட்டைகள் கொண்ட பெட்டியைக் கையாளுதல் |
| 5. பென்சில் |  | வண்ணம் தீட்டுதல், வரைதல் |
| 6. பட இரயில் |  | ஒன்றைப்போலவே உள்ள படங்களை அறிந்து ஒன்றோடு ஒன்று சேர்த்தல் |
| 7. வார்த்தை இரயில் |  | ஒன்றைப்போலவே உள்ள மற்றொரு வார்த்தையை அறிந்து, ஒன்றோடு ஒன்றுசேர்த்தல் |
| 8. காது |  | கதை கேட்டல் |
| 9. பானை |  | கைக்கும் கைவிரல்களுக்கும் தசைப்பயிற்சி |
| 10. பொம்மலாட்டம் |  | திரையின் பின்புறம் பொம்மைகளைக் காட்டி அவற்றின் நிழல் மூலமாகப் பொம்மலாட்டம் brEJ fh£o; fij கூறுதல் |

| | | |
|---|---|---|
| 11. ஆலமரம் |  | ஆர்வமூட்டும் வெளி விளையாட்டுகள், உள் விளையாட்டுகள் |
| 12. முயல் |  | பாடல்கள், சொற்றொடர் மூலமாக வார்த்தைகள் அறிமுகம் |
| 13. மான் |  | எழுத்தின் ஒலியைக் கேட்டு வரிவடிவம் கண்டறிதல் |
| 14. மாடு |  | எழுத்துகளின் உச்சரிப்பு, வரிவடிவம் ஆகியவற்றை அறிதல் |
| 15. யானை |  | புதிய வார்த்தைகள் அறிமுகம் |
| 16. அம்புக்குறி எழுத்துகள் |  | எழுத்துகளைத் தொடங்கி முடிக்கும்விதம் அறிதல் |
| 17. புலி |  | சூழ்நிலைகண்டு பேச வைத்தல், விவாதித்தல், கற்பனைக்கு முக்கியத்துவம் தருதல். |
| 18. இரப்பர் மான் |  | இரப்பரால் உருவாக்கிய எழுத்துகளைக் கொண்டு எழுத்துகளின் வடிவத்தை அறிதல் |
| 19. அணில் |  | படங்களைப் பார்த்துப் பெயர் எழுதச் செய்தல் |
| 20.எலிக்கிரீடம் |  | எழுத்துகளைச் சேர்த்து அர்த்தமுள்ள வார்த்தைகளை உருவாக்கி எழுதுதல் |
| 21. முக்கோணம் |  | அட்டைகளில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளைப் பார்த்துத் துண்டு அட்டைகள் கொண்டு அடுக்குதல் |

| | | |
|---|---|---|
| 22. செம்மறி ஆட்டுத்தலை |  | செய்தித்தாள், துண்டுப் பிரசுரம் போன்ற வற்றில் மாணவன் கற்றறிந்த எழுத்துகளை வட்டமிடுதல் |
| 23. ஆமை |  | காலி கட்டங்களை எழுத்துகளைக்கொண்டு பூர்த்தி செய்தல் |
| 24. பூனை |  | கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்தல் |
| 25. ஆடு |  | வார்த்தை, சொற்றொடர் உருவாக்குதல் |
| 26. குரங்கு |  | பொருத்துக |
| 27. குதிரை |  | கீழே, மேலே, உள்ளே, வெளியே, அருகில், தொலைவில் போன்றவற்றின் பொருள் அறிதல் |
| 28. ஒட்டகம் |  | குறுக்கெழுத்து விளையாட்டு |
| 29. நாய் |  | தேர்வு அட்டை |
| 30. கரடி |  | கதையைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் |
| 31. யானையும் பூதக்கண்ணாடியும் |  | அறிந்த ஒரே மாதிரியான ஒலி எழுத்து களையும் அதே ஒலியில் உள்ள அறியாத எழுத்துகளையும் அறிந்து படித்தல் |
| 32. புத்தகம் |  | பாடப் புத்தகங்களைப் பயன்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| 33. சிங்கம் |  | செய்யுள் |
| 34. டைனோசரஸ் |  | ஒலிப் பயிற்சி |
| 35. ஜோக்கர் |  | சிரிப்பூட்டும் பயிற்சி |
| 36. குரங்கும் அணிலும் |  | நடித்துக் காட்டுதல், குழுவாக நடித்தல் |
| 37. வீட்டுப்பாட அட்டை |  | வீட்டில் செய்யும் செயல்பாடுகள் |

# பின்னிணைப்பு - 3

## தமிழ்மொழி கற்பித்தல்

**முதலாமாண்டு**

**மாதிரி வினாத்தாள்- 1**

காலம்: 3 மணி                                                  உச்ச மதிப்பெண்கள்: 100

**பகுதி - அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. (10x2=20)**

1. "கற்க **கசடறக்** கற்பவை கற்றபின்
 **நிற்க** அதற்குத் **தக**."
 - இத்திருக்குறளிலுள்ள தடித்த சொற்களுக்குப் பொருள் கூறிக் கருத்தை எழுதுக.

2. இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத்தொடருக்கும் இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
3. 'வற்றல் உண்டான்' - இத்தொடர் உணர்த்தும் ஆகுபெயரை விளக்குக.
4. 'பொன்னார் மேனியனே புலித்தோலை **அரைக்கசைத்து'** - தடித்த சொல்லில் அமைந்துள்ள உருபு மயக்கத்தை விளக்குக.
5. கீழுள்ள வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் வல்லொற்றைச் சேர்த்தும், பொருத்த மற்ற இடங்களில் வல்லொற்றை நீக்கியும் எழுதுக.

எந்த கதையை படித்தாலும் அதிலுள்ள இன்றியமையா பகுதிகளை குறித்து கொள்ளவேண்டும். சுவையானத் தொடர்களை அப்படியே எழுதி கொள்ளுதல் நல்லது. பொருள்விளங்கா தொடர்களுக்கு தமிழகராதி பார்த்து பொருள் அறிந்துக்கொண்டால் நம் மொழிதிறன் வளரும்.

6. ஐந்தாம் வேற்றுமையில் நீங்கல், ஒப்புப் பொருள் தருமாறு எடுத்துக்காட்டுகள் தருக.
7. தங்க கோயில், தங்கக் கோயில் - இவ்விரு தொடர்களிலும் காணலாகும் பொருள் வேறுபாட்டைத் தெளிவுபடுத்துக.
8. இங்குச் சுத்தமானபசு, நெய்வெண்ணெய் விற்கப்படும்.
 ஒரு வயதான பாட்டி வடை சுட்டு விற்றாள்.
 -இவ்வாக்கியங்களைப் பொருள்பொருத்தமுற எழுதுக.
9. **'யாயும் ஞாயும்** யாரோ கியரோ
 **எந்தையும் நுந்தையும்** எம்முறைக் கேளிர்' - தடித்த சொற்கள் யாரைக் குறிக்கின்றன?
10. 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' - இந்நூற்பாவினை விளக்க இரண்டு எடுத்துக் காட்டுகள் தருக.

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இருநூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.**
**(5x4=20)**

11. "அவையஞ்சி மெய்விதிர்ப்பர் கல்வியும் கல்லார்
 அவையஞ்சா ஆகுலச் சொல்லும் - நவையஞ்சி
 ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
 பூத்தலின் பூவாமை நன்று."                    - நீதிநெறி விளக்கம்

- இப்பாடலின் கருத்தினை உரைநடையில் எழுதுக.

12. கீழுள்ள உரையாடற் பகுதியைச் செய்தியாக்குக.

மனைவி: (முகமலர்ச்சியுடன்) வாருங்கள்! வாருங்கள்!
புலவர் : இனியவளே! வாசலில் சென்று பார்! முதிரைமலைக் கோமான் குமணன் நமக்களித்த பெருநிதியத்தையும் அவற்றைச் சுமந்து நிற்கும் களிற்றினையும் பார்.
மகள் : (மகிழ்ச்சியோடு) ஆ... ஆ... யானை... யானை...!
மனைவி: நம் குறைதீர வாரி வழங்கிய குமண வள்ளல் பல்லாண்டு வாழ்க! அன்பரே! இவ்வளவு பொருளையும் நம் சிறிய இல்லத்தில் எவ்விடம் வைப்பேன்? என்ன செய்வேன்?

13. கீழுள்ள செய்தியை உரையாடலாக மாற்றுக.

" பண்டைக்கால மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தான். நோயின்றி நீண்டநாள் வாழ்ந்தான். ஆனால், இன்று பெருகிவரும் தொழிற்சாலைகளும் போக்குவரத்து வாகனங்களும் காற்றை மாசுபடுத்துகின்றன. அவற்றின் இரைச்சலால் செவிப்புலன்களும் பாதிக்கப்படுகின்றன."

14. "**யாகாவா ராயினும்** நாகாக்க காவாக்கால்
nrhfh¥g® **<u>சொல்லிழுக்குப்</u>** பட்டு."
- தடித்த இரண்டு சொற்களையும் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

15. "பசியும் பகையும் இன்றி, வளனும் பெருகிய பறம்புமலையின்மீது அமைந்த அரண்மனையில் கருணையின் வடிவமாக வீற்றிருந்தான் பாரி. அற்றார்க்கும் அலந்தார்க்கும் அவன் உற்ற துணைவன். "
- இப்பகுதியின் மையக் கருத்து யாது?
இப்பகுதியில் அமைந்துள்ள அருஞ்சொற்களின் பொருளை விளக்குக.

16. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' எனுந் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான குறிப்புச் சட்டகம் ஒன்று தயார் செய்க. கட்டுரையில் பயன்படுத்தப்படும் பொருத்தமான மேற்கோள், பழமொழிகள், நிகழ்வு எவையேனும் இரண்டு எழுதுக.

17. "இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே - பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல்."
1. உலகம் எதனால் மகிழ்கிறது?
2. கடல் எதனால் பொங்குகிறது?

18. "thœî¡»ia ªj fhL fS « jÄœeh£oš mikªâU¡»‹ wd .ki yfnshL Äil ªJ« jÅ na áwªJ« br¿í§ fhL fŸ ,btÆš ji fªJ mË¡F « fhÇU Ÿ ÚHY «,t© LJi t¥g¤ nj‹ ó§fh td§fË Å ‹ W« fkG« eh‰wK «,th‹ guªj bghÊšfË ‹ Ãi uí«,fh‹ guªj ö W fË ‹ <£lK«,bfhG§bfhofË ‹ ã‹ dY« cŸs¤ij¡ FË ®É ¥gd tšynth?"
-ï›îi u¥gF âÆ‹ eil¢áw¥ig És¡Ff.

**பகுதி - ஆ**

**III. அனைத்து வினாக்களுக்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. (**10x2=20)

19. மொழி மரபுசார்ந்தது என்பதை விளக்குக.
20. மொழி பழகுவதற்கும் கற்றலுக்குமுள்ள வேறுபாடுகள் இரண்டினைக் கூறுக.
21. மொழியின் அடிப்படைத் திறன்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
22. 'அமுதா தன் வேலைகளை வேகமாக முடித்துவிட்டுப் பள்ளியை நோக்கிச் சென்றாள்.' - இவ்வாக்கியத்தைப் பொருள்புரியும் வண்ணம் படிப்பதற்கேற்பச் சாய்கோடிட்டுக் காட்டுக.
23. துணைப்பாடங் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை?
24. தமிழ்மொழித் திறனை வளர்க்க உதவும் நான்கு ஒப்படைப்புகளைக் கூறுக.
25. செயல்வழிக் கற்றலை உற்றுநோக்கும்போது மீத்திற மாணவனை எவ்வாறு அடையாளங் கண்டுகொண்டாய் என்பதை விளக்குக.

26. ‘பிரிவிலை எங்கும் பேதமில்லை’ எனும் பாடலைக் கற்பிக்க எத்தகைய ஆயத்தச் செயலை வழங்குவீர்?
27. பாடங் கற்பிப்புத் திட்டத்தின் இன்றியமையாமையைக் கூறுக.
28. ல,ள வேறுபாட்டால் பொருள் வேறுபடும் என்பதைக் கற்பிக்க நான்கு எடுத்துக்காட்டுகள் தயாரிக்க..

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இருநூறு சொற்களுக்குமிகாமல் விடையளிக்க.** **( 5** x 4 = 20)

29. மொழி இலக்கிய அழகுணர்வு பற்றிக் குறிப்பு வரைக.
30. தமிழின் இரட்டை வழக்குநிலை குறித்தும் தமிழ் கற்பித்தலில் அதன் விளைவு குறித்தும் விளக்குக.
31. படித்தல் திறனைப் பாதிக்குங் காரணங்களை விளக்குக.
32. ஐந்தாம் வகுப்பிற்குக் கேட்டல் திறனை வளர்க்க உதவும் செயல்கள் நான்கனைக் கூறுக.
33. ‘தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்’ இந்நூற்பாவை எவ்வாறுஎடுத்துக்காட்டுகள் தந்து விதியை வருவிப்பாய்?
34. பாடங் கற்பிப்புத் திறன் வளர்ப்பதற்கு நீவிர் மேற்கொண்ட உற்றுநோக்கல் எவ்வாறு பயன்பட்டது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
35. செயல்வழிக் கற்றலின்போது மாணவர்கள் அடையும் இடர்ப்பாடுகள் இரண்டினைக் கூறி, அவற்றை எவ்வாறு களைந்தாய் என்பதை விளக்குக.
36. ஐந்தாம் வகுப்பு நன்னெறிப் பகுதியைக் கற்பிக்கத் தேவையான செய்திகளை எந்தெந்த நூல்களிலிருந்து எவ்வாறு திரட்டுவாய் என்பதைக் கூறுக.

**V. ஐந்நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.** **( 2 x** 10 =20)

37. பேசுதல் திறனை வளர்க்க உதவும் கற்றல் செயல்கள் ஐந்தினை விளக்கிக் கூறுக.

(அல்லது)

38. கீழுள்ள செய்யுளில் அமைந்துள்ள ஒலிநயம், சொல்நயம், பொருள்நயம், அணிநயங்களை விளக்குக.

“கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதையெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.”

39. விரிவுரைமுறையினை விளக்கி அதன் நிறை குறைகளை ஆராய்க.

(அல்லது)

40. மரபுசார் கற்பித்தலி ஐந்தாம் வகுப்பிற்கு உரைநடைப் பாடங்கற்பிக்கத் தயார் செய்யவேண்டிய படிநிலைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

# தமிழ்மொழி கற்பித்தல்
## முதலாமாண்டு
## மாதிரி வினாத்தாள்- 2

காலம்: 3 மணி உச்ச மதிப்பெண்கள்: 100

**பகுதி - அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. (10x2=20)**

1. தமிழ் எழுத்துகளின் வகைதொகைகளை விரித்தெழுதுக.
2. ஐந்திணை, ஒன்பான் சுவை - தொகைச் சொற்களை விரித்தெழுதுக.
3. சிற்றூர், முதுமகள் - இச்சொற்களைப் பிரித்து எவ்வாறு புணர்ந்ததென விதி கூறுக.
4. 'தனிக்குறில்முன் ஒற்றுஉயிர்வரின் இரட்டும்' - இந்நூற்பாவினை இரண்டு எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.
5. 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' - விளக்குக.
6. 'என்பி லதனை வெயில்போலக் காயுமே
   அன்பி லதனை அறம்' - இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள உவமையை விளக்குக.
7. நான்காம் வேற்றுமைப் பொருளாகிய பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல் ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
8. "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
   விழுமம் துடைத்தவர் நட்பு."
   - இக்குறட்பாவுக்கான பொருளை உரைநடைப்படுத்தி எழுதுக.
9. கீழுள்ள வாக்கியங்களிலுள்ள பிழைகளை நீக்கி, அதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.
   அ) ஆற்றுவெள்ளத்தில் மக்களும் மரங்களும் குடிசைகளும் ஆடுமாடுகளும் மிதந்து சென்றனர்.
   ஆ) ஆறு காலிழந்த ஆண்களும் நான்கு கையிழந்த பெண்களும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.
10. முதனிலைத் தொழிற்பெயர், முதனிலை திரிந்த தொழிற்பெயர்களைச் சான்றுகாட்டி விளக்குக.

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இருநூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. (5 x 4 = 20 )**

11. உடம்படுமெய் பற்றி விளக்குக.
12. சிலேடை நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
13. "தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
    தூங்காது செய்யும் வினை" - இக்குறட்பாவில் அமைந்துள்ள எதுகை, மோனையை விளக்கித் 'தூங்காது' என்னும் சொல்லுணர்த்தும் பொருளைக் கூறுக.
14. கீழுள்ள உரையாடலைச் செய்தியாக்குக.
    குமணன்: புலவர் பெரும வரவேண்டும்! தமிழன்னையின் கண்மணியே! வணக்கம்.
    புலவர் : வள்ளல் பெருமான் வாழ்க! நாட்டில் கண்டு களிக்கவேண்டிய நான், இன்று காட்டில் சந்திக்கின்றேன். இஃது என் பொல்லாத காலம்.
    குமணன்: புலவரே! தங்களை இங்குக் காண நேர்ந்தது என் நல்ல காலம்! இந்நாள் எனக்கு ஒரு பொன்னாள்; நன்னாள்.
15. முதுமகள், கல்லெறிந்தான் - இச்சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.
16. பின்வரும் பத்தியைப் படித்து அதன் மையக்கருத்தையும் அதில் இடம்பெற்றுள்ள அருஞ்சொற்களையும் கூறிப் பொருத்தமான தலைப்பிடுக.

"நோய்' என்னும் சொற்குத் 'துன்பம்' என்பது பொருள். உடலுக்குத் துன்பம் எப்பொழுது நேர்கிறது? அவ்வவ்வுறுப்பு, தன் தன் கடனை ஆற்ற இயலாது, தடைபடும்போது, அதாவது பிணிபடும்போது துன்பம் உண்டாகிறது. பிண்புக்கு அடிப்படை பெருந்திண்டி, பொருந்தா உணவு முதலியன. (திரு.வி.க., பெண்ணின் பெருமை)

17. ' பெண் கல்வி' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவதற்குத் தேவையான குறிப்புச் சட்டகம் ஒன்று தயார் செய்க. கட்டுரையில் பயன்படுத்தவேண்டிய பொருத்தமான பழமொழிகள், மேற்கோள்கள் நான்கினை எழுதுக.

18. "கல்வி உடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும் - இல்லார்
குறைஇரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்."

அ) இருவகைச் செல்வங்கள் யாவை?

ஆ) கல்வியை எவ்வாறு கற்கவேண்டும்?

## பகுதி - ஆ

**III. கீழுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் நூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. (10x2=20)**

19. 'வட்டாரக் கிளைமொழி அறிவு ஓராசிரியருக்குத் தேவை'- காரணத்தை விளக்குக.
20. மொழியில் மரபுகள் எவ்வெவ்விடங்களில் மீறப்படுகின்றன என்பதற்கு இரண்டு எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.
21. மயங்கொலி ஒலிப்புப் பிழைகளை நீக்க, இரண்டு எடுத்துக்காட்டுகளைத் தந்து விளக்குக.
22. செய்யுள், உரைநடைப் பயிற்றலில் நோக்கங்களிலுள்ள இரண்டு வேறுபாடுகளை எழுதுக.
23. பாடங் கற்பிப்புத் திட்டம், கற்பித்தல் குறிப்பு இவற்றிற்கிடையேயுள்ள வேறுபாடுகள் இரண்டினைக் கூறுக.
24. இணைத்துக் கற்பித்தல் என்றால் என்ன?
25. நான்காம் வகுப்பிற்கு உரையாடல் திறனை வளர்க்க உதவும் வழிமுறைகள் நான்கினைக் கூறுக.
26. ஐந்தாம் வகுப்பிற்கு எளிய எண் விவரங்கள், அறிவிப்புகள் படித்தறியும் திறனை வளர்க்க நீவிர் வழங்கும் தொடர்செயல்கள் நான்கினைக் கூறுக.
27. கலந்துரையாடலை மேற்கொள்ளும்போது கவனித்திற்கொள்ள வேண்டிய செயல்கள் யாவை?
28. 'எடு' என்னும் வினைப்பகுதியைச் சூழலுக்கேற்பப் பயன்படுமாறு நான்கினை எழுதுக.

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இருநூறு சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. (5x4=20)**

29. அபிதான சிந்தாமணி- கலைக்களஞ்சியத்தில் எத்தகைய செய்திகள் இடம்பெற்றிருக்கும்? அவை மாணவர்களுக்கு எவ்வகையில் பயன்படும் என்பதை விளக்குக.
30. பால்வேறுபாடுகள் மொழியில் எத்தகைய வேறுபாடுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.
31. தமிழிலுள்ள மருங்கொலிகள், அரையுயிர்களை விளக்குக.
32. உம்மைக் கவர்ந்த ஏதேனும் செய்யுளை எழுதி, அது ஏன் கவர்ந்தது என்பதற்கான காரணங்களைக் கூறுக.
33. பாடங் கற்பிப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது ஆசிரியர் மனத்திற் கொள்ளவேண்டிய செயல்களை விளக்குக.
34. உரைநடைப் பாடத்தின்வழி சொற்களஞ்சியம் பெருக்க உதவும் செயல்பாடுகளைக் கூறுக.
35. ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் பொருளுணரும் ஆற்றலை வளர்க்க எத்தகைய நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கச் செய்வீர் என்பதை விளக்குக.

36. மரபுவழிக் கற்றல் உற்றுநோக்கலுக்கும் செயல்வழிக் கற்றல் உற்றுநோக்கலுக்கும் எத்தகைய வேறுபாடுகளை நீவிா் உணா்கிறீா்கள் என்பதை விளக்குக.

**V. ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்நூறு சொற்களுக்கும் மிகாமல் விடையளிக்க(2x10=20)**

37. மொழி சமுதாய, பண்பாடு, தனிமனித வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்குக.

அல்லது

38. செய்யுட் கற்பித்தலின் நோக்கங்களை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

39. நல்ல கையெழுத்தின் நல்லியல்புகளையும் எழுதுதல் திறன் வளர்க்கும் வழிவகைகளையும் விளக்குக.

அல்லது

40. செயல்திட்ட முறையினை விளக்கித் தொடக்க வகுப்புகளுக்கு எவ்வகையான செயல் திட்டங்களை வழங்குவாய் என்பதனைக் குறிப்பிடுக

## பின்னிணைப்பு - 4

## அகமதிப்பீட்டுச் செய்முறைப் பயிற்சி

| வ.எண் | தலைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | உற்றுநோக்கல் படிவம் நிரப்புதல்<br>பாடங் கற்பிப்புத் திட்டம் தயாரித்தல்<br>வட்டார வழக்குச் சொற்களும் திருந்திய வடிவங்களும்<br>செயல்வழிக் கற்றல் அட்டைகள் தயாரித்தல்<br>நடிப்புமுறைக்கேற்ற ஓரங்க நாடகம் தயாரித்தல் | 5 |
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | கற்றல் பொருள்கள் தயாரித்தல்<br>குழந்தைப் பாடல்கள் தொகுப்புத் தயாரித்தல்<br>குழந்தைக் கதைகள் தொகுப்புத் தயாரித்தல்<br>மயங்கொலிச் சொற்கள் வேறுபாடு -தொகுப்புத் தயாரித்தல்<br>வினாத்தாள் திட்ட வரைவு தயாரித்தல் | 5 |
| 1. | கருத்தரங்கு - இரண்டு தலைப்புகளில் நடத்துதல் | 5 |
| 1. | உள்நிலைத் தேர்வுகள் | 5 |
| 1. | வினாவங்கி தயாரித்தல்<br>(1. ஐந்தாம் வகுப்புச் செய்யுள், உரைநடை<br>2. தமிழ்மொழி கற்பித்தல் - ஓர் இயல்) | 5 |
| | மொத்த மதிப்பெண்கள் | 25 |

# பின்னிணைப்பு - 5

## பார்வை நூல்கள்


1. அபிதான சிந்தாமணி - சிங்காரவேலு முதலியார். சாரதா பதிப்பகம், சென்னை-5, 2006.
2. இலக்கணக் களஞ்சியம் - முனைவர் பொற்கோ, பூம்பொழில் பதிப்பகம், சென்னை,1997.
3. இலக்கிய வரலாறு - டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், அணியகம், சென்னை.
4. இலக்கிய வரலாறு - டாக்டர் மு. வரதராசனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. ஐவகைப் பாடங்களும் திறனடிப்படையில் கற்பித்தலும் - பேராசிரியர் வி. கணபதி, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை-14.
6. கல்வியியல் தமிழ் - முனைவர் செல்வி, வெ. கலைச்செல்வி, சஞ்சீவ் வெளியீடு, ஈரோடு.
7. கல்வியில் தேர்வு - டாக்டர் பி. இரத்தினசபாபதி, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை-14.
8. செயல்வழிக் கற்றல் மற்றும் தானே கற்றல் ( ஆசிரியர் கையேடு) - ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், சென்னை- 6.
9. தமிழ் கற்பித்தலில் பயிற்சிகள் - த. பரசுராமன், அரசு பதிப்பகம், மதுரை-12, 2001.
10. தமிழ் கற்பித்தலில் புதுமைப் போக்குகள் - முனைவர் நா. பழனிவேலு, கபிலன் பதிப்பகம், ஒரத்தநாடு, 2005.
11. தமிழ் பயிற்றும் முறை - ந. சுப்பு ரெட்டியார், மாணிக்கவாசகர் நூலகம், சிதம்பரம், 1980.
12. தமிழ்ப்பாடம் சொல்லும் முறை I & II - பா. பொன்னப்பன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1981.
13. தமிழில் நீங்களும் தவறில்லாமல் எழுதலாம் - முனைவர் பொற்கோ, புதுவாழ்வுப் பதிப்பகம், சென்னை, 2000.
14. நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் - பேராசிரியர் வி. கணபதி, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை-14.

15. நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும் - டாக்டர் மு. கோவிந்தராஜன், தேன்மொழிப் பதிப்பகம், சென்னை-14, 1980.

15. நன்னூல் காண்டிகை உரை - ஆறுமுக நாவலர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

16. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - டாக்டர் தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

17. பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள் - டாக்டர் இ.பா. வேணுகோபால், சாரதா பதிப்பகம், சென்னை-5, 2006.

18. A Course in language Teaching Practice and Theory - Penny Ur.(1996), Cambridge University Press.

19. Document on Social, Moral and Spiritual values in Education - B.R. Goyal (1979), NCERT, New Delhi.

20. Educational Technology - Dr. A. Panneerselvam, A. Sampath and S.Santhanam, New Edition, Santha Publishers, Chennai-14.

21. Learning to Teach: A Hand book for Primary and Secondary School Teachers - Gill Nicholls (1999), Kogan Page Ltd, London.

22. Methods of Teaching:: A Skilled Approach, E. Chearles - D. Jacobsen, (1985), Merrill Publishing Company, London.

23. Tamil Phonetic Reader - S. Rajaram, Central Institute of Indian Languages Mysore.